868
16.x.07

Issued : 10-7-2007

வெளியீடு : 10-7-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 29, 2007—தொகுதி 23—எண் 1

Thursday the 29th March, 2007—Volume 23—No. 1

...டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...islative Assembly Secretariat, Chennai - 600 009

227561

[Price Rs. 3.00

29-3-2007

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii-viii

Governor and Council of Ministers ix-xiii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xv-xvii

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xix-xxix

**1. வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 3 மற்றும் 4) 1-131

**2. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2006–2007, அளித்தல்—**

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 132-137

**3. வரவு—செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—** தொடர்ச்சி 137-254

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 138-159

திரு. எச். அப்துல் பாசித் 159-165

*திரு. கு. செல்வம் 165-172

திரு. வீர. இளவரசன் 172-185

திரு. வை. சிவபுண்ணியம் 185-210

*திரு. சி. கோவிந்தசாமி 210-230

திரு. டி. செங்குட்டுவன் 230-239

திரு. ஜி. கே. மணி 239-254

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 254

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227561
சென்னை-600 008
நூலகம்

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

14. செய்தித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எ.வ. வேலு:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம் பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR — THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and Welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam;**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. Minister for Labour .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. Minister for Hindu Religious and Charitable Endowments .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. Minister for Handlooms .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. Minister for School Education .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. Minister for Commercial Taxes .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. Minister for Environment .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. Minister for Forests .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. Minister for Highways .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. Minister for Social Welfare .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. Minister for Animal Husbandry .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. Minister for Adi Dravidar Welfare .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. Minister for Fisheries .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. Minister for Dairy Development .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. Minister for Khadi .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல்., | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம்., | .. குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | |
|---|---|
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர்செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

| | | |
|---|---|---|
| 21. | இராமசாமி, திரு. தி. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 22. | இராமசுவாமி, திரு. கே.பி. | .. ராசிபுரம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. சாத்தூர் |
| 24. | இராமச்சந்திரன், திரு. டி. | .. தளி |
| 25. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 26. | இராம்பிரபு, திரு. இரா. | .. பரமக்குடி (செ.வ.) |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | .. தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. ஆ. | .. வீரபாண்டி |
| 29. | இராஜேந்திரன், திரு. இரா. | .. பனமரத்துப்பட்டி |
| 30. | இராஜேந்திரன், திரு. க. | .. ஜெயங்கொண்டம் |
| 31. | இராஜேந்திரன், திரு. சபா. | .. நெல்லிக்குப்பம் |
| 32. | இராஜ்குமார், திரு. ம. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 33. | இளமதி சுப்பிரமணியன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 34. | இளவரசன், திரு. வீர. | .. திருமங்கலம் |
| 35. | இளவழகன், திரு. கே.எல். | .. ஆற்காடு |
| 36. | உதயசூரியன், திரு. தா. | .. சின்னசேலம் |
| 37. | உதயம் சண்முகம், திரு. | .. அறந்தாங்கி |
| 38. | உபயதுல்லா, திரு. சி.நா.மீ. | .. தஞ்சாவூர் |
| 39. | உலகநாதன், திரு. கே. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 40. | எதிரொலி மணியன், திரு. கோ. | .. பெரணமல்லூர் |
| 41. | ஐயப்பன், திரு. கோ. | .. கடலூர் |
| 42. | கணபதி, திரு. ந. | .. வானூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 43. | கணேசன், திரு. ஆர்.டி. | .. தேனி |
| 44. | கண்ணப்பன், திரு. மு. | .. தொண்டாமுத்தூர் |
| 45. | கண்ணன், திரு. பெ. | .. தாரமங்கலம் |
| 46. | கண்ணன், திரு. வே. | .. செஞ்சி |
| 47. | கமலாம்பாள், திருமதி பெ. | .. காஞ்சிபுரம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | .. தென்காசி |
| 51. | கலியவரதன், திரு. வீ.ஏ.டி. | .. முகையூர் |
| 52. | கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. | .. அரவக்குறிச்சி |
| 53. | கலைராஜன், திரு. வி.பி. | .. தியாகராய நகர் |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | காமராஜ், திரு. பெ. | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 56. | காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. | .. மதுராந்தகம் |
| 57. | காவேரி, திரு. வை. | .. எடப்பாடி |
| 58. | கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். | .. கலசப்பாக்கம் |
| 59. | கீதா ஜீவன், திருமதி பி. | .. தூத்துக்குடி |
| 60. | குணசேகரன், திரு. சு. | .. சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | .. மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | .. குத்தாலம் |
| 63. | குமரகுரு, திரு. இரா. | .. திருநாவலூர் |

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்

66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்

68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)

75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)

76. சாமி, திரு. ஆர். .. மேலூர்

77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்

78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்

80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்

84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி

87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)

88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்

89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்

90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்

95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்

96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்

97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)

98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி

100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி

101. செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்

102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை

103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்

104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்

105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)

106. செல்வராஜ், திரு. என். .. முசிறி

107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்

108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

| | | |
|---|---|---|
| 109. | சேகரன், திரு. கூ.ந. | .. திருவெறும்பூர் |
| 110. | சேகர், திரு. எஸ்.வி. | .. மயிலாப்பூர் |
| 111. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 112. | சையது கௌஸ் பாஷா, திரு. சை. | .. மதுரை மத்தி |
| 113. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. லால்குடி |
| 114. | சௌந்திரபாண்டியன், திரு. அ. | .. குன்னூர் (செ.வ.) |
| 115. | ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 116. | ஞானதாஸ், திரு. ஆர். | .. சிவகாசி |
| 117. | டில்லி பாபு, திரு. ப. | .. அரூர் (செ.வ.) |
| 118. | தங்கமணி, திரு. பி. | .. திருச்செங்கோடு |
| 119. | தங்கம் தென்னரசு, திரு. | .. அருப்புக்கோட்டை |
| 120. | தங்கவேலன், திரு. சுப. | .. கடலாடி |
| 121. | தண்டபாணி, திரு. மா. | .. வேடசந்தூர் |
| 122. | தமிழரசி, திருமதி ஆ. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 123. | தமிழரசு, திரு. அ. | .. ஓமலூர் |
| 124. | தமிழ்செல்வன், திரு. சி. | .. ஏற்காடு (ஆ.வா.) |
| 125. | தம்பிதுரை, முனைவர் மு. | .. பர்கூர் |
| 126. | தர்மலிங்கம், திரு. எல்.பி. | .. சத்தியமங்கலம் |
| 127. | தாமோதரன், திரு. செ. | .. கிணத்துக்கடவு |
| 128. | தியோடர் ரெஜினால்டு, திரு. த. | .. பத்மநாபபுரம் |
| 129. | திருநாவுக்கரசு, திரு. கே. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 130. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. பாபநாசம் |



| | | |
|---|---|---|
| 131. | துரை சந்திரசேகரன், திரு. | .. திருவையாறு |
| 132. | துரைசாமி, திரு. வீ.பெ. | .. சங்கரி (செ.வ.) |
| 133. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 134. | துரைராஜ், திரு. சி. | .. சேடப்பட்டி |
| 135. | தேன்மொழி, திருமதி எஸ். | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. | நன்மாறன், திரு. என். | .. மதுரை கிழக்கு |
| 137. | நெடுஞ்செழியன், டாக்டர் க. | .. கபிலர்மலை |
| 138. | நெடுஞ்செழியன், திரு. ரெ. | .. புதுக்கோட்டை |
| 139. | நேரு, திரு. கே.என். | .. திருச்சிராப்பள்ளி–2 |
| 140. | பதர் சயீத், திருமதி | .. திருவல்லிக்கேணி |
| 141. | பத்மாவதி, திருமதி பி. | .. நன்னிலம் (செ.வ.) |
| 142. | பரஞ்ஜோதி, திரு. மு. | .. ஸ்ரீரங்கம் |
| 143. | பரிதி இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் (செ.வ.) |
| 144. | பலராமன், திரு. பி. | .. பொன்னேரி (செ.வ.) |
| 145. | பழனிசாமி, திரு. ஆர்.எம். | .. மொடக்குறிச்சி |
| 146. | பன்னீர்செல்வம், திரு. எம். | .. சீர்காழி (செ.வ.) |
| 147. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 148. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. பெரியகுளம் |
| 149. | பாண்டுரங்கன், திரு. கு. | .. அணைக்கட்டு |
| 150. | பாபு, திரு. வி.எஸ். | .. புரசைவாக்கம் |
| 151. | பாரதி மோகன், திரு. ஆர்.கே. | .. திருவிடைமருதூர் |
| 152. | பாலபாரதி, செல்வி கே. | .. திண்டுக்கல் |
| 153. | பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்–1
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்-2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்
235. (வெற்றிடம்) .. மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 15, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038
## 2007 மார்ச் 29, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்*
*நடைதெரிந்த நன்மை யவர்."*

*சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

### பட்டியல்கள் 3 மற்றும் 4@

### (மூன்றாம் பட்டியல்)

1—

### புதிய குடியிருப்புகள்

**வினா எண் 1049—திருமதி பி. பத்மாவதி:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நன்னிலத்தில் பழுதடைந்த காவலர் குடியிருப்புக் கட்டடத்தை மாற்றி புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டத்திலுள்ள நன்னிலத்தில் பழுதடைந்த காவலர் குடியிருப்புகளை மாற்றி, புதிய குடியிருப்புகள் கட்டுவது சம்பந்தமாக ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

**2—**

## மின் கம்பம்

**வினா எண் 3941—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, வேலாண்டிபாளையம் பொன்னு நல்லிக் கோனார் வீதியின் நடுவில் உள்ள மின் கம்பத்தை மாற்றி ஓரமாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, வேலாண்டிபாளையத்திலுள்ள பொன்னு நல்லிக் கோனார் வீதி சுமார் 12 அடி அகலம் மட்டுமே உள்ளது. 250 மீட்டர் நீளம் உள்ள மேற்கண்ட வீதியில் அமைக்கப்பட்டுள்ள 7 மின்கம்பங்களும் வாரிய விதிமுறைகள் மற்றும் இந்திய மின்சார விதிகளின்படி உள்ள இடைவெளி விட்டு குடியிருப்புகளுக்கு மின்பாதைகளால் எந்தவித பாதிப்பும் ஏற்படாவண்ணம் நிறுவப்பட்டுள்ளது. சாலையில் இடையூறாக உள்ள ஒரு மின்கம்பத்தை மாற்று முறையின்மூலம் மேலும் வீதியின் ஓரமாக அமைத்துதர இயலும்.

மேற்கண்ட வழியானது கோவை மாநகராட்சிக்குட்பட்டது. மாற்று முறைமூலம் மின் கம்பத்தை மேலும் வீதியின் ஓரமாக நிறுவுவதற்கு உரிய கேட்பு விண்ணப்பம், கோவை மாநகராட்சி கொடுத்தால் மேற்கண்ட வேலைக்குண்டான தொகையை மாநகராட்சி செலுத்திய பிறகு பணி முடிக்கப்படும்.



**3—**

## குப்பையிலிருந்து மின்சாரம்

**வினா எண் 4603—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் குப்பைகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

குப்பையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அதிக அளவில் குப்பை தேவைப்படும். ஒரு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய நாள் ஒன்றுக்கு 130-150 டன் வரை குப்பை தேவைப்படுகிறது. வால்பாறை தொகுதியில் மின் உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளும் அளவிற்கு குப்பைகள் கிடைக்கும் வாய்ப்பு இல்லை. தற்பொழுது சிறிய அளவிலுள்ள பிரித்தெடுக்கப்பட்ட குப்பைக் கழிவுகளை (20 டன்) கொண்டு பயோ கம்போஸ்டிங் முறையில் உரம் தயாரிக்கவும், பயோ-மீத்தனேஷன் முறையில் மின்சாரம் தயாரிக்க பரீட்சார்த்த முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில், பிற இடங்களிலும் அத்தகைய சிறிய அளவில் திட்டங்களை மத்திய மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் உதவியுடன் செயல்படுத்த பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

**4—**

## தெரு மின் விளக்குகள்

**வினா எண் 4854—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஸ்ரீராம் நகர் பகுதியில் எண் 108 மின் கம்பத்தில் உள்ள விளக்குகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, மின் இணைப்பு எண் 108 எனக் குறிப்பிடப்பட்டுள்ள மின் கம்பத்திலுள்ள தெரு விளக்கு 23-10-2006 அன்று பழுது சரி செய்யப்பட்டு ஒளிர்விக்கப்பட்டது. உடுமலைப்பேட்டை தொகுதி, ஸ்ரீராம்நகர் பகுதியிலுள்ள 37 தெரு மின் விளக்குகளும் மின் இணைப்பு எண் 94 காந்திநகர் பிரிவு அலுவலகம்/ உடுமலைப்பேட்டை வட்டம் வாயிலாக எரியூட்டப்பட்டு நன்றாக ஒளிர்கின்றன. ஆகையால், பழுதான தெரு மின் விளக்குகள் ஏதும் இல்லை. பழுது ஏற்படின், அந்தந்த உள்ளாட்சி அமைப்பால் வாரிய அலுவலர்களின் உதவியுடன் உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**5—**

### மின் கம்பம்

**வினா எண் 4855—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உரல்பட்டி ஊராட்சி, ஜக்கம்பாளையம் கிராமத்தில் மதுரைவீரன் கோவில் பகுதியில் கீழ்புறம் உள்ள மின் கம்பத்தினை மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உரல்பட்டி ஊராட்சி, ஜக்கம்பாளையம் கிராமத்தில் மதுரைவீரன் கோவில் பகுதியில் கீழ்புறம் மின் கம்பத்தினை மாற்ற விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டபின் மின் கம்பம் மற்றும் மின் பாதை மாற்றி அமைக்கப்பட்டது.



2007 மார்ச் 29]

**6—**

### மின்மாற்றிகள் இடம் மாற்றுதல்

**வினா எண் 5191—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 5-வது வட்டம் (AE) கோவில் தெரு, சந்திப்பில், சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மின்மாற்றிகளை இடம் மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 5-வது வட்டம் (AE), கோவில் தெரு, திருவொற்றியூர் ரோடு சந்திப்பில் இருந்த மின்மாற்றி அப்புறப்படுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக, குறைந்த இடத்தில் அமையக் கூடிய, புதிய முறையான, வளைய மின்சுற்று சாதனம் (ஆர்.எம்.யூ) அமைக்கப்பட்டது.

**7—**

### மின்மாற்றிகள்

**வினா எண் 6771—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உதயத்தூரில் உள்ள மின்மாற்றியினை மாற்றிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உதயத்தூர் கிராமத்தில் புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்க ரூ.4,21,720 செலவில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. விரிவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டு, மிக விரைவில் மின்மாற்றி இயக்கி வைக்கப்படும்.

[2007 மார்ச் 29

8—

## மின்மாற்றிகள்

**வினா எண் 6885—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு, ஊராட்சி ஒன்றியம், விராலிபட்டி ஊராட்சி, பூவம்பட்டி கிராமத்திற்கு அதிக அழுத்தமுள்ள மின்மாற்றிகள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

நிலக்கோட்டை தொகுதி, விராலிபட்டி ஊராட்சி, பூவம்பட்டி கிராமத்திற்கு ஆ. வாடிபட்டி எஸ்.எஸ். XII (200 கே.வி.ஏ.) மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த கிராமத்தில் மின் பாதையை ஆய்வு செய்தபோது, மின் பாதையின் கடைநிலையில், ஒருமுனை மின்னழுத்தம் 204 வோல்ட் உள்ளதாக கண்டறியப்பட்டது. எனவே, பூவம்பட்டி கிராமத்தில், ரூ. 3.4 இலட்சம் மதிப்பீடு தொகையில், 995 மீட்டர் நீளத்திற்கு உயரழுத்த மின் கம்பிகள் மற்றும் 20 மீட்டர் நீளத்திற்கு தாழ்வழுத்த மின் கம்பிகளுடன் ஒரு புதிய 63 கே.வி.ஏ./22 கி.வோ. மின்மாற்றியை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 31-12-2006-க்குள் பணிகள் முடிக்கப்படும்.

9—

## மின் கம்பங்கள்

**வினா எண் 7135—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி,புலியூர் ஊராட்சியில் புதியதாக மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்கு வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, புலியூர் ஊராட்சியில் 129 எண்ணிக்கையிலான 40 வாட்ஸ் குழல் விளக்குகளும் 21 எண்ணிக்கையிலான 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

புலியூர் ஊராட்சியில் புதியதாக மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்கு வசதி கோரி ஊராட்சி மன்றத் தலைவரிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் வாரிய விதிமுறைகளின்படி தெருவிளக்கு அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

## தெரு விளக்கு

**வினா எண் 7337—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி எஸ். ஏரிப்பாளையம் கிராமத்தில் உள்ள புதுமனை என்ற இடத்தில் உள்ள இரண்டு தெருக்களுக்கு மின் விநியோகம் அளித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, எஸ். ஏரிப்பாளையம் கிராமத்தில் புதுமனை என்ற பகுதியில் உள்ள இரண்டு தெருக்களுக்கு தெரு விளக்கு வேண்டி ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி மின் வசதி செய்து தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

## மின் கம்பிகள் மாற்றுதல்

**வினா எண் 7340—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ஆராய்ச்சிக்குப்பம் கிராம தெருக்களிலுள்ள பழுதடைந்த மின் கம்பிகளை மாற்றி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, நெல்லிக்குப்பம் கோட்டத்தில், நடுவீரப்பட்டு பிரிவிற்குட்பட்ட ஆராய்ச்சிக்குப்பம் கிராமத்தில், 300 மீட்டர் தூரம், பழுதடைந்த மின் கம்பிகளை மாற்ற ரூ. 49,500 செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதிக்குப்பிறகு, இரண்டு மாதங்களில், மேற்கண்ட பழுதடைந்த மின் கம்பிகள் மாற்றப்படும்.

12—

## மின் கம்பிகள்

**வினா எண் 7350—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லையில் சில தெருக்களில் மின்சாரக் கம்பிகள் மிகவும் பழுதாகியுள்ளதால் அவற்றை மாற்றி புதிதாக அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வேகாக்கொல்லை கிராமத்தில், மாரியம்மன் கோயில் தெரு, தெற்கு தெரு, மெயின்ரோடு ஆகிய தெருக்களில், 1325 மீட்டர் தூரம், பழைய மின் கம்பிகளுக்குப் பதிலாக,



ரூ.68,690 மதிப்பீட்டில், புதிய மின் கம்பிகள் மாற்ற மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் 30 நாட்களில் முடிக்கப்படும்.

13—

## தெரு விளக்குகள்

**வினா எண் 7352—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில், லிங்க் ரோடில் கூடுதலாக மின் கம்பங்களைப் பொருத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியிலுள்ள பண்ருட்டி நகரில் லிங்க் ரோடு பகுதியில் (Bye Pass Road) ஏற்கெனவே, மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட சாலையில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க பண்ருட்டி நகராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால் கூடுதல் மின் கம்பங்கள் அமைத்து தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14—

## மின்மாற்றிகள்

**வினா எண் 7367—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம், முசாபுரி கிராமத்தில் மின்மாற்றியை இடம் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

மேலூர் பஞ்சாயத்துமூலம் 28-8-2006 அன்று முசாபுரி என்ற இடத்தில் உள்ள மின்மாற்றியை இடம் மாற்றக் கோரியுள்ள

[2007 மார்ச் 29

விண்ணப்பத்தின்பேரில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 23-9-2006 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையான ரூ.73,400/-ஐ செலுத்த கேட்பு தாக்கீது கடிதம் 6-11-2006 அன்று தலைவர், மேலூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை மேலூர் பஞ்சாயத்துமூலம் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்படவில்லை. மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டதும் உடனடியாக முசாபுரி மின்மாற்றியை இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 7452—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூரில் உள்ள தெருக்களில் மின் விநியோகம் சீராக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட சிறுவத்தூர் கிராமத்திற்கு கீழ்க்கண்ட மின்மாற்றிகள்மூலம் தடையில்லா சீரானமின்சாரம் வழங்கப்படுகிறது:

| வ.எண் | மின்மாற்றி | மின்மாற்றி திறன் | கடைகோடி மின்னழுத்தம் |
|---|---|---|---|
| 1. | சிறுவத்தூர் I | 200 கே.வி.ஏ. | 230 V (Phase to Neutral) |
| 2. | சிறுவத்தூர் XXIII | 100 கே.வி.ஏ. | 228 V (Phase to Neutral) |
| 3. | சிறுவத்தூர் XXVI | 100 கே.வி.ஏ. | 229 V (Phase to Neutral) |
| 4. | வாட்டர் டேங்க் | 100 கே.வி.ஏ. | 230 V (Phase to Neutral) |



2007 மார்ச் 29]

மேற்கண்ட நான்கு மின்மாற்றிகள்மூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**16—**

## மின் இணைப்பு

**வினா எண் 7508—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ஆராய்ச்சிக்குப்பம் கிராமத்தில் உள்ள இளம்புயல் தெருவிற்கு மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்கு வசதி செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, ஆராய்ச்சிக்குப்பம் கிராமத்தில் உள்ள இளம்புயல் தெருவிற்கு மின் கம்பிகள் அமைத்து மின் விளக்கு (தெருவிளக்கு அல்லது வீட்டு மின் இணைப்பு) வசதி செய்து தரக் கோரி ஊராட்சித் தலைவரிடமிருந்தோ, பொது மக்களிடமிருந்தோ விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிகளின்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

## தெருவிளக்கு வசதி

**வினா எண் 7579—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மருள்பட்டி கிராமம், கிழக்குப் பகுதி, தென்வடல் சாலையில் மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, மருள்பட்டி கிராமம், கிழக்குப் பகுதியில் 33 தெரு விளக்குகள் நல்ல நிலையில் ஒளிர்கின்றன. எனினும், தென்வடல் சாலை, கிழக்குப் பகுதியில் மின் விளக்கு அமைத்துத் தர விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. தெருவிளக்குகள் அமைக்க வேண்டி உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**18—**

## மின்னழுத்தச் சீரமைப்பு

**வினா எண் 7905—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருக்கடையூர் ஊராட்சி, சிங்கானோடை கிராமத்தில் மின்னழுத்தக் குறைவைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருக்கடையூர் ஊராட்சி, சிங்கானோடை கிராமத்தில் மின்னழுத்தக் குறைபாடு நிலவி வந்தது. ஒரு முனை மின்னழுத்தம் 180 வோல்ட் ஆக இருந்தது. எனவே, புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி 30-11-2006 அன்று இயக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சீரான மின்சாரம் வழங்கப்படுகின்றது. புதிய மின்மாற்றி அமைக்கப்பட்ட பின்னர் ஒரு முனை மின்னழுத்தம் 230 வோல்ட் ஆக இருக்கிறது. இப்பொழுது குறைந்த மின்னழுத்தம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**19—**

## பேருந்து வசதி

**வினா எண் 2419—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வால்பாறை தொகுதியில், ஆழியார் நகர் பாலம் அருகில் சோதனைச் சாவடி அருகில், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர் பேருந்து நிற்குமிடம், செங்கம்பாளையம், காளியாபுரம் தண்ணீர் தொட்டி அருகில், கரியஞ்செட்டிபாளையம் பேருந்து நிற்குமிடம் ஆகிய இடங்களில் நிழற்குடைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணிகளை மேற்கொள்ள தற்போது போதிய நிதி வசதி இல்லை. ஆகவே, வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப இப்பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

**20—**

## நிழற்குடைகள்

**வினா எண் 2426—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கம்பாலபட்டி ஊருக்குள் பேருந்து நிற்குமிடம், ஜல்லிபட்டி ஊராட்சி ஊருக்குள் பேருந்து நிற்குமிடம், அர்த்தநாரிபாளையம் பேருந்து நிறுத்துமிடம், தென்சங்கம்பாளையம் நான்கு முக்கு பேருந்து நிலையம், சமத்துவபுரம் முன்பு ஆகிய இடங்களில் நிழற்குடைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணிகளை மேற்கொள்ள தற்போது போதிய நிதி வசதி இல்லை. ஆகவே, வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப இப்பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

**21—**

### சமுதாயக்கூடம்

**வினா எண் 3231—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, சுந்தரக்கோட்டை கிராமத்திலுள்ள அம்பேத்கர் தெருவிற்கு ஒரு சமுதாயக்கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சுந்தரக்கோட்டை ஊராட்சியில், அம்பேத்கர் தெருவில் சமுதாயக் கூடம் கட்ட போதுமான இடம் உள்ளது. சமுதாயக்கூடம் கட்ட ரூ.6.00 இலட்சம் செலவாகும். இப்பணி எஸ்.ஜி.ஆர்.ஒய். சிறப்புக் கூறு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

**22—**

### தார்ச் சாலை

**வினா எண் 4179—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் - எலவம்பட்டி ஊராட்சி தொடக்கப்பள்ளி முதல் மக்கட்டையன் வளவு தெரு வரை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எலவம்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி முதல் மக்கட்டையன் வளவு வரை உள்ள சாலையின் மொத்த நீளம் 2.5 கி.மீ. ஆகும். இதில் தொடக்கப்பள்ளி முதல் விநாயகர் கோவில் வரை உள்ள 800 மீ. சாலை, இரண்டடுக்கு கப்பிச் சாலை ஆகும். விநாயகர் கோவில் முதல் மக்கட்டையன் வளவு தெரு வரை உள்ள மண் சாலையின் நீளம் 1.70 கி.மீ. இச்சாலையினை தார்ச் சாலையாக மாற்ற ரூ.21.00 இலட்சம் செலவாகும். தற்போது மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்ய ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லை.



**23—**

### மயான வசதி

**வினா எண் 4180—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பல்பாக்கி ஊராட்சி, தாசன் காட்டுவளவில் மயான வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பல்பாக்கி கிராமம், தாசன் காட்டுவளவு பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் அவரவர் பட்டா நிலங்களில் குடியிருந்து வருகின்றனர். அவர்கள், அவரவர்களின் பட்டா நிலங்களில் அடக்கம் செய்து வந்துள்ளனர். தற்போது மேற்படி கிராம சர்வே எண் 44/1 விஸ்தீர்ணம் 0.35.0 ஹெக்டர் நிலம் பாறை என பாகுபாடு செய்யப்பட்ட தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தை ஆதி திராவிடர் நலத் துறைமூலம் மயான வசதி ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**24—**

## தார்ச் சாலை

**வினா எண் 4567—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தச்சனேந்தல் கிராமத்தின் கிராவல் சாலை, எஸ். கல்விமடை கிராமத்தில் திருநாகேஸ்வரமுடையார் கோயில் இணைப்புச் சாலை ஆகியவற்றைத் தார்ச் சாலைகளாக அரசு மாற்றித் தருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2006-2007 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே உள்ள கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்ற ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து உரிய நிதி ஒதுக்கீடு பெற்று, மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தச்சனேந்தல் கிராமத்தில் கிராவல் சாலை, எஸ். கல்விமடை (எஸ். கல்லுமடை) கிராமத்தில் திருநாகேஸ்வரமுடையார் கோவில் இணைப்புச் சாலை ஆகியன தார்ச் சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாதபட்சத்தில் 12-வது நிதிக் குழு மானியத்தின்கீழ் மேற்கண்ட பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25—**

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 4903—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி, பாலப்பாளையத்தின் தென் கோடியிலிருந்து புறப்பட்டு பாலப்பாளையம் செல்லும் பேருந்து நிறுத்தும் சாலையும் விநாயகர் கோவிலும் இணையும் சாலையை அரசு செப்பனிட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சி, பாலப்பாளையத்தில் தென்கோடியில் இருந்து புறப்பட்டு பாலப்பாளையம் செல்லும் பேருந்து நிறுத்தம் சாலையும், விநாயகர் கோவிலும் இணையும் சாலையை வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

## தார்ச் சாலை

**வினா எண் 4904—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, முகாசிப்பிடாரியூர் ஊராட்சி, சக்தி நகரிலிருந்து சின்னப்பிடாரியூர் வரை, தச்சன்கரை சாலை, ஈங்கூர் ஊராட்சி, புலவனூரிலிருந்து ஈங்கூர் வரை, ஈங்கூர் பாலப்பாளையத்திலிருந்து உச்சணகவுண்டனூர் சாலை, சென்னிமலை ஊராட்சி, பனியம்பள்ளி-புலவனூர் சாலை, வரப்பாளையத்திலுள்ள ஓடைக்காட்டூர் - குமாரபாளையம் வரையிலும் தார்ச் சாலை அரசு அமைத்துத் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2007 மார்ச் 29

**விடை**—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் ஊராட்சி, சக்தி நகரிலிருந்து சின்னப்பிடாரியூர் வரை தச்சன்கரை சாலை, ஈங்கூர் ஊராட்சி, புலவனூரிலிருந்து ஈங்கூர் வரை, பாலப்பாளையத்திலிருந்து உச்சணகவுண்டனூர் சாலை, பனியம்பள்ளி-புலவனூர் சாலை, வரப்பாளையத்திலுள்ள ஓடைக்காட்டூர் குமாரபாளையம் வரையிலும் தார்ச் சாலை ஆகியன வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

## சாலை வசதி

**வினா எண் 4911—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, செங்காட்டூரில் தார்ச் சாலை கவுண்டனூர் பகுதியில் சிமெண்ட் சாலை, தச்சன்கரை குறுக்கு வீதிகளில் கான்கிரீட் தளமும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை**—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், செங்காட்டூரில் தார்ச் சாலை, கவுண்டனூர் பகுதியில் சிமெண்ட் சாலை, தச்சன்கரை குறுக்கு வீதிகளில் கான்கிரீட் தளம் ஆகியன வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2007 மார்ச் 29]

28—

## சமுதாயக்கூடம்

**வினா எண் 5691—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தச்சனேந்தல் கிராமத்திற்கு ஒரு திருமண மஹால் கட்டிக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை**—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2006-2007-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று நரிக்குடி ஒன்றியத்திலுள்ள தச்சனேந்தல் கிராமத்திற்கு ஒரு சமுதாயக்கூடம் (திருமண மஹால்) கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

## பள்ளிக் கட்டடம்

**வினா எண் 6047—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், குருக்குபட்டி ஊராட்சியில் பாலர் பள்ளிக் கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2007 மார்ச் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், குருக்குபட்டி ஊராட்சியில் பாலர் பள்ளிக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளப்படும்.

**30—**

## சாலை வசதி

**வினா எண் 6527—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அரியாம்பட்டி கரட்டுக்காடு பகுதி ராபிரெட்டிப்பட்டி கிராமம், உத்தண்டி வளவிற்கும் சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி எடையப்பட்டியிலிருந்து ராபிரெட்டிப்பட்டி-உத்தண்டி வளவிற்கும் இடையே 1 கி.மீ. தூரம் உள்ளது. இதில் எடையப்பட்டியிலிருந்து 400 மீ. தூரத்திற்கு புதிய மண் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 600 மீ. நீளத்திற்கு வரும் 2007-08-ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை வழங்கப்பட்டு புதிய சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**31—**

## சமுதாயக்கூடம்

**வினா எண் 6558—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 29]

(அ) ஆற்காடு தொகுதி, தாஜ்புரா ஊராட்சி, கிருஷ்ணாபுரம் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாஜ்புரா கிராம ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு சமுதாயக்கூடம் உள்ளது. ஆகவே இந்த ஊராட்சியில் அமைந்துள்ள கிருஷ்ணாபுரம் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித்தரும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**32—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 6616—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, உலகப்புரம் தொடக்கப் பள்ளி மற்றும் சென்னிமலை காமராஜ் நகர் ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவரும், காங்கேயத்திலுள்ள உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடமும் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை காமராஜ் நகர் ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. காங்கேயம் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் கட்டடம் பொதுப் பணித் துறையால் கட்டப்பட வேண்டியுள்ளதால் பொதுப் பணித் துறையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[2007 மார்ச் 29

**33—**

**சாலை வசதி**

**வினா எண் 6986(அ)—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திற்குட்பட்ட பாலதொழுவு பி. காட்டுபாளையம் கிராமத்திலுள்ள சாலைகள் அனைத்தையும் சரி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலதொழுவு பி. காட்டுபாளையம் கிராமத்தில் உள்ள சாலைகள் அனைத்தையும் சரி செய்யும் பணிகள் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் (2006-2007) நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.

**34—**

**சாலை வசதி**

**வினா எண் 6987—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, கவுண்டனூர் காலனி, ஈங்கூர் கிழக்கு வீதி, உருமாண்டம்பாளையம் புது காலனி ஆகிய பகுதிகளில் கான்கிரீட் சாலை வசதியும் மற்றும் பனையம்பள்ளி பஞ்சாயத்தில் முத்துராண்டிபாளையம் கான்கிரீட் சாலையைச் சரி செய்து தரவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஈங்கூர் ஊராட்சி, ஈங்கூர் கிழக்கு வீதி உருமாண்டம்பாளையம் புது காலனி ஆகிய பகுதிகளில் கான்கிரீட் சாலை வசதி மற்றும் பனையம்பள்ளி ஊராட்சியில் உள்ள முத்துராண்டிபாளையத்தில் கான்கிரீட் சாலை ஆகிய பணிகள் வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**35—**

**சாலை மற்றும் மயான வசதி**

**வினா எண் 6992—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பரஞ்சேர் வழி கிராமம் வாவிபாளையத்தில் குளத்தின் மீது சாலை அமைக்கவும் பாலதொழுவு ஊராட்சி, கொடுமணல்-ஆலமரம் தார்ச் சாலையின் நடுவிலுள்ள பாலத்தைச் செப்பனிடவும், ஈங்கூர் ஊராட்சி எழுதிங்கள்பட்டியில் மயானம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பரஞ்சேர் வழி கிராமம், வாவிபாளையத்தில் உள்ள குளத்தின் மீது சாலை அமைக்கும் பணி வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ளப்படும்.

சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், பாலதொழுவு ஊராட்சி, கொடுமணல்-ஆலமரம் தார்ச் சாலையின் நடுவில் உள்ள பாலம் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்ததாகும். இப்பாலத்தினைச் செப்பனிட நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2007 மார்ச் 29

சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சி, எழுதிங்கள்பட்டியில் மயானம் அமைக்க இடவசதி ஏற்படுத்தித் தருமாறு வருவாய்த் துறையிடம் கோரப்பட்டுள்ளது. இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதும் மயானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**36**—

## தொலைக்காட்சிப் பெட்டி

**வினா எண் 7005—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குமார வலசு பஞ்சாயத்து, தண்ணீர்ப் பந்தல் ஆதிதிராவிடர் காலனி மற்றும் உருமாண்டம்பாளையத்திற்கும் தொலைக்காட்சிப் பெட்டி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமார வலசு ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, தண்ணீர்ப் பந்தல் ஆதி திராவிடர் காலனி மற்றும் உருமாண்டம்பாளையத்திற்கு நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் தொலைக்காட்சிப் பெட்டி நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37**—

## சமுதாய நலக்கூடம்

**வினா எண் 7058—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், அண்ணான்டப்பட்டி ஊராட்சி, அண்ணான்டப்பட்டியிலும், புதுக்கோட்டை ஊராட்சி, புதுக்கோட்டையிலும் சமுதாய நலக்கூடம் (திருமண மண்டபம்) அமைக்க அரசு முன்வருமா?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பெயரில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**38**—

## சமுதாய நலக்கூடம்

**வினா எண் 7060—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலை வசந்தபுரம் கிராமத்தில் ஒரு சமுதாய நலக்கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலை வசந்தபுரம் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் கட்டித் தர 2006-2007ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் இப்பணியைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39**—

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7139—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 29

(அ) பண்ருட்டி தொகுதி-விசூர் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, விசூர் கிராமத்தில் 60,000 மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைமூலம் இக்குடியிருப்புக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதாலும், மக்கட்தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதாலும், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.

**40—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7339—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ராயம்பாளையம் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சீரமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, ராயர்பாளையம் குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் இக்குடியிருப்புக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால், மேற்கூறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை தற்போது சீரமைக்கத் தேவையில்லை.



2007 மார்ச் 29]

**41—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7343—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான்குப்பம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான்குப்பம் குடியிருப்பில் செயல்பட்டுவரும் குடிநீர்த் திட்டங்கள்மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**42—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7345—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, எஸ். ஏரிப்பாளையம் புதுமனையில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, எஸ்.ஏரிப்பாளையம் புதுமனை என்பது எஸ்.ஏரிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பகுதியாகும். எஸ்.ஏரிப்பாளையம் குடியிருப்பில்

உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம்மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால், புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

**43—**

## நீர்த்தேக்கத் தொட்டி செப்பனிடுதல்

**வினா எண் 7360—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டையில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கருகிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டையிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை நடப்பு நிதியாண்டில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சரி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**44—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7361—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை கிராமத்தில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை கிராமத்தில் 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் ஊராட்சிப் பராமரிப்பில் உள்ளது. இதன்மூலம் இக்குடியிருப்புக்கு தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.

**45—**

## நீர்த்தேக்கத் தொட்டி புதுப்பித்தல்

**வினா எண் 7366—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சாத்தமாம்பட்டு கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புதுப்பித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில், கீழ்மாம்பட்டு ஊராட்சியில் சாத்தமாம்பட்டு என்ற குடியிருப்பு உள்ளது. சாத்தமாம்பட்டு குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை நடப்பு நிதியாண்டில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் புதுப்பித்திட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**46—**

## பள்ளிக்கு சுற்றுச் சுவர்

**வினா எண் 7665—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், குப்பனூர் கூடக்கல் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், குப்பனூர் கூடக்கல் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ஒதுக்கீடு கிடைத்தால் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**47—**

## சாலை வசதி

**வினா எண் 7671—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், ராபிரெட்டிப்பட்டி கிராமம், வதியன் வளவுப் பகுதிக்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, ராபிரெட்டிப்பட்டி ஊராட்சி, வதியன் வளவு ஜலகண்டாபுரம் தார்ச் சாலையிலிருந்து 1.20 கி.மீ. தூரம் கொண்டது. இதில், 0.50 கி.மீ. தார்ச் சாலை, மீதமுள்ள 0.700 கி.மீ. ஜல்லி சாலையாக உள்ளது. மேற்படி ஜல்லி சாலையை தார்ச் சாலையாக அமைக்க ரூ.5.00 இலட்சம் மதிப்பீடாகும். ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் தற்போது போதிய நிதி வசதி இல்லையாதலால் மேற்கண்ட பணியினை தற்போது செய்ய இயலாது.



**48—**

## சமுதாயக்கூடம்

**வினா எண் 8158—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, புதுக்கோட்டை ஊராட்சி மற்றும் அண்ணான்டப்பட்டி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியில் உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**49—**

## நிழற்கூடம்

**வினா எண் 8161—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜமணப்புதூர் ஊராட்சி, புதூர் பூங்குளம் கிராமத்திற்கு பயணியர் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி ஒதுக்கீடு பெற்று இப்பணியை முடிக்க முன்னுரிமை வழங்கப்படும்.

50—

## தார்ச் சாலை

**வினா எண் 8216—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, கணவாய்ப்பட்டி - டி. சுக்காம்பட்டி வரை பொன்னுரங்கப்பட்டி–கருப்பூர், மேட்டுக்கடை–பொடங்குபட்டி, தாதகவுண்டம்பட்டி–கோடப்பட்டி தார்ச் சாலை (7 கி.மீ. தூரம்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

**கணவாய்ப்பட்டி–டி.சுக்காம்பட்டி**

மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், புத்தாநத்தம் எல்லை கணவாய்ப்பட்டி முதல் டி.சுக்காம்பட்டி வரை செல்லும் சாலை 4.60 கி.மீ. தூரம் உள்ளது. 2006-2007ஆம் ஆண்டிற்கு இச்சாலை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் சேர்த்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பொன்னுரங்கம்பட்டி–கருப்பூர் சாலை**

புத்தாநத்தம் கல்லுப்பட்டி சாலையிலிருந்து பொன்னுரங்கம்பட்டி வழியாக வடக்கிப்பட்டி செல்லும் சாலை கி.மீ. 2/0-5/0 (குறுக்கு வடிகால் வேலைகள் உட்பட) ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய முன்னுரிமைப் பட்டியல்-II-ல் சேர்க்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மேட்டுக்கடை–பொடங்குப்பட்டி சாலை**

மேட்டுக்கடை–பொடங்குப்பட்டி சாலை 2 கி.மீ. தூரத்திற்கு ரூ.25.20 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்திட சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி-நபார்டு-அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி 2007-2008ஆம் ஆண்டு திட்டப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.



**தாதகவுண்டம்பட்டி-கோடப்பட்டி சாலை**

தாதகவுண்டம்பட்டி எல்லை முதல் கோடப்பட்டி வரை செல்லும் 3.00 கி.மீ. சாலையில் ஏற்கெனவே ஒரு கி.மீ. தூரத்திற்கு தார்ச் சாலையாகவும், 2.00 கி.மீ. தூரத்திற்கு மண் சாலையாகவும் உள்ளது. இச்சாலை முழுவதும் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு ரூ.26.50 இலட்சம் மதிப்பீட்டில் 2007-2008ஆம் ஆண்டு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

51—

## சாலை வசதி

**வினா எண் 8231—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியம், குரும்பப்பட்டி கிராமம், மேல்தளவாய்ப்பட்டி மக்களுக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், குரும்பப்பட்டி ஊராட்சி, மேல்தளவாய்ப்பட்டி மக்களுக்கு ஒருபுறம் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் (PMGSY) திட்டத்தில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

52—

## அடிப்படை வசதி

**வினா எண் 8405—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புதுப்பாளையம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பறை, மணப்பாக்கம் காலனியில் மகளிர் பொதுக் கழிப்பிடம், புதுப்பாளையம் கிராமத்தில்

[2007 மார்ச் 29

கழிவுநீர்க் கால்வாய், மாளிகம்பட்டு கிராமத்தில் கிழக்குத் தெரு, பேர்பெரியான்குப்பம் கிராமத்தில் காலனியில் இருபுறமும், மானடிக்குப்பம் கிராமத்திலும் கழிவுநீர் வாய்க்கால் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுப்பாளையம் கிராமத்தில் நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பறை உள்ளது. சுத்தம் செய்து பயன்படுத்த ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மணப்பாக்கம் கிராமத்தில், 2002-2003ஆம் ஆண்டு ரூ.2.00 இலட்சம் மதிப்பில் 'எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. புதுப்பாளையம் கழிவுநீர் கால்வாய், மாளிகம்பட்டு அரிசனக் காலனி கிழக்குத் தெரு, பேர்பெரியான்குப்பம் அரிசனக் காலனி இருபுறமும் மானடிக்குப்பம் இருபுறமும் கழிவுநீர் வாய்க்கால் கட்ட அரசு திட்டத்தில் வழிவகை இல்லை.

**53—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 8604—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, இராஜகம்பீரம் ஆதி திராவிடர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், இராஜகம்பீரம் ஊராட்சியைச் சேர்ந்த இராஜகம்பீரம் ஆதி திராவிடர் காலனி குடியிருப்பில் 2005-2006 நிதியாண்டில் 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. மேல்நிலைத் தொட்டியை விரைவில் செயல்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2007 மார்ச் 29]

**54—**

## புதிய கட்டடம்

**வினா எண் 9507—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், செல்லப்பிள்ளை குட்டை ஊராட்சி, மல்லக்கவுண்டனூரில் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பிள்ளை குட்டை ஊராட்சி, மல்லக்கவுண்டனூரில் நியாய விலைக் கடை கட்ட ரூ.1,65,000/- (ஒரு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. வரும் நிதியாண்டில் பெறப்படும் ஒதுக்கீடுகளில் முன்னுரிமை அடிப்படையில் இப்பணி மேற்கொண்டு முடிக்கப்படும்.

**55—**

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 9973—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, சின்னகொளம்பை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்தில் சின்னகொளம்பை என்ற கிராமம் இல்லை.

சின்னநொலம்பை என்ற குடியிருப்புதான் உள்ளது. இந்தக் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

**56—**

**தண்ணீர்த் தொட்டி**

**வினா எண் 10080—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, வெல்லப்புத்தூர் காலனியில், சிறிய தண்ணீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, வெல்லப்புத்தூர் காலனியில், 2004-2005-ல் செயலாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம்மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், கூடுதலாக குடிநீர்த் திட்டம் தற்போது தேவையில்லை. எனவே, சிறிய தண்ணீர்த் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

**57—**

**கலையரங்கம்**

**வினா எண் 10567—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், குளவாய்பட்டி, பிரியங்கா நகர், புலியூர் கோவில் முன்பு, ஒத்தப்பட்டி மற்றும் செங்களூர் ஆகிய பகுதிகளில் கலையரங்கம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புலியூர் கிராமத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி 2006-2007-ன்கீழ் கலையரங்கம் கட்ட ஒப்பந்தப்புள்ளி 1-12-2006 அன்று கோரப்பட்டுள்ளது. பணி விரைவில் முடிக்கப்படும். குளவாய்பட்டி பிரியங்கா நகர், ஒத்தப்பட்டி, செங்களூர் ஆகிய பகுதிகளில் கலையரங்கம் அமைத்துத் தர சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியில் ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் கலையரங்கம் கட்டித்தரப்படும்.

**58—**

**சமுதாயக்கூடம்**

**வினா எண் 10655—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாட்டம், குன்னூர் கீழ்க்கோத்தகிரி, தேனாடு கிராமத்திற்கு சமுதாயக்கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேனாடு கிராமத்தில் நடப்பு நிதியாண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய்.- II திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

**59—**

**தார்ச் சாலை**

**வினா எண் 11003—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 29

(அ) காங்கேயம் தொகுதி, சங்கராண்டாம்பாளையம் ஊராட்சி, வடுகபாளையம், கோயில்பாளையம், காட்டுப்பாளையம், ஆண்டிபாளையம், காட்டுப்பாளையம் கொடுவாய் ரோடு, வடசின்னாரிபாளையம், வளவாநல்லூர், குள்ளம்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சங்கராண்டாம்பாளையம் ஊராட்சி, வடுகபாளையம், கோவில்பாளையம் சாலை தற்போது மண் சாலையாக உள்ளது. போக்குவரத்திற்கு இடையூறு ஏதும் இல்லை. மேலும் வடுகபாளையம், கோவில்பாளையம் சாலையில் ஒரு சிறு கிராமம் மட்டுமே உள்ளது. மக்கள் தொகை 100-க்குக் குறைவாக உள்ளது. இச்சாலை போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. எனவே, இச்சாலையினை தற்போது தார்ச் சாலையாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

காட்டுப்பாளையம் முதல் ஆண்டிபாளையம் சாலை 0.80 கி.மீ. நீளம் மட்டுமே உள்ளது. தற்போது 2006-2007 ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலைத் திட்டத்தில் ஓரடுக்கு கப்பி போட்டு மேம்பாடு செய்ய தெரிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

காட்டுப்பாளையம்-கொடுவாய் சாலை-இச்சாலை 3.60 கி.மீ. நீளம் உள்ளது. தற்போது மண்சாலையாக உள்ளது. சாலை நல்ல நிலையில் உள்ளது. போக்குவரத்திற்கு எந்தவிதமான இடையூறும் இல்லை. இதனிடையில் எந்த குக்கிராமமும் இல்லை. விவசாய பூமியில் ஆங்காங்கே வீடுகள் உள்ளன. குள்ளம்பாளையம்—வளவாநல்லூர் சாலை 1.40 கி.மீ. நீளம் உள்ளது. தற்சமயம் ஊராட்சியால் பாரமரிப்பு செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்திற்கு இடையூறு ஏதுமில்லை. தற்சமயம் கப்பிச் சாலையாக உள்ளது. இரண்டு தார்ச் சாலைகளையும் இணைக்கும் சாலையாக உள்ளது. மேற்கூறிய இரண்டு சாலைகளையும் தற்போது தார்ச் சாலையாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.



2007 மார்ச் 29]

60—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 11018—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காரபாளையம், குருக்குப்பாளையம் ஊராட்சி, செட்டிபாளையம் ஆகிய தொடக்கப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், குருக்குப்பாளையம் தொடக்கப் பள்ளிக்கு 2005-2006 ஆம் ஆண்டில் பழனி பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. செட்டிபாளையம் தொடக்கப் பள்ளிக்குப் போதிய நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

61—

## கல்யாண மகால்

**வினா எண் 12568—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், லாடனேந்தல், மேலச்சொரிக்குளம், வில்லியரேந்தல், தேனி, செல்லப்பரேந்தல், சிவாங்குளம், வளையப்பட்டி மற்றும் கழுகர் கடை ஆகிய கிராமங்களுக்கு கல்யாண மகால் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியப் பகுதிக்குட்பட்ட உட்கடை கிராமங்களில் கல்யாண மகால் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தரும்பட்சத்தில் இந்தப் பணியினைச் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**62—**

## தார்ச் சாலை வசதி

**வினா எண் 12854—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், கூடச்சேரி வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து இருட்டணை, கிராந்தகம் செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கூடச்சேரி வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து இருட்டணை கிராந்தகம் செல்லும் சாலை 400 மீ. தார்ச் சாலையாக உள்ளது. மீதமுள்ள 2 கி.மீட்டருக்கு நபார்டு திட்டத்தில் சேர்த்து தார்ச் சாலை வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**63—**

## கிராமக் கலையரங்கம்

**வினா எண் 13385—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* மானாமதுரை தொகுதி, மாங்குளம் மற்றும் வி. கரிசல்குளம் ஆகிய கிராமங்களுக்கு கிராமக் கலையரங்கம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* மானாமதுரை தொகுதிக்குட்பட்ட மாங்குளம் மற்றும் வி. கரிசல்குளம் ஆகிய கிராமங்களில் கிராமக் கலையரங்கம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் இப்பணியைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**64—**

## கலையரங்கம்

**வினா எண் 13582—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, கே. புதுக்குளம், அரசகுளம், கீழமேல்குடி ஆகிய கிராமங்களில் கலையரங்கமும், புலவர் சேரிக்கிராமத்தில் நாடக மேடையும் அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்யும்பட்சத்தில் இந்தப் பணியினைச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2007 மார்ச் 29

65—

## வேலையின்மை ஆய்வு

**வினா எண் 6040—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இஸ்லாமிய மக்கள் மத்தியில் கல்வியின்மை, வேலையின்மை குறித்து ஆய்வு செய்ய தமிழக அளவில் குழு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

இஸ்லாமிய மக்கள் மத்தியில் கல்வியின்மை, வேலையின்மை குறித்து ஆய்வு செய்யும் பணி, 1989 ஆம் ஆண்டு தமிழக அரசால் அமைக்கப்பட்ட மாநில சிறுபான்மை ஆணையத்தின் பணிகளில் ஒன்றாக உள்ளது. இது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ள இவ்வாணையம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளுக்காக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர்.

66—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 2870—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதியில் உள்ள திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 2006-2007 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ்



2007 மார்ச் 29]

சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக நிர்வாக அனுமதி மற்றும் ரூ.50.82 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

67—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 10231—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை கிராமம், பெரிய வடமலை பாளையம் காமராஜர் காலனியிலுள்ள வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி ஜம்பை கிராமம், பெரிய வடமலை பாளையம், காமராஜர் காலனியிலுள்ள வீடுகள் ரீ.ச. 417/2 வண்டிப்பாதைப் புறம்போக்கில் உள்ளது. இதனை நத்தமாக நில வகைப்பாடு மாற்றம் செய்த பின்னரே வீட்டுமனைப் பட்டா வழங்க இயலும். இதனை நத்தமாக நில வகைப்பாடு மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

68—

## கட்டடப் பராமரிப்பு

**வினா எண் 14252—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறைச்சாலையில் உள்ள பழுதடைந்த கட்டடங்களைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறைக்கு, சிறைகளை நவீனப் படுத்தும் திட்டத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பழுது பார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டன:

| வருடம் | பழுது பார்த்தல் பணிக்கு | குடிநீர் மற்றும் சுகாதாரம் |
|---|---|---|
| 2003-2004 | ரூ.28.30 இலட்சம் | ரூ.33.50 இலட்சம் |
| 2004-2005 | - | ரூ.13.47 இலட்சம் |

மேலும், சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டுகளுக்கு பழுது பார்த்தல் பணிக்கு ரூ.118.28 இலட்சமும், குடிநீர் மற்றும் சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.16.50 இலட்சமும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகளில் கோவை மத்திய சிறையில் சமையலறையை ரூ.71.02 இலட்சம் செலவில் நவீனப்படுத்த அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2. மேலும் இவற்றைத் தவிர, ஆண்டுதோறும் வழங்கப்படும் கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சிறை நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

**69—**

## நிரந்தர விடு

**வினா எண் 14557—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி தரங்கம்பாடி பேரூராட்சியில் உள்ள, சுனாமியால் பாதிக்கப்பட்ட சிந்தாதரிப்பேட்டை மக்கள், சுமார் 60 குடும்பங்களுக்கு நிரந்தர வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி தரங்கம்பாடி, கடல் உயர் மட்ட அலைக் கோட்டிலிருந்து 1,000 மீட்டர் வரை உள்ளது. இயற்கை பாதிப்புகளைத் தாங்க இயலாத நிலையில் உள்ள கூரை வீடு, மண்சுவர் ஓட்டு வீடு மற்றும் உறுதியில்லாத வீடுகளுக்கான கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிந்து கணக்கெடுப்புக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நிரந்தர வீடு கட்டித் தரப்படும்.

**70—**

## மருத்துவ உதவி

**வினா எண் 14923—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைக்குப் போதுமான மருத்துவ உதவி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை, மத்திய சிறையில் 90 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையானது, உதவி மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. அதில், தற்போது 37 சிறைவாசிகள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், சிறையில் உள்ள மருத்துவ உதவி தேவைப்படும் சிறைவாசிகளுக்குப் போதிய மருத்துவ உதவி உடனுக்குடன் அளிக்கப்பட்டு வருகிறது. மேல் சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மேற்படி சிறையில் ஒதுக்கப் பிரிவு (Isolation Ward) ஒன்றை ரூ. 22.63 இலட்சங்களில் அமைக்க 2005-2006 ஆம் ஆண்டு சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் அரசாணை எண் 1007, உள் (சிறை 4) துறை, நாள் 10-10-2006-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**71—**

## நீதிமன்றங்கள்

**வினா எண் 15096—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் சிவில் மற்றும் நடுவர் நீதிமன்றங்கள் எவ்வளவு உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 751 நீதிமன்றங்கள் (உரிமையியல் மற்றும் குற்றவியல்) இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட நீதிமன்றங்கள் (மாவட்ட நீதிபதிகள் தரம்) 49 விரைவு நீதிமன்றங்கள்/தனி நீதிமன்றங்கள்/ குடும்ப நல நீதிமன்றங்கள்/மகளிர் நீதிமன்றங்கள்/ தொழிலாளர் நீதிமன்றங்கள் | .. 143 |
| 2 | தலைமைப் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றங்கள்/ தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள்/சார்பு நீதிமன்றங்கள்/உரிமையியல் நீதிபதி/ முதுநிலைப் பிரிவு | .. 175 |
| 3 | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்/மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம்/ குற்றவியல் நீதிமன்றங்கள்/உரிமையியல் நீதிபதி/இளநிலைப் பிரிவு | .. 433 |
| | மொத்தம் | .. 751 |





**72—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 2701—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, நரசிம்மபுரத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், நரசிம்மபுரம் கிராமத்திற்கும் சுண்டாக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோமீட்டர் மட்டுமே உள்ளதால், நரசிம்மபுரத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**73—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 2866—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் எந்தெந்தப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள 6 ஆரம்ப சுகாதார நிலையங்களும் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால்,

[2007 மார்ச் 29

ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட தற்போது அவசியம் ஏதும் ஏற்படவில்லை.

**74—**

## சுற்றுச்சுவர்

**வினா எண் 6007—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டம், பரமத்தி பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம், சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டத்தில் உள்ள பரமத்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம், சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில், பரமத்தி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் கூடச்சேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், நல்லூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பரமத்தி ஆரம்ப சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டட வசதி போதுமானதாக உள்ளதால், கூடுதலாக கட்டட வசதி ஏதும் தற்போது தேவைப்படவில்லை.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தடுப்புச் சுவர் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு நாமக்கல் மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



2007 மார்ச் 29]

**75—**

## துணை சுகாதார நிலையம்

**வினா எண் 11292—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, எலவம்பட்டி கிராமப் பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, எலவம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே, ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், எலவம்பட்டி கிராமத்தில் மற்றொரு துணை சுகாதார நிலையம் ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**76—**

## வேலைவாய்ப்பு

**வினா எண் 2785—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் குறிப்பான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், அரசின் சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள், தனியார் துறை அளவில் புதிய

தொழில்களைத் தொடங்குவதற்கான ஊக்குவிப்பு போன்ற நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தொழில் ரீதியில் பின்தங்கிய பகுதிகளில் முதலீடு செய்யப்படவுள்ள தனியார் துறை மூலதனத்தில் மானியம் வழங்கி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் இளைஞர்கள் வேலைவாய்ப்புகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அவர்களின் திறனை வளர்த்துக்கொள்ள பயிற்சித் திட்டங்களும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

(ஆ) எழவில்லை.

77—

## வேலை வாய்ப்பு

**வினா எண் 3179—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கும் ஆதிதிராவிட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆதிதிராவிட வகுப்பு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறும் நிலையில் ஆறு மாதம் முதல் பன்னிரண்டு மாதங்கள் வரை தாட்கோ மூலம் பல்வேறு அரசு மற்றும் அரசு சாராத் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தொழில் முனைவோருக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்குப் பின்னர் சுயவேலை பெற ஏதுவாக கடன் வசதிகள் பெற்றுத்தர அந்தந்த மாவட்டத்தில் உள்ள தாட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தொழிற்பயிற்சி, இன்ஜினியரிங், பட்டயம் மற்றும் பட்டதாரி படிப்பு ஆகியவற்றிற்கான சான்றிதழ்களைப் பெற்ற ஆதிதிராவிட இளைஞர்கள் மேற்படி தாட்கோமூலம் சுய வேலை தொடங்க அரசு வழிவகுத்துள்ளது.

(ஆ) எழவில்லை.



78—

## குளம் தூர் வாருதல்

**வினா எண் 8857—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பெருமாபட்டு ஊராட்சி, ஜலகாம்பரை கோயில் குளத்தைத் தூர்வாரி ஆழப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் தொகுதி, பெருமாபட்டு ஊராட்சி, ஜலகாம்பரை, அருள்மிகு வெற்றிவேல் முருகன் திருக்கோயிலுக்கு உரியதும், வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான திருக்குளம் (சிறியகுட்டை) கடந்த 16-8-2006 அன்று நடைபெற்ற ஆடிக் கிருத்திகை பெருவிழாவின்போது திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் நீராட ஏதுவாக திருக்கோயில் நிதி மூலம் தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

79—

## கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

**வினா எண் 13556—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு பேரூராட்சி நகரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு பேரூராட்சி நகரில் இயங்கி வந்த கோ-ஆப்டெக்ஸ்

விற்பனை நிலையம் நஷ்டத்தில் இயங்கிய காரணத்தினால் 10 வருடங்களுக்கு முன்பாகவே மூடப்பட்டது. சேத்துப்பட்டு பேரூராட்சிக்கு அருகில் வந்தவாசி மற்றும் ஆரணி ஆகிய இடங்களில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது. மேலும், பண்டிகைக் காலங்களில் சேத்துப்பட்டு பேரூராட்சியில் வாடிக்கையாளர்களின் வசதிக்காக வளாக விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**80—**

### கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 15514—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் நலிவுற்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை வளர்ச்சி அடையச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வால்பாறை உள்ளிட்ட பகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**81—**

### சாயக் கழிவுகள்

**வினா எண் 6195—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, மத்தகிரி கிராமத்திலுள்ள நிலங்களில் குழிகள் வெட்டி சாயக் கழிவுகள் மற்றும் நச்சுப் பொருட்களைக் கொட்டுவதை வருங்காலத்தில் தடுக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

கிருஷ்ணராயபுரம் தொகுதி, மத்தகிரி கிராமத்தில் சலவை மற்றும் சாயப் பட்டறைக் கழிவுநீர் அந்தந்தப் பட்டறைகளுக்குச் சொந்தமான மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் திடக்கழிவுகள் உரிய தொழில்நுட்ப முறையில் சேமித்து வைக்க தொழில்நுட்ப ரீதியாக வடிவமைக்கப்பட்ட கட்டமைப்பு தேவைப்படுகிறது. இதற்காக கரூர் பொது மற்றும் தனியார் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு 20.645 ஹெக்டேர் நிலம் வாங்கியுள்ளது. இவ்விடத்தில் உரிய தொழில்நுட்ப முறையைக் கையாண்டு, நிலத்தடி நீருக்கோ அல்லது பொதுமக்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், செயல்பட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**82—**

### மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 8041—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காஞ்சார்பாளையத்தில் தேங்காய் தொட்டி சுடும் தொழிலால் ஏற்படும் புகையால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டத்தில் தேங்காய் ஓடுகளை எரித்து கரி தயாரிக்கும் சிறிய தொழிற்சாலைகள் 18 உள்ளன. இவை தரிசு நிலங்களில் அமைந்துள்ளன. இத்தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் உரிமம் பெறாமலும், தக்க மாசுக் கட்டுப்பாடு சாதனங்களைப் பொருத்தாமலும் இயங்கி

வருகின்றன. மேலும், காற்று மாசுத் தடுப்புச் சாதனங்கள் பொருத்தப்படாததாலும், வாரியத்தின் இசைவாணையைப் பெறாமல் இயங்குவதாலும் திருவாளர்கள் யுனிக் கோக்கனட் புராடக்ஸ் என்ற தொழிற்சாலை தவிர, மீதமுள்ள காற்று மாசுத் தடுப்புச் சாதனங்கள் பொருத்தப்படாத அனைத்து தொழிற்சாலைகளுக்கும் முகாந்திர அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து தேங்காய் தொட்டி சுடும் தொழிற்சாலைகள் மீது, மாசுக் கட்டுப்பாடு விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வாரியம் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**83—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 8044—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், முகாசிபிடாரியூர் ஊராட்சி குப்பைக் கழிவுகள், சென்னிமலை சிறப்பு ஊராட்சி எல்லை பெருந்துறை ஆர்.எஸ்.சாலையில் கொட்டுவதால் மாசு ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை ஒன்றியத்தில் முகாசிபிடாரியூர் ஊராட்சி அமைந்துள்ளது. இவ்வூராட்சியின் மக்கள்தொகை சுமார் 19000 ஆகும் இதில் நாளொன்றுக்கு சுமார் 5 டன் அளவு திடக்கழிவு உற்பத்தியாகிறது.

ஆய்வின்போது இவ்வூராட்சியில் உருவாகும் திடக்கழிவுகள் சேகரித்து முறையாக அப்புறப்படுத்தப்படாமல் சாலையோரங்களிலும், மயான இடத்திலும் மற்றும் சுமார் 2 முதல் 3 டன் அளவு குப்பை சென்னிமலை சிறப்பு ஊராட்சிக்குட்பட்ட பெருந்துறை ஆர்.எஸ்சாலை ஓரத்திலும் கொட்டி வைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. மேலும், இது தொடர்பாக இவ்வூராட்சியின் தலைவரைத் தொடர்பு கொண்ட



பொழுது, போதுமான ஆள் மற்றும் வாகன வசதி இல்லாத காரணத்தால் முறையாக குப்பைகளை அகற்ற இயலவில்லை என தெரிவிக்கப்பட்டது. ஆனால், இக்காரணங்களை ஏற்றுக்கொள்ள இயலாது எனவும், குப்பைகளை முறைப்படி அகற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், இதில் ஊராட்சி அமைப்பின் பொறுப்பினை உணர்த்தியும் வாரியம் 14-11-2006 அன்று மேற்கண்ட ஊராட்சிக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. ஊராட்சியின் பணியினை வாரியம் தொடர்ந்து கண்காணிக்கும்.

**84—**

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 9913—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் நகரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காவேரிப்பட்டினம் நகரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**85—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 10164—திரு. வை. காவேரி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி பகுதி, பட்டாப்பன் நகர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2007 மார்ச் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி பகுதி, பட்டாப்பன் நகர்ப் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**86—**

## நிலத்தடிநீர் மாசுபடுதல்

**வினா எண் 14229—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, பெருந்துறை சிப்காட் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினர் சுத்தம் செய்யாமல் சாயக்கழிவு நீரை வெளியேற்றுவதால் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் ஈரோடு மாவட்டத்திற்குட்பட்டவையாகும். ஈரோடு மாவட்டத்தில் இயங்கிவரும் சாயம் மற்றும் சலவைப் பட்டறைக் கழிவு நீரினால் ஏற்படும் பாதிப்பு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்குகள் மீது அவ்வப்போது பிறப்பிக்கப்படும் நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**87—**

## சாயம் மற்றும் சலவைப்பட்டறைக் கழிவுகள்

**வினா எண் 14230—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 29]

நத்தக்கடையூர் மற்றும் சென்னிமலை ஒன்றியம், சிறுக்கிழங்கி, கூத்தம்பாளையம், சர்க்கார் கூத்தக்கன்னி, பல்லவராயன்பாளையம், இச்சிபாளையம் ஆகிய ஐந்து ஊராட்சிகளில் இயங்குகின்ற சாயப்பட்டறை, சலவைப்பட்டறைக் கழிவுகளால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள இடங்கள் ஈரோடு மாவட்டத்திற்குட்பட்டவையாகும், ஈரோடு மாவட்டத்தில் இயங்கி வரும் சாயம் மற்றும் சலவைப்பட்டறைக் கழிவுநீரினால் ஏற்படும் பாதிப்பு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்குகள் மீது அவ்வப்போது பிறப்பிக்கப்படும் நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**88—**

## டாப் சிலிப் விழா

**வினா எண் 16082—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையினர் சார்பாக 2006-2007 ஆம் ஆண்டில் டாப் சிலிப்பில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வனத் துறையின் சார்பாக 2006-2007 ஆம் ஆண்டில் டாப் சிலிப்பில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து விழா நடத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

[2007 மார்ச் 29

**89—**

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 9599—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உதவிக் கோட்டம் மதுரை, தேனி சாலையிலிருந்து இ. புதுப்பட்டி வழியாக அம்பாசமுத்திரம் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மதுரை - தேனி சாலை கி.மீ.48/6-ல் பிரிந்து அம்பாசமுத்திரம் செல்லும் சாலை இதர மாவட்டச் சாலையாகும். இதன் மொத்த நீளம் 160 கி.மீ. ஆகும். இச்சாலையைச் செப்பனிட்டு மேம்பாடு செய்ய ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாடு செய்யும் திட்டத்தில் (சி.ஆர்.ஐ.டி.பி. 2006-2007) அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு ஒப்புதலுக்கு பின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்தம் முடிவானவுடன் சாலை செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படும்.

**90—**

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 9600—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, திருமங்கலம் - உசிலம்பட்டி பிரிவிலிருந்து கண்ணபட்டி, வேப்பனூத்து, பாறைப்பட்டி செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருமங்கலம் - உசிலம்பட்டி பிரிவிலிருந்து கண்ணபட்டி, வேப்பனூத்து, பாறைப்பட்டி செல்லும் சாலையானது கி.மீ.0/0-11/4 நீளம் கொண்ட உசிலம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 4/4-9/2 முடிய மிகவும் மோசமான நிலையில் இருந்ததால் நபார்டு திட்டம்-85 RIDP II-இல் ரூ.30.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தற்சமயம் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவுபடுத்தி முடிக்கப்படும்.



2007 மார்ச் 29]

**91—**

## சிறு தொழில் பயிற்சி

**வினா எண் 9970—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டையில் பார்வையற்றவர்களுக்காக கூடை முடைதல், நாற்காலிகளுக்கு ஒயர் பின்னுதல் போன்ற பயிற்சி அளிக்க பயிற்சிக் களம் தொடக்கவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டையில் பார்வையற்றோருக்கான நாற்காலி ஒயர் பின்னுதல், கூடை முடைதல் போன்ற பயிற்சி அளிக்கும் மையம் தொடங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தமிழகத்தில் கிருஷ்ணகிரி, மதுரை, திருவள்ளூர், தூத்துக்குடி, சென்னை ஆகிய மாவட்டங்களில் ஏழு மையங்களில் பார்வையற்றோருக்கு நாற்காலி ஒயர் பின்னும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**92—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 5472—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, தேம்பிராம்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 29

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தேம்பிராம்பட்டு கிராமத்தின் அருகில் 5 கி.மீ. தூரத்தில் சேத்பட் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் தேம்பிராம்பட்டு கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதிய சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், 2 கால்நடை மருந்தகங்களும், 2 கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், தேம்பிராம்பட்டு கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. ஆதலால் விழுப்புரம் மாவட்டம், தேம்பிராம்பட்டு கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை.

**93—**

## துணை கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11461—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், நம்பம்பட்டியில் உள்ள துணை கால்நடை மருத்துவமனையை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) நம்பம்பட்டி கால்நடை கிளை நிலையத்தில் தற்போது கால்நடை ஆய்வாளர் பதவி காலியாக உள்ளதால் மேற்படி கிராமத்திற்கு சிகிச்சைப் பணிகள் அவ்வப்போது கால்நடை மருந்தகங்கள் விராலிமலை மற்றும் மணப்பாறை கால்நடை உதவி மருத்துவர்கள் மூலம் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.



2007 மார்ச் 29]

**94—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 11487—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, கம்பத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தினை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தேனி மாவட்டம், கம்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கம்பம் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**95—**

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 11489—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தேனி மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2007 மார்ச் 29

96—

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 11609—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, உரிகம் மற்றும் பெட்டமுகிலாளம் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, உரிகம் கிராமத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின்கீழ் கால்நடை மருந்தகக் கட்டடம் ஒன்று கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள் துறையின் அனுமதியின்றி ஊரக வளர்ச்சித் துறை நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்திற்கு கால்நடை கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ அரசால் அனுமதிக்கப்படவில்லை. மேலும், இனி வருங்காலங்களில் அந்த கிராமங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தி, அங்குள்ள கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, அந்தக் கிராமத்திற்கு கால்நடை உதவி மருத்துவர் பதவியோ அல்லது கால்நடை ஆய்வாளர் பதவியோ நிரப்ப சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

## கால்நடை துணை நிலையம்

**வினா எண் 11789—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, நாயக்கன்பாளையம் கிராமத்தில் கால்நடை துணை நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பொள்ளாச்சி தொகுதி, நாயக்கன்பாளையம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

98—

## தீவன உற்பத்தி மையம்

**வினா எண் 12668—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்யும் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை பராமரிப்புத் துறையின் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (ஆவின்) மூலமாக தீவனங்கள் விலைக்கு வாங்கப்படுவதாலும், துறையின்கீழ் தீவன உற்பத்தி ஆலைகள் ஏதும் செயல்படாததாலும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்யும் மையம் அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

## வெள்ளைப் பன்றிகள் வளர்ப்பு

**வினா எண் 16148—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 29

(அ) வால்பாறை தொகுதியில் வெள்ளைப் பன்றிகள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் வெள்ளைப் பன்றிகள் வளர்க்க தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**100—**

**தரம் உயர்த்துதல்**

**வினா எண் 8639—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, மேலக்கோட்டையூர், ஆதி திராவிடர் நலத் துறை தொடக்கப் பள்ளியை, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தும் திட்டம் 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. எனவே, திருப்போரூர் தொகுதி, மேலக்கோட்டையூர் ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த உடனடித் தேவை மற்றும் அவசியம் இருப்பின், 2007-2008 ஆம் ஆண்டில் இப்பள்ளியை 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின்மூலம் நிலை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2007 மார்ச் 29]

## நான்காம் பட்டியல்

**1—**

**தடையில்லாச் சான்று**

**வினா எண் 12754—திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதியதாக தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்குவதற்குத் தேவையான தடையில்லாச் சான்றுகளைச் சுற்றுச்சூழல் துறையின்மூலம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தகவல் தொழில்நுட்பவியல் துறை, ஒரு மாசு ஏற்படுத்தாத துறையாகும். எனவே, புதியதாகத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்குவதற்குச் சுற்றுச்சூழல் துறையின்மூலம் தடையில்லாச் சான்றினை வழங்கிடத் தேவையில்லை.

**2—**

**தொழில்நுட்பப் பயிற்சி**

**வினா எண் 15004—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வால்பாறையிலுள்ள படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

3—

## சிறப்புப் பராமரிப்புப் பிரிவு

**வினா எண் 3938—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் பழுதடைந்த மின் மாற்றிகளைச் சீர் செய்யும் நிலையம் ஒன்றினைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள சிறப்புப் பராமரிப்பு உபகோட்டம் (மின்மாற்றிகள் மற்றும் இணை அமைப்புகள் பழுதுபார்க்கும் உபகோட்டம்) திருவாரூரில் இயங்கி வருகிறது. இது தவிர பழுதடைந்த மின்மாற்றிகளைத் தனியார் நிறுவனங்களின்மூலமாக மாதத்திற்கு 30 மின்மாற்றிகள் வீதம் பழுது நீக்கிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகையால், சீர்காழி தொகுதியில் சிறப்புப் பராமரிப்புப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் தற்போதைக்கு இல்லை.

4—

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 5451—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, முதலைக்குளம் ஊராட்சி, அம்மன் கோவில்பட்டியில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை, உசிலம்பட்டி 110/33 கி.வோ. துணை மின் நிலையத்தின் உயர் மின்னழுத்த மின்மாற்றி கடந்த 18-06-2006 அன்று பழுதான காரணத்தினால், அம்மன் கோவில்பட்டிக்கு, 110/11 கி.வோ. கிண்ணமங்கலம் துணை மின் நிலையத்திலிருந்து கொடிகுளம் பீடர் வழியாகப் பின்னோட்ட மின்சாரம் வழங்கப்பட்டதால் (Back feeding supply) குறைந்த மின்னழுத்தம் ஏற்பட்டது.



தற்பொழுது கடந்த 10-10-2006-ல் உசிலம்பட்டி துணை மின் நிலையத்தில் 110/33 கி.வோ. உயர் அழுத்த மின்மாற்றி புதிதாக வைக்கப்பட்டு, மேற்குறிப்பிட்ட கிராமத்திற்கு ஏற்கெனவே மின் வழங்கல் அளிக்கப்பட்டதுபோல, விக்கரமங்கலம் துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. கொடிகுளம் பீடர் வழியாக மின் வழங்கல் கொடுக்கப்பட்டு, மின்னழுத்தம் நல்ல நிலையில் உள்ளது. மேலும், அப்பகுதியில் தற்போது தடையில்லாமல் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

5—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 5662—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆலாம்பாளையம் கிராமத்தில் ஜீவா நகர்ப் பகுதியில் மின்கம்பம் அமைத்து தெரு விளக்கு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆலாம்பாளையம் கிராமத்தில் ஜீவா நகர் என்ற பகுதி ஏதும் இல்லை. சிவா நகர் என்ற குடியிருப்புப் பகுதி மட்டும் உள்ளது. அப்பகுதியில் தற்பொழுது 9 தெரு விளக்குகள் நல்ல முறையில் ஒளிர்விட்டுக் கொண்டிருக்கின்றன. சிவா நகர்ப் பகுதிக்கு மேலும், தெரு மின் விளக்குகள் கோரி விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் வாரிய விதிமுறைகளின்படி தெரு விளக்கு அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 மார்ச் 29

6—

## மின்வசதி

**வினா எண் 7178—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மாளிக்கம்பட்டு கிராமம், சின்ன காலனியில் (அண்ணா நகர் காலனி) மின் வசதி செய்து தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமன்பாடு மற்றும் ஊக்க நிதி 2003-2004-ன்படி, மாளிக்கம்பட்டு கிராமம், சின்ன காலனியில் (அண்ணா நகர் காலனி) 2 குழல் விளக்குகள் அமைத்திட, மாளிக்கம்பட்டு பஞ்சாயத்து தலைவர் அவர்களிடமிருந்து விண்ணப்பம் 24-2-2004 அன்று பெறப்பட்டது. அதன் அடிப்படையில், மதிப்பீடு அனுமதி பெற்று மதிப்பீட்டுத் தொகை ரூ.11,620/- செலுத்தப்பட்டு, மின்பாதை அமைக்கும் பணி செய்யும் பொழுது திரு. எஸ். ராஜு, த/பெ. முருகேசன் அண்ணா நகர், என்பவர் மின்பாதை அமைக்கும் இடம் தனக்கு உரிமையானது என்றும், பட்டாவில் உள்ளது என்றும் வக்கீல் நோட்டீஸ்மூலம் ஆட்சேபணை தெரிவித்தார்.

அதன் பேரில் தலைவர், மாளிக்கம்பட்டு அவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்மூலம் சமரச முயற்சி செய்து ஆட்சேபணையை சரி செய்ய இயலவில்லை என்பதால், மேற்படி அண்ணா நகர் காலனிக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு தெரு விளக்குகளை மாளிக்கம்பட்டு ஊராட்சித் தலைவர் அவர்கள் அவ்வூராட்சிக்குட்பட்ட புதுப்பிள்ளையார் குப்பம் பகுதிக்கு மாற்றியமைக்க வேண்டி விண்ணப்பித்ததன் அடிப்படையில், தெரு விளக்குப் பகுதி மற்றும் இடம் அமைக்க மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் அனுமதியின்படி, புதுப்பிள்ளையார் குப்பம் பகுதியில் மேற்படி இரண்டு குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது. இதுவரை குழல் விளக்குகள் எதுவும் மாளிக்கம்பட்டு கிராமம், அண்ணா நகர் காலனியில் அமைக்கப்படவில்லை.



2007 மார்ச் 29]

திரு. எஸ். ராஜு, த/பெ. முருகேசன் அவர்களின் ஆட்சேபணையை சரி செய்து, மேற்படி ஊராட்சி அலுவலர்களால் சாலை வசதிகள் அமைத்து தெரு விளக்குகள் வேண்டி வரைபடத்துடன் புதிய விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

## மும்முனை மின் இணைப்பு

**வினா எண் 7972—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, மயிலாடியில் உள்ள விசைத்தறிகளுக்கு மும்முனை மின் இணைப்பு அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயிலாடி பகுதியில் மொத்தம் 17 விசைத்தறி மின் இணைப்புகள் உள்ளன. மேற்படி விசைத்தறிக் கூடங்களுக்கு 24 மணி நேரமும் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்க அப்பகுதியைச் சேர்ந்த விசைத்தறி உரிமையாளர்கள் கூட்டாகச் சேர்ந்து, இதற்கென கூடுதலான ஒரு 4-வது மின்கம்பி அமைக்கும் பொருட்டு ஆகும் மதிப்பீட்டுத் தொகையினை முழுவதுமாகவோ அல்லது தவணை முறையிலோ செலுத்த முன்வரும்பட்சத்தில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.

மேலும், மயிலாடி பகுதிக்கு 10.5 கிலோ மீட்டர் தூரம் 4-வது மின்கம்பி அமைக்க வேண்டியிருக்கும் என்றும், அம்மின் பாதையானது உருமாண்டம்பாளையம் என்கிற இடத்தில் இரயில் பாதையைக் கடந்து அமைக்க வேண்டியிருக்கும் என்றும், இதற்கென இரயில்வே துறையினரிடம் தனி அனுமதி பெற்ற பின்னரே, இப்பணி செய்ய இயலும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ. 10 இலட்சம் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மதிப்பீட்டுத் தொகை செலுத்தும்பட்சத்தில், இரயில்வே துறையின் தனி அனுமதி பெற்றபின் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் அளிக்க இயலும்.

**8—**

## இலவச மின் இணைப்பு

**வினா எண் 7974—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காங்கேயம் தொகுதி, எல்லப்பாளையம் ஒன்றியம், வஞ்சிப்பாளையம் காலனி தொகுப்பு வீடுகளுக்கு இலவச ஒரு விளக்கு மின் இணைப்பு வழங்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, எல்லப்பாளையம் ஒன்றியம், வஞ்சிப்பாளையம் காலனியில் இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 8 தொகுப்பு வீடுகளுக்கு இலவச ஒரு விளக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டு, வாரிய விதிமுறைகளின்படி 6-10-2006 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டது.

**9—**

## புதிய மின்மாற்றிகள்

**வினா எண் 8656—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, சிறுதாவூர், செட்டிபுண்ணியம் காலனி மற்றும் வெங்கடாபுரம் பகுதியில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

செட்டிபுண்ணியம் காலனி மற்றும் வெங்கடாபுரம் மலைக்காலனி பகுதிகளில் மின்மாற்றி ஏதுமில்லை. எனவே, புதிய மின்மாற்றி நிறுவ ரூ. 3,61,000/-க்கு கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணி முடிக்கப்படும். சிறுதாவூர் கிராமத்திற்கு இரண்டு கம்பிகள் உள்ள மின்பாதைகளை மாற்றி, நான்கு கம்பிகள் கொண்ட மின்பாதைகள் அமைக்க ரூ. 28,965/-க்கு அனுமதி அளிக்கப்பட்டு மின்சாரம் சீராக விநியோகிக்கப்படும். மேலும், சிறுதாவூர் கிராமத்தில் இரண்டு 100 கே.வி.ஏ. மற்றும் இரண்டு 63 கே.வி.ஏ., ஆக 4 மின்மாற்றிகள் ஏற்கெனவே உள்ளன. ஆகையால், புதிய மின்மாற்றி அமைக்கத் தேவை இல்லை. சிறுதாவூர் மின்மாற்றி 01 (100 KVA)-ல் இருந்து இரண்டு கம்பிகள் கொண்ட மின்பாதைகளை நான்கு கம்பிகள்கொண்ட மின்பாதைகளாக மாற்றும் பணி 15-2-2007-க்குள் செய்து முடிக்கப்படும்.

**10—**

## உயர் மின்னழுத்தக் கம்பி

**வினா எண் 8658—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, கூடுவாஞ்சேரி, திருவள்ளுவர் தெரு, சுப்பிரமணியபுரம் குடியிருப்பின்மேல் செல்லும் (22 KV) உயர் மின் அழுத்தக் கம்பியை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருப்போரூர் தொகுதி, கூடுவாஞ்சேரி, திருவள்ளூர் தெரு, சுப்பிரமணியபுரம் குடியிருப்பின் மேல் செல்லும் உயர் மின்னழுத்த மின்பாதை அமைக்கப்பட்டு நீண்ட காலமாகிறது. அதன் பின்னரே மின்பாதைகளின்கீழ் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1956 ஆம் ஆண்டு இந்திய மின்சார விதிகளின்படி, மின்பாதை மாற்றியமைக்க ஆகும் தொகையை சம்பந்தப்பட்டவர்கள் செலுத்தி விண்ணப்பித்தால் மட்டுமே, மின்பாதையை மாற்றியமைக்க ()யலும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

[2007 மார்ச் 29

11—

## மின் இணைப்பு

**வினா எண் 8853—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், குரிசிலாபட்டு ஊராட்சி, கிருஷ்ணா நகர், அருந்ததியர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், குரிசிலாபட்டு ஊராட்சி, கிருஷ்ணா நகர், அருந்ததியர் காலனியிலுள்ள 9 தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேற்படி தொகுப்பு வீடுகளுக்கு இம்மாத இறுதிக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

12—

## குழல் விளக்கு

**வினா எண் 9968—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் பேரூராட்சி, 5-வது வார்டு, அம்பேத்கர் நகரில் மின் கம்பம் அமைத்து குழல் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் பேரூராட்சி, 5-வது வார்டு, அம்பேத்கர் நகரில் தற்பொழுது 5 குழல் விளக்குகளும், 3 சோடியம் ஆவி விளக்குகளும் உள்ளன. ஓமலூர் பேரூராட்சியிலிருந்து புதியதாக மின் கம்பங்கள் அமைத்து குழல் விளக்கு அமைக்க விண்ணப்பங்கள் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன், வாரிய விதிமுறைகளின்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.



13—

## சீரான மின்சாரம்

**வினா எண் 11321—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், சத்துவாச்சாரி நகரப் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

வேலூர், சத்துவாச்சாரியில் தற்போது இயங்கி வரும் 33/11 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையத்திற்கு கார்ணாம்பட்டு 110/33-11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதிக மின்பளு காரணமாக கார்ணாம்பட்டு 110/33-11 கி.வோ. துணை மின் நிலையத்திலுள்ள 2 x 10 எம்.வி.ஏ. மின்மாற்றிகளின் திறனை 2 x 10 எம்.வி.ஏ.-ல் இருந்து 2 x 16 எம்.வி.ஏ. ஆக மாற்ற உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் சத்துவாச்சாரியிலுள்ள 33/11 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையத்தை 10/11 கி.வோ. துணை மின் நிலையமாக மாற்ற (11-வது ஐந்தாண்டு திட்டம்) உரிய கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீடுகள் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியாக திருப்தியாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, ஒப்புதல் அளிக்கப்படும். பணிகள் முடிக்கப்பட்ட பின், சத்துவாச்சாரி பகுதிக்குச் சீரான மின்சாரம் கிடைக்கும்.

14—

## மின் இணைப்பு

**வினா எண் 11331—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகரில் கட்டப்பட்டுள்ள குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகரில் கட்டப்பட்டுள்ள குடிசை மற்றும் குடியிருப்புகளில், மொத்தம் 15,660 குடியிருப்புகள் உள்ளன. அவற்றுள் 12,038 குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள். இதுவரை விண்ணப்பம் பெறப்பட்ட 2,400 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகளுக்கும், தனி முறையாக (as a special case) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தடையில்லாச் சான்றிதழ் வற்புறுத்தப்படாமலே மின்வசதி செய்து தர முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இக்குடியிருப்புகளில் வசிப்பவர்கள் வைப்புத் தொகை மற்றும் மின் இணைப்புக் கட்டணம் ஆகியவற்றை ஒரு வருடத்திற்குப் பிறகு தவணை முறையில் செலுத்தலாம். அவர்கள் மின் கட்டணத்தை மட்டும் செலுத்த் வேண்டும்.

**15—**

## துணை மின் நிலையம்

**வினா எண் 11376—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஏலையமுத்தூர் மற்றும் தேவனூர், புதூர் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஏலையமுத்தூர் பகுதிகளில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க ரூ.805.36 இலட்சம்



செலவில் வாரிய ஆணை எண் 209, நாள் 04-10-2006 மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், பணிகள் தொடங்க ஆவன செய்யப்படும்.

தேவனூர்புதூரில் 10/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. வாரிய ஒப்புதல் அளிக்கப்பட்டு தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், 11-வது ஐந்தாண்டு பெருந்திட்டக் காலத்தில் நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**16—**

## மின்மாற்றிகள்

**வினா எண் 11686—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி, விருகம்பாக்கம், கிருஷ்ணாநகர் பகுதியில் மின்மாற்றிகள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, விருகம்பாக்கம், கிருஷ்ணா நகரில் ஒரு புதிய 250 கே.வி.ஏ. மின்மாற்றி 29-11-2006 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

**17—**

## உயர் அழுத்த மின்கம்பிகள்

**வினா எண் 11687—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, கஸ்தூரிரெங்கபுரத்திலுள்ள மின் கம்பிகளை மாற்றி உயர் அழுத்த மின் கம்பிகள் அமைத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுகா, கஸ்தூரிரெங்கபுரம் கிராமத்தில் உள்ள தாழ்வழுத்த, குறைந்த திறனுள்ள மின்கம்பி 7/2.11 மி.மீ.-யை, 7/2.59 மி.மீ. மின் கம்பியாக மாற்றியமைக்க கஸ்தூரிரெங்கபுரம் மின்மாற்றி எண் 3 மற்றும் 16-ல், 7.57 கி.மீ. தூரத்திற்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, 4 கி.மீ. தூரம் 7/2.59 மி.மீ. மின் கம்பிகளாக மாற்றி பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3.57 கி.மீ. தூரம் உள்ள தாழ்வழுத்த குறைந்த திறனுள்ள மின் கம்பியை 7/2.59 மி.மீ. மின் கம்பிகளாக மாற்றி விரைவில் பணிகள் முடிக்கப்படும்.

**18—**

## கழிப்பறை வசதி

**வினா எண் 948—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

*(அ)* வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சியிலுள்ள கெங்கம்பாளையம் கிராமத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பில் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் உள்ள கெங்கம்பாளையம் கிராமத்தில், ஆதி திராவிடர் குடியிருப்பில் கழிப்பிடம் கட்ட, சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால், மேற்கண்ட இடங்களில் கழிப்பறை கட்டப்படும்.



**19—**

## அடிப்படை வசதி

**வினா எண் 1570—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வரதநல்லூர் ஊராட்சி, கருமகவுண்டன்புதூரில் பொதுமக்களின் அடிப்படை வசதிகள், கழிப்பிட வசதி, தொலைக்காட்சிப் பெட்டி வசதியை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பவானி தொகுதி, பவானி ஊராட்சி ஒன்றியம், வரதநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட கருமகவுண்டன்புதூரில் சுமார் 200 குடும்பங்கள் உள்ளன. இந்த 200 குடும்பங்களும் ஒரே இடத்தில் வசிக்காமல் சிறு, சிறு குடியிருப்புகளாக பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர். அதில் சுமார் 40 வீடுகள் வறுமைக் கோட்டிற்குமேல் உள்ளனர். மீதம் உள்ள 160 குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளனர். மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியான தொப்பூர்-மேட்டூர் பவானி சாலையில் கழிப்பிடம் கட்டத் தேவையான புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. சுமார் 2 கிலோ மீட்டருக்கு அப்பால் பள்ளத்தை ஒட்டி ஒரு சிறு பகுதியில் மட்டுமே புறம்போக்கு நிலம் உள்ளது. இதிலும் பொதுக் கழிப்பிடம் கட்ட இயலாது. எனவே, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 160 இல்லங்களுக்கு ஊராட்சியின்மூலம் தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள் (Individual Household Latrine) கட்டத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பொது தொலைக்காட்சிப் பெட்டி வசதியினை, ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியின் நிதிநிலைக்கேற்ப ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2007 மார்ச் 29

20—

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 1572—திரு. கே.வீ. ராமநாதன்—**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டன்பாளையம் ஊராட்சி, குந்துபாயூர், செம்புளிச்சம்பாளையம் கசாப்புக் கடையிலிருந்து பாட்டப்பன் கோயில் வரையிலும், அரசு கழிவுநீர்க் கால்வாய் ஏற்படுத்தித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, ஒட்டன்பாளையம் ஊராட்சி, குந்துபாயூரில் கான்கிரீட் தளம் அமைத்து 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்குப் பிறகு வீடுகள் மேம்பாடு செய்யப்பட்டு உள்ளன. ஆதலால் கழிவுநீர் வெளியேற முடியாமல் கான்கிரீட் தளத்திலேயே ஓடுகிறது. கான்கிரீட் தளத்தின் ஒரு பகுதியில் வடிகால் அமைத்துத் (சுமார் 200 மீ.) தர 2006-2007 ஆம் ஆண்டில் எடுக்கப்படும் திட்டப் பணிகளில் சேர்த்துக்கொள்ளப்படும்.

செம்புளிச்சம்பாளையம் கசாப்புக் கடையில் இருந்து செல்லும் பழைய சாக்கடை முழுவதும் பழுதடைந்துள்ளது. செம்புளிச்சம்பாளையம் சின்ன பருவாச்சி தார்ச் சாலையில் வலது புறம் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கும், இடது புறம் அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பிரம்மதேசம் ஊராட்சிக்கும் சம்பந்தப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சாலையின் குறுக்கே கல்வெர்ட் கட்டி, கழிவுநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிரம்மதேசம் ஊராட்சி, செம்புளிச்சம்பாளையம் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் கல்வெர்ட் கட்டும் பணி நிறைவேற்றப்படவில்லை. செம்புளிச்சம்பாளையம் கசாப்புக் கடை கழிவு நீர் பிரம்மதேசம் ஊராட்சி எல்லை வழியாகத்தான் வெளியேற்ற வேண்டும். இரண்டு ஊர் பொது மக்களை அணுகி சமாதான முயற்சி செய்து கல்வெர்ட் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2007 மார்ச் 29]

21—

## தடுப்புச் சுவர்

**வினா எண் 1588—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சி, குப்பாண்டியூர் கிராமத்தில் அரசமரம் பகுதியிலிருந்து நீர்த்தேக்கத் தொட்டி வரை தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சி, குப்பாண்டியூர் கிராமத்தில் 2006-2007 ஆம் நிதியாண்டில் மாநில நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசமரம் பகுதியிலிருந்து நீர்த்தேக்கத் தொட்டி வரை 190 மீ. நீளத்தில் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியில் மீதமுள்ள 100 மீ. நீளமுள்ள தடுப்புச் சுவர் வரும் 2007-2008 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

22—

## சமூக நலக் கூடம்

**வினா எண் 3023—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலபட்டி ஊராட்சியில் கோடங்கிபட்டி கிராமம் மற்றும் ஜல்லிப்பட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துறை, தென்சித்தூர் ஆகிய ஊராட்சிகளில் சமூக நலக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணிகளை மேற்கொள்ள தற்போது போதிய நிதி வசதி இல்லை. ஆகவே, வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப இப்பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

**23—**

## நிழற்குடை

**வினா எண் 3373—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி—நீடாமங்கலம், கும்பகோணம் சாலையிலுள்ள முன்னாளிக்கட்டளை கிராமத்தில் பேருந்து நிற்கும் வகையில், பயணிகள் நிழற்குடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கர்ணாவூர் ஊராட்சி முன்னாளிக்கட்டளையில் பயணிகள் நிழலகம் கட்டும் பணி ரூ. 55,000 மதிப்பீட்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய் சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் நிதியாண்டில் கட்டப்படும்.

**24—**

## கான்கிரீட் சாலை

**வினா எண் 3786—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், மூக்கனூர் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி பகுதியில் கான்கிரீட் சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மூக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட ஆதி திராவிடர் காலனியில் 2006-2007ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் ரூ. 50,000 மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**25—**

## தார்ச் சாலை

**வினா எண் 3798—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சி, நாலுக்கால் பாலம் முதல் மந்தி வளவு வழியாக தொப்பளான் காட்டுவளவு காலனி, தீவட்டிப்பட்டி ஊராட்சி தேசிய நெடுஞ்சாலை 7 முதல் வேட்டப்பன் காடு வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், தொப்பளான் காட்டுவளவு சாலைப் பணி தற்போது பிரதம மந்திரியின் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் 1.4 கி.மீ. நீளத்திற்கு ரூ. 19.53 லட்சம் மதிப்பீட்டில் 2005-2006-ல் நெடுஞ்சாலைத் துறைமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2007 மார்ச் 29

26—

## சாலை வசதி

**வினா எண் 3801—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், குடுவம்பட்டி முதல் டேனிஷ்பேட்டை வரை வனத் துறை பகுதியில் புதியதாக சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், டேனிஷ்பேட்டை ஊராட்சியில் குடுவம்பட்டி சாலையில் வனத் துறை பகுதி போக எஞ்சிய பகுதிக்கு ஊராட்சி ஒன்றியம்மூலம் தார்ச் சாலை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. வனத் துறை பகுதியில் சாலை அமைக்க வனத் துறை அனுமதி கிடைக்கப்பெற்றால், முன்னுரிமை அடிப்படையில் இப்பகுதிக்குப் புதியதாக சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

## சாலை வசதி

**வினா எண் 3802—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி கிராமம், பாண்டியன் காட்டுவளவு, பாட்டன் காட்டு வளவு, மூங்கிலேரிப்பட்டி, ஒன்டி வீரனூர் காலனி ஆகிய பகுதிகளில் பொது மக்கள் மயானம், குடியிருப்புப் பகுதிக்குச் சென்று வர பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பாண்டியன் காட்டுவளவு, பாட்டன் காட்டுவளவு மூங்கிலேரிப்பட்டி, ஆகிய பகுதிகளுக்கு 2005-2006 ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், 30 சதவீதம் வட்டார ஊராட்சியின்கீழ் ரூ. 60,000 ஒதுக்கீட்டில் இரண்டடுக்கு கப்பிச் சாலையும், எஞ்சிய பகுதிகளுக்கு நடப்பு 2006-2007 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் 20 சதவீதம் மாவட்ட ஊராட்சியின் ரூ. 1,50,000/- ஒதுக்கீட்டில் கப்பிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. ஒன்டி வீரனூர் காலனியில் இருந்து மயானம் செல்லும் பாதை பட்டா நிலமாக உள்ளது. எனவே, நில ஆர்ஜிதம் செய்த பின்புதான் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

## சாலை வசதி

**வினா எண் 3803—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், குண்டுகாட்டூர் பகுதி, கொங்குப்பட்டி வரை கிராம இணைப்புச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, குண்டுக்காட்டூர் பகுதி முதல் கொங்குப்பட்டி வரை உள்ள பாதை பட்டா நிலமாக உள்ளது. எனவே, நில ஆர்ஜிதம் செய்து முடித்தவுடன், சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

29—

## சாலை வசதி

**வினா எண் 3804—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி ஊராட்சியில் இருளர் காலனி முதல் முள்ளங்கரடு பகுதி வரை, நாரணம்பாளையம் ஊராட்சி, அண்ணா நகர் பகுதி மயானம் செல்லும் பாதை ஆகிய பாதைகளை மண் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி ஊராட்சியில் இருளர் காலனி முதல் முள்ளங்கரடு செல்லும் சாலையில் 2005-2006 ஆம் ஆண்டு கிராம தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 2,00,000 மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தூரத்திற்கு வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் புதிய சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

30—

## சாலை வசதி

**வினா எண் 3809—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேப்பிலை கிராமத்தில், மங்கானி காடு முதல் பூக்காரன் காடு வரை இரண்டடுக்கு கப்பிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?*





*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேப்பிலை கிராமத்தில் மங்கானி காடு முதல் பூக்காரன் காடு வரை உள்ள பகுதிக்கு 1 கி.மீ. தூரம் ஏற்கெனவே மண் சாலை அமைக்கப்பட்டுவிட்டது. மேற்படி சாலையை இரண்டடுக்கு கப்பிச் சாலையாக அமைக்க, நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

31—

## வீடுகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 4569—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்திலுள்ள கே. பூலாங்குளம் கிராமத்தில் காமராஜர் ஆட்சிக் காலத்தில் கட்டிக் கொடுத்த காலனி வீடுகளை புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1991 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பழுது நீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்திலுள்ள கே. பூலாங்குளம் கிராமத்தில் உள்ள பழுதடைந்த தொகுப்பு வீடுகளை, 2006-2007 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

[2007 மார்ச் 29

**32—**

## கான்கிரீட் சாலை

**வினா எண் 4732—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்புதூர் முதல்நிலை ஊராட்சியில் இராமமூர்த்தி நகர் செல்வம் வீடு முதல் சின்னத்தாயி வீடு வரையிலும், ஜாலிக் கொட்டாய் போயர் தெரு, சின்னராஜ் வீடு முதல் குப்பன் போயர் வீடு வரை, ஜாலிக் கொட்டாய் BC தெரு, இராமசாமி வீடு-சுப்ரமணி வீடு வரை, ராணுவ வீரர் தோட்டம் ரவி வீடு-இந்திரஜித் வீடு வரை, K.N. புதூர் ரைஸ் மில்-மாரியம்மன் கோயில் வரை, S. பாளையம் S.T. தெரு ராமசாமி வீடு-மாது வீடு வரை, வீராட்சியூர் ST தெரு, குள்ளன் வீடு முதல் கரியமலை வீடு வரை கான்கிரீட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கணவாய்புதூர் முதல்நிலை ஊராட்சியில் இராமமூர்த்தி நகர் செல்வம் வீடு முதல் சின்னத்தாயி வீடு வரை உள்ள பகுதியில் நடப்பு ஆண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தில் ரூ. 70,000 மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஜாலிக்கொட்டாய் போயர் தெரு, சின்னராஜ் வீடு முதல் குப்பன் போயர் வீடு வரை கான்கிரீட் சாலை அமைக்க ரூ. 75,000-ம், ஜாலிக்கொட்டாய் BC தெரு, இராமசாமி வீடு முதல் சுப்ரமணி வீடு வரை கான்கிரீட் சாலை அமைக்க ரூ. 60,000-ம், ராணுவ வீரர் தோட்டம் ரவி வீடு முதல் இந்திரஜித் வீடு வரை கான்கிரீட் சாலை அமைக்க ரூ. 50,000-ம், வீராட்சியூர் ST தெரு குள்ளன் வீடு முதல் கரியமலை வீடு வரை கான்கிரீட் சாலை அமைக்க ரூ. 30,000/-செலவாகும்.



2007 மார்ச் 29]

மேற்கண்ட பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,15,000/- ஆகும். வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப இப்பணிகளை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், கே.என். புதூர் அரிசி ஆலை முதல் மாரியம்மன் கோவில் வரை கான்கிரீட் சாலை அமைக்கும் பணி 2006-2007 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பொது நிதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ரூ. 75,000 மதிப்பீட்டிலும், செத்தபாளையம் எஸ்.டி. தெரு ராமசாமி வீடு முதல் மாது வீடு வரை கான்கிரீட் சாலை அமைக்கும் பணி 2006-2007 ஆம் ஆண்டு ஒன்றியப் பொது நிதியில் சேர்க்கப்பட்டு ரூ. 50,000/- மதிப்பீட்டிலும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**33—**

## பயணிகள் நிழற்கூடம்

**வினா எண் 5676—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் மக்கள் பயன்பெறும் வகையில் பயணிகள் நிழற்கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தேவைப்படும் இடங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து பயணிகள் நிழற்கூடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**34—**

## சாலை மேம்பாடு

**வினா எண் 5733—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 29

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், நல்லாடை ஊராட்சி, காருகுடி வரை கீழமாத்தூர் நெடுவாச்சி ஊராட்சி வரை, நரசிங்கநத்தம் ஊராட்சி, கடலிபாலம் வரையுள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கடலிபாலம் நரசிங்கநத்தம் சாலை 0, 0-2-0 நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.19.54 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் 31-3-2007-க்குள் முடிக்கப்படும்.

நல்லாடை—காருகுடி சாலை 0, 0-2-0-யினை அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.23.40 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீழமாத்தூர்—நெடுவாசல் சாலை 2.50 கி.மீ. நீளமுள்ள சாலையாகும். இச்சாலை நெடுஞ்சாலைத் துறைமூலம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

**35—**

## மயானப் பாதை

**வினா எண் 6422—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி அள்ளிமுள்ளூர் பகுதிக்கு மயானப் பாதை வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி அள்ளிமுள்ளூர் பகுதி மயானத்திற்குச் செல்லும் தற்போதைய பாதை பட்டா நிலத்தில் உள்ளது. உரிய நிலம் ஒதுக்கீடு பெற்று புதிய பாதை வசதி அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்மூலம் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**36—**

## மயானப் பாதை

**வினா எண் 6532—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் செங்காடு பகுதி மக்களுக்கு மயானப் பாதை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளபுரம் கிராமம், செங்காடு பகுதி மக்களுக்குப் பனங்காட்டில் மயானம் உள்ளது. தற்பொழுது அவர்கள் மாற்று மயானப் பாதை அமைக்கக் கோரும் இடம் வெள்ளாளபுரம் ஏரியின் நீர்ப் பிடிப்புப் பகுதியாகும். மேற்படி இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானது. மேலும், நீர்ப்பிடிப்புப் பகுதியில் மயானப் பாதை அமைக்க இயலாது.

[2007 மார்ச் 29

37—

## நீர்த்தேக்கக் குட்டைகள்

**வினா எண் 7114—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதியில் தென்சித்தூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் கோட்டூர் சிறப்பு ஊராட்சியில் நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்சித்தூர், ரமணமுதலிபுதூர் பெத்தநாயக்கனூர், மற்றும் காளியாபுரம் ஆகிய ஊராட்சிகளில் நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க இடவசதி இல்லை. கிராம ஊராட்சித் தலைவர்களிடமிருந்து இடவசதியுடன் கோரிக்கை வரப்பெறின், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

38—

## நீர்த்தேக்கக் குட்டைகள்

**வினா எண் 7119—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதியில் ஜல்லிப்பட்டி, அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை ஆகிய ஊராட்சிகளில் நீர் தேக்கி வைக்க குட்டை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜல்லிப்பட்டி, அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை ஆகிய ஊராட்சிகளில் நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க இடவசதி இல்லை. கிராம ஊராட்சித் தலைவர்களிடமிருந்து, இடவசதியுடன் கோரிக்கை வரப்பெறின், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

39—

## நீர்த்தேக்கக் குட்டைகள்

**வினா எண் 7124—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதியில், பிலிசின்னம்பாளையம் கரியாஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் நீர் தேங்கி நிற்க குட்டைகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க இடவசதி இல்லை. கிராம ஊராட்சித் தலைவர்களிடமிருந்து இடவசதியுடன் கோரிக்கை வரப்பெறின், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

[2007 மார்ச் 29

**40—**

### தார்ச் சாலை

**வினா எண் 7666—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, ஏகாபுரம் மாரியம்மன் கோயில் முதல் கோட்டமேடு வரை உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், ஏகாபுரம் மாரியம்மன் கோயில் முதல் கோட்டமேடு வரை 1.40 கி.மீ. தூரம் உள்ளது. இதனைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ. 10 இலட்சம் தேவைப்படும். நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கண்ட பணியினைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**41—**

### தார்ச் சாலை

**வினா எண் 8230—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டையிலிருந்து இளம்பிள்ளை செல்லும் சாலையிலிருந்து ராமசாமிகாட்டுவளவு வழியாக கருங்கல்காட்டுவளவு வரை உள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், தப்பக்குட்டையிலிருந்து—இளம்பிள்ளை செல்லும் சாலையிலிருந்து ராமசாமிகாட்டுவளவு வழியாக கருங்கல்காட்டுவளவு வரை உள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற நடப்பாண்டில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2006-2007-ன்கீழ் எடுத்து 3.40 கி.மீ. தூரம் ரூ. 34.60 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**42—**

### தார்ச் சாலை

**வினா எண் 9145—திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதியில் உள்ள தோகைமலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதியில் உள்ள தோகைமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலைகளின் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| மண சாலைகளின் நீளம் | 1. ஊராட்சி ஒன்றியச் சாலைகள்: | இல்லை |
| | 2. ஊராட்சி சாலைகள்: | 27.90 கி.மீ. |
| கிராவல் சாலைகளின் நீளம் | 1. ஊராட்சி ஒன்றியச் சாலைகள்: | இல்லை |
| | 2. ஊராட்சி சாலைகள் : | 113.60 கி.மீ. |
| ஊராட்சிகளில் சாலைகளின் (கிராவல் + மண் சாலை) மொத்த நீளம் | | 141.50 கி.மீ. |

மேற்கண்ட 141.50 கி.மீ. நீளத்தில் 2006-2007 ஆம் ஆண்டு மற்றும் 2007-2008 ஆம் ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:—

| | | | | |
|---|---|---|---|---|
| 2006-2007 ஆம் ஆண்டு | 4 ஊராட்சிகள் | 16 சாலைகள் | 42.50 கி.மீ. | ரூ.4.064 கோடி |
| 2007-2008 ஆம் ஆண்டு | 4 ஊராட்சிகள் | 13 சாலைகள் | 38.50 கி.மீ. | ரூ.4.222 கோடி |
| | **மொத்தம்** | **29 சாலைகள்** | **81.00 கி.மீ.** | **ரூ.8.286 கோடி** |

மேலும், மீதமுள்ள 12 ஊராட்சிகளில் வரும் நிதியாண்டுகளில் 2008-2011 வரை 3 வருடங்களில் சுமார் 30 சாலைகள், 61.50 கி.மீ. நீளமுள்ள சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மீதமுள்ள சாலையில் 1.00-2.00 கி.மீ. நீளத்தில் உள்ள சாலைகள் அனைத்தும் SGRY திட்டத்தில் மெட்டல் சாலைகளாக மாற்றப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தார்ச் சாலைகளாக மாற்றப்படும்.

மேலும், தற்போது 2006-2007 ஆம் ஆண்டு SGRY சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ் 25 மண் சாலைகள் 36.50 கி.மீ. நீளத்தில் ரூ. 100.25 இலட்சம் மதிப்பீட்டில் ஓரடுக்கு மெட்டல் சாலைகளாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**43—**

## குடிநீர் வசதி

**வினா எண் 9399—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, காரமரத்துக் கோயில் மற்றும் கம்பரிசிக்காடு ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சியில், கந்தப்பிள்ளையார் கோயில் என்பதும், காரமரத்துக் கோயில் என்பதும், ஒரே குடியிருப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டு, மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆகவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய புதிய குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை ஊராட்சி, கம்பரிசிக்காடு என்ற பகுதி, பூசாரியூர் குடியிருப்புக்கு உட்பட்ட பகுதியாகும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த சிறப்பு அனுமதி வழங்கப்பட்டு, திட்டம் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் மார்ச் 2007-க்குள் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**44—**

## குடிநீர் வசதி

**வினா எண் 9586—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக கிராமங்களுக்குக் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர் வசதி ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது. குடிநீர்த்

[2007 மார்ச் 29

நட்டுப்பாடு ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் வரப்பெறவில்லை. குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படின், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வசதிகள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**45—**

### தார்ச் சாலை

**வினா எண் 10348—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதியிலுள்ள தீபங்குடி கிராமத்தில் கப்பிச் சாலை, தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள செம்மங்குடி ஊராட்சி, 2006-07 ஆம் ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தீபங்குடி கிராமச் சாலை ஊராட்சி சாலை ஆகும். சாலையின் மொத்த நீளம் 2.00 கி.மீ. கருங்கல் ஜல்லி சாலையாக உள்ளது. 500 மீ. ஓர் அடுக்கு கருங்கல் ஜல்லி சாலை மற்றும் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய ரூ.3.00 இலட்சம் மதிப்பில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. மீதம் உள்ள 1.50 கி.மீ. தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய, வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ளப்படும்.

**46—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 10574—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 29]

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், வெண்ணமுத்துப்பட்டியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், வெண்ணமுத்துப்பட்டியில் சமுதாயக் கூடம் கட்டித் தர சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பரிந்துரை செய்யும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**47—**

### தார்ச் சாலை

**வினா எண் 12719—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, அட்டவணைப்புதூர் கிராமம், முகாசிப்புதூர், கரிகாளியம்மன் கோயிலுக்குச் செல்லும் பாதையைப் புதிய தார்ச் சாலையாக அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், அட்டவணைப்புதூர் கிராமத்திற்குட்பட்ட முகாசிப்புதூர் கரிகாளியம்மன் கோயிலுக்குச்

வாகனங்கள் வாங்க 1-4-2006 முதல் 31-3-2009 வரை தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வினா எழவில்லை.

51—

## திட்டப் பணிகள்

**வினா எண் 7638—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகளில் கடந்த 5 ஆண்டுகளில் நடைபெற்ற பணிகள், பயனாளிகள் குறித்து ஆய்வு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண்மை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகளில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் குறித்து அவ்வப்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. இது தவிர, கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகளில் நடைபெற்ற பணிகள் மற்றும் பயனாளிகள் குறித்து ஆய்வு நடத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

52—

## பேருந்து வசதி

**வினா எண் 1236—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் இயக்கப்படும் நகரத் தடம் எண் 13A பேருந்தை ஒரு நாளுக்கு 6 முறை அத்தியூர் திருக்கை வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் இயக்கப்படும், நகரத்தடம் எண் 13A மூலமாக விழுப்புரத்திற்கும், அத்தியூர் திருக்கைக்கும் இடையே வெள்ளேரிப்பட்டு மற்றும் போரூர் வழியாகச் சென்று வரும் 8 நடைகளில் மீதம் 6 நடைகளில் விழுப்புரம் - புதுக்கருவாட்சி இடையேயும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக நான்கு நடைகள் அப்பேருந்தினைக் கொண்டு இயக்கும்பொழுது பயன்பெற்று வரும் பகுதியினர் பாதிக்கப்படுவர்.

53—

## பேருந்து வசதி

**வினா எண் 1251—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, சத்தியகண்டனூர் கிராமத்திற்கு மாணவர்களின் நலன் கருதி, பேருந்து வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் மூலமாக நகரப் பேருந்து எண் 22 திருக்கோவிலூருக்கும், குயவன்காடுவெட்டிக்கும் இடையே முகையூர், சத்தியகண்டனூர் மற்றும் ஆலம்பாடி வழியாகச் சென்று வரும் 6 நடைகளில் பேருந்து வசதி உள்ளது. அப்பேருந்துமூலமாக சத்[illegible]ளி



227561
சென்னை-600 008

மாணவர்கள் திருக்கோவிலூர் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று வர கால அட்டவணை நடைமுறையில் உள்ளது. மேலும் விழுப்புரத்திற்கும் சித்தாத்தூருக்குமிடையே நகரப் பேருந்து தடம் எண் 6A மூலமாக 10 நடைகள் சத்தியகண்டனூர் வழியாகப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**54—**

## தானியங்கி சிக்னல்

**வினா எண் 10979—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் உள்ள, நான்கு முனைச் சந்திப்பில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி சிக்னல் சீராகப் பழுதின்றிச் செயலாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி நகரில் நான்கு முனைச் சந்திப்பில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி சிக்னல் மின்சாரத் தடை காரணமாக ஓரிரு நாட்கள் மட்டுமே சரிவர இயங்காமல் இருந்துள்ளது. தற்போது மேற்படி குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு தானியங்கி சிக்னல் பழுதின்றி செயல்பட்டு வருகிறது.

**55—**

## சிற்றுந்து வசதி

**வினா எண் 11144—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், விசலூர் ஊராட்சி, சேந்தமங்கலம் வழியாக திருவிடைக்கழி செல்ல சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பூம்புகார் தொகுதி, சேந்தமங்கலம் வழியாக திருவிடைக்கழி வழித்தடத்தில் சிற்றுந்து இயக்க மட்டுமே சாத்தியக்கூறு உள்ளது. இந்த வழித்தடத்தில் (1) இரண்டு சிறிய பாலங்கள் சரி செய்ய வேண்டும், (2) 100 மீட்டர் நீளத்திற்கு தண்ணீரால் மண் அரிப்பு ஏற்பட்டு சாலை மிகவும் மோசமாக பழுது அடைந்துள்ளது. மேற்காணும் இனங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு அவ்வழித்தடத்தில் சிற்றுந்து இயக்கப்படும்.

(ஆ) பூம்புகார் தொகுதி, சேந்தமங்கலம் வழியாக திருவிடைக்கழி கிராமங்களுக்கு சிற்றுந்து இயக்க அனுமதி கோரி தனியார் உரிமையாளர்கள் விண்ணப்பிக்கும் நேர்வில் சட்ட விதிகளுக்குட்பட்டு மனுக்கள் பரிசீலிக்கப்படும்.

**56—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 14714—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் போக்குவரத்து வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**57—**

## சார்பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 11976—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 29

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் பகுதியில் புதியதாக சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூர் கிராமத்தைச் சுற்றி சுமார் 30 குக்கிராமங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 25 கிராமங்களில் ஆவணப் பதிவு இல்லை. இப்பகுதிகளில் இருந்து ஆண்டொன்றுக்கு 100 ஆவணங்களுக்கும் குறைவாகவே பதிவு ஆகின்றன. இப்பகுதியைச் சுற்றி செங்கம், போளூர், கடலாடி, ஆலங்காயம், கண்ணமங்கலம் மற்றும் கணியம்பாடி ஆகிய 6 ஊர்களில் சார்பதிவகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், ஜமுனாமரத்தூர் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்ய நீண்ட தொலைவு பயணம் செய்ய வேண்டிய நிலை இல்லை. எனவே, ஜமுனாமரத்தூர் கிராமத்தில் புதியதாக ஒரு சார் பதிவாளர் அலுவலகம் தோற்றுவிக்க சாத்தியக்கூறு இல்லையாதலால் அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**58—**

## கைவினைப் பொருட்கள்

**வினா எண் 4615—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயமுத்தூர் மாவட்டத்தில் கைவினைப்பொருட்கள் பல வடிவமைப்புகளில் மிக அதிக அளவில் தயாரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கோயமுத்தூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர்மூலமாக பகுதி 2 திட்டத்தின்கீழ் கைவினைஞர்களுக்கு முக்கியமாக மகளிர் குழுக்களுக்கு (சுமார் 474 பேருக்கு) அகர்பத்தி உற்பத்தி செய்தல், பூ வேலைப்பாடு, சணல் பைகள் தயாரித்தல், தோல் பொருட்கள் செய்தல், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், தஞ்சாவூர் கண்ணாடி ஓவியம் செய்தல் இவற்றில் சென்ற ஆண்டுகளில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுய வேலைவாய்ப்பு பெருக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள கைவினைஞர்களுக்கு பல்வேறு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பைப் பெருக்கும் நோக்குடன் கோயமுத்தூர் மாவட்டத்தில் கவுண்டம்பாளையத்தில் ரூ. 12.00 இலட்சம் செலவில் பொது பயிற்சி மற்றும் சந்தை வாய்ப்பு நிலையம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2007 மார்ச் 29]

**59—**

## பட்டுப் புழு வளர்ப்பில் பயிற்சி

**வினா எண் 11523—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில், பட்டுப் புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டு 2006-07-ல் (முசுக்கொட்டை) மல்பரி சாகுபடி செய்துள்ள 2000 பட்டு விவசாயிகளுக்கு மல்பரி சாகுபடி கட்டுக்கோப்பு முறைகள் மற்றும் பட்டுப் புழு வளர்ப்பில் மேற்கொள்ள வேண்டிய புதிய தொழில்நுட்பங்கள் குறித்து, ஓசூர் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் ஐந்து நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய திட்டத்தின்கீழ் உடுமலைப்பேட்டை பகுதியில் மல்பரி சாகுபடி செய்துள்ள விவசாயிகளில் 100 பேர்களுக்கு மேற்கண்டுள்ளவாறு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரை 31 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 69 விவசாயிகளுக்கும் எதிர்வரும் மாதங்களில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

[2007 மார்ச் 29

**60—**

## விற்பனை மையம்

**வினா எண் 13279—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் உற்பத்தியாகும் கற்சிலைகள், உலோகச் சிலைகள், மரச்சிற்பங்கள் விற்பனை செய்வதற்கு சென்னை, டில்லி, கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய நகரங்களில் விற்பனை மையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மாமல்லபுரத்தில் உற்பத்தி செய்யப்படும் சிலைகளுக்கு மாவட்டத் தலைநகரங்களிலும், சென்னை, பெங்களூர், கொல்கத்தா, புதுடெல்லி ஆகிய நகரங்களிலும் உள்ள தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும் இது தவிர மும்பையில் ஆண்டுக்கு இருமுறையும் இதர முக்கிய நகரங்களான கோவா, சண்டிகர், அமிர்தசரஸ், இந்தூர், போபால், ஹைதராபாத் ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் கண்காட்சிகள் நடத்தி அவற்றின் மூலமும் மாமல்லபுரத்தில் உற்பத்தி செய்யும் சிலைகளுக்கு அதிகப்படியான சந்தை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

**61—**

## கடனுதவி

**வினா எண் 13947—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டம் பெற்று கைதிகளாக இருப்பவர்கள் விடுதலை ஆகும்போது சிறுதொழில் செய்ய கடனுதவி மற்றும் வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

விடுதலையாகிச் செல்லும் சிறைவாசிகளுக்கு, அவர்களின் மறுவாழ்விற்கென அவர்களது தகுதிக்கேற்ப, நன்னடத்தை அலுவலர்களால் கடனுதவி மற்றும் வேலைவாய்ப்பு உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன. பட்டம் பெற்று விடுதலை ஆகும் சிறைவாசிகள் தங்களது தகுதி மற்றும் திறனுக்கு ஏற்ற வகையில் சிறுதொழில் செய்ய கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சிறைத் துறையில் இயங்கி வரும் நன்னடத்தை அலுவலர்கள் சிறைவாசிகளின் தகுதிக்கு ஏற்றவாறு, சிறுதொழில் தொடங்க வங்கிகளில் கடனுதவி மற்றும் வேலைவாய்ப்பு உதவிகள் செய்து வருகின்றனர்.

**62—**

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 15309—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சட்டக் கல்லூரியில் காலியாக உள்ள பணியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விரைவில் பூர்த்தி செய்யப்படும்.

[2007 மார்ச் 29

63—

## சுற்றுலாத்தலம்

**வினா எண் 5404—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் கடலி கிராமத்தில் ராஜா தேசிங்கு நினைவிடத்தை மேம்படுத்தி சுற்றுலாத் தலமாக மாற்றித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் கடலி கிராமத்தில் ராஜா தேசிங்கு நினைவிடத்தை மேம்படுத்தி சுற்றுலாத்தலமாக்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.

64—

## புதிய குடும்ப அட்டை

**வினா எண் 17775—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 2006-2007 ஆம் ஆண்டில் புதிதாக குடும்ப அட்டை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.



2007 மார்ச் 29]

65—

## பொது இடங்களில் புகைபிடிக்கத் தடை

**வினா எண் 2880—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பீடி, சிகரெட் புகைப்பதைத் தடை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு புகைபிடித்தல் மற்றும் எச்சில் துப்புதல் தடுப்புச் சட்டம் 2002, மற்றும் விதிகள் 2003, 14-05-2003 முதல் அமலில் உள்ளது. இந்த சட்டத்தின்படி மக்கள் பணிபுரியும் இடங்கள், பயன்படுத்தும் பொது இடங்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கான வாகனங்களில் புகை பிடிப்பதும், எச்சில் துப்புவதும் தடை செய்யப்பட்டுள்ளது. புகைபிடிப்போர்க்கு அருகிலும் சுற்றுப்புறத்திலுமுள்ள புகைப் பழக்கம் இல்லாதவர்களை, குறிப்பாக குழந்தைகளை புகையிலிருந்து பாதுகாப்பதே இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு பொது இடங்களில் பீடி, சிகரெட் பிடிப்பதை தமிழக அரசு தடை செய்து நடவடிக்கை எடுத்துள்ளது.

66—

## ஆய்வக நுட்பநர் பணியிடம்

**வினா எண் 9215—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மருத்துவமனைக்கு இரத்தப் பரிசோதகர் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 29

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள ஆய்வக நுட்பநர் (Lab Technician) பணியிடங்கள் அனைத்தையும் முறையான ஊதிய விகிதத்தில் நிரப்பிட அரசு அனுமதி அளித்துள்ளது. எனவே, வால்பாறை அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள அனுமதிக்கப்பட்ட இரண்டு ஆய்வக நுட்பநர் பணியிடங்களையும் விரைவில் நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**67—**

## மருந்தாளுநர் பணி நியமனம்

**வினா எண் 16573—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருந்தாளுநர்கள் பதவியிடங்களுக்கு பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோயமுத்தூர் மாவட்டத்தில் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அரசு மருத்துவமனைகளில், அரசு மருத்துவமனை, பெரியநாயக்கன்பாளையத்தில் மட்டுமே ஒரு மருந்தாளுநர் பணியிடம் வெற்றிடமாக உள்ளது. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள அனைத்து மருந்தாளுநர் பணியிடங்களை நிரப்பிட அரசு அனுமதி அளித்துள்ளது. அந்த மருந்தாளுநர் பணியிடத்தையும் நிரப்பிட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் இப்பணியிடம் நிரப்பப்படும்.



2007 மார்ச் 29]

**68—**

## அறங்காவலர்கள்

**வினா எண் 1426—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்கெனவே நியமிக்கப்பட்ட திருக்கோயில்களின் அறங்காவலர்களை ரத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2006, நாள் 14-7-2006-ல் பிறப்பிக்கப்பட்டு, அச்சட்டத்தின்படி பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்களின் பதவிக் காலம் ஓராண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஓராண்டு பதவிக் காலம் முடிந்ததும் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட பரம்பரை வழிசாரா அறங்காவலர்களின் பதவி தாமாக முடிவுக்கு வருகின்றது.

(ஆ) வினா எழவில்லை.

**69—**

## கழிப்பிட வசதி

**வினா எண் 8620—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 29

விடை—

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் ஆண்களுக்கு என்று 5 கழிப்பறைகள் மற்றும் குளியலறைகளும் பெண்களுக்கென 5 கழிப்பறைகளும் மற்றும் குளியலறைகளும் நவீன கட்டணக் கழிப்பிடங்களாக திருக்கோயிலால் கட்டப்பட்டு நல்ல நிலையில் சுகாதார முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயில் சார்பில் கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பறைகள் மற்றும் குளியலறைகள் போதிய அளவில் நல்லநிலையில் உள்ளதாலும், இத்திருக்கோயில் இந்திரா காந்தி வனச் சரணாலயப் பகுதியில் அமைந்துள்ளதால் புதிய கட்டுமானங்கள் வனத் துறையினரால் மட்டுமே செய்திடும் வகையில் சட்ட வரைவு உள்ளதாலும், தற்போதைக்கு மேலும் கழிப்பறைகள் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**70—**

## அலுவலர் குடியிருப்பு

**வினா எண் 8624—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பிரசன்ன விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் நிர்வாக அலுவலர் குடியிருப்பு கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலை வட்டம், உடுமலை அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான



2007 மார்ச் 29]

இடத்தில் நிர்வாக அலுவலர் குடியிருப்பு கட்டுவதற்கு போதிய நிதிவசதி இல்லாததாலும், இத்திருக்கோயிலின் நிதிநிலையானது இனிவரும் காலங்களில் கணிசமாக உயர்ந்து உபரிநிதி பெறப்படும் சூழ்நிலையில் மட்டுமே நிர்வாக அலுவலருக்கான குடியிருப்பு கட்ட வாய்ப்புள்ளதென்பதாலும், தற்போதைய நிலையில் நிர்வாக அலுவலருக்கான குடியிருப்பு கட்ட இயலாத நிலை உள்ளது.

**71—**

## திருப்பணி

**வினா எண் 8628—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் அருள்மிகு காசிவிஸ்வநாதர்-தாண்டேஸ்வரர் திருக்கோயில் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் அருள்மிகு காசிவிஸ்வநாதர் மற்றும் தத்தாத்ரேய சுவாமி திருக்கோயில் தற்போது நல்ல நிலையில் உள்ளதால், கட்டுமானப் பணிகள் ஏதும் செய்ய வேண்டியதில்லை. கோவை மாவட்டம், அருள்மிகு தாண்டேஸ்வரர் மற்றும் கல்யாணவரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் 1994 ஆம் ஆண்டில் குடமுழுக்கு நடைபெற்றது. 12 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் குடமுழுக்குச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

72—

## ஆக்கிரமிப்புகள்

**வினா எண் 8751—திரு. வை. காவேரி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பெரியகாட்டுவளவு அருந்ததியர் காலனியிலுள்ள மதுரை வீரன் மற்றும் மாரியம்மன் கோவில் நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, பெரியகாட்டுவளவு அருந்ததியினர் காலனியில் உள்ள அருள்மிகு மதுரை வீரன் மற்றும் மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். மேலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எதுவும் இல்லை. எனவே, நில ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தும் வினா எழாது.

73—

## மனைப்பட்டா

**வினா எண் 8958—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதியில் கோயில் நிலங்களில் குடியிருக்கும் ஏழைகளுக்கு குடிமனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1959 ஆம் வருடத்திய இந்து சமய அறநிலையச் சட்டம் 22 மற்றும் தமிழ்நாடு அரசு திருத்தப்பட்ட சட்டம் 39/96 மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட சட்ட விதிகளின்படி திருக்கோயில் நிலங்களை வேறு நபருக்கு குத்தகைக்கு விடவோ, விற்பனை செய்யவோ அல்லது பரிவர்த்தனை செய்யவோதான் முடியுமேயொழிய, தனிப்பட்டவர்களுக்கு குடியிருக்க மனைப் பட்டாவாக இலவசமாகக் கொடுக்க இயலாது.

74—

## பட்டா

**வினா எண் 12227—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், நிழலி கிராமத்திற்கு அருகிலுள்ள மதுரை வீரன் குல தெய்வம் கோயிலின் நிலத்திற்கு பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், நிழலி கிராமம் அருள்மிகு மதுரை வீரன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாததால் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் பட்டா பெற நடவடிக்கை எடுக்க இயலாது.

[2007 மார்ச் 29

75—

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 12228—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஆலம்பாடிபுதூரிலுள்ள ஆதி திராவிடர் காலனி மதுரை வீரன் கோயிலைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், ஆலம்பாடிபுதூர், ஆதி திராவிடர் காலனி, அருள்மிகு மதுரை வீரன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வரப்படாத ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். 2006-2007 நிதியாண்டில் காங்கேயம் வட்டத்தில் 9 ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலுக்கு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. 25,000 வீதம் வழங்கப்படவுள்ளது. எனவே, மேற்கண்ட திருக்கோயிலுக்கு நிதியுதவி செய்வது குறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

76—

## கட்டட வசதி

**வினா எண் 12318—திரு. ஒ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலுக்கு குளியலறை, உடை மாற்றும் அறை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் கீழ்க்கண்ட பணிகளைச் சுற்றுலாத் துறையின் பங்களிப்புடன் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(i) பவானி ஆற்றங்கரையில் பெண்கள் உடை மாற்றும் அறைகள் இரண்டு கட்டப்படவுள்ளன. ஒவ்வொன்றும் 5.20 மீட்டர் நீளம், 4.88 மீட்டர் அகலம் கொண்டது. மதிப்பீடு ரூ. 4,37,700.

(ii) ஆண்களுக்கு எட்டு கழிவறைகள் மற்றும் இரண்டு குளியலறைகள் கட்டப்படவுள்ளன. மதிப்பீடு ரூ. 5,40,500.

(iii) பெண்களுக்கு எட்டு கழிவறைகள் மற்றும் இரண்டு குளியலறைகள் கட்டப்படவுள்ளன. மதிப்பீடு ரூ. 4,19,750.

77—

## தார்ச் சாலை

**வினா எண் 13246—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பவானி தொகுதி, அட்டவணைப்புதூரிலிருந்து செம்முனி ஆண்டவர் கோயிலுக்குச் செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயிலுக்குச் செல்ல கோணமூக்கனூர் வழியாக தார்ச் சாலையும் அட்டவணைப்புதூரிலிருந்து மண்பாதையும் உள்ளன. இவை இரண்டும் அரசுக்குப் பாத்தியப்பட்டவை.

[2007 மார்ச் 29

திருக்கோயிலுக்குச் சொந்தமான மண்பாதை ஏதும் இல்லை. மண்பாதையை தார்ச்சாலையாக மாற்றுவதற்கு உள்ளாட்சி அமைப்புகள்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். திருக்கோயில் நிர்வாகமோ அல்லது இந்து சமய அறநிலையத் துறையோ நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது.

**78—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 14224—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, சூலூர் அருள்மிகு வைத்தீஸ்வரன்கோவில், திருவேங்கடநாதப் பெருமாள் கோவில், அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோவில் ஆகியவற்றிற்கு தங்கும் விடுதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதற்கு தன்னிறைவுத் திட்டம்மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், சூலூர் அருள்மிகு திருவேங்கடநாதப் பெருமாள் மற்றும் அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில் சார்பில் "நமக்கு நாமே" திட்டம் மூலம் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு அரசு மானியம் எதிர்நோக்கி சூலூர் பொதுமக்கள் சார்பாக ரூ.1,00,000/- மற்றும் தாசப் பளஞ்சிகா சமூகத்தினர் சார்பாக ரூ.1,50,000/-ம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், சாமளாபுரம் அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் திருக்கோயிலில் தற்போது 5 அறைகள் உள்ளன. இவை போதுமானவை. இவை தவிர 15,000 சதுர அடி பரப்பளவில் பழைய மற்றும் புதிய சத்திரம் உள்ளது. மேலும், தேவையான குடிநீர், குளியலறை நான்கு, கழிவறை நான்குடன், சுகாதார வசதிகள்



2007 மார்ச் 29]

செய்யப்பட்டுள்ளன. இவை தற்போதைக்கு போதுமானவையாகும். எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு இந்த வசதிகள் செய்வதற்கு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும் அவசியம் எழவில்லை.

**79—**

## கண்காட்சி மையம்

**வினா எண் 11543—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூரில் நவீன தொழில்நுட்பத்துடன் துணிநூல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

கரூர் பிரசித்தி பெற்ற கைத்தறி ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நகரமாகும். உலக நாடுகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய ஜவுளி ரகங்கள் இந்நகரில் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும், இந்நகருக்கு ரூ.66.00 கோடி மதிப்பீட்டில் கூட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க பிரேரணை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மையம் நவீன தொழில்நுட்ப வசதியுடன் தனியாக அமைக்க வேண்டியதன் அவசியம் எழவில்லை.

**80—**

## பள்ளிக்கு அடிப்படை வசதி

**வினா எண் 10034—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலுள்ள வேவர்லி ஆரம்பப் பள்ளிக்கு கழிப்பிடம், குடிநீர், இருக்கை வசதிகள் செய்து தர அரசு முன் வருமா?

[2007 மார்ச் 29

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வால்பாறை ஒன்றியம், வேவர்லி தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை மொத்தம் 38 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர் (19+19). மாணவர்களின் குடிநீருக்காக பஞ்சாயத்து யூனியன் குழாய்மூலம் தண்ணீர் பிடித்து வைக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

கழிப்பறைகள் கட்டுதல் மற்றும் இருக்கை வசதிகள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

81—

## விற்பனை வரியிலிருந்து விலக்கு

**வினா எண் 17675—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மருந்து தடவப்படாத கட்டு கட்டும் துணி ரகங்களுக்கு விற்பனை வரியை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சீ.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதிப்புக்கூட்டு வரிச் சட்டம், 2006 [நான்காம் இணைப்புப் பட்டியல் (விலக்களிக்கப்பட்ட பொருள்கள்) பகுதி B-வரிசை எண்.35]-இல் பாண்டேஜ் ரகத் துணிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

82—

## விளையாட்டு உபகரணங்கள்

**வினா எண் 7526—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 29]

(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை நடுத்தெருவில் வசிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள், கிரிக்கெட் மட்டை, கைப்பந்து, கால்பந்து போன்றவற்றை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) தனியர்கள், தனியார் குழுக்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் அரசின்மூலமாக நேரடியாக வழங்கப்படுவதில்லை. தமிழகத்தில் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கங்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதனை ஆர்வமிக்க விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் பயன்படுத்தி பயன்பெற்று வருகின்றனர்.

(ஆ) ஒவ்வொரு தொகுதிக்கும், கிராமத்திற்கும் தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அவ்வாறு வழங்கும் நிலை ஏற்பட்டால் பண்ருட்டி தொகுதி பத்திரக்கோட்டை பகுதிக்கும் சேர்த்து வழங்கப்படும்.

83—

## கழிவு நீர்

**வினா எண் 9939—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை நகரங்களின் கழிவுநீர் பவானி நதியில் கலந்து மாசுபடுவதால் நதிநீரைப் பாதுகாக்க சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

இல்லை.

[2007 மார்ச் 29

84—

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 12485—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு நகரில் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 12598—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் வட்டம் அழகுசமுத்திரம் ஊராட்சி, ஏரிகோடி பகுதியில் கிராம இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் வட்டம் அழகுசமுத்திரம், ஊராட்சி ஏரிகோடி பகுதியில் கிராம இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2007 மார்ச் 29]

86—

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 12617—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஒன்றியம், ப. குட்டப்பாளையம் ஊராட்சி ஓலப்பாளையத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சென்னிமலை ஒன்றியம், ப. குட்டப்பாளையம் ஊராட்சி, ஓலப்பாளையத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

87—

## விளையாட்டு அரங்கம்

**வினா எண் 15919—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டை மாரியம்மன் கோயில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு அரங்கம் அமைத்து விளையாட்டுப் பொருட்கள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டை மாரியம்மன் கோயில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு அரங்கம் அமைத்து, விளையாட்டுப் பொருட்கள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2007 மார்ச் 29

88—

### தனிப்படை

**வினா எண் 7302—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தன மரங்கள் கடத்துவதைத் தடுக்க காவல் துறை தனிப்படை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள சந்தன மரக்காடுகளில் தீவிர ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வனச் சோதனைச் சாவடிகள், சூழல் தணிக்கைச் சாவடிகள், வனக் காவல் நிலையங்கள் மற்றும் வனப் பாதுகாப்புப் படைகள்மூலம் வனப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், விரைவாகச் செல்வதற்குச் சரகர்களுக்கு ஈப்புகள், உடனடித் தொடர்பு கொள்வதற்குக் கம்பியில்லாத் தந்தி தொடர்புகள் அலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

வனத் துறையினரே இப்பணியினைச் சிறப்பாக மேற்கொள்வதால் சந்தன மரங்கள் கடத்துவதைத் தடுக்க காவல் துறை தனிப்படை அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

89—

### யானை வராமல் தடுத்தல்

**வினா எண் 17344—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ஹைபாரஸ்ட், வாகமலை, தோனிமுடி, தாய்முடி, சோலைக்காடு குடியிருப்புப் பகுதிகளுக்கு யானைகள் வராமல் தடுக்க காட்டாமணக்குச் செடிகள்மூலம் வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காட்டாமணக்குச் செடிகள்மூலம் வேலி அமைக்க அரசு முன் வராது. ஏனெனில் காட்டாமணக்குச் செடிகளால் யானைகள் வருவதைத் தடுக்க முடியாது. காட்டு யானைகள் குடியிருப்புப் பகுதிக்கு வருவதைக் கண்டறிந்து வனக் காவலர்கள் 24 மணி நேரமும் ரோந்துப் பணி மேற்கொண்டு யானைகள் காட்டுக்குள் விரட்டியடிக்கப்படுகின்றன. பட்டாசுகள் வெடித்தும் காட்டு யானைகள் குடியிருப்புப் பகுதிக்குள் வராமல் தடுக்கப்படுகின்றன.

90—

### இரயில்வே மேம்பாலம்

**வினா எண் 14278—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, தளிரோடு இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு ரூ.12.70 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் வடிவமைப்பு சரிபார்த்தல் பணிகளுக்கு கலந்தாய்வாளர்களை அமர்த்துவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. கலந்தாய்வாளர் நியமிக்கப்பட்டபின், மதிப்பீடு தயார் செய்து டெண்டர் கோரி பணிகள் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2007 மார்ச் 29

91—

## துணை கால்நடை நிலையம்

**வினா எண் 12311—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி, நாயக்கன்பாளையம் கிராமத்தில் துணை கால்நடை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பொள்ளாச்சி தொகுதி, நாயக்கன்பாளையம் கிராமத்தில் துணை கால்நடை நிலையம் அமைக்க அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

92—

## கோழிப் பண்ணை

**வினா எண் 16142—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், தென்சங்கம்பாளையம், அர்த்தநாரி பாளையம் ஆகிய ஊராட்சிகளில் கோழிப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 29]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தென்சங்கம் பாளையம் மற்றும் அர்த்தநாரிபாளையம் ஆகிய கிராமங்களில் கோழிப் பண்ணை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை

(ஆ) எழாது.

93—

## கால்நடைத் தீவனங்கள்

**வினா எண் 16160—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்யும் மையத்தின் கிளை ஒன்றை வால்பாறை தொகுதியில் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டத்தில் வால்பாறை தொகுதியில் கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி செய்யும் மையம் தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

94—

## ஆராய்ச்சிக் கூடம்

**வினா எண் 16162—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 29

(அ) கோயமுத்தூர் மாவட்டத்தில் ஆடு மாடு மற்றும் கோழி வளர்க்கும் ஆராய்ச்சி மையத்தினை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஆராய்ச்சிக் கூடம் மற்றும் வல்லுநர்கள் அடங்கிய கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் கோயமுத்தூரில் இயங்கி வருகிறது. மேலும், இப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கால்நடைப் பண்ணையாளர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தினை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**95—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 11562—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சி பால் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சி பால் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித்தர சங்கத்திற்கு சொந்தமாக நிலம் இல்லாத காரணத்தினாலும், நிலம் வாங்க மற்றும் கட்டடம் கட்ட போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினாலும் இக்கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.



2007 மார்ச் 29]

**96—**

## பால் விலை

**வினா எண் 12281—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அதிகரித்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**97—**

## கறவை மாடுகள்

**வினா எண் 15525—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் மாவட்டம் மற்றும் வால்பாறை தொகுதி கிராமங்களில் உள்ள மகளிருக்கும் விவசாயிகளுக்கும் நீண்டகால கடனில் கறவை மாடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) கோயமுத்தூர் மாவட்டம் மற்றும் வால்பாறை தொகுதி கிராமங்களில் உள்ள மகளிருக்கும் விவசாயிகளுக்கும் நீண்டகால கடனில் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2007 மார்ச் 29

98—

## கறவை மாடுகள்

**வினா எண் 15530—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் பால் பண்ணை அமைக்க, இலவசமாக கறவை மாடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் பால் பண்ணை அமைக்க இலவசமாக கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

99—

## பயிற்சி

**வினா எண் 14338—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் கிராமத் தொழில் துறையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சியளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை. எனினும், ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழக திட்ட



2007 மார்ச் 29]

அலுவலகத்திலிருந்து பயிற்சி செலவினத் தொகை பெறப்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியக் கட்டுப்பாட்டின்கீழ் கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாச்சலம் பீங்கான் கலைக்கூடத்தில் 41 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 2005-2006 ஆம் ஆண்டு 30 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழகத் திட்ட அலுவலகத்தில் இருந்து மகளிர் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு பெறப்படுமாயின், வாரியம் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

100—

## கைவினைப் பொருட்கள்

**வினா எண் 15519—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள சர்வோதய சங்கத்தில் கைவினைப் பொருட்கள் தயாரிப்பை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து சர்வோதய சங்கங்களும் மும்பை கதர் கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. எனவே, சர்வோதய சங்கங்களின் கைவினைப் பொருட்கள் தயாரிப்பை நவீனப்படுத்துவது குறித்து தமிழக அரசு முன்வருவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2007 மார்ச் 29

## 2. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2006–2007, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணைநிதிநிலை அறிக்கை அளித்தல் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகின்றேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை @இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த அவையில் வைக்கப்பட்ட இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 3,973.59 கோடி ரூபாய் நிதியொதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 1,118.00 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 669.56 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும் மற்றும் எஞ்சிய தொகையான 2,186.03 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. இந்தத் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ள சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

3. வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்ததற்காகக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியம் வழங்க, கூடுதலாக 44.63 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. மேலும், கூட்டுறவு வங்கிகள், நபார்டு வங்கி மற்றும் மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை அரசே ஏற்றுக்கொண்டதால், கூடுதலாக 519.67 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு" என்பதன்கீழ் 558.55 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

4. மாநிலத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலைக் கருத்தில்கொண்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சிறப்பு வழிவகை முன்பணமாக, அரசு 400 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு" என்பதன்கீழ் 400 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

@ அறிக்கையில் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் 134 முதல் 137 வரையுள்ள பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.





5. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்குக் கூடுதலாக 160 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் ரூபாய் 1,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

6. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப் பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த, கூடுதலாக 39.50 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் 35.15 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

முற்பகல் 9–35

7. அவசரகால சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ், சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதி குடும்பங்களுக்காக, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலமாக குடியிருப்புகளைக் கட்டுவதற்காக, கூடுதலாக 138.35 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை" என்பதன்கீழ் 59.04 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் மறு நிதியொதுக்கம் செய்வதன்மூலம் செலவிடப்படும்.

8. ஒருங்கிணைந்த சாலை வசதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு, கூடுதலாக 50.00 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ் 29.22 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் மறு நிதியொதுக்கம் செய்வதன்மூலம் செலவிடப்படும்.

9. புதிய பேருந்துகள் வாங்குவதற்காக, சென்னை மாநகர்ப் போக்குவரத்துக் கழகத்திற்கு பங்கு மூலதனம் மற்றும் கடன் உதவி அளிப்பதற்காக கூடுதலாக 99.99 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டு நிவாரண உதவி வழங்குவதற்காக, கூடுதலாக 57.34 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**2006—2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 48,80 | .. | .. |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 12 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 43,62,84 | 79,52 | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 56,72,29 | 10,13,93 | 1,64,04 |
| 6 | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு | 30 | 36,37 | .. |
| 7 | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் | 8 | .. | .. |
| 8 | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–பால்வளம் | 52,38 | 1 | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 48,94,19 | 12,99,53 | .. |





| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 10 | வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் | 18 | .. | .. |
| 11 | வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 16,14,01 | .. | .. |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு | 90,05,65 | 519,02,20 | 419,40,92 |
| 13 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 5 | .. | 400,00,00 |
| 14 | எரிசக்தித் துறை | 2 | .. | .. |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 6 | 86,65 | .. |
| 16 | நிதித் துறை | 10 | .. | 1,30,00 |
| 17 | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணி நூல் | 8 | .. | .. |
| 18 | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 4,94,30 | .. | .. |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,07 | 1 | .. |
| 20 | உயர் கல்வித் துறை | 9,23,60 | 1 | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் துறை | 8 | 10 | .. |
| 22 | உள் துறை–காவல் | 148,73,77 | 17,32,89 | .. |
| 23 | உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 5 | .. | .. |

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 24 | உள் துறை–சிறைச்சாலைகள் | 8 | 1 | .. |
| 25 | உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் | 15,92,03 | .. | .. |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 5 | .. | .. |
| 27 | தொழில் துறை | 5 | .. | 73,39,25 |
| 28 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம் | 2,15,63 | .. | .. |
| 29 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா | 12,98,09 | 4,89,96 | .. |
| 30 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு | 7,16,24 | 10,00 | .. |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 5,97,66 | 3,73,56 | .. |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 35,14,63 | 4 | 75,82,25 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 3 | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 5 | 1 | .. |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 3,61,18 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 41 | .. | .. |
| 39 | பொதுப் பணித் துறை–கட்டடங்கள் | 6 | 14 | .. |
| 40 | பொதுப் பணித் துறை–பாசனம் | 7 | 16 | .. |
| 41 | வருவாய்த் துறை | 59,04,54 | 2,03,42 | .. |





| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 14 | 42,33,57 | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 168,57,06 | .. | .. |
| 44 | சிறு தொழில்கள் துறை | 7 | 50,00 | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 32,35,45 | 1,15,20 | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு | 6 | .. | .. |
| 47 | தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை | 58,28 | .. | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | 66,35 | 49,99,90 | 50,00,00 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 2,06,95 | .. | .. |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 3 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 178,89,36 | .. | .. |
| | **பெருமொத்தம்** | **944,58,59** | **666,27,19** | **1,021,56,46** |

## 3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்–தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

[2007 மார்ச் 29

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்ற வாய்ப்பு தந்த உங்களுக்கும், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சிக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மத்திய மாநில அரசுகளின் பட்ஜெட் வருகிறது என்றால், மக்கள் பயந்த காலங்கள் உண்டு. விதிக்கப்பட இருக்கும் வரிகளைக் கண்டு பதுக்கல்கள் நடத்திய காலம் உண்டு; விலை உயரும் என்று வாங்கிக் குவித்த காலங்கள் உண்டு. நிதிநிலை அறிக்கை வருகிறது என்றால் வரி போடுகின்ற நிதி அமைச்சரைப் பார்த்து ஒரு ஏழைக் கவிஞன் பாடினான்; அந்த நிதி அமைச்சர் சொல்கிறாராம், "If you drive a car, I will tax the street. If you try to sit, I will tax the seat. If you get too cold, I will tax the heat. If you take a walk, I will tax your feet—நீ கார் ஓட்டினால், நான் தெருவிற்கு வரி போடுவேன், நீ உட்கார்ந்தால் நீ உட்கார்ந்த இருக்கைக்கு நான் வரி போடுவேன், உனக்குக் குளிர் வந்தால் நான் வெப்பத்திற்கு வரி போடுவேன், நீ நடந்தால் உனது பாதத்திற்கு நான் வரி போடுவேன்" என்று சொன்ன காலங்கள் போய், அன்னை சோனியாவின் வழிகாட்டுதலில், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடைய அரசு டெல்லியிலே பதவி ஏற்றபிறகு, தமிழினத் தலைவராகிய டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திலே பதவியேற்ற பிறகு, எப்போது பட்ஜெட் வரும் என்று ஏழை மக்கள் ஆவலோடு காத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல காலத்தை நீங்கள் உருவாக்கித் தந்திருக்கிறீர்கள். மார்ச் மாதம் வருகிறது என்று சொன்னால், கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் என்ன சலுகைகள் வருகின்றன என்று ஒரு சாதாரண கிராமத்திலே இருக்கின்ற ஒரு விவசாயி மட்டுமல்ல, அந்த விவசாயி வீட்டுக் குழந்தைகூட இந்த பட்ஜெட்டை எதிர்பார்க்கின்ற ஓர் அற்புதமான காலத்தை நீங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–40

இதை, ஏதோ இந்த அவையிலே நான் ஒப்பனைக்காகச் சொல்லவில்லை அல்லது ஒரு புகழுரைக்காகப் பேசவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடருக்கு வருவதற்கு முன்னால், என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே ஆனைகுளம் என்ற சிறிய கிராமத்திலே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகின்ற அந்த விழாவுக்குச் சென்றிருந்தேன். விழா முடிந்து விடைபெற்று வருகிறபோது,



2007 மார்ச் 29] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மகிழ்ச்சியால் நெகிழ்ந்துபோன அந்த மக்கள், என் வண்டியினை இருபுறமும் சூழ்ந்துகொண்டபோது, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்கிய அந்த மகிழ்ச்சி அலைகளை நான் அவர்களுடைய முகத்திலே பார்க்கிறபோது, ஒரு சிறிய குழந்தை மட்டும் என்னைப் பார்த்து, 'மாமா, ஒரு நிமிடம்' என்றது. என்னவென்று கேட்டேன். (சிரிப்பு) ஆமாம், அப்போது அது என்னை மாமா என்று நினைத்துக்கொண்டது. (சிரிப்பு) என்னைப் பார்த்து அம்மா என்று சொல்ல முடியாது இல்லையா, அதுதான். (சிரிப்பு) என்னவென்று கேட்டவுடனே, அந்தக் குழந்தை என்னிடம் கேட்டது. 'எனக்கு ஒன்று வேண்டும், நீங்கள் பெற்றுத் தருவீர்களா? கலைஞரிடம் தாத்தாவிடம் சொல்வீர்களா' என்று கேட்டவுடனே, நான் கேட்டேன், 'வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைத்ததா' என்று கேட்டேன், கிடைத்தது என்றது; 'வீட்டுக்கு எரிவாயு அடுப்பு கிடைத்ததா?' கிடைத்தது என்றது. 'ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கிடைத்ததா?' கிடைத்தது என்றது. 'இன்னும் என்ன தரவேண்டும், கலைஞர் தாத்தா உனக்கு' என்று கேட்டவுடனே, 'அவரிடம் சொல்லி எனக்கு ஐஸ் கிரீம் வாங்கிக் கொடுங்கள்' என்று கேட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கை, தமிழகத்திலே ஒரு சிறிய கிராமத்திலே இருக்கின்ற ஒரு சிறிய குழந்தை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** விவரம் தெரியாத ஒரு பச்சிளம் சிறுமிக்கேகூட, கலைஞரிடம் கேட்டால் கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறதே (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கையைத்தான் இந்த நேரத்திலே நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்திருக்கிறோம். புதிய திட்டங்களைப் பட்டியல் போடுகிறபோது, இந்த ஆண்டு புதிதாக அரசாங்கம் செய்திருக்கின்ற, அரசு அறிவித்திருக்கின்ற சலுகைகள், விவசாயிகளுடைய வட்டி விகிதம் குறைப்பு; நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல்; இலவச உயர் கல்வி; e-tender; புதிய மருத்துவக் கல்லூரிகள்; ஆரம்பக் கல்விக்குக் கூடுதல் நிதியொதுக்கீடு; கூட்டுறவுச் சங்கத் தேர்தல் பற்றிய அறிவிப்பு; அனைத்து நியாய விலைக் கடைகளிலும் நவீன தராசுகள்; எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிப் படிப்பு; திருநெல்வேலியிலே அண்ணா பல்கலைக்கழகம்; ஊனமுற்றோருக்குத் தனி வாரியம்; மெட்ரோ இரயில் திட்டத்திற்கான நிதியொதுக்கீடு; அனைத்து சட்டமன்றக் கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் கண்காணிப்புக் குழு என

இவற்றையெல்லாம் மனசாட்சி உள்ளவர்கள் வரவேற்றுப் பாராட்டுவார்கள்; மனசாட்சி இல்லாதவர்கள் வயிற்றெரிச்சல் படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் மனசாட்சி உள்ளவர்கள், ஆகவே உங்களை நெஞ்சாரப் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்விக்கான நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆண்டு, எல்லா அரசுக் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு இலவசமாக உயர் கல்வி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர் கல்வியினைத் தொடர வழிவகுக்கும் முறையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் இரத்து செய்யப்பட்டு, அரசுக் கல்லூரிகளில் உயர் கல்வி இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பட்ஜெட்டினுடைய ஒட்டுமொத்தமான நிதித் தொகுப்பைப் பார்க்கிறபோது, கல்விக்கு மட்டுமே 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அதிலே நிதி ஒதுக்கியிருப்பதை அறிகிறேன். இது ஒரு மிகப் பெரிய, வரலாற்றுப் புகழ்மிக்க, நெஞ்சில் என்றும் தக்க வைத்துக்கொள்ளக்கூடிய ஒரு மிகப்பெரிய அம்சம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், கல்விக்காகச் செலவிடுகின்ற ஒவ்வொரு ரூபாயும் இந்தச் சமூகத்தின் எதிர்காலத்திற்கு செய்யப்படுகின்ற முதலீடுகள். இந்தச் சமூக முதலீட்டை தொலைநோக்குப் பார்வையுள்ள தலைவர்கள், நாளைய தலைமுறையினரின் தேவையை அறிந்து இன்றைய தலைமுறையில் முதலீடு செய்கிறார்கள். எனவே, உயர் கல்வி இலவசம் என்பது ஓர் அற்புதமான தத்துவம், ஓர் அற்புதமான விழுமியம். A beautiful concept. இதிலே ஒரு சிறிய மாறுதலைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–45*

அரசுக் கல்லூரிகள் என்பதை சற்று மறுபரிசீலனை செய்ய முடியுமா என்று அரசு ஆராயவேண்டும். ஏனென்று சொன்னால், நாங்கள் சார்ந்திருக்கின்ற திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ஒரே ஒரு அரசுக் கல்லூரிதான் இருக்கிறது. மூன்று மாவட்டங்களுக்கு ஓர் அரசுக் கல்லூரிதான் இருக்கிறது. அந்தவொரு அரசுக் கல்லூரியில் மட்டுமே மாணவர்களுக்கு உயர் கல்வி இலவசமாகக் கொடுக்கப்பட்டு—அந்த மூன்று மாவட்டங்களிலும் இருக்கின்ற ஏறக்குறைய 40, 45 சட்டமன்றத் தொகுதிகள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுக்கு என்ன செய்யலாம் என்று



நான் சில கல்வியாளர்களைக் கேட்டேன், எங்கள் தூத்துக்குடி மாநகரிலே புகழ்பெற்ற கல்வி நிறுவனமாகிய வ.உ.சி. கல்வி நிறுவனத்தினுடைய தாளாளர் மரியாதைக்குரிய அமரர் ஏ.பி.சி. வீரபாகு அவர்களுடைய புதல்வர் திரு. சொக்கலிங்கம் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், இந்தத் தத்துவத்தை, இந்த concept–ஐ கலைஞர் அவர்களைத் தவிர வேறு யாராலும் சிந்தித்துப் பார்க்கமுடியாது என்று. இப்போது, கல்லூரிகளிலே அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளுக்கு உதாரணமாக வ.உ.சி.கல்லூரியை எடுத்துக்கொண்டால், அந்த ஒரு கல்லூரிக்கு மட்டும், ஓராண்டுக்கு இந்த அரசு மூன்றரைக் கோடி ரூபாய் மானியமாகத் தருகிறது. ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல. மூன்றரைக் கோடி ரூபாய் அரசு மானியமாகத் தருகின்றபோது அந்தக் கல்லூரி, கட்டணம் மூலம் வாங்கி வசூலித்து அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கட்டுவது ஏழரை இலட்சம் ரூபாய்தான். மூன்றரைக் கோடி ரூபாயை அரசு கொடுக்கின்றபோது, ஒரு ஏழரை இலட்சம் ரூபாயை மட்டும்தான் அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலேயிருந்து கட்டணமாக, அரசு திரும்பப்பெறுகிறது. நீங்கள் 7 ஆயிரம் கோடியை செலவழிக்கிறீர்கள். இது மொத்தத்திலேயே 10 அல்லது 15 கோடி ரூபாய்தான் வரும். தமிழகத்திலே இருக்கின்ற அரசு உதவிபெறுகின்ற கல்லூரிகளிலே பயில்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் அந்தக் கட்டணத்தை இரத்துச் செய்தால் ஒரு 10 இலிருந்து 20 கோடி ரூபாய்க்குள் இந்த அரசுக்கு ஒரு மிகப் பெரிய புகழ் வந்து சேரும். எனவே, அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளிலும், அத்தகைய கட்டண உயர்வை இரத்துச் செய்ய வேண்டுமென்று நான் உங்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்கடுத்து, கல்வியைப் பற்றி இவ்வளவு சிந்திக்கின்ற இந்த அரசுக்கு இன்னொரு கோரிக்கையை வைக்க நான் ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டுகளிலே கல்வியினுடைய தேவையை தமிழ்ச் சமூகம் முற்றும் உணர்ந்து இருக்கிறது. இதுவரை கல்லூரிக்கு, கல்விக் கூடங்களுக்குப் போக வேண்டும், அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் இல்லாத பெற்றோர்கள்கூட, அடுத்தநேர உணவுக்கு நான் என்ன செய்வேன் என்கிற கவலையோடு வாழ்க்கை நடத்த வேண்டிய சாமானிய விவசாயக் கூலித் தொழிலாளர்களும்கூட, தங்கள் குழந்தைகள், தங்கள் மகனை, மகளை அற்புதமான கல்விக்கூடங்களுக்கு அனுப்பிடவேண்டுமென்று எண்ணுகிறார். அப்படி எண்ணுகின்ற வேளையிலே, ஒவ்வொரு ஊரிலும் புதிய கல்விக்கூடங்கள் உருவாகின.

அரசு அத்தனை கல்விக் கூடங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாது என்கிற சூழ்நிலையை உணர்ந்து அந்தக் கல்விக் கூடங்களுக்கு அங்கீகாரம் கொடுத்தது. ஆனால், சம்பளம் கொடுக்க முடியவில்லை. நீண்ட நாளாக அந்தக் கோரிக்கை இருந்து வருகிறது. அந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசின் சுமையை நான் அறிந்தவன். ஆகவே, அதனை உடனே கொடுத்துவிடுங்கள் என்று நிர்பந்திக்கக்கூடிய அளவிற்கு நான் வயிற்றெரிச்சல் படுகின்ற அரசியல்வாதியல்ல. ஆனால், அதே நேரத்திலே அந்த ஊரிலே, அந்தக் குழந்தைகளுக்கு இப்போது வாரம் மூன்று முறை முட்டை கொடுக்கிறீர்கள். ஒவ்வொரு ஏழை வீட்டுக் குழந்தையும் அந்த முட்டையை மூன்று நாள் பெறுகின்றபோது, அந்தக் குழந்தை தன்னுடைய தாயினுடைய கரங்களிலிருந்து உண்ணுவதைவிட, அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வருகின்றபோது அதிக மகிழ்ச்சி அடைகின்றது, கலைஞருடைய கருணையால்.

நான் என்ன சொல்கிறேன் என்றால், அங்கீகாரம் பெற்று அரசு உதவி பெறாமல் இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்பட வேண்டுமென்பதை என்னுடைய தாழ்மையான கோரிக்கையாக நான் உங்கள் முன் வைக்க ஆசைப்படுகின்றேன். அவர்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்படவில்லை. அங்கீகாரம் பெற்று அரசு நிதியுதவி பெறாமல் இருந்த பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்படவில்லை கடந்த ஆட்சியிலே. நான் அந்தக் கோரிக்கையை உங்களிடம் வைத்தேன். நான் கோரிக்கை வைத்து, நான் உங்கள் அறையைவிட்டு வெளியே வருவதற்கு முன்னாலே, நீங்கள் நம்முடைய பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களைக் கூப்பிட்டு, தமிழகத்திலே இருக்கின்ற அங்கீகாரம் பெற்ற அத்தனை பள்ளிகளிலும் படிக்கின்ற குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்களை வழங்கக்கூடிய உத்தரவை கடந்த ஆண்டு நீங்கள் பிறப்பித்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, என்னுடைய தொகுதியிலே சாம்பவர் வடகரை என்ற ஊர் இருக்கிறது. அங்கு இந்து நாடார் உறவின்முறையைச் சார்ந்தவர்கள் அந்தத் தொடக்கப் பள்ளியை வைத்திருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலே படிக்கின்ற குழந்தைக்குச் சத்துணவு. அது ஆள் நெருக்கடியால் நிரம்பி வழிகிறது. சமுதாயமே அந்தப் பள்ளியை நடத்துகிறது. அங்கே சத்துணவு இல்லை.



அந்த ஊரிலே இருக்கின்ற பெரியவர்கள், தாய்மார்கள், ஆளுக்கு ஒரு படி அரிசி போட்டு, வருடம் முழுவதும் அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கிறார்கள். அவர்கள் எத்தனை நாள் இந்தச் சுமையைச் சுமக்க முடியும்? பக்கத்துப் பள்ளியிலே ஒரு குழந்தை சத்துணவு சாப்பிடுகின்றபோது, அரசு நிதி உதவி பெறாத ஒரே காரணத்தால், இந்தக் குழந்தை மதியம் பட்டினி இருக்கவேண்டுமா என்கிற கேள்வியை எழுப்புகிறார்கள். எனவே, நான் கலைஞர் அவர்களை மிக அன்போடு கேட்பேன். மிகப் பணிவோடு கேட்பேன். கருணை உள்ளம் கொண்ட நீங்கள், தமிழகத்திலே இருக்கின்ற அங்கீகாரம் பெற்று, அரசு நிதியுதவி பெறாத தொடக்கப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகளில் இருக்கின்ற எல்லாக் குழந்தைகளுக்கும் மூன்று முறை முட்டையும், சத்துணவும் வழங்கவேண்டுமென்பதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக உங்களுடைய பணிவான கவனத்திற்கும், பரிசீலனைக்கும் வைக்க ஆசைப்படுகிறேன்.

தமிழகம் ஒரு முக்கியமான வரலாற்றுக் கட்டத்திற்குள் வந்திருக்கிறது. இந்திய அரசியலும் ஒரு மாறிய சூழ்நிலைக்குள் வந்திருக்கிறது. பாராளுமன்றத்திலே அரசியல் கட்சிகளுடைய அடையாளங்கள் மாற்றப்பட்டு மாநிலங்களுடைய அடையாளங்களை அரசியல் கட்சிகள் தரித்துக் கொள்கிறார்கள். நாடாளுமன்றத்திலே காங்கிரஸ் கட்சி இல்லை, பாரதிய ஜனதா கட்சி இல்லை, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி இல்லை, மற்ற மாநிலக் கட்சிகள் இல்லை. அங்கே கர்நாடகத்திற்கு கட்சி இருக்கிறது. கேரளாவிற்கு கட்சி இருக்கிறது. மேற்கு வங்க மாநிலத்திற்கு இருக்கிறது. எனக்கு ஒரு வருத்தம். தமிழகத்திற்கு மட்டும் அங்கே 3 கட்சிகள் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலை ஏன் என்பதை இந்த அவையிலே உள்ள கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

முற்பகல் 9–50

தமிழகம் முழுவதும் இருக்கிற பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய ஒரு காவிரி மன்றத்தினுடைய தீர்ப்பைப் போராடிப் பெற்றதிலே நம்முடைய முதல்வர் உள்பட, அவருடைய பெருந்தன்மை உள்பட—அவர்கள் சொன்னார்கள், நான் மட்டும் அதற்குச் சொந்தம் கொண்டாடவில்லை. 50 ஆண்டு காலமாக நடக்கின்ற போர்க்களம் இந்தப் போர்க்களம். ஏறக்குறைய 6 முதலமைச்சர்களைப் பார்த்த களம் இந்தக் களம். இந்தக் களத்திலே எந்த முதலமைச்சரும் தனக்கு என்று சொல்லிக்கொள்ள முடியாமலும் தமிழர்களுடைய ஒட்டுமொத்த உணர்வை ஒருங்கிணைந்து, தமிழ் மக்களுடைய உரிமைக்காகப் போராடிப் பெற்ற

ஒரு தீர்ப்பு இந்தத் தீர்ப்பு. இந்தத் தீர்ப்பைப் பற்றி, இந்தத் தீர்ப்பினுடைய மகிமையைப் பற்றி நான் சொல்வதைவிட, 'இந்து' பத்திரிகை 6–2–2007 ஆம் நாளன்று அற்புதமான தலையங்கம் எழுதி இருக்கிறது. அந்தத் தலையங்கத்தை நான் இந்த மன்றத்திலே படிக்க ஆசைப்படுகிறேன். "No solution to a protracted and complex dispute is likely to please all sides equally. However, by all reasonable criteria -legal, historical, socio-economic, agronomic and political- the final order of the Cauvery Water Tribunal is just and equitable settlement of a highly contentious inter-State dispute." இதைவிட ஒரு நல்ல தீர்ப்பு வரமுடியாது என்று ஒரு நடுநிலைப் பத்திரிகை எழுதி இருக்கிறது.

தமிழகத்திலே இருக்கிற அரசியல் நோக்கர்கள் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற இந்த நீர்ப்பங்கீட்டைப் பற்றி அத்தனை விஞ்ஞானிகளும் ஒட்டுமொத்தமான ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இதைவிட ஒரு நல்ல தீர்ப்பை இதைப்போல ஒரு surcharged atmosphere போராட்ட உணர்வுகளும், பகை உணர்வுகளும், விரோத உணர்வுகளும் இந்த நதிநீர்ப் பங்கீட்டால் நிரம்பி வழிகின்ற நேரத்திலே, இதைவிட ஒரு balanced Tribunal Judgement, இதைவிட ஒரு பக்குவமான தீர்ப்பு இருக்க முடியாது. இதில் இன்னும் ஒருபடி அதிகமாகச் சொல்கிறார்கள். It is a unanimous decision. மூன்று நீதிபதிகளும் ஒரே தீர்ப்பைக் கொடுக்கிறார்கள். அதிலே ஒருவர் மாறுபட்டு இருந்திருந்தால் தமிழகத்தினுடைய எதிர்காலமே கேள்விக்குறியாகி இருக்கும்.

அப்படிப்பட்ட தீர்ப்பிலே, ஒரு நல்ல தீர்ப்பு என்றால், அது சம்பந்தப்பட்ட இரண்டு கட்சிகளும் என்ன நினைக்க வேண்டும். தனக்கு ஏதோ கிடைத்திருக்கிறது அல்லது தனக்கு ஏதோ இழந்திருக்கிறது என்று நினைத்தால்தான் அது சரியான தீர்ப்பு. இதிலே காங்கிரஸ் கட்சிக்கு வருத்தம் இல்லை. இந்தத் தீர்ப்புக்காக 16 ஆண்டுகள் காத்திருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு இருந்தால்தான் இதைச் சட்டப்படி நிறைவேற்ற முடியும். இந்தத் தீர்ப்பு வருவதற்கான கால கட்டத்திலே 16 ஆண்டுகள் என்று சொன்னால், 10 ஆண்டுகள் நீங்கள் முதலமைச்சராக இருந்து இருக்கிறீர்கள். இங்கே இருக்கிற பிரதான எதிர்கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்திருக்கிறது. ஆகவே, 16 ஆண்டு காலம் நடந்த வழக்கிலே, 10 ஆண்டுகள் நீங்கள் நடத்திவிட்டு, அந்த வழக்கின் தீர்ப்பிலே எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்வது எப்படிச் சரியாக இருக்கமுடியும்? (குறுக்கீடுகள்). நான் முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடட்டும். நீங்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்தத் தீர்ப்புக்கு, நான் சொல்கிறேன். இந்தக் காவிரி நதிநீர் Tribunal, இந்தத் தீர்ப்பாயம் கொடுத்த தீர்ப்பிலே, இந்தத் தீர்ப்புக்கு, தமிழகத்திற்கு ஏற்பட்ட இழப்பிற்கு முழுக்க, முழுக்க கலைஞர்தான் பொறுப்பு என்று சொல்வதிலே வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்? வேறு என்ன அர்த்தம் அதற்கு? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள் ஏன் கத்துகிறீர்கள்?

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் காவிரி நடுவர் மன்றம் தந்த தீர்ப்பினைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது, 16 ஆண்டுகளில் 10 ஆண்டுகள் நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே இந்தத் தீர்ப்பு வந்ததற்குப் பின்னால், இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது பழியைப் போடுகின்றீர்களே என்ற கருத்து தொனிக்கிற வகையில் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இதனுடைய வரலாறுகளைப் பற்றி அறிந்தவர்களுக்கு நன்றாகவே தெரியும். அந்த ஒப்பந்தம் 1974 வரை இருக்குமென்றும், அந்த ஒப்பந்தத்தில் எந்த அணைக்கட்டு கட்ட வேண்டுமென்றாலும், தமிழக அரசும், டெல்லியும் அனுமதி தந்ததற்குப் பின்னால்தான் கட்ட வேண்டுமென்ற ஷரத்து உள்ளதே, அதையும் மீறி கர்நாடகத்தில் இருக்கின்றவர்கள் அணைகளைக் கட்டினார்களே அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் யார்? (மேசையைத் தட்டும் ஒலி) 1960–ல் ஆட்சியில் இருந்தவர்கள் யார்? நீங்கள்தான் அப்போது ஆட்சியில் இருந்தீர்கள். அதை ஏன் தடுத்து நிறுத்தவில்லை நீங்கள்? இதையெல்லாம் கேட்க வேண்டிவரும். அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய நிலை வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட்டுவிட்டு, யாரையோ சந்தோஷப்படுத்துவதற்காக, சமாதானப்படுத்துவதற்காக. . . (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், தனியாக எது வேண்டுமானாலும் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தனியாக வேண்டுமானால் அவர் பேசிவிட்டுப் போகட்டும். சட்டமன்றத்தில் பேசக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நான் கும்பகோணத்திற்கு வழி கேட்டால் கொறடாச்சேரிக்குப் பாதை சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) உங்கள் கருத்தைச் சொல்வதற்கு அனுமதி கொடுத்து, நீங்களும் சொல்லிவிட்டீர்கள். அவர் உங்களிடம் கும்பகோணத்திற்கு வழி கேட்டால் கொறடாச்சேரிக்கு வழி சொல்கிறார் என்று சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தை, நீங்கள் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? உங்களுடைய கருத்தைச் சொன்னதற்குப் பிறகு. . .

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பீட்டர் அல்போன்ஸ், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தன்னுடைய பாதையைவிட்டு வேறு பாதையில்தான் சென்று கொண்டிருக்கின்றார்கள். திருத்திக்கொள்வதாகத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நாங்கள் ஆட்சியில் இருந்தபோது எல்லாமே முடிந்து, அணைகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டு, தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய தண்ணீர் முழுவதும் அங்கே அணைகளிலே தேக்கி வைக்கப்பட்ட நிலைக்கு வந்ததற்குப் பின்னால்தான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அந்த வழக்கைத்தான் நாங்கள், இருக்கின்ற சாதக பாதகங்களை எடுத்து வைத்து வாதாடினோமேயொழிய, ஆரம்பத்தில் அணை கட்டுவதற்கு விட்டு வைத்தது யார்? அதைத் தடுத்து



நிறுத்துகின்ற கடமை, ஆட்சிப் பொறுப்பில் இருந்த உங்களுக்கு இருந்தது. அதை நீங்கள் செய்யத் தவறினீர்கள். அதைத்தான் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக்கொண்டு வந்தது, காவிரி நதிநீர் தீர்ப்பைப் பற்றிய finality, இறுதி முடிவு. இதற்கு மேல் இந்தக் காவிரி நதிநீர் விவாதத்தைப் பற்றியோ, அதனுடைய விவகாரத்தைப் பற்றியோ இந்தியாவில் எந்த நீதிமன்றத்திற்கும், எந்த ஆணையத்திற்கும் போக முடியாத இறுதித் தீர்ப்பு, இந்தத் தீர்ப்பு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். சரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் போக முடியாது என்று நண்பர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சில சட்டத்தை, தெரியாதவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டம் என்ன சொல்கிறதென்றால், the original ISWD Act-Inter-State Water Disputes Act - stated that the award of a Tribunal set up under the Act would be final and binding which was clear enough. The Amendment Act of 2002 goes further and says that the decision of the Tribunal shall have the same force as an order and decree of the Supreme Court of India. It must also be noted that the ISWD Act under a specific provision of Article 262 bars the jurisdiction of all Courts including the Supreme Court. Once a dispute has been referred to a Tribunal set up under the Act, there can be no appeal from this award of the Tribunal to the Supreme Court. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய நாட்டினுடைய அரசியல் சாசனச் சட்டம் தெரிந்தவர்களுக்கு, 'இரண்டு மாநிலங்களுக்கிடையே வருகின்ற நதிநீர் பங்கீட்டுத் தாவாவைப் பற்றிய சட்டங்களை உணர்ந்தவர்களுக்கு இது தெரியும். இப்படிப் போராடிப் பெற்ற உத்தரவு ஒரு முடிவல்ல. இப்போதுதான் இந்தப் போராட்டத்தினுடைய அடுத்த கட்டம் தொடங்குகிறது. இந்த அடுத்த கட்டம் தொடங்குகிற நேரத்திலே, Cauvery River Water Authority அது முடிவுக்கு வந்துவிட்டது. இனிமேல் புதிதாக, இந்தத் தீர்ப்பாயத்தினுடைய தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு, ஒரு புதிய mechanism; ஒரு புதிய அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அந்த அமைப்பை உருவாக்குவதற்கு இந்த தேசத்திலே இருக்கின்ற தமிழ்

கூறும் நல்லுலகத்தில் இருக்கின்ற அத்தனை தமிழர்களும் இந்திய அரசியல் சாசனச் சட்டம் அங்கீகரித்து தந்து இருக்கின்ற இந்த முதலமைச்சரின் பின்னால் நின்றால்தான் அது நடக்கும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதனை நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இது வரலாறு அவர்களுக்குத் தந்திருக்கிற மிகப் பெரிய பொறுப்பு. இந்த நாட்டின் அரசியல் சாசனச் சட்டம் அவர்களுக்குத் தந்திருக்கின்ற கடமை. நீங்கள் விரும்பினாலோ, விரும்பாவிட்டாலோ, நாங்கள் விரும்பினாலோ, விரும்பாவிட்டாலோ இந்தக் கடமையைச் செய்யக்கூடிய சட்டபூர்வமான, அரசியல் அங்கீகாரம் பெற்ற அமைப்பு அவர்தான். அவருடைய கரத்தைப் பலப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழருடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த மன்றத்தின்மூலமாக. . . (குறுக்கீடு) (கூச்சல்–குழப்பம்)

*முற்பகல் 10–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கலைராஜன், உட்காருங்கள். மற்றவர்கள் எல்லாம் அமைதியாக இருங்கள், கலைராஜன் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின்மூலமாக, உங்கள்மூலமாக, இந்தச் சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் இருக்கின்ற அரசியல் சக்திகளுக்கு, சமூகத் தலைவர்களுக்கு, விவசாயச் சங்கங்களுக்கு, தமிழகத்தின் எதிர்காலத்தில் ஆர்வம் உள்ள நல்லவர்களுக்கெல்லாம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு அறைகூவல் விடுக்க ஆசைப்படுகிறேன். மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற அரசியல் தலைவர்களைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பாரதிய ஜனதா கட்சிக்காரர்களும், காங்கிரஸ்காரர்களும் கர்நாடகத்திலே கை கோர்த்துக்கொள்கிறார்கள்; மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும், திரிணாமுல் காங்கிரஸ்காரர்களும் பாராளுமன்றத்திலே கை கோர்த்துக்கொள்கிறார்கள்; தெலுங்கு தேசத்துக்காரர்களும், காங்கிரஸ்காரர்களும், பாராளுமன்றத்திலே கை கோர்த்துக்கொள்கிறார்கள். தமிழகத்தின் எதிர்காலத்திற்காக, காவிரி நதிநீர் உரிமையை தஞ்சைப் பாசன விவசாயிகளுக்குப் பெற்றுத் தருவதற்காக, உங்களுக்கு அரசியல் வாழ்வு தந்த அந்த வாக்காளப் பெருமக்களுக்காக, இந்த முதலமைச்சரின் கரத்தை நீங்கள் ஏன் பலப்படுத்தக்கூடாது என்கிற கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலே உள்ள குறிப்பாக அ.தி.மு.க. உறுப்பினர்கள், நண்பர் பீட்டர் அல்போன்ஸினுடைய பேச்சைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். அவர் முதலமைச்சருடைய கரத்தைப் பலப்படுத்த வேண்டும் என்று சொல்லுவது, கருணாநிதியினுடைய கரத்தை அல்ல. யார் இங்கே முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறார்களோ, இந்த மாநிலத்தினுடைய பொறுப்பை யார் ஏற்று இருக்கிறார்களோ, அவர்களுடைய கரத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பது, தமிழர்கள் அத்தனை பேர்களுடைய குரலையும் ஏகோபித்து ஒலிக்கின்ற ஒரு சக்தி. அந்தச் சக்தி நானாக இருக்கலாம் அல்லது நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பன்னீர்செல்வமாக இருக்கலாம் அல்லது பீட்டர் அல்போன்ஸ் ஆக இருக்கலாம் அல்லது செங்கோட்டையனாக இருக்கலாம், அதிர்ஷ்டவசமாக நம்முடைய கலைராஜனேகூட இருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) யார் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறார்களோ அவர்கள் அந்த மாநிலத்தினுடைய பொறுப்புக்கு உரியவர்களாக இருக்கும்போது, எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்ற கருத்தைத்தான் அவர் இங்கே எதிரொலிக்கிறாரே தவிர, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கையிலோ அல்லது தலைவர் கருணாநிதியினுடைய கையிலோ பொறுப்பு ஒப்படையுங்கள் என்று அவர் சொல்வதாக யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. அப்படிச் சொன்னால், அது தவறு. இந்த இடத்திற்கு வந்திருக்கின்றவர்கள், அந்தப் பொறுப்புக்கு உரியவர்களாக இருக்கிற வரையில், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற அந்தக் கடமையை அவர்களுக்கு விட வேண்டும் என்றுதான் அவர் குறிப்பிடுகிறார். தவறாகக் கருதிக்கொண்டு என்னைப் புகழ்கிறார் என்று கருதிக்கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? Point of order என்ன இருக்கிறது? உட்காருங்கள் (குறுக்கீடு) இதில் point of order என்ன இருக்கிறது? (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஏதோ நாங்கள்

தமிழகத்தினுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு, அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து செயல்படவில்லை என்ற தொனியில் பேசிக்கொண்டு இருக்கின்றார். தமிழகத்தினுடைய உயிர்நாடிப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு பிரச்சினையாக இருந்தாலும்சரி, காவிரி நீர்ப் பிரச்சினையாக இருந்தாலும்சரி, அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டப்பட்ட இரண்டு கூட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கின்றோம். எங்களுடைய கருத்துகளையும் சொல்லியிருக்கின்றோம். அனைத்துக் கருத்துகளும் ஒட்டுமொத்தமாகத் தீர்மானமாக அங்கே வடிக்கப்பட்டன. அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு நல்கி இருக்கின்றோம்.

*முற்பகல் 10–05*

இந்தச் சூழ்நிலையில், எந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள்? தீர்ப்பு வந்திருக்கின்றது. அதில் தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த பாதகங்களைச் சரி செய்து, மீண்டும் தமிழகத்திற்கு நீர் கிடைக்க வேண்டிய சிலபல நல்ல ஆலோசனைகளைத்தான் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். முடிந்தால் செய்யுங்கள். ஏனென்றால், இப்போது நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது. செய்ய வேண்டிய பொறுப்பு ஆளும் தரப்பிலே இருக்கின்றவர்களுக்கு இருக்கின்றது. அதைத்தான், பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற நிலையிலிருந்து செய்து கொண்டிருக்கின்றோமேயொழிய, யாருக்கும் ஒத்துழைப்பு தராத சூழ்நிலையை எங்கள் கட்சி எந்தநேரத்திலும் எடுக்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்மூலம் தமிழகத்தின் எதிர்காலத்தை அச்சுறுத்துகின்ற ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நான் இந்த அவையினுடைய கவனத்தையும், குறிப்பாக நம்முடைய அரசினுடைய கவனத்தையும் கவர விரும்புகிறேன். நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு என ஐம்பெரும் பூதங்கள் என்று நமது இதிகாசங்களால் அழைக்கப்பட்ட நாம் வாழும் பூமியின் தொகுப்பினைப் பத்திரமாகப் பாதுகாத்து அவற்றின் இன்றியமையாத தேவைகளை சாதாரண, சாமானிய மக்களுக்கு உறுதி செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசின் தலையாய



கடமைகளில் ஒன்று ஆகும். இதில் இன்னும் முக்கியமானது நிலம், நீர். நீர் என்பது உயிர் வாழ்வதற்கும், நிலம் என்பது உடல் வாழ்வதற்கும் அத்தியாவசியமான அந்த இரண்டு தேவைகள். அதிலே நிலம் என்பது இந்த மண்ணின் மாண்புக்கு அடையாளமாக, இந்த மண்ணில் நான் பிறந்ததற்கு முகவரியாக, நான் இந்த மண்ணில் மறைந்த பிறகு என்னை அரவணைத்துக் கொண்டு என்னுடைய வாழ்க்கைக்கு சாட்சியம் கூறுகின்ற அந்த 8 அடி மண்ணாக நிலம் விரிந்திருக்கிறது. இதைத்தான் பாரதியார் அவர்கள், "காணி நிலம் வேண்டும்" என்று கேட்டார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட ஏழைகளுக்கு இலவச நிலம் வழங்குகின்றபோது மனம் நெகிழ்ந்து சொன்னார், 'என் வாழ்க்கையில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிற ஒரு கட்டம் உண்டு என்று சொன்னால், நான் பெருமைப்படுகின்ற ஒரு நிமிடம் இருக்கிறது என்று சொன்னால், தமிழகத்திலே வாழும் ஏழைகளுக்கு இந்த 2 ஏக்கர் நிலத்தை கொடுக்கிறேனே அதுதான் என் வாழ்வில் நான் பெற்ற சந்தோஷம்' என்று சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக தமிழகத்தின் நிலங்களையெல்லாம் கொள்ளை கொள்வதற்கு ஒரு பெரிய சதி நடக்கிறதோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு தமிழ்நாட்டில் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சென்னையிலே, மத்திய பகுதியிலே ஒரு கிரவுண்டினுடைய, அதாவது, 2,400 சதுர அடிக்கு விலை 6 கோடி, 7 கோடி. கொஞ்சம் புறநகர்ப் பகுதிக்குப் போனால் சோழிங்கநல்லூர் பகுதிக்குப் போனால், ஒரு ஏக்கர் 2 கோடி, 3 கோடி, 4 கோடி, 6 கோடி. இங்கேயிருந்து கோயம்புத்தூர் போனால், விமான நிலையத்தை ஒட்டியுள்ள பகுதியிலே ஒரு ஏக்கர் நிலம் விலை என்னவென்று சொன்னால், 3 கோடி, 4 கோடி. மதுரையிலே புறவழிச் சாலையிலே இடம் என்ன விலை என்று கேட்டால் 4 கோடி, 5 கோடி. யார் இதை வாங்குகிறார்கள்? இந்த நிலத்தை யார் வாங்குகிறார்கள் என்பதற்கு என்னிடத்தில் சில ஆதாரங்கள் இருக்கின்றன.

இன்று காலையிலே Indian Express பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். 'Bidding war for Sankara Hospital intensifies, Shriram enhances offer to Rs.265 Crores.' 3 நாட்களுக்கு முன்னால் 220 கோடி ரூபாய்க்கு விலை கேட்ட இந்த நிறுவனம், 260 கோடி ரூபாய்க்கு விலை கேட்ட நிறுவனம், 3–வது நாள் 265 கோடி ரூபாய்க்கு விலை கேட்கிறார்கள் என்று சொன்னால் இந்தப் பணம் எங்கேயிருந்து வருகிறது? அதற்கும் இன்று 'இந்து' பத்திரிகையில் ஓர் ஆதாரம் இருக்கிறது.

*முற்பகல் 10–10*

நான் ஒரு தகவலுக்காகச் சொல்லுகிறேன். இன்று சர்வதேச நிறுவனங்களிலே வாழ்கின்ற NRI என்று சொல்லக்கூடிய Non Resident Indians மூலமாக Hedge Fund உருவாகிறது. Hedge Fund என்பது யாராவது 2, 3 பேர்கள் சேர்ந்து ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கி அதற்கு நிதியுதவி செய்வது. ஒரே நாளிலே, 2 அமெரிக்க இந்தியர்கள் 2 நாட்களில் நினைத்து Hedge Fund என்று சொல்லக்கூடிய அந்த நிதியை two billion Dollars–ஐ உருவாக்கினார்களாம், 10,000 கோடி. அந்த 10,000 கோடி எதற்கு வருகிறது? யாருக்கு வருகிறது என்று தெரியவில்லை. இன்று SEBI நிறுவனம்கூட கவலை தெரிவித்திருக்கிறது. இந்த SEBI நிறுவனம் இன்றைய தினம் SEBI intends to avoid the anonymous nature of hedge funds investment in India. இந்தியாவிலே முதலீட்டை ஆராய்ச்சி செய்யக்கூடிய இந்த SEBI என்கிற நிறுவனம் இந்த hedge funds வருகின்றபோது anonymous nature of funds என்று சொல்கிறது.

இன்னும் சொல்லப்போனால், ஒரு பிரபல தினசரிப் பத்திரிகை நான்கு நாட்களுக்கு முன்னால் ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட சார் பதிவாளர் அலுவலகத்திலே இந்த 70 நாட்களில், அதாவது ஜனவரி பிறந்த பிறகு 70 நாட்களில் 7,500 பத்திரப் பதிவுகள் நடந்திருக்கின்றன. ஒரே இடம் மட்டும் 7 முறை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் எங்கே இருந்து வருகிறது என்று சொன்னால், எனக்கு வேண்டிய ஒரு வங்கி மேலாளர் திருக்கழுக்குன்றத்திலே இருக்கிறார், அவர் சொல்கிறார், நிலம் வாங்குவதற்காக வருகின்ற காசோலைகளும், வங்கி வரைவோலைகளும் தமிழகத்தில் இருந்து வருவதில்லை, மும்பையிலிருந்து வருகின்றன, அகமதாபாத்திலிருந்து வருகின்றன. வெளிநாடுகளிலிருந்து வருகின்றன.

இன்றையதினம் இன்னொரு அறிக்கை வந்திருக்கிறது. 'Poverty ratio in India' பற்றி ஒரு சர்வே வந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே வாழ்கின்றவர்களில் எத்தனை பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்று சொல்கிறபோது, தமிழ்நாட்டிலே நூற்றுக்கு பதினெட்டு பேர் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ளவர்கள் என்று நேற்று முன்தினம் வந்த செய்தி சொல்கிறது. ஐந்தில் ஒருவர், ஐந்து தமிழர்களில் ஒருவர் அடுத்த நேர உணவுக்கு என்ன செய்வது என்று தெரியாதவர். அவர் இந்த பத்தாயிரம் கோடியை எதிர்த்து எப்படிப் போரிட முடியும்? ஒரு கிரவுண்டுக்கு விலை 7 கோடி ரூபாய் கொடுத்து எப்படி வாங்க முடியும்? 45 ஆயிரம் கோடி ரூபாயை



செலவழிக்க இருக்கிறார் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர். அடுத்த 5 ஆண்டுகளில் சென்னையில், கண்ணாடி போல சாலைகளைப் போடப் போகிறார்; சாலை நிறைய பூங்காக்கள் வைக்கப் போகிறார்; அற்புதமான குடிதண்ணீர் கொடுக்கப் போகிறார். இவையெல்லாம் யாருக்கு? ஒரு கிரவுண்டு 7 கோடி ரூபாய் கொடுத்து வாங்குபவர்களுக்குத்தானே? போயஸ் கார்டனிலே 2,000, சதுர அடி flat 4 கோடி ரூபாய். அவர்களுக்கு இந்த வசதியைச் செய்து கொடுப்பதற்கு இந்த நாட்டின் ஏழை எளிய மக்கள் வரி கொடுக்க வேண்டுமா? இந்த நில விலையைக் கட்டுப்படுத்த வேண்டாமா? அமெரிக்காவில் இருக்கின்றவர்களுக்கும், ஆஸ்திரேலியாவில் இருக்கின்றவர்களுக்கும், குஜராத்தில் இருக்கின்றவர்களுக்கும், கொல்கத்தாவில் இருக்கின்றவர்களுக்கும் தமிழர் பூமியைத் திறந்துவிட வேண்டுமா? நாளை தமிழன் தன்னை அடக்குவதற்கு இடம் இல்லாமல் இருக்க வேண்டுமா? இந்தக் கேள்விகளை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தமிழர்களின் உரிமையைப் பேணிப் பாதுகாப்பதிலே ஒரு சிங்கமென உங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்ற நீங்கள் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வீட்டு மனைகளுடைய விலைவாசி ஏற்றங்கள் ஏன் இப்படிக் கூடுகின்றன என்று சொன்னால், இந்த விலைவாசி ஏற்றத்தினுடைய காரணம், வீட்டு மனைகளுடைய முதலீடுகள் உபயோகிப்பாளர்களிடம் இல்லாமல் முதலீட்டாளர்களிடம் போனதுதான் காரணம். எல்லோரும் என்ன நினைக்கிறார்கள் என்றால் வீட்டு மனையில் முதலீடு செய்தால் வங்கிக் கணக்கைவிட அதிகம் வரும் என்று நினைக்கிறார்கள். நடுத்தட்டு வர்க்கத்தைச் சார்ந்தவர்கள், சாமானியர்கள், மாதம் 10 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ள யாரும் இனிமேல் சென்னை நகருக்குள் வசிக்க முடியாது என்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. கேந்திரமான சென்னைப் பகுதியிலே யாரும் வசிக்க வேண்டும் என்று சொன்னால், மாத வருமானம் 3 இலட்சம் ரூபாய்க்கு குறைவு இல்லாமல் இருப்பவர்கள்தான் இன்னும் 10 ஆண்டு காலத்திலே சென்னைக்குள்ளே வசிக்க முடியும். இந்தச் சூழ்நிலையை எப்படித் தவிர்ப்பது என்று அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கின்ற நீங்கள் தயவுசெய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆந்திராவிலே காலி மனைகளுக்குத் தனி வரி போடுவதாக நான் அறிகிறேன். ஒரு வீட்டு மனை முதலாண்டு காலியாக இருந்தால் அதை அப்படியே விட்டுவிடுவது. இரண்டாவது ஆண்டும், மூன்றாவது ஆண்டும், நான்காவது ஆண்டும் காலியாக இருந்தால் அது மனை

தேவைப்படுவோரின் கையிலே இல்லை, அந்த மனையில் முதலீடு செய்து இலாபத்தை சம்பாதிக்கின்ற எங்கேயோ ஒரு பினாமியிடம் இருக்கிறது என்பதை உணர்கிறார்கள். ஆகவே, காலி மனைக்கு வரி போடுகிறார்கள், அதனுடைய மார்க்கெட் ரேட்டில். அத்தகைய வரியை தமிழகத்திலே நீங்கள் விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைச் சுற்றியுள்ள மனைப் பிரிவுகளிலே இருக்கின்ற ஆயிரக்கணக்கான மனைகளுக்குச் சொந்தக்காரர்கள் யாரும் இங்கே இல்லை. அந்த மனையிலே முடக்கிப் போட்டுவிடுகிறார்கள். அதற்காகத்தான் நான் உதாரணம் சொன்னேன். 3 நாட்களிலே 40 கோடி ரூபாயை புரட்டிக் கொடுக்கின்ற ஒரு நிறுவனம், அந்த நிறுவனத்தோடு போட்டி போடுகின்றவர்களையும் பாருங்கள், அவர்களில் யாரும் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் இல்லை. நேற்று உயர் நீதிமன்றத்திலே ஏலத்திலே பங்கு கேட்கவந்த அந்த கம்பெனிகளுடைய பின்னணியை நீங்கள் விசாரித்துப் பாருங்கள்: Sriram Investment என்று சொல்லக்கூடிய அந்த கம்பெனிகூட தமிழகத்தைச் சேர்ந்த கம்பெனி இல்லை.

அதைப்போல நம்முடைய அமைச்சர், மரியாதைக்குரிய மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு அவர்களுடைய பெரும் கருணையின் காரணமாக ஓர் அற்புதமான மேம்பாலப் பணி நடந்துகொண்டிருக்கின்றது. அதற்குப் பக்கத்திலே HTL நிறுவனத்திற்குச் சொந்தமான இடம் இருந்தது. அந்த இடத்தை ஏறக்குறைய 300 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். இப்படித் தமிழகத்தினுடைய கேந்திரமான இடங்களையெல்லாம் strategically important locations – அவற்றையெல்லாம் தமிழகத்திற்குச் சம்பந்தமில்லாதவர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னால், நாளை தமிழர்களுடைய எதிர்காலம் என்னவாகும் என்கிற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இந்த அவையிலே இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் உண்டு. இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

*முற்பகல் 10–15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லி விடை பெறலாம் என்று எண்ணுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே சிறுபான்மையினர் நலத்தைப் பற்றிப் பேச வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எங்களுக்காக ஒரு இயக்குநரகம் தந்திருக்கிறார்கள், A Directorate for Minorities. நான்



அவர்களுக்கு மிகப் பணிவாக ஒரு கோரிக்கையை வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் என்று சொன்னால், சிறுபான்மை மக்களுடைய நலனை உற்றுக் கவனித்து 'பால் நினைந்தூட்டும் தாய்போல' இந்தச் சமூகத்தை வளர்த்த வரலாறு அவர்களுக்கு உண்டு. சிறுபான்மைச் சமுதாயம் நன்றியோடு நினைத்துப் பார்த்து பாராட்ட வேண்டிய தலைவர்களுள் ஒருவர் இன்று உயிர் வாழ்கிறார் என்று சொன்னால், டாக்டர் கலைஞர் அவர்களைத் தவிர, தமிழகத்திலே வேறு யாரும் இல்லை என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பசிக்கின்ற குழந்தை, சேலை கட்டிய பெண்களையெல்லாம் அம்மா என்று அழைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) பசிக்கின்ற குழந்தை தன் தாயைப் பார்த்துத்தான் அம்மா என்று அழைக்க முடியும். நான் உங்களிடம் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வேன், நான் சிறுபான்மை மக்கள் அதிகமாக வாழ்கின்ற கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து வருகிறவன். இந்த நிதிநிலை அறிக்கையிலே, கலைஞர் ஏன் எங்களுக்கு இட ஒதுக்கீடு தரவில்லை என்று என்னிடம் கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது நியாயம். இன்று வருகின்ற புள்ளிவிவரங்களைப் பார்த்து நமக்குச் சில சமயத்திலே வெட்கமாக இருக்கிறது, வேதனையாக இருக்கிறது. இந்தியாவிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிலே, 4,500 பேரில் 100 பேர்கூட இஸ்லாமியர்கள் இல்லை. தமிழகத்திலே இருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிலே 7 பேர், 8 பேருக்குமேல் இஸ்லாமியர்கள் இல்லை. காவல் துறை கண்காணிப்பாளர்களிலே 5 பேர், 6 பேருக்கு மேல் இல்லை. இந்தியாவிலே இருக்கின்ற மொத்த இஸ்லாமிய ஜனத்தொகையிலே 3 விழுக்காடுகளுக்குமேல் பட்டதாரிகள் இல்லை. கல்விக்கூடங்களில் இல்லை. வெளிநாட்டுப் பணிகளிலே அவர்கள் யாருமே இல்லை. காவல் துறைப் பணிகளிலே 2 விழுக்காடு இருக்கிறார்கள். இட ஒதுக்கீடு கொடுத்தாலொழிய இந்தச் சிறுபான்மைச் சமூகம் முன்னேற முடியாது. அந்த இட ஒதுக்கீட்டை உங்களைத் தவிர யாரும் வழங்கிட முடியாது. அந்தப் பெருமை உங்களுக்கு மட்டும்தான் இருக்க வேண்டும். நீங்கள்தான் இந்தியாவுக்கு வழிகாட்ட வேண்டும். ஏற்கெனவே, பிற்படுத்தப்பட்டோருக்கு இருக்கின்ற அந்தத் தொகுப்பிலே எங்களுக்கு ஒதுக்கீடு செய்து தருவீர்களா அல்லது தனியாக ஒதுக்கீடு செய்து தருவீர்களா என்பதை உங்கள் அரசியல் அனுபவத்திற்கும், எங்கள்மேல் உங்களுக்கிருக்கின்ற உங்கள் கரிசனத்திற்கும் விட்டுவிடுகிறோம். ஆனால், இட ஒதுக்கீடு என்பதை நீங்கள் செய்து தர வேண்டும்.

தேர்தல் காலங்களில் நான் நினைத்துப் பார்க்கிறேன். ஒரு நம்பிக்கையோடு ஓடிவந்து தங்களுடைய சமூகம் வாழவேண்டுமென்பதற்கு மட்டுமல்ல, இந்த நாடு காப்பாற்றப்பட வேண்டுமென்று சொன்னால், நீங்கள் முதலமைச்சராக வேண்டுமென்று ஒவ்வொரு பள்ளி வாசலிலும் நோன்பிருந்தவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு தேவாலயத்திலும் வேண்டுதல் நடத்தியவர்கள், அவர்களுக்கு நீங்கள் வாழ்வு தரவேண்டும். எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். மதமாற்றத் தடைச் சட்டத்தை வந்த மறுநாளே தூக்கித் தூர எறிந்து, சிறுபான்மைச் சமூகத்து மக்களுக்கு இருந்த அச்ச உணர்வை நீங்கள் நீக்கித் தந்தீர்கள். அதைப்போல, வரலாற்றில் இடம் பெறக்கூடிய நீங்கள், நிச்சயமாக சிறுபான்மை மக்களுக்கான இட ஒதுக்கீட்டை இந்த ஆண்டு எப்படியாவது நிறைவேற்றித் தரவேண்டும் என்று தமிழகத்திலே வாழ்கின்ற 13 விழுக்காடு இஸ்லாமியர்கள், 11 விழுக்காடு கிறிஸ்தவர்கள் மற்றும் பார்சிகள் மற்ற சிறுபான்மையினர் சார்பாக நான் உங்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த அத்தியாயத்தின் புகழை ஆந்திராவைப்போல, கேரளாவைப்போல, கர்நாடகத்தைப்போல, தமிழகத்திலும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்கிற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

அரசின்மூலம் அற்புதமான திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு திட்டமும் 4 கட்டங்களைக் கடக்கிறது. முதலில் it remains a concept. முதலில் அது ஒரு தத்துவமாக இருக்கிறது. உங்கள் மனதில்தான் அந்தத் தத்துவம் பிறக்கிறது. எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி தர வேண்டுமென்கிற ஒரு தத்துவம் நெஞ்சிலே பிறக்கவில்லை. சமையல் எரிவாயு அடுப்பு கொடுக்க வேண்டுமென்கிற சிந்தனைப் பொறி தட்டவில்லை; ஆனால், உங்களுக்குத் தட்டியது. அந்த concept - அந்தத் திட்டம் கிடைத்தவுடனே, அதற்கான வரைவினை வரைந்தீர்கள். அதை எப்படி அமல்படுத்துவது என்று முடிவு செய்தீர்கள். அதற்காக நிதி ஒதுக்கீடு செய்தீர்கள். கடந்த பட்ஜெட், சில கேள்விகளை, சந்தேகங்களை எழுப்பியது. சில சந்தேகப் பேர்வழிகள் சந்தேகப் பாம்புகளை தமிழக மக்கள் மத்தியிலே நெளியவிட்டார்கள். கலைஞர் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வாரா? எப்படிச் செய்வார் என்று பார்க்கலாம்; தொலைக்காட்சிப் பெட்டி கொடுப்பாரா? எப்படிக் கொடுத்துவிடுவார் என்று பார்க்கலாம்; எரிவாயு அடுப்பு தருவாரா? எப்படித் தருவார் என்று



பார்க்கலாம்; எங்கே பணம் இருக்கிறது என்று கேட்டார்கள். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் நீங்கள் பதில் தந்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொன்றுக்கும் நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–20*

இந்த நேரத்தில் நான் ஒன்றை மட்டும் சொல்லி முடிக்க ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டங்கள் ஜனங்களைச் சென்று தொடுகின்ற இடம், அந்தப் பாயின்ட், அந்தப் புள்ளி, 4 நபர்களின் கையில்தான் இருக்கின்றது. நீங்கள் எத்தனை ஆயிரம் கோடிக்குத் திட்டங்கள் தீட்டினாலும், எத்தனை அற்புதமான வரைவுகள் செய்து அவற்றை நீங்கள் மக்களுக்கு அனுப்பி வைத்தாலும், அவற்றைக் கொண்டுசேர்க்கின்ற இடத்திலே இருக்கின்றவர்கள், ஒரு B.D.O. இருக்கிறார்; ஒரு V.A.O. இருக்கிறார்; ஒரு E.O. இருக்கிறார் அல்லது ஒரு Municipal Commissioner இருக்கிறார். இந்த நான்கு பேர்கள் தான் இந்தத் திட்டத்தின் பயனை மக்களுக்குச் சென்று அளிக்கிறார்கள். இந்த நான்கு பேர்களுமே நிறைவேற்றுகிற அந்தத் தத்துவத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு B.D.O. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு வருகின்றபோது he is tired. ஓய்வு பெறுகின்ற நேரத்தில்தான் B.D.O.–வாக வருகிறார். அவருக்கு வேலை செய்ய ஆசையில்லை. நான் யாரையும் குறை சொல்லவில்லை, ஏனென்று சொன்னால், 58 ஆண்டுகள் உழைத்து, களைத்துவிடுகிறார். புதிய புதிய திட்டங்களையெல்லாம் தருகிறீர்கள். அந்தத் திட்டங்களின் சூட்சுமங்களையெல்லாம் புரிந்துகொள்கின்ற அளவுக்கு அவரிடம் இளமையும் இல்லை, வேகமும் இல்லை. அதைப்போல் கிராம நிர்வாக அதிகாரிகளைச் சுற்றித்தான் கிராமங்களிலே இந்தத் திட்டங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. இந்த கிராம நிர்வாக அதிகாரிகள் ஒவ்வொருவரும் 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் ஒரே இடத்தில் பணியில் இருந்து அந்த இடத்தில் ஒரு பெரிய விரும்பத்தகாத வளையங்களை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையிலே ஒரு பேரூராட்சிப் பகுதி, ஏறக்குறைய 50 ஆயிரம், 60 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்டிருக்கிறது. அந்தப் பேரூராட்சிக்கு நிர்வாக அதிகாரியாக யார் இருக்கிறார்கள் என்று சொன்னால் 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கே Bill Collector–ஆக வேலையில் சேர்ந்தவர்கள்தான் இன்று நிர்வாக அதிகாரிகளாக வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் திட்டங்களின் தத்துவங்களை

உணர்ந்துகொள்ள முடியவில்லை. அதைப்போல, நகர்மன்றங்களுடைய ஆணையர்களாக இருக்கவேண்டியவர்கள்--இன்று பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வருகிறீர்கள், இங்கே அற்புதமான வகையில் மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து சேரிகளை நவீனமயமாக்குகிற திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாதந்தோறும் மேற்கொள்கிற அந்தச் சுற்றுப் பயணத்திலே நேரடியாக அதிகாரிகள் தொடர்புகொண்ட ஒரு கட்டத்திலே நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய செயலாளர் ஒரு B.D.O.–விடம் S.G.R.Y. என்றால் என்ன என்று கேட்டதாக நான் கேள்விப்பட்டேன் அதுகூட தெரியாத B.D.O.-க்கள்தான் இன்று அந்தத் திட்டங்களை நிர்வாகம் செய்துகொண்டு இருக்கிறார்கள். எனவே, நான் உங்களிடம் கேட்பது, Tamil Nadu Municipal Service, Tamil Nadu Panchayat Service, Tamil Nadu Subordinate Revenue Service இவற்றில் புதிய இளைஞர்களை, 30 வயதுள்ள இளைஞர்களை நீங்கள் இந்தப் பதவியிலே அமர்த்த வேண்டும். இப்பொழுது அவர்களுக்குப் பதவி உயர்வு–promotion–கொடுத்து வைப்பதிலே ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. 50 விழுக்காடு அவர்களை வைத்துக்கொள்ளவேண்டும். B.D.O.-க்களில் இருக்கின்றவர்களில் 50 விழுக்காடு பதவி உயர்வில் வருகிறவர்கள் வரட்டும். Scheme B.D.Os. — திட்டங்களைப் பார்க்கின்ற B.D.Os. இவர்களாவது புதியதாக வேலையிலே சேர்ந்த இளைஞர்களாக இருக்க வேண்டும். அதைப்போல, நிர்வாக அதிகாரிகளாக இளைஞர்கள் பணியாற்ற வேண்டும். அப்படிப் பணியாற்றினால்தான் உங்கள் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியும், உங்களுடைய தாக்கத்திற்கு அவர்களால் பதில் சொல்ல முடியும். நீங்கள் போடுகிற புதிய திட்டங்கள் சாமானிய மக்களைச் சென்று அடைய வேண்டுமென்று சொன்னால், இதைப்போல ஆர்வமான இளைஞர்கள் அந்த Delivery Point—அரசின் திட்டங்கள் மக்களைச் சென்று அடைகின்ற இடத்திலே இருக்க வேண்டும் என்பதை இந்த இடத்திலே பதிவுசெய்து, காலத்தால் அழியாத புகழ்கொண்டு, வரலாற்றில் என்றும் நிலை நின்று 50 ஆண்டுகள் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் அமர்ந்து, தமிழ்கூறும் நல்லுலகுக்கு மட்டுமல்ல இந்தியா முழுவதற்கும் அரசியல் தெளிவினைக் கொடுத்து, இன்று இந்தியா முழுவதும் அரசியல்வாதிகளும், தலைவர்களும், ஆலோசனைக்கும் அறிவுக்கும் உற்றுப் பார்க்கின்ற ஓர் அற்புதமான தலைவராக வாழ்ந்து நிற்கின்ற உங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியின் சார்பாக என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்து, அற்புதமான



நிதிநிலை அறிக்கையைத் தந்த நம்முடைய பேராசிரியர் அவர்களுக்கும், நிதித் துறைச் செயலாளர் அவர்களுக்கும் பாராட்டினைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்.

**திரு. எச். அப்துல் பாசித்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துகளைப் பதிய வைக்க வாய்ப்பினை அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை தமிழக மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு செயற்கரிய செயல்திட்டமாக அமைந்துள்ளதை யாரும் மறைக்கவோ, மறக்கவோ இயலாது. இந்த நிதிநிலை அறிக்கையிலே சமூக நீதிப் போரில் முழு வெற்றி அடையாத வருத்தமும், மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலின் மறுபரிசீலனை.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வேண்டும்?

***முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்கிறேன். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்போது, பணப்புழக்கத்தின் காரணமாக நிலத்தின் விலை அதிகமாக உயர்ந்துள்ளது என்ற முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். பணப்புழக்கம் என்பது எவ்வாறு தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது என்பதுபற்றி விளக்கமாகச் சொன்னார்கள். அதில் அவர் சொல்ல மறந்த ஒரு கருத்தை உங்களுக்குச் சொல்ல இந்த நேரத்தில் விரும்புகிறேன். அவர் குறிப்பிட்ட 'இந்து' பத்திரிகையில், சமீபத்தில் மத்தியிலே காங்கிரஸ் ஆளுகின்ற பாரதப் பிரதமருக்கு ஆலோசகராக இருக்கின்ற திரு. நாராயணன் அவர்கள் ஒரு முக்கியக் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். Bombay Stock Exchange–லும், Chennai Stock Exchange–லும்தான் இந்த மாதிரி பணப் புழக்கம் அதிகமாக வருகிறது. Stock Exchange–களின்மூலமாக இந்த நாட்டிலே செயல்படுகிற பயங்கரவாத அமைப்புகளுக்கு உறுதுணை செய்வதற்காக அந்தப் பணம் வருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அந்த பயங்கரவாத அமைப்புகள் இந்த இரண்டு பகுதிகளிலுமிருந்து செயல்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கின்றார்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவல் துறையிலே தமிழகத்தின் பாதுகாப்பையும் வைத்திருக்கின்றார்கள். போலீஸ் துறையின்மூலமாக, எவ்வாறு இந்தப் பணமெல்லாம் வருகிறது; எங்கிருந்து வருகிறது என்று

அவர்களுக்குத் தகவல் வந்திருக்கிறதா; அதற்கு மத்திய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்.

**திரு. எச். அப்துல் பாசித்:** இந்த நிதிநிலை அறிக்கையிலே, சமூக நீதிப் போரிலே முழுவெற்றி அடையாத வருத்தமும், மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலின் மறுபரிசீலனையும், தேவைக்கேற்ப சட்டத் திருத்தமும் தேவை என்பது வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. சகல சமுதாயங்களினுடைய உரிமைகளையும், சமய நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் பேணிக் காத்திட வேண்டியது அவசியமான ஒன்று. நன்மைகள் தொய்வின்றித் தொடர, உரிமைகள் தடையின்றிப் பெற்றிட இது ஒன்றே வழி. அந்த வழிக்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**திரு. எச். அப்துல் பாசித்:** வழிகாட்டியாக இருக்கின்றவர் தமிழினத் தலைவர் நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்று சரித்திரங்கள் சான்று அளிக்கும்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே நீதியரசர் ராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகளையும், பாரதப் பிரதமருடைய சிறுபான்மைச் சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கான 15 அம்சத் திட்டத்தையும், இச்சமுதாயத்தினுடைய பிரதிநிதித்துவம், சமூகக் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இயக்குநரகம் அமைக்க உறுதி அளிக்கப்பட்டுள்ளதை, பாராட்டுவதற்கோ, நன்றி சொல்வதற்கோ என்னிடத்திலே வார்த்தைகள் இல்லை. இச்சமுதாயத்தினுடைய வாக்குகளை மாலைகளாக்கி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்குச் சமர்ப்பிப்பேன் என்று உறுதி கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மைச் சமுதாயத்திற்கென இயக்குநரகம் அமைத்துத் தந்த நம் முதல்வர் அவர்கள் இச்சமுதாயத்திற்கென தனி அமைச்சகமும் ஏற்படுத்த வேண்டும். மத்திய அரசு அப்படிச் சிறுபான்மையினர் நலனுக்கென தனி அமைச்சகம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நினைவுகூர விரும்புகிறேன்.



சமூக நீதிப் போரின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், 1920 ஆம் ஆண்டு சென்னை மாகாணச் சட்டமன்றத்தில் இடஒதுக்கீடு பற்றி சி.வி. வெங்கட்ரமண ஐயங்கார் அவர்கள் கொண்டு வந்த ஒரு தீர்மானத்தில், சிறுபான்மையினர் இணைக்கப்பட வேண்டும் என்று வாதாடிய நீதிக் கட்சியைச் சேர்ந்த மரியாதைக்குரிய டாக்டர் திரு. சி. நடேச முதலியார் அவர்களுக்குப் பிறகு, அந்த உரிமைக் குரலுக்கு செவி சாய்த்து செயல்வடிவம் அளித்திட, உறுதிபூண்டுள்ளவர், திராவிட பாரம்பரியத்தின் தலைமகன், நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும்தான் என்று எடுத்துரைப்பதில் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதியரசர் ராஜேந்திர சச்சார் குழுவின் அறிக்கையின் அடிப்படையிலே கல்வி, சிறுபான்மைச் சமுதாயத்திற்கு அளிக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தியிருக்கிறது. அதனையே அன்பு அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் எடுத்துரைத்தார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, ஓர் ஆசிரியர் பள்ளிக்கூடங்கள் மஜூதிக்குச் சொந்தமான இடத்திலேயோ அல்லது ஜமாத்தார்கள் ஏற்பாடு செய்து கொடுக்கக்கூடிய கட்டடங்களிலேயோ ஆரம்பிக்க அரசு முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சச்சார் குழுவின் பரிந்துரைகளைப் பற்றி ஒருசில பத்திரிகைகளில் வந்த தலையங்கங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'தீக்கதிர்' நாளிதழிலே, நமது அரசியல் சாசனம், மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் சமம் என்று ஓங்கி உரைக்கிறது என்றும், வாய்ப்புகளும், வாழ்க்கை வசதிகளும் அனைத்து மக்களுக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் பாரபட்சத்தை அகற்ற சச்சார் குழுவின் பரிந்துரைகள் பயன்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆஸ்தான பத்திரிகையாகத் திகழ்கின்ற 'தமிழ் ஓசையிலே', சமய அடிப்படையில் இடஒதுக்கீடு கூடாது என்பதில் அர்த்தமுமில்லை, நியாயமுமில்லை, எந்த மதமாக இருந்தாலும் ஏழைகளும், உரிமை மறுக்கப்பட்டவர்களும், சுரண்டப்பட்டவர்களும், மிதிக்கப்பட்டவர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களே என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சிறுபான்மை இனத்தின் அரசியல் சமூகப் பொருளாதார வாழ்வு நிலை பற்றிய இந்த அறிக்கை, அதிர்ச்சியை மட்டுமல்ல, அவமான உணர்ச்சியையும் ஏற்படுத்துகிறது என்று எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய சமூக நீதி வரலாற்றிலும், தமிழக வரலாற்றிலும் புதிய அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருக்கும் நம் முதல்வர் அவர்கள், உயர் கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித ஓதுக்கீடு மசோதாவை நாடாளுமன்றத்திலே நிறைவேற்ற முழுமுதற் காரணமாக இருந்தார் என்பதை நாடு நன்கு அறியும்.

அதேபோல், ஆதிதிராவிட சமுதாயத்திற்கான இடஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் எப்படியெல்லாம் பாடுபட்டார் என்பதை உலகம் அறியும். அதேபோல் மண்டல் பரிந்துரைகளை நிறைவேற்றிட நாடாளுமன்றத்தில் சிராஜ் மில்லத் அப்துல் சமத் சாகிப் அவர்கள் ஆற்றிய பணியை நினைவுகூர விரும்புகிறேன். தமிழகத்தைச் சேர்ந்த 39 நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிராஜ் மில்லத் அப்துல் சமத் சாகிப் அவர்கள் மட்டும்தான் மண்டல் பரிந்துரையை ஆதரித்தார்கள் என்பதற்கு சரித்திரங்கள் சான்று கூறுகின்றன.

பேரவைத் தலைவர் அவர்களே, நம் முதல்வர் அவர்கள் அடிக்கடி மேற்கோள் காட்டியபடி, 30 ஆண்டுகளுக்கு முன்பு நியமிக்கப்பட்ட கோபால் சிங் கமிஷனும், வெங்கடாசலைய்யா கமிஷனும் இதனையே வலியுறுத்தியுள்ளன. பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மக்கள் அரசுத் துறைகளில் இடஒதுக்கீடு பெற்று, தனியார் துறைகளில் இடஒதுக்கீடு கோரி போராடி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நம் முதல்வரின் ஆதரவும், நல்லாசியும் உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம். நாடாளுமன்றத்தில் ஆதிதிராவிட சமுதாயத்தின் இட ஒதுக்கீட்டு மசோதாவை ஆதரித்துப் பேசிய காயிதே மில்லத் அவர்கள், அச்சமுதாயத்திற்கு இடஒதுக்கீடு அளிப்பதன்மூலமே இந்தியா சுதந்திரத்தின் நிறைவான பணியைக் காணமுடியும் என்று ஆசியாவின் ஜோதி ஜவஹர்லால் நேரு அவர்களின் ஒரு கேள்விக்குப் பதிலாக அளித்தார் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அதேபோல் அண்ணல் அம்பேத்கர் அவர்களை மேற்கு வங்காளத்திலே முஸ்லிம் தொகுதியிலே, முஸ்லிம் லீக்கின் சார்பாகவே போட்டியிடச் செய்து வெற்றி பெறச் செய்த சமுதாயம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அரசியல் தலைவர்கள் தங்கள் குலப் பெருமையாக பலவற்றைக் கூறிக் கொள்வதுண்டு. ஆனால், தன்னை மிகச் சாமானியர் என்று கூறிப் பெருமைப்படும் நம் முதல்வர் அவர்கள், 'தான் சின்னஞ் சிறுவனாக இருந்தபொழுது திருவாரூர் வீதியிலே தாவூத்ஷா நடத்திய மாநாட்டில் பச்சிளம் குழந்தையாகப் பிறைக் கொடியை கையில் ஏந்தி நடந்து வந்தேன்' என்று குலப் பெருமையாக அடிக்கடி கூறுவதுண்டு. அந்த அளவிற்கு உதிரத்தோடு கலந்த உறவாக முஸ்லிம் சமுதாயத்தோடு நம் முதல்வர் அவர்கள் இருப்பது பெருமைக்குரியதாகும்.



சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு குறித்து தமிழக சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று வரலாற்றுப் பெருமைக்குரிய தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்வதோடு, நாடாளுமன்றத்திலும் இடஒதுக்கீட்டு மசோதா நிறைவேற வலியுறுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அன்புக்கினிய எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. வேலுமணி அவர்கள் இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று ஆணித்தரமாகப் பேசியதற்கு நன்றி தெரிவித்து, ஆந்திரத்திலே கொடுக்கப்பட்டபொழுது எதிர்த்தவர்கள், திரு. முனீர்கோடா அவர்களையும், துரோகத்தையும் இணைத்துப் பேசியவர்கள், திரு. சக்கில் அஃதர் என்ற உளவுத் துறை அதிகாரியை துரோகத்தனத்திற்கு ஒப்பிட்டுப் பேசியவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்த இடஒதுக்கீட்டை ஆதரித்துப் பேசக்கூடிய அளவிற்கு வந்திருப்பதை வரவேற்றுப் பாராட்டுவதோடு, வேலுமணி அவர்களுக்கு நன்றி சொல்வது என்னவென்றால் இந்த முதல்வர்தான் அந்த இட ஒதுக்கீட்டை அளிக்க முடியும் என்று அவரும் உறுதியாக நம்புகிறார்.

சிறுபான்மையினர்கள் நடத்தும் பல பள்ளிக்கூடங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டு நிதி உதவி பெறாமல் இருக்கின்றன. ஏழையெளிய மாணவர்கள் ஜாதி, மத வேறுபாடின்றி சமூகக் கல்வி வளர்ச்சிக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு நிதி உதவியும், மதிய உணவுத் திட்டமும் கொடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினரின் அடிப்படைக் கல்வியின்மீது அக்கறை காட்ட வேண்டும் என்று சச்சார் குழுவின் பரிந்துரையை எடுத்து ஓர் ஆசிரியர் பள்ளிகளை மசூதிகளுக்குச் சொந்தமான இடங்களிலேயே தொடங்கவேண்டும் என்று அன்புடன் மீண்டும் கேட்டுக்கொண்டு, தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரால் சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவம் பாதிக்காமல் இருந்திட அரசு ஆவன செய்யவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

டிசம்பர் 6 ஆம் தேதியை மத நல்லிணக்க அல்லது சகோதரத்துவம் பேணும் நாளாக அறிவிக்கக் கோருவதோடு, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய ஒரு சில குறைகளை நிறைவுகளாக்கிட நினைவுகூருகிறேன்.

*முற்பகல் 10–35*

வேலூர் மாவட்டத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தைத் தவிர வேறு வழியில்லை, அத்திட்டத்தை வேலூர் வரை நீட்டிக்க வேண்டும் என்று அன்புடன் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இந்த நிதிநிலை அறிக்கை பற்றி எல்லோரும் தங்களுடைய கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இருக்கக்கூடிய குறைகளை எழுதிக்கொடுத்தாலே போதும் என்று சொல்லக்கூடிய அண்ணன் அவர்களுக்கு பாசத்தோடு நன்றி தெரிவித்து, காயிதே மில்லத் அவர்கள் கூறிய ஒரு கதை இந்த நிதிநிலை அறிக்கைக்குப் பொருந்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடத்தில் பெரிய பிரச்சினை. இந்த உலகம் இன்னும் 50 அல்லது 60 ஆண்டுகளில் அழியப் போகிறது என்று சொல்லி, சூரியனால் இந்த அழிவு ஏற்படப் போகிறது; சூரியனின் ஒரு பகுதி பூமியின் முதுகில் விழுந்து பூமி சாம்பலாகிவிடும் எனத் தலைமை விஞ்ஞானி பிறருக்கு விளக்கிக் கொண்டிருந்தார். இந்த தொலைநோக்கி தூரதிருஷ்டிக் கண்ணாடியின்மூலம் சூரியனை நான் இன்று பரிசோதித்த பின்பு இந்த வலுவான முடிவுக்கு வந்தேன் என்றார். சூரியன் கீழ்பகுதியுடன், வடகோடியில் இருந்து தென்கோடிக்கு நோக்கி, 79 டிகிரி கோணத்தில் கருமையான ஒரு பிளவு காணப்படுகிறது என்றார். எண்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தக் கருமையானது தொடங்கியிருக்க வேண்டும்; சில ஆண்டுகளில் 2 டிகிரி மேலும் வளரும்; அப்போது சூரியனின் கோணம் நிறைவுபெற்று தனித் துண்டாகச் சிதறி விடும் என்றார். தலைமை விஞ்ஞானியிடமிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியை வாங்கி சக விஞ்ஞானிகள் பார்த்தனர். அப்படி ஒன்றும் தெரியவில்லை. மீண்டும் தலைமை விஞ்ஞானி பார்த்தார். அந்தக் கோடு தெரிந்தது. சக நண்பர்களை மீண்டும் பார்க்கச் சொன்னார். ஒரு இளைய விஞ்ஞானி 'ஐயா, நீங்கள் தொப்பியை அணிந்து, சூரியனைப் பாருங்கள்' என்றார். தலைமை விஞ்ஞானியும் அப்படியே பார்த்தார். சூரியனில் அந்தக் கோடு காணப்படவில்லை. சூரியனில் தென்பட்ட கோடு வேறொன்றும் இல்லை; 79 டிகிரி கோணத்தில் தொங்கிக் கொண்டிருந்த அவருடைய தலை முடி என்று தெரிந்தது. எனவே, தொப்பியை அணிந்துகொண்டு இந்தச் சூரியனைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம் எனத் தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கையை முழு மனதோடும், நன்றி உணர்வோடும் பாராட்டி, உடல் குன்றியோர், மன வளர்ச்சி குன்றியோருக்கு அதிகச் சலுகைகள் காட்டப்பட்டிருப்பதை நன்றி உணர்வோடு தெரிவித்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை சிறுபான்மையின சமுதாயத்தின் சார்பாகவும், முஸ்லிம் லீக்கின் சார்பாகவும் வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம். அஸ்ஸலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றில் இடம் பெறுகின்ற வகையிலே நிதிநிலை அறிக்கையை அளித்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக வரலாற்றினை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று கற்காலம், இன்னொன்று பொற்காலம். இப்போது நம்முடைய கலைஞருடைய அரசு பொற்காலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக, பொங்கல் தினத்தை சமத்துவப் பொங்கலாகக் கொண்டாடிய நம்முடைய தமிழக அரசுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று நம்முடைய பாரம்பரியமிக்க இசை, பண்பாட்டை வெளிப்படுத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அதைச் சார்ந்த நிருவாகிகளுக்கும் என்னுடைய பாராட்டுதலை வெளிப்படுத்துகிறேன். எங்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர் அவர்களுக்கு அம்பேத்கர் விருது அளித்த நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை சில பேர் தூற்றிப் பேசினாலும் இதில் அவ்வளவு குறைகள் இருக்கின்றன, இவ்வளவு குறைகள் இருக்கின்றன என்று சொன்னாலும், குறிப்பாக தென் மாநிலங்களிலே,

கர்நாடகாவினுடைய நிதிநிலை அறிக்கையை எடுத்துப் பார்த்தால், தமிழக நிதியமைச்சர் எப்படி இந்த நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறாரோ இதை அப்படியே மற்ற மாநிலங்கள் பின்பற்றிஅவர்களுடைய நிதிநிலை அறிக்கையாக மாற்றியிருக்கின்றன. இதுதான் ஒரு முன்னுதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் இடம் பெறுகிற வகையில் இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையைப் பாராட்டாத தமிழின மக்களே கிடையாது.

*முற்பகல் 10-40*

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)**

குறிப்பாகச் சொல்லப்போனால், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, விவசாயிகளுக்கு இலவச நிலம், விவசாயிகளின் 7 ஆயிரம் கோடி கடன்களை இரத்துச் செய்திருப்பது, குறிப்பாக, 9 சதவீதமாக இருந்த வட்டியை 7 சதவீதம் ஆக்கிய அரசு, அதிலும் விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே, தமிழகத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள், யார் சரியாகக் கடனைத் திருப்பிச் செலுத்துகிறார்களோ அவர்கள் 5 சதவீத வட்டி செலுத்தினால் போதும் என்ற ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார். இது எதை எடுத்துக்காட்டுகிறது என்றால், தமிழகம் எல்லாத் துறைகளிலும் முன்னோடியாக இருப்பதைப் போன்று, விவசாயத்திலும் ஒரு பசுமைப் புரட்சியை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய தமிழக முதல்வர் முன்னெடுத்திருக்கிறார்.

அதேபோன்று, இந்தியாவில் கல்வித் துறையிலே ஒரு முன் மாதிரியாக நம்முடைய தமிழகம் எடுத்துச் சென்றுகொண்டிருக்கிறது. The activity based learning என்னுடைய தொகுதியிலே பள்ளிகளுக்குச் சென்று பார்க்கும்போது அங்கே பள்ளி மாணவ, மாணவிகள் எல்லாம் மூட்டை மூட்டையாகப் புத்தகங்களைச் சுமந்து வரும் அவலநிலைகள் மாறி, இன்று பாட்டுப் பாடி ஆட்டம்போட்டு தங்களுடைய கல்வியை எளிய முறையிலே கற்று வருகிறார்கள். இந்தக் காலத்திலே ஆங்கிலத்திற்கு ஈடாக படிக்க முடியாத ஏழை எளிய மக்கள் எல்லாம், கலைஞருடைய ஆட்சியிலே, நாங்களும் அறிவுஜீவிகளாக, படிப்பாளிகளாக ஆக முடியும் என்று கிராம மக்கள் வாழ்த்தி வருகிறார்கள்.



அதேபோன்று கடந்த ஆண்டு ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கிய சிறப்பு உட்கூறுகள் திட்டத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் ஓர் அறிவிப்புச் செய்திருந்தார். இனிவரும் காலங்களில் இந்த நிதி வேறு துறைக்கு மாற்றப்பட மாட்டாது என்று சொல்லியிருந்தார். ஆக, நிதித் துறைச் செயலாளர் அவர்கள், அமைச்சர் அவர்கள் உரிய முறையிலே இந்த நிதிநிலை அறிக்கையை அழகாக வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று கடந்த காலங்களிலே இந்த ஆதி திராவிட மக்களுடைய வாக்குகளை வாங்கி அவர்களை எப்படியெல்லாம் ஏமாற்றினார்கள், எப்படியெல்லாம் மோசடி செய்தார்கள் என்று உலகத்திற்கே தெரியும். இந்த அரசும், இந்த சிறப்பு உட்கூறுகள் திட்டம், Special Component Plan, இந்த நிதியை எவ்வாறு பயன்படுத்தினார்கள், எப்படிப் பயன்படுத்தினார்கள் என்று ஒரு Monitoring Committee அமைத்து தனியாக ஒரு Model Budget-ஐ வெளியிட வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று நம்முடைய முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் எங்கு பார்த்தாலும் கழிப்பிடங்கள் இருக்கின்றன. ஆனால், தண்ணீர் வசதி இல்லை. எவ்வளவு கோடிகள் ஒதுக்கினாலும், நோயற்ற வாழ்வை நாம் உருவாக்க வேண்டும் என்று முயற்சித்தாலும், அடிப்படையே கழிப்பிடங்கள்தான். இந்தக் கழிப்பிடங்களை நம்முடைய அரசு தண்ணீருடன் கூடிய கழிப்பறைகளாக ஆங்காங்கே கட்ட வேண்டும்.

நமது மாநிலத்தில் வழங்கப்பட்டுள்ள இலவச நிலங்கள். இலவச நிலங்களைப் பார்த்து மற்ற மாநிலங்களெல்லாம் எப்படி இந்த அரசு சமாளிக்கிறது, எப்படி ஏழையெளிய மக்களை நில உடைமையாளர்களாக மாற்றுகிறது என்று அதிசயமாகப் பார்க்கின்ற ஒரு நிலையை நம்முடைய அரசு உருவாக்கியிருக்கிறது. இந்த நிலங்களில் ஆதி திராவிட மக்களுக்கு எத்தனை சதவீதத்தை நமது அரசு அளித்திருக்கிறது என்பதை வெளியிட வேண்டும்.

சிறப்பு உட்கூறுகள் திட்டத்திலே ஏற்கெனவே சொன்னதுபோல, தகவல் தொழில் நுட்பத் துறையிலே ஏற்பட்டு வரும் மேம்பாடுகளின் பலன்கள் ஆதி திராவிட மக்களுக்கு ஏற்படும்படி நம்முடைய அரசு அமைத்துத் தர வேண்டும். சிறைகளிலுள்ள சிறைக் கைதிகளுக்கு, சிறைவாசிகளுக்கு வாக்குரிமை பறிக்கப்பட்டு வரு கிறது. அவர்கள் வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று பலமுறை கே ரிக்கை விடுத்தும்

செவி சாய்க்காமல் இருந்தது கடந்த அரசு. நம்முடைய அரசை நம்பி இப்போது சிறைவாசிகள் எல்லாம் கடிதம் எழுதுகிறார்கள். நாங்கள் விசாரணைக் கைதிகளாக இருந்தாலும், எங்களை வாக்களிப்பதற்கு அனுமதிப்பதில்லை என்ற ஓர் ஏக்கம் இருக்கிறது. ஆக நம்முடைய அரசு அவர்களுடைய குறையை நீக்க வேண்டும்.

அரசு உதவி பெறும் பள்ளிகளில் சத்துணவுத் திட்டம் உள்ளது. அரசு உதவிபெறும் பள்ளிகளிலே எப்படிச் சத்துணவுத் திட்டம் இருக்கிறதோ, அதேபோன்று தாய்த் தமிழ்ப் பள்ளிகளிலும் சத்துணவுத் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அறநிலையத் துறையிலே கோயில் நிலங்களிலே ஐந்தரை இலட்சம் ஏக்கர் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஐந்தரை இலட்சம் ஏக்கரிலே நான்கரை இலட்சம் ஏக்கர் ஆக்கிரமணம் செய்துள்ளதாகக் கூறப்பட்டு வருகிறது. ஆக, இருக்கின்ற ஒரு இலட்சம் ஏக்கர் நிலங்களை ஏழையெளிய மக்களுக்கு, குறிப்பாக, ஆதி திராவிட மக்களுக்கு, குத்தகையிலே நீங்கள் ஒதுக்கீடு அளிக்க வேண்டும். குத்தகை எடுக்க குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் சென்றால், அங்கே அவர்களைக் கொலை செய்யும் அளவிற்கு ஓர் அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தியிருக்கிறார். அதேபோன்று சட்டக் கல்லூரிகளையும், மாடல் பள்ளிகளையும் நாம் திறக்க வேண்டும். 7,000 கோடி ரூபாய் கடன்களைத் தள்ளுபடி செய்த நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள், ஆதி திராவிட மக்கள் வாங்கிய தாட்கோ கடன் ரூ.75 கோடியை தாயுள்ளத்தோடு நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

முற்பகல் 10–45

இந்தியாவிற்கே முன்னோடியாக இருக்கின்ற நம்முடைய அரசு, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, மாவட்டத்திற்கு 10 ஆதி திராவிட மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களும் பெரிய அளவில் படிக்கவேண்டும்; பட்டதாரிகள் ஆகவேண்டும்; கல்வியில் அறிவுஜீவிகளாக மாறவேண்டுமென்று, மாவட்டத்திற்கு 10 மாணவர்களைத் தேர்ந்தெடுத்த உங்களை விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக மனமாரப் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோன்று, இந்தியாவில் முதல்முறையாக, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, ஒரு மிகப்பெரிய நூலகத்தை அமைக்க நீங்கள் முன்வந்தீர்களே, இதுதான் எந்தத் தரப்பு மக்களுக்கும், எவ்வளவு சலுகைகளை அளித்தாலும், எவ்வளவு நீங்கள் செய்ய முன்வந்தாலும், இவர்களைக் கல்விமான்களாக ஆக்க வேண்டுமென்று நினைக்கின்ற ஒரே முதல்வர் நம்முடைய, முதல்வராகத்தான் இருக்கமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

பல தலைவர்களுக்கு இங்கே நூற்றாண்டு விழா எடுத்து வருகிறீர்கள். தமிழகத்தைச் சேர்ந்த பல தலைவர்களுக்கு நீங்கள்தான் சிறப்புச் செய்திருக்கிறீர்கள்; அவர்களுக்கு மணிமண்டபங்கள், அவர்களுடைய குடும்ப வாரிசுகளுக்கு ஊக்கத் தொகைகள்; அவர்கள் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்கியிருக்கிறீர்கள். அதேபோன்று, காங்கிரஸ் பேரியக்கத்தில் எளிமையாக வாழ்ந்த கக்கன்ஜி அவர்களைப்பற்றி ஒரு திரைப்படத்தை எடுத்து, அவர் ஒரு ஆதி திராவிடராக இருந்தாலும், எவ்வளவு எளிமையாக வாழ்ந்தார்; இந்தச் சமூகத்தில் எப்படி அரும்பணியாற்றினார் என்பதை நீங்கள் இந்தத் தமிழகத்திற்கு, இந்தக் கால இளைஞர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

அதேபோல, பல துறைகளிலே ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்குகின்ற பணத்தை, பல துறைகளிலே ஆதி திராவிட மக்களுக்குச் செலவு செய்யக் கொடுக்கின்ற பணத்தை, சரியாக சில துறைகளிலே செலவு செய்யாமல், அதைத் திருப்பியனுப்புவதாகப் பல புகார்கள் வருகின்றன. எந்தெந்தத் துறையில், எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது? எதற்காக ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தை அரசுக்குத் திருப்பியனுப்புகிறார்கள் என்பதை நம்முடைய அரசு கூர்ந்து கவனிக்கவேண்டும். ஏற்கெனவே, பின்னடைவுப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று பலமுறை நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், 'அதைச் சில தவணைகளிலே, கட்டங்களிலே நான் பூர்த்தி செய்கிறேன்' என்று உறுதியளித்திருக்கிறார். முடிந்தவரை அதை ஒரே தவணையிலே நீங்கள் பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

சிறுபான்மையினருக்கு, குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று பலமுறை கேட்டிருந்தாலும், நம்முடைய முதல்வர் அவர்கள் இஸ்லாமியர்களுக்கு ஓர் இயக்குநரகத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அதேபோன்று, அவர்களுக்கு இட ஒதுக்கீட்டை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

திருட்டு V.C.D. விற்றால் அவர்களுக்குக் குண்டர் தடுப்புச் சட்டம்; கட்டப் பஞ்சாயத்து செய்தால் அவர்களுக்குக் குண்டர் தடுப்புச் சட்டம், இப்படிப் பல பேர்களைக் கட்டுப்படுத்த பலவிதங்களிலே குண்டர் தடுப்புச் சட்டத்தை இயற்றிய நம்முடைய அரசு—பஞ்சாயத்துத் தலைவர்களை, அந்த நாற்காலியில் உட்கார வைக்காமல் இன்று வரை அட்டூழியம் செய்து வருகிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க முடியாத ஒரு அவலநிலை இன்றைக்கும் கோவில்பட்டி பகுதியிலே தொடர்ந்து நிலவி வருகிறது. ஆகவே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்—யார் யாரெல்லாம், பஞ்சாயத்துத் தலைவர்களை, ஆதி திராவிடர்களை அந்த நாற்காலியிலே உட்கார வைக்க மறுக்கிறார்களோ, அவர்கள்மீது குண்டர் சட்டம் பாயும் என்று சொல்லி ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு சிறுதாவூர்; தென் மாவட்டங்களிலே இன்னொரு சிறுதாவூர் இருக்கிறது. பல பத்திரிகைகளிலே எழுதியும், இதுவரை நம்முடைய தமிழக அரசு அதில் ஏன் நாட்டம் காட்டவில்லை என்று தெரியவில்லை. திருநெல்வேலி மாவட்டத்திலே, சேரன்மகாதேவி அருகிலே, 49 ஏக்கர் நிலம், ஆதி திராவிட மக்களுக்கு நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இலவசமாகப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், தஞ்சை நீதிமன்றத்திலே வேறொரு நிலத்திற்கு வழங்கிய தடுப்பாணையை, இரத்து ஆணையைப் பயன்படுத்தி, இந்த இடத்திற்குத்தான் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று, சிறுதாவூரிலே நடந்ததுபோல, அங்கே ஆதி திராவிட மக்களை வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். SCAD என்ற கல்லூரி நிறுவனத்தார், அந்த நிலத்தைக் காட்டி I.S.O. சான்றிதழைப் பெற்றிருக்கிறார்கள். உடனே, C.B.C.I.D. ஒரு enquiry நடத்தி, இதற்குப் பின்னால் யார் யார் இருக்கிறார்கள்; எந்தெந்த அரசியல் முதலைகள் இருக்கின்றன; எதற்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்த பட்டாவை, தில்லுமுல்லு செய்து, உயர் நீதிமன்ற ஆணையைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் கண்டறிய வேண்டும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு செய்தியை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார். 50 ஆண்டுகளுக்குமேல் நாம் சுதந்திரம் பெற்றிருந்தாலும், நான் சார்ந்த என்னுடைய சமூகத்தை இழிவாகப் பார்த்த காலம்போய், வெட்டியான்களை எல்லாம் உதவியாளர்கள் என்று அழைத்த



மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சமூகத்தின் சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையின்பேரிலே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும், என்னுடைய தொகுதியிலே சுற்றுப்பயணம் செய்து, காலம் காலமாக மறுக்கப்பட்ட, காலம் காலமாக வஞ்சிக்கப்பட்ட மங்களூர் தொகுதி மக்களுக்கு மறுவாழ்வு அளித்திருக்கிறார்கள். வெலிங்டன் ஏரியிலே, அந்த ஏரியை நம்பி இருக்கின்ற 40 கிராம மக்கள், இந்த அரசு வந்தால்தான் எங்களுக்கு மறுவாழ்வு என்று வாக்களித்தார்களே, அந்த மக்களுக்கு 20 கோடி ரூபாய் வழங்கி மறுவாழ்வு அளித்த இந்த அரசுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–50*

அதேபோன்று, தொகுப்பு வீடுகள் கட்ட மத்திய ஆவாஸ் யோஜனா திட்டத்திலே வழங்கப்பட்டிருக்கிற நிதியும், தமிழக அரசால் வழங்கப்பட்டிருக்கும் நிதியும் மொத்தம் சேர்த்தால் ரூ.37 ஆயிரம் வரும். நம்முடைய முதல்வர் அவர்கள் எப்படி ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சுனாமி வீடுகள் கட்டி ஏழையெளிய மக்களுக்கு வழங்குகிறாரோ, அதே தரத்தில் ஆதி திராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரவேண்டும். இந்த நிதியிலே, 37 ஆயிரம் ரூபாயிலே நாம் அப்படிப்பட்ட ஒரு தரமான வீட்டைக் கட்டுவது இயலாது. ஆக, நம்முடைய முதல்வர் அவர்கள் கனிவுடன், ஆதி திராவிட மக்கள் குடியிருக்க அந்த மக்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும்.

அதேபோன்று என்னுடைய தொகுதியிலே, பெண்ணாடத்திலே மருத்துவமனை ஒன்று இருக்கிறது. ஒரு பொது மருத்துவமனைக்கு இணையான அளவில் மக்கள் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். மருத்துவர்கள் இல்லை; அங்கே செவிலியர்கள் இல்லை. அந்த மருத்துவனையை upgrade செய்து பொது மருத்துவமனையாக ஆக்க வேண்டும்.

திட்டக்குடியிலே இருக்கின்ற மருத்துவமனை சுகாதாரமாக இருந்தாலும், அங்கு இருக்கின்ற மக்கள் தொகைக்கேற்றவாறு அந்த மருத்துவமனை இயங்க முடியாமல் இருக்கிறது.

பேருந்துகள் பள்ளி நேரத்திலே விடப்பட வேண்டும். என்னுடைய தொகுதியிலே, மங்களூர் பகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேபோன்று புரட்சியாளர் அம்பேத்கருடைய பிறந்த நாள் வருகின்ற 14 ஆம் தேதி வருகிறது. ஏப்ரல் 14 ஆம் தேதியோ, அவர் மறைந்த டிசம்பர் 6 ஆம் தேதியோ புரட்சியாளர் அம்பேத்கர் வாழ்ந்த, இறந்த அந்த இரண்டு தேதிகளில் ஒரு தேதியை 'சாதி ஒழிப்புத் தினமாக' நம்முடைய அரசு அறிவிக்க வேண்டும்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அரசு அலுவலகங்களிலே புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் படம் மாட்ட வேண்டுமென்று நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தாலும், சில அலுவலகங்களிலே அந்தப் புகைப்படத்தை மாட்ட மறுக்கிறார்கள். இப்படி எந்த அதிகாரிகள் அந்தப் புகைப்படத்தை மாட்ட மறுக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அவர்களைக் களையெடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவே பின்பற்றுகின்ற அளவிற்கு நம்முடைய அரசு இங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள தென் மாநிலங்களில், குறிப்பாக கர்நாடகா மாநிலத்தில், இந்த அரசு எப்படி நிதிநிலை அறிக்கை அளித்ததோ, அதேபோன்ற நிதிநிலை அறிக்கையை கர்நாடகா அரசு அங்கே நிதிநிலை அறிக்கையாக மாற்றியிருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையை அளித்த நம்முடைய தமிழக அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக நன்றியினைத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், புரட்சிப் புயல் வைகோ அவர்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை நான் முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது விவசாயம். அந்த விவசாயிகளுக்கு இன்றியமையாதிருப்பது மின் இணைப்பு என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியது அவசியம் இல்லை. ஆனால், 15 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் என்று பதிவு செய்து காத்திருக்கின்ற விவசாயிகள், மின் இணைப்பு எப்பொழுது கிடைக்கும் என்று காத்திருக்கின்ற விவசாயிகளுக்கு, அந்த மிகப் பெரிய பிரச்சினையான மின் இணைப்புபற்றி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 2006–2007 ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மினி பஸ் திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்துவதாக அறிவிப்பு வெளியாகி இருந்தது. ஆனால், 2007–2008 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அந்த மினி பஸ் திட்டத்தைப்பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இரண்டு ரூபாய்க்கு அரிசி கிடைக்கிறது என்றாலும், அத்தியாவசியப் பொருட்களின் விலை விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், குறிப்பாக, சிமென்ட் விலை, மணல் விலை போன்ற பொருட்களின் விலைகள் மட்டுமல்லாமல் மருந்துகளின் விலைகள்கூட அளவுக்கு அதிகமாக உயர்ந்துகொண்டிருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஏழையெளியவர்கள் தங்களது நோய்களைப் போக்க வேண்டுமானால் மருந்துகள் வாங்குவதற்கு வசதியற்றவர்களாக இருக்கின்ற சூழ்நிலையில் அதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

அதேபோல, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், கிராமங்களில் இருக்கின்ற தொடக்கப் பள்ளிகளை, ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துவது பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல வளர்ந்து வரும் சூழ்நிலையில் ஏழையெளியவர்களுக்கு, கிராமப்புற மாணவர்களுக்கு கல்வி வசதி எளிதில் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் புதிய கல்லூரிகள், அரசு கலைக் கல்லூரிகள் மற்றும் அறிவியல் கல்லூரிகள் பரவலாகத் தொடங்கப்பட வேண்டுமென்ற அந்த அடிப்படையில் புதிய அரசு கலைக் கல்லூரிகள் மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவதற்கான அறிவிப்புகள்— நான் கடந்த கூட்டத்தொடரின்போதுகூட எனது தொகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டேன்; அதேபோல பல சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய அரசு கலைக் கல்லூரிகள் தொடங்குவது பற்றி இங்கே கேட்டார்கள். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோலவே தமிழகத்தில் நீண்டகாலமாக இருந்து வருகின்ற நதிநீர்ப் பிரச்சினை பரவலாகப் பேசப்படுகிறது. நதிநீர்ப் பிரச்சினை என்பது தமிழகத்திற்கு ஓர் இன்றியமையாத பிரச்சினை என்பது அனைவரும் அறிந்ததுதான். எத்தனையோ பேச்சுவார்த்தைகள், எத்தனையோ தீர்ப்புகள் வந்ததற்குப் பிறகும் நதிநீர்ப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. அதற்கு நிரந்தரமானத் தீர்வு என்பது இந்தியாவில் ஓடுகின்ற நதிகளை எல்லாம் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை வலுப்பெற்று அது செயல்படுத்தப்பட்டால்தான் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற இந்த நதிநீர்ப் பிரச்சினைகளுக்கு நிச்சயமாக நிரந்தரமாக ஒரு தீர்வு ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, இதுபற்றி பாராளுமன்றத்தில் 2000 ஆம் ஆண்டு வாக்கில் எங்கள் பொதுச் செயலாளர் திரு. வைகோ அவர்கள் ஒரு தனி நபர் மசோதா தாக்கல் செய்து, அதிலே இந்த நாட்டிலே ஓடுகின்ற நதிகளையெல்லாம் தேசியமயமாக்குவது எந்த அளவிற்கு சாத்தியக்கூறு என்கின்ற விளக்கத்தை எல்லாம் அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

1960 ஆம் ஆண்டு அன்றைக்கு நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த திரு. கே.எல். ராவ் அவர்கள் ஒரு திட்டத்தைச் சொன்னார். பாட்னாவிற்கு மேற்கே தொடர்ச்சியாகக் கால்வாய்களை வெட்டி, மழைக் காலங்களில் பருவ காலங்களில் கங்கையில் கிடைக்கின்ற அந்த உபரி நீரை காவிரிக்குக் கொண்டு வரலாம் என்கின்ற அந்தத் திட்டத்தையெல்லாம் 1960–லே அப்போது நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த திரு. கே.எல். ராவ் அவர்கள் எடுத்துச் சொன்னதையெல்லாம் குறிப்பிட்டு, மத்தியப் பிரதேசத்தில்



உற்பத்தியாகும் மகாநதியை கோதாவரிக்குத் திருப்பிவிட்டு, கோதாவரியிலிருந்து கிருஷ்ணா நதிக்குக் கொண்டு வந்து, கிருஷ்ணா நதியிலிருந்து நாகார்ஜுனா சாகர் அணைக்குக் கொண்டு வந்து, அதற்குப் பிறகு சோமசீலா அணைக்குக் கொண்டு வந்து இப்படித் தொடர்ச்சியாக கங்கை நதியை காவிரிக்குக் கொண்டுவர முடியும், கங்கை நீரை காவிரிக்குக் கொண்டுவர முடியும் என்கின்ற விளக்கத்தையெல்லாம் அங்கே பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, நதிநீர்ப் பிரச்சினை என்பது இன்று நேற்று அல்ல, பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தில் நடந்திருக்கிறது. ஆஸ்திரியாவுக்கும் துருக்கிக்கும் இடையிலே அங்கே 'டான்யூப்' நதியில் கப்பல் போக்குவரத்து நடத்துவது தொடர்பாகவும், அதேபோல ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் இடையிலே கப்பல் போக்குவரத்து நடத்துவது தொடர்பாகவும் அங்கே பூசல்கள் எல்லாம் ஏற்பட்டு அவை தீர்க்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, நதிநீர்ப் பூசல்களைத் தீர்ப்பதற்கு சோழர் காலத்தில் படையெடுப்பு நடந்திருக்கிறது. புத்தர் காலத்தில் வடரோகிணி ஆற்றில் நீர்த் தகராறு ஏற்பட்டு, சாக்கியர்களுக்கும் கோலியர்களுக்கும் இடையே போர்கள் நடந்து, அந்த வடரோகிணி ஆற்றிலே நீருக்குப் பதிலாக இரத்தம் ஓடுவதை அறிந்த புத்தர் பெருமான் அவர்களை அழைத்து அங்கே பேச்சுவார்த்தை நடத்தி அந்தப் பூசலைத் தீர்த்திருக்கிறார். அமெரிக்காவிற்கும், மெக்சிகோவிற்கும் இடையிலே நீர்த் தகராறு ஏற்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்காவில் நைல் நதி நீரைப் பங்கிட்டுக் கொள்வதில், தகராறுகள் எழுந்து அவையெல்லாம் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இப்படி வெவ்வேறு நாடுகளிடையே பூசல்களெல்லாம் ஏற்பட்டு அவை தீர்க்கப்பட்டதற்குப் பிறகு, ஒரு நாட்டிற்குள், இந்திய உபகண்டத்திற்குள் ஓடுகின்ற நம்முடைய ஆற்று நீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசும், மாநில அரசுகளும் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11–00*

அதுமட்டுமல்ல, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே எங்கள் திருமங்கலம் தொகுதியைப் பற்றி சில கோரிக்கைகளை நான் வைத்திருக்கிறேன். திருமங்கலம் நகரத்தில், போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. மதுரையிலிருந்து தென் பகுதிக்கு, விருதுநகர்

மாவட்டமாக இருந்தாலும், தென் மாவட்டங்களாக இருந்தாலும், திருமங்கலம் வழியாகத்தான் செல்ல வேண்டும். அப்படிப் போகின்றபோது, போக்குவரத்து நெரிசல் பேருந்து நிலையத்தில் எப்பொழுதும் அதிகமாக இருந்து வருகிறது. எனவே, புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை உங்கள்முன் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிய சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அங்கே ஏற்கெனவே ஒரு குற்றவியல் நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் இருந்து வருகிறது. 110 வழக்கறிஞர்களுக்கு மேல் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள், மேல்முறையீட்டிற்காக மதுரைக்குச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை அங்கே இருந்து வருகின்றது. எனவே, திருமங்கலத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கள்ளிக்குடி பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே புதிய தொழிற்சாலைகளை அமைத்து, வேலைவாய்ப்புகள் பெருகவும், பொருளாதார வளர்ச்சி பெருகவும், புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருமங்கலத்தில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும். அதேபோல, அனைத்துக் கிராமங்களுக்கும் பஸ் வசதி வேண்டும். திருமங்கலம் தொகுதியில் பல கிராமங்கள் பஸ் வசதியே இல்லாமல் இன்னும் இருந்து வருகிற சூழ்நிலையில், அந்தக் கிராமங்களுக்கெல்லாம் பஸ் வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிதண்ணீர் வசதி, இன்னும் பல கிராமங்களுக்குப் போதாத நிலையில், அந்தக் குடிநீர் வசதியையும் ஏற்படுத்தித்தர வேண்டும்.

இன்னும் ஒரு முக்கியமான கோரிக்கை, எங்கள் தொகுதியில் இருக்கின்ற எலியார்பத்தி, வலையங்குளம் என்ற கிராமங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலம் வரப்போவதாகவும், அல்லது சிப்காட் தொழில் நிறுவனம் அங்கே அமைக்கப்படப் போவதாகவும் ஒரு பேச்சு வந்து, அந்தக் கிராம மக்களெல்லாம் தங்களுடைய விவசாய நிலங்கள், குறிப்பாக நூற்றுக்கும் மேற்பட்ட கிணறுகளையும், பம்பு செட்டுகளையும் இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடுமோ என்ற எண்ணத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், அதேபோல



நிர்வாகத்தில் இருக்கின்ற மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைவருக்கும், கையெழுத்திட்டு, விண்ணப்பங்களாகப் பதிவு செய்து அனுப்பியிருக்கிறார்கள். எனவே, அப்படி அவர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். விவசாய விளைநிலங்கள் பறிபோய்விடுமோ என்ற ஓர் அபாயகரமான சூழ்நிலை இருப்பதாக அங்கே அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிச் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைத்தாலும், சிப்காட் தொழில் நிறுவனத்தை அங்கே ஏற்படுத்தினாலும், விவசாய விளை நிலங்களைத் தவிர்த்து, மற்ற தரிசு நிலங்களில் அவற்றைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திருமங்கலம் அரசு மருத்துவமனையில் வசதிகள் குறைவாக இருக்கின்றன. 145 படுக்கை வசதிகள் கொண்ட அந்த மருத்துவமனையில், ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் வைத்தியம் பார்ப்பதற்காக தினசரி அங்கே வருகிறார்கள். ஈ.சி.ஜி. எடுக்கின்ற டெக்னீஷியன்கள் இல்லாததால் அந்த வசதி அங்கே இல்லை. இரவு நேரக் காவலர்கள் இல்லை. இப்படிப் பல வசதிக் குறைவுகள் உள்ள அந்த மருத்துவமனையில் போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரேயொரு செய்தியை மட்டும் நான் சொல்லி விடைபெற்றுக்கொள்ள விரும்புகிறேன். மாநில அரசு என்பது, மத்திய அரசோடு மோதுதலற்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அப்படியொரு இணக்கமான சூழ்நிலை தொடர்ந்து அரசியலில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் நாங்கள். ஆனால், நம்முடைய உரிமைகள், நம்முடைய எதிர்பார்ப்புகள், நம்முடைய கோரிக்கைகள் மத்திய அரசிடம் மறுக்கப்பட்டால், அந்த உரிமைகளைப் பெறுவதற்கு, கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்வதற்கு நம்முடைய கோரிக்கைகளை அங்கே முன்வைக்க வேண்டும். அவற்றிற்காகப் போராடுவதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், நதிநீர்ப் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டிலும், பல தீர்ப்புகள், பல பேச்சுவார்த்தைகள் முடிந்த நிலையிலும், அது இன்னும் நிரந்தரமாகத் தீர்க்கப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்று. இன்றைக்கு இலங்கையிலே நம்முடைய இனத் தமிழர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள், அவலத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்று நம்முடைய இனத் தமிழன் அங்கே படுகொலைக்கும், பயங்கரவாதத்திற்கும் ஆளாகியிருக்கிற சூழ்நிலையில், அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்கின்ற உணர்வு தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப் பார்க்கின்றபோது அந்த இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துவருகின்ற இயக்கம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம். இங்கே நாங்கள், வன்முறையை விரும்பவில்லை. தமிழகத்தில் வன்முறை கலாச்சாரத்திற்கு இடமிருக்கக்கூடாது என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. ஒரே கருத்தில் உள்ளவர்கள்தான் நாங்கள். ஆனால். . . (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. இளவரசன், உட்காருங்கள்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினையில் தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கு எந்தக் கருத்துவேறுபாடும் கிடையாது. ஆனால், அங்கு நடக்கக்கூடிய தீவிரவாதம் நமது நாட்டையும் பாதித்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அரசின் நிலை இப்படியிருக்கிறது. அங்கு உதவிய அருமைத் தலைவன் ராஜீவ் காந்தியை நாங்கள் இழந்திருக்கின்றோம். பல படிப்பினைகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சமீபத்திலே அங்கே நடக்கக்கூடிய காரியங்கள் அனைத்தும் மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதில் காங்கிரஸ் கட்சிக்கோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ மற்ற அரசியல் கட்சிகளுக்கோ எந்தக் கருத்துவேறுபாடும் கிடையாது. தமிழர்கள் அனைவரும் ஒருவரே என்கின்ற ஒரே கோட்பாட்டில் இருக்கின்றோம். எனவே, தயவுசெய்து, இந்த மாமன்றத்திலே தீவிரவாதத்தை ஆதரித்துப் பேசக்கூடிய எந்த வார்த்தைகளையும் தாங்கள் அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன் (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.



**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இங்கே தீவிரவாதத்தை ஆதரித்துப் பேசவில்லை. ஈழத்தில் நடக்கின்ற இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள் 17,000–க்கு மேற்பட்ட நம் தொப்புள் கொடி உறவுகள் அகதிகளாக, கைக்குழந்தைகளுடன் ஒருவேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் இங்கே வந்துகொண்டிருக்கிறார்கள். படகில் வருகின்றபோது அவர்கள் தங்கள் உயிரையே மாய்த்துக்கொள்கிற ஒரு நிலையும் தொடர்கிறது. தமிழர்கள் என்ற அடிப்படையில்தான் அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் இன்றையதினம் நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது தமிழ் ஈழத்தினுடைய உரிமையை, அவர்களுக்கான தனி நாடு கோரிக்கையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதேநேரத்திலே, தீவிரவாதத்தை அனுமதிக்கமாட்டோம் என்கிறார். அதே நிலையில்தான் இன்றைக்கு நம்முடைய உறுப்பினர் அவர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நானும் அதே கருத்தைத்தான் வலியுறுத்த வருகிறேன். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசுக்கு அங்கிருந்து அகதிகளாக வருகின்ற நம் ஈழ உறவுகளுக்குப் போதிய பாதுகாப்பு வசதியும், உண்ண உணவு, உடுக்க உடை, போன்ற அடிப்படை வசதிகளையும் கொடுத்து, தமிழர்களுடைய பாதுகாப்புக்கு ஓர் அரணாக நம்முடைய அரசு திகழவேண்டுமென்ற கோரிக்கையைத்தான் இங்கு சட்டமன்ற உறுப்பினர் வைக்கிறார். அதைத்தான் நாங்களும் வலியுறுத்துகிறோம் என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், அது discussion-ஆக வேண்டாம். நீங்கள் சொல்லுங்கள், திரு. இளவரசன் (குறுக்கீடுகள்) நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. போளூர் வரதன் பேசட்டும். சொல்லட்டும், சொல்லட்டும்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே M.D.M.K. உறுப்பினர் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறார். கடந்த வாரம் Harbour–லே அவருடைய கட்சிக்காரரை arrest பண்ணினார்களே நம்முடைய காவல் துறை, எதற்காக arrest பண்ணினார்கள்?

*(மேசையைத் தட்டும் ஒலி)* ஏன் arrest பண்ணினார்கள்? இந்த நாட்டினுடைய இறையாண்மையைக் கேள்விக்குறியாக்கி, இந்த நாட்டிலே வன்முறையைத் தூண்டுவதற்கு இந்த நாட்டிலே எங்கெல்லாம் வன்முறை வேண்டுமென்று நினைக்கிறார்களோ, விடுதலைப் புலிகளை வைத்துக்கொண்டு வைகோ தமிழகத்தை மிரட்டப் பார்க்கிறார். தமிழகம் அடிபணியாது, நாங்கள் அடிபணியமாட்டோம். *(குறுக்கீடுகள்)* அவர் சொல்கிறார். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, உட்காருங்கள், சொல்கிறேன் *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசும்போது நான் கேட்டுக்கொண்டிருந்தேன். நீங்கள் உட்காருங்கள் சார். *(கூச்சல்–குழப்பம்)* உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், உட்காருங்கள். personal–ஆக பேசக்கூடாது, உட்காருங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** மைய அரசுக்கு 'ஆமாம்' போட்டவர்கள், இன்று மைய அரசை சுட்டிக்காட்டிப் பேசுவது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிப்பட்ட முறையில் யாரும் பேசக்கூடாது, உட்காருங்கள். திரு. போளூர் வரதன், உட்காருங்கள். Don't divert the issue, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்லுங்கள். திரு. சுதர்சனம், சொல்லுங்கள். *(குறுக்கீடு)* திரு. போளூர் வரதன், உட்காருங்கள்.

*முற்பகல் 11–10*

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்கவேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்குப் பாதுகாப்பும், அங்கே துன்பப்படுகின்ற, துயரப்படுகின்ற மக்களுக்கு மத்திய அரசாங்கமும், நம்முடைய தமிழக அரசும் வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் இங்கே தீவிரவாதத்தை உண்டாக்குவது என்பதை இங்கே இருக்கின்ற யாரும் விரும்பாத ஒன்று. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏனென்று சொன்னால், கடந்த காலத்திலே இலங்கையிலே இருக்கின்ற விடுதலைப் புலிகளுக்கு நாம் ஆதரவாக இருந்தது ஒரு காலகட்டம்.



அங்கே இருக்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலேதான் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கைக்குப் போய் ஓர் ஒப்பந்தம் கண்டார்கள். அந்த ஒப்பந்தம் கண்டுவிட்டு வெளியே வருகின்றபோது, அங்கே இலங்கையிலே சிங்களவர்களுக்கு அது பாதகமாக இருந்த காரணத்தினால், அங்கு பிரிகின்ற விடை கொடுக்கின்றபோது, சிங்களச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியைத் திருப்பி அடித்ததை இந்த மண்ணிலே யாரும் மறந்திருக்க முடியாது. அதற்குப் பின்னாலே இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு ராஜீவ் காந்தி அவர்கள் செய்த உதவிகளை எல்லாம் யாரும் மறுக்க முடியாது. ஆனால், இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு கொடுக்கின்றோம் என்ற பெயரில் அங்கே அவர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுப்பதற்கு என்னென்ன செயல்கள் செய்தால் அந்த மக்களுக்கு அவைபோய்ச் சேராதோ என்ற எண்ணத்தில் இங்கே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த காலத்தை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யார் இங்கே இருந்து கள்ளத் தோணியிலே போய், அங்கே அந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தார்கள்? அப்போது முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் எவ்வளவு துன்பப்பட்டார்கள் என்பது எல்லாம் இந்த நாடு மறக்கவில்லை. அதனாலே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றியும், விடுதலைப் புலிகள் பிரச்சினை பற்றியும், மிகவும் ஜாக்கிரதையாக இருந்து, கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அதிலே அந்த இலங்கைத் தமிழர்கள் என்ற போர்வையிலே, இங்கே வன்முறை கலாச்சாரத்திற்கு வித்திடுவதை தமிழகம் ஒரு போதும் அனுமதிக்காது, காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் அனுமதிக்காது என்பதைத் தெளிவாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீர. இளவரசன், அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போய் முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம், எங்கள் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் வன்முறையைத் தூண்டிவிடுபவர் போலவும்,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீர. இளவரசன், நீங்கள் சப்ஜெக்ட்டை மாற்றிக் கொண்டு போங்கள். எல்லோரும் சொல்லிவிட்டார்கள்.

**திரு. வீர. இளவரசன்:** அவர்கள் பேசினார்களே, அதற்கு எங்களுடைய கருத்தைப் பதிவு செய்ய வேண்டுமல்லவா!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீர. இளவரசன், இதிலே divert பண்ணி மேலும் பேச வேண்டிய தேவையில்லை. (குறுக்கீடு) அடுத்துப் பேசுவதற்கு யார் இருக்கிறார்? (குறுக்கீடு) அப்படியானால் உட்காருங்கள். அடுத்த உறுப்பினரைக் கூப்பிடப் போகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) அவருக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) No, no, no. (குறுக்கீடுகள்) He wants to make a problem. (குறுக்கீடுகள்) No. (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடிக்கச் சொல்லுங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று குறுக்கிட்டனர்)

வேறு issue–விற்குப் போகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) சொல்லுங்கள், நன்றி சொல்லி முடியுங்கள். (கூச்சல்–குழப்பம்)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**திரு. வீர. இளவரசன்:** வன்முறை என்பது எங்கள் இயக்கத்திற்குத் துளியும் சம்பந்தம் இல்லாதது என்பதை இந்தச் சபையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். எங்கள் இயக்கம் நடத்திய எத்தனையோ நிகழ்ச்சிகள், மாநாடுகள், ஊர்வலங்கள், பேரணிகள் எவற்றிலும் இந்த 13 ஆண்டு காலத்தில் ஒரு சிறு வன்முறைக்குக்கூட இடமளித்தது இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களைப் பாதுகாப்பதற்குக் குரல் கொடுப்பது என்பது எப்படி வன்முறை ஆகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு,...

**திரு. மா. ராஜசேகரன்:** தலைவர் அவர்களே. . .

**திரு. வீர. இளவரசன்:** ஏங்க, பேச விடுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) இளவரசன், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவா? (குறுக்கீடுகள்) என்னங்க இது சும்மா அதையே திரும்பத் திரும்பச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் அதற்குப் பதில் சொல்லியாகிவிட்ட பிறகும் அதையே திருப்பித் திருப்பிக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் நேருக்கு நேராகப் பேசிக் கொண்டனர்.)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்றனர்.)

ஏங்க, என்ன பேச்சு பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) என்ன பேச்சு பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? தனிப்பட்ட முறையில் யாரும் ஒருவரையொருவர் பேசிக்கொள்ளாதீர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் உட்காருங்கள். எல்லோரும் இருக்கையில் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் இருக்கைக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) காவலர்கள்... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் இருக்கைக்குப் போகிறீர்களா, என்ன? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எல்லோரையும் இடத்தில் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். வேல்முருகன், நீங்கள் உங்கள் இடத்தில் உட்காருங்கள். அங்கே ஏன் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) இளவரசன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) மற்ற உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) இளவரசன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடியு ்கள்.

முற்பகல் 11–15

**திரு. வீர. இளவரசன்:** இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு, தாங்க முடியாத அவலத்திற்கு ஆளாகி வருகின்ற அந்த ஈழத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் தொடர்ந்து பேசி வருகிறோமேதவிர, தமிழகத்தில் வன்முறையை ஆதரிக்க வேண்டிய எண்ணம் எங்களுக்குத் துளி அளவும் இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் மீண்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால்,.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், திரு. அரி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், நீங்கள் முதலில் உட்காருங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** தார்மீக ஆதரவு கொடுத்துப் பேசுவது என்பது தவறாகக் கொள்ள முடியாது என்று உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, பேச்சளவில் அங்கே நடக்கின்ற பிரச்சினைகளுக்கு எங்களுடைய ஆதரவு இருக்கிறதேயொழிய, தமிழகத்தில் அப்படி ஒரு நிலை வருவதற்கு எந்தச் சூழ்நிலையிலும் நாங்கள் இடமளிக்க மாட்டோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறோம். எனவே, அப்படிப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும், அவர்களுக்கு ஒரு விடியல் ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் குரல் கொடுத்து வருகிறோம். ஏனென்றால், ஒரு கவிஞன் சொன்னான், "உலகத்தில் மிகப் பெரிய சோகம் எது தெரியுமா? தாயைப் பிரிவது அல்ல, தந்தையை இழப்பது அல்ல, காதலியின் மரணம்கூட அல்ல, ஒரு பூகம்பம் ஏற்பட்டு இந்த மண்ணில் புதைந்து போவதுகூட அல்ல. ஆனால், உலகத்தின் மிகப் பெரிய சோகம், தான் பிறந்த மண், அந்த மண்ணை விட்டு ஒரு மனிதன் வெளியேறுவதும், தனக்கு உரிமை இல்லை என்று வெளியேற்றப்படுவதும் தான் இந்த உலகத்தின் மிகப் பெரிய சோகம்" என்று ஒரு கவிஞன் சொன்னான்.

அதுமட்டுமல்ல, கவிஞர் வைரமுத்து அழகாகச் சொன்னார். "எங்கள் கண்ணில் பாய்கின்ற இரத்தம் களத்திலே பாய வேண்டும், இன்னும் ஒரு யுத்த காண்டத்தை எழுதுவதற்கு கம்பா, நீ பிறந்து வர வேண்டும்" என்று அழகாகச் சொன்னானே, அது தீவிரவாதமா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்க விரும்புகிறேன். எனவே, இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்காக எங்களுடைய குரலை நாங்கள்



ஒலித்துக்கொண்டிருக்கிறோம். அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக குரலை ஒலித்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் குரல் கொடுத்து வருகிறோம். ஆனால்,** என்பதையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு வழக்கு குறித்து, நாங்கள் நீதிமன்றத்தில் வாதாடிக்கொள்வோம் என்று பேசினாலும்கூட, சட்டமன்றத்தில் நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு வழக்கைக் குறிப்பிட்டுப் பேசுவது என்பது முறையல்ல. எனவே, அதை அனுமதிக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்கிவிடுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவிரவாதம் எது என்பதைப் பற்றியும், தீவிரவாத இயக்கத்திற்கு யார் துணை போனார்கள் என்பதைப் பற்றியும் முன்னாள் முதல்வர் அவர்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் திரு. வைகோ அவர்கள் மீது போட்டிருக்கின்ற வழக்கே சான்று என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில், முன்னுரை என்ற அடிப்படையிலே பல்வேறு மிக முக்கியமான செய்திகள் அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, தோழமைக் கட்சிகளுடைய ஒற்றுமைக்குச் சான்றாக விளங்கி, மத நல்லிணக்கம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கி, மதச்சார்பற்ற முறையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நிர்வாகத்தை இன்றுபோல் என்றும் நடத்தும் என்ற உறுதியை அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அளிப்பதாக நமது நிதிநிலை அறிக்கையிலே சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அவையிலே பல்வேறு விவாதங்கள் குறிப்பிட்டுச் சொல்லி இருப்பதற்கெல்லாம் பதில் சொல்கின்ற வகையிலும், தீர்வு காண்கின்ற வகையிலும், அனைத்துப் பிரிவு மக்களுக்குமான ஓர் அறிக்கையாக, நிதிநிலை அறிக்கையாக இங்கே முன்வைக்கப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, சமூக நீதிப் பிரச்சினை இவற்றைப்பற்றியெல்லாம் சொல்லிவிட்டு, அதிலே சில வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், இன்னும் பல வெற்றிகளைப் பெற வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற வருத்தத்தை வெளிக்காட்டி, அதற்கான முயற்சியாக மத்திய அரசிடத்திலே பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராடி வெற்றி பெறுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம். அதிலே, குறிப்பாக, வருங்காலத் தலைமுறையினர் சமூகம் வாயிலாக அனைத்து உரிமைகளையும் பெறுவதற்குரிய முயற்சி என்ற அடிப்படையிலும், 50 ஆண்டுகளில் இந்திய நாட்டினுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பரிணாமங்களுடைய வளர்ச்சிப் போக்கு முற்றிலும் மாறியிருக்கிற இந்த நிலைமையிலேயும், சமூக நீதியை நிலைநாட்டுவதற்கும், சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், பெண் உரிமையை வழங்குவதற்குமுரிய முயற்சிகள் எடுக்கின்ற முயற்சியாக, உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை உருவாக்குவதற்குரிய முயற்சியாக மாநிலங்களுக்கு அதிகாரப் பரவல் கிடைக்க வேண்டுமென்ற அந்த முயற்சியை சென்ற முறை உறுதி செய்ததை மேலும் உறுதி செய்து, அதற்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*முற்பகல் 11–20*

இங்கே பல்வேறு கருத்துகள் இந்த அவையிலே பதிய வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது இரண்டு தினங்களாகப் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேற்றையதினமும், இன்றையதினமும் அதற்கு ஒரு விளக்கமும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, திருவாரூர் தேரோட்டம் ஆயில்யம் நட்சத்திரத்திலே நடத்தப்பட வேண்டுமா, வேண்டாமா என்ற சர்ச்சை



இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், இது பாரதிய ஜனதா கட்சியினுடைய போராட்டம். பாரதிய ஜனதா கட்சி தமிழகத்திலே போராடுவதற்கு வேறு எந்தவிதமான வாய்ப்புகளுமே கிடைக்காத சூழ்நிலையில், இப்போது ஆயில்யம் நட்சத்திரத்தைப் பிடித்துக்கொண்டு, அதிலே திருவாரூரிலே தேரோட்டம் நடத்த வேண்டுமென்பதற்கான ஒரு முயற்சியை எடுப்பதாகத் தெரிகிறது. அப்படியென்றால் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அநேகமாக, வானத்திலே இருக்கிற அனைத்து நட்சத்திரங்களையும் ஒன்றாக இணைத்து ஒரு நட்சத்திரப் பட்ஜெட்டை தாக்கல் செய்துவிட்ட காரணத்தாலே B.J.P.-க்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது என்பதுதான் இப்போது இருக்கிற நிலைமை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்போலவே பல்வேறு வேறுவிதமான செய்திகள் இருக்கின்றன. அதிலே அவர்களுக்கு இருக்கிற ஓர் உறுத்தல் என்பது, நான் புரிந்துகொண்டது, சமூக நீதியை நிலைநாட்டுவதற்குரிய முயற்சியை டாக்டர் கலைஞர் அவர்கள் எடுக்கிறார்; இந்தச் சமுதாயத்தைத் திருத்துவதற்குரிய முயற்சி என்ற அடிப்படையிலே சமூகச் சீர்திருத்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குரிய அந்தத் துறையை ஏற்படுத்தி, அதை நடைமுறைப்படுத்துகிறார் என்பதிலே பாரதிய ஜனதா கட்சிக்கு அறவே ஒத்த கருத்து இருக்க முடியாது. இதிலே இருக்கிற வருத்தத்தை, இதிலே இருக்கிற கோபத்தை, இதிலே இருக்கிற அவர்களுடைய கொள்கை மாறுபாட்டை வெளிப்படுத்துவதற்கு, திருவாரூர் தேரோட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே, பாரதிய ஜனதா கட்சியினுடைய பிற்போக்குத்தனமான அந்தக் கொள்கைகள் தமிழகத்திலே என்றைக்கும் எடுபடாது என்பதை நான் இந்த அவையிலே ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இந்த அறிக்கையிலே பல்வேறு சிறப்பு அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இதிலே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய தலைவரும், நாங்களும் வரவேற்றுச் சொல்லியிருப்பது என்பது, வரி இல்லாத பட்ஜெட் என்பதாகும். ஆனால், வரவு—செலவு என்று சொன்னாலே ஒரு வரி இல்லாமல் எப்படி பட்ஜெட் போட முடியும் என்றுகூட பல நண்பர்கள் கேட்கிறார்கள், அது உண்மைதான். ஆனால், வரியே இல்லாமல் இந்த பட்ஜெட்டை, புதிய வரி இல்லாத ஒரு பட்ஜெட்டைப் போட்டது என்பது இந்த மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தாத ஓர் அரசு என்பதை நிரூபணம் செய்து காட்டியிருக்கிறது. ஆகவே, இதன்மீது பலபேருக்கு வருத்தம் இருக்கிறது. எப்படியாவது ஒரு பைசா, இரண்டு பைசா என்று இவர் வரியை உயர்த்தி

இருக்கக்கூடாதா; அதன்மீது ஏதாவது அந்தக் கொள்கை நிலையைச் சொல்லி இங்கே பேசி, ஏதாவது காரியத்தைச் செய்யலாமா என்பதற்குரிய முயற்சியை எடுப்பதற்கு வாய்ப்பே இல்லாமல் செய்துவிட்ட காரணத்தாலே வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த பட்ஜெட்டிலே பல்வேறு சலுகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, விவசாயத் துறையைப் பொறுத்தவரையிலும், தொலைநோக்குப் பார்வையோடு பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கான கடன்கள் என்பது 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாக ஆக்கப்பட்டது. இப்போது 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சிகளினுடைய கோரிக்கைகளை ஏற்று, விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக, அவர்களை உற்பத்தி செய்வதிலே ஈடுபடச் செய்வதற்குரிய அந்த உந்து சக்தியாக இந்தக் காரியத்தை நம்முடைய கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள்; இதை நான் வரவேற்கிறேன்.

வறட்சி, வெள்ளம் போன்ற பாதிப்பு ஏற்படுகின்ற காலங்களிலே விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடைக்காமல் போய்விடுகிறது. அதைத் தடுப்பதற்கு, பாதுகாப்பதற்கு ஒரு முயற்சியாக இப்பொழுது பயிர் இன்ஷூரன்ஸ் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, 10 இலட்சம் விவசாயிகளுக்கு அது கிடைக்கும் என்று சொல்லியிருக்கிற அந்தச் செய்தி, விவசாயிகள் வயிற்றிலே பால் வார்த்த செய்தியாக இருக்கிறது. அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11–25*

அதேபோல விவசாயத் தொழிலாளர் நல வாரியம். இதைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பல்வேறு செய்திகள் சொன்னார்கள். நாங்களும் சென்றமுறை பல கருத்துகளை இங்கே பதிய வைத்திருக்கிறோம். விவசாயத் தொழிலாளர் நல வாரியம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 2000 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பின்னாலே அது கலைக்கப்பட்டது. மீண்டும் இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து, மீண்டும் அது புத்துயிர் பெற்று, திரும்பவும் நல வாரியம் அமைக்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதைப்பற்றிச் சொல்லுகிறபோது, நல வாரியத்தை நாங்கள் வேறு பெயரால் மாற்றி, விவசாயத் தொழிலாளர்களுக்கு காரியங்களைச் செய்தோம் என்று சொன்னார்கள். அதை எப்பொழுது செய்தார்கள் என்று கேட்டபோது, உரிய பதில் இல்லை. ஆட்சியை விட்டு இறங்குகிறபோது 2 மாதங்களுக்கு முன்னாலேதான் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்தார்களே தவிர, ஐந்தாண்டுக் காலத்திலே அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான திட்டத்தையும் அறிவிக்கவில்லை. இறங்குகிறபோது உழவர் பாதுகாப்புத் திட்டம், அதிலே பலபேருக்குச் சலுகை, அதிலே வேண்டியவர்களுக்குச் சலுகை என்பதைப் பயன்படுத்தி, தேர்தலுக்கு ஆதாயம் தேட முயற்சி எடுக்கப்பட்ட திட்டமே தவிர, அது விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிய திட்டம் இல்லை. ஆனால், ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம் (குறுக்கீடு) நான் உண்மையைத்தானே சொல்லிக்கொண்டிருக்கிறேன். 2001–லேயே போட்டுவிட்டீர்களா? நீங்கள் 2006–லே இறங்கும்போது போட்டீர்கள் என்று சொன்னேன். இல்லை, 2001–லேயே போட்டதாகச் சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், என்ன, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். அப்போது முதன்முதலிலே அவர்கள் அறிவித்திருந்தது, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, வருடந்தோறும் 100 ரூபாய் செலுத்தப்படவேண்டுமென்று திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. அதை மாற்றித்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது, ஒரு கோடியே 99 இலட்சம் பேருக்கு பயனளிக்கின்ற வகையிலே அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, நலிந்து கிடக்கின்ற விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஒரு ரூபாய்கூட செலுத்த வேண்டியதில்லை என்ற புதிய திட்டத்தைக் கொண்டு வந்து, அறிவித்து, அமல்படுத்தியதன் மூலமாகத்தான் பலபேருக்கு அந்த நன்மைகள் கிடைத்திருக்கின்றன. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, அப்போது ஏன் செய்யவில்லை என்று சொன்னார்கள். அதிலே பல்வேறு குளறுபடிகள் இருந்த காரணத்தினாலேதான், அதைத் தெளிவுபடுத்தி, அதிலே நிதியே செலுத்த வேண்டியதில்லை என்ற நிலையை உருவாக்கி, அரசே அந்த நிதியைச் செலுத்தி, அவர்களுக்கு அந்தப் பாதுகாப்பை

அளித்திருக்கின்ற புதிய திட்டம்தான் முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு என்று வாரியங்கள் அமைக்கப்பட்டு, அதிலே ஒன்றாக விவசாயக் கூலித் தொழிலாளர் திட்டமும் தொடங்கப்பட்டது. 2001 என்று நீங்கள் சொன்னது ரைட். 2001–லே நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே நாங்கள் கேட்டோம். அமைப்பு சாரா தொழிலாளர் நலத் திட்டத்தை நிறுத்திவிட்டீர்களே, என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டோம். உடனே ஆரம்பிக்கப் போகிறோம் என்றார்கள். அதையெல்லாம் ஒன்றாக ஆக்கி ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னார்களே தவிர, ஐந்தாண்டுகளில் செய்யாததால்தான், மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நீங்கள் சொன்ன மாதிரி 100 ரூபாய் வேண்டாமென்றால், உடனே ஆரம்பித்திருக்கலாமே? ஏன் 2002–ல் ஆரம்பிக்கவில்லை, 2003–ல் ஆரம்பிக்கவில்லை, 2004–ல் ஆரம்பிக்கவில்லை, கடைசியிலே ஆட்சி போகிற நேரத்திலே ஆரம்பித்தீர்கள் என்பதுதான் அவருடைய குற்றச்சாட்டு. ஆகவே இவையெல்லாம் கலைஞர் ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்ட திட்டங்கள். வேண்டுமென்றே நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் கலைஞர் அவர்கள் அதற்குப் புத்துயிர் கொடுத்து, விவசாயக் கூலித் தொழிலாளர் வாழ்க்கையில் உயர்வளித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட அந்த நல



வாரியத் திட்டத்தில், அதற்குத் தேவைப்படுகின்ற ஆதார நிதி, அரசிடமிருந்து செலுத்தப்படுகிறதா என்றால், இல்லை. விவசாயிகள் வழங்குகின்ற கரும்பிலிருந்து டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்றும், கொள்முதல் செய்யப்படுகின்றபோது டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்றும் அவர்களிடமிருந்து செஸ் வசூலித்துதான் அந்த நிதியைப் பெருக்கி, அந்த நிதியிலிருந்துதான் விவசாயிகளுக்குத் தருவதாக அந்தத் திட்டம் இருந்தது. மூன்றாண்டுக் காலம் கடும் வறட்சி இருந்த நிலைமை அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இவையெல்லாவற்றுக்கும் மேலாக, கடுமையான நிதி நெருக்கடியில் 2001–ல் நாங்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதனை எல்லாம் சரிசெய்ததற்குப் பின்னால்தான் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற உன்னதத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் எந்தவிதமான contribution-களையும் செலுத்தத் தேவையில்லை; அவர்களுக்குத் தேவைப்படுகின்ற நிதி எத்தனை கோடி ரூபாயாக இருந்தாலும் அதை அரசே ஏற்று நடத்தும் என்ற அந்தத் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல் சிறு, குறு விவசாயிகள், அவர்கள் கிராமப்புறங்களில் இருந்தாலும் சரி, விவசாயத் தொழிலாளர்கள் கிராமப்புறங்களில் இருந்தாலும் சரி, அவர்களுக்கும் நகர்ப்புறங்களில் இருக்கின்றவர்களுக்கும் சேர்த்துத்தான் ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது பேர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்). பேசி முடிக்கவிடுங்கள். நீங்கள் பேச விடமாட்டேன் என்கிறீர்கள்.(குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் அங்கே பேசுவது உங்களுக்குத் தேவையில்லை, உட்காருங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) நான் பேசிவிடுவேன். அமைதியாகிவிடுவார்கள். சிவபுண்ணியம் (குறுக்கீடுகள்). சிவபுண்ணியம், கொஞ்சம் பொறுங்கள். அவர் சொல்லிவிடட்டும். சிவபுண்ணியம், அவர் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சிவபுண்ணியம், அவர் சொல்லி முடிக்கட்டும். உட்காருங்கள். அவர் சொல்லும் விவரத்தைச் சொல்லி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள். சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[2007 மார்ச் 29

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது நாங்கள் ஆரம்பித்த திட்டத்தை.... . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதற்குப் பிறகு பேசும்போது சொல்லுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் ஒன்றும் எங்களுக்கு விளக்கம் சொல்லத் தேவையில்லை. எங்கள் திட்டத்தைக் குறை சொல்லாதீர்கள். உங்களுக்கு விளக்கம் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களும் நீங்களும் ஒன்றா? (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர்களை உட்காரச் சொல்லுங்கள் முதலில். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதைச் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களுக்கு விளக்கத்தைச் சொல்லவில்லை. எங்கள் திட்டத்தைக் குறை சொன்னார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள் (குறுக்கீடுகள்).

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** குறை சொன்னார். கடந்த காலத்தில் தொழிலாளர் நல வாரியம் (குறுக்கீடுகள்)



2007 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்கின்ற கருத்தைச் சொல்லுங்கள். நிரம்ப விளக்கமாகச் சொல்லவேண்டுமென்ற அவசியம் இல்லை. கருத்துகளை மாத்திரம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** விளக்கம் சொல்லித்தானே ஆக வேண்டும், வேறு வழியில்லையே! என்ன செய்வது? (குறுக்கீடுகள்) அவரை முதலில் உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவாதம் பண்ணிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்கார்ந்துவிட்டார், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நாங்கள் ஆட்சியில் இருந்தபோது நடைபெற்றதைக் குற்றச்சாட்டாக அதைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு உரிய விளக்கத்தை நாங்கள் சொல்ல முற்படும்போது, ஏன் இடைமறிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதற்கு நீங்களும் இடம் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இது நல்ல நடைமுறையல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பேசத்தான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவரை உட்காரச் சொன்னது தப்பா? (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் மைக்கை ஆஃப் பண்ணிவிடுகிறீர்கள். அவர் எழுந்தவுடன் என்னுடைய மைக்கை ஆஃப் பண்ணிவிடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள் சார். விவரத்தை மாத்திரம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்ன விவரத்தைச் சொல்வது? நீங்கள் எப்படியாவது சட்டமன்றத்தை நடத்திக்கொள்ளுங்கள். அவர்களையே பேச விடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்களைப் பேசச் சொன்னால் நீங்கள் பேசமாட்டேன் என்கிறீர்கள். மற்றவர்களையே சுற்றிச் சுற்றி வருகிறீர்கள். சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் 2000 ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே விவசாயத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட நல வாரியம், அதிலே வழங்கப்பட்ட உதவித் தொகைகள் கரும்பு விவசாயிகள் சார்பாகச் செலுத்துகின்ற, கரும்பு ஆலைகளிலிருந்து பெறப்படுகின்ற ஒரு per cent cess–ஐ வைத்துத்தான் நடத்துவதாகச் சொல்வது தவறு. அரசாங்கமே செலுத்தியிருக்கிறது. ஒரு per cent cess என்பது additional தான். முழுமையாக அரசாங்கம் நலத் திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறது. ஒரு per cent cess விவசாயிகளுடையது ரொம்பக் குறைவுதான். நீங்கள் சொன்ன கருத்து உண்மைக்கு மாறானது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார் அவர். (குறுக்கீடுகள்) சொல்லி முடித்துவிடுகிறேன். சொல்லி முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இந்தத் திட்டத்தை தொழிலாளர் நல வாரியத்தின் இந்தக் கோரிக்கையினை நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே அதிகாரிகளை வைத்துக்கொண்டு நான் ஆய்வுசெய்தபோது அந்தக் கணக்கை நான் பார்த்தேன். அப்போது நெல் கொள்முதல் செய்யும்போது விவசாயிகள் தர மறுக்கிறார்கள்; ஆலை அதிபர்கள் தர மறுக்கிறார்கள் என்றுதான் காரணம் சொல்லப்பட்டதேயொழிய, விவசாயிகள் செலுத்த வேண்டியதை அல்லது ஆலை அதிபர்கள் செலுத்த வேண்டியதை அரசே ஏற்றுச் செலுத்தும் என்ற குறிப்பு எதுவும் அதில் இல்லை. அதுதான் உண்மை. அதை முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான வாரியங்கள் அமைக்கின்றபோது அரசு நிதியும் வழங்கி, அதுமட்டுமல்லாமல் cess குறிப்பாக, ஆட்டோ ஓட்டுநர்களுக்காக உருவாக்கப்பட்டபோது அதில் இருக்கின்ற சங்கத்திற்கு ஆட்டோ வாங்கும்போதே அங்கு ஒரு per cent கட்டவேண்டுமென்று கலைஞர் அவர்கள் சொல்லி, அதையும் வசூலித்தோம். 20 கோடி ரூபாய் பணத்தையும் வைத்துவிட்டுப்



போனோம், அந்தச் சங்கத்தில் இருந்து. அதே மாதிரி கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வாரியத்திலே வசூலிக்கின்றபோது, யார் building கட்டினாலும் அவர்கள் அதற்கு ஒரு per cent cess கொடுக்கவேண்டுமென்று சொல்லி அதை வாங்கி அந்த நிதியில் சேர்த்து வைத்தோம். ஆக, அவர்களுடைய முதலாளிகளிடமிருந்து ஒரு per cent பணத்தை வாங்கி அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடுதான் அப்போது அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்கள் அமைக்கப்பட்டன.

முற்பகல் 11–35

அதேமாதிரிதான் விவசாயிகள் நல வாரியம். (குறுக்கீடு) பணம் அப்பொழுதே ஒதுக்கி இருக்கிறோம். பணத்தைக் கொடுத்துவிட்டு, additional cess அதனுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்காக வாரியம் என்று அமைக்கப்பட்டது. அந்த வாரியத்தில் நடந்ததுபற்றித்தான் உறுப்பினர் அவர்கள், சொன்னார்கள். அதாவது, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், 3 வருடங்கள் வறட்சி இருந்ததால்தான் நாங்கள் செய்யவில்லை என்று சொன்னார்கள். கடைசி வருடம் சுனாமி அடித்ததே சார், அப்போது போய் எப்படிச் செய்ய முடிந்தது? தேர்தல் வந்ததால் செய்தீர்கள் என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் இப்போது அமைக்கப்பட்டு அவர்களுக்கான குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதை வரவேற்க வேண்டும்; எதிர்க்க வேண்டிய விஷயங்கள் அல்ல. நான் சொல்வது என்பது சென்ற ஆட்சியில் போடப்பட்ட அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே விவசாயத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் செலுத்தி இருந்தார்கள். சென்ற உங்கள் ஆட்சிக் காலத்திலே அந்த 8 கோடி ரூபாயையும் வைத்துக் கொண்டு அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு என்ன செய்தீர்கள்? இவ்வளவு கோபப்பட வேண்டிய விஷயமும் அல்ல. விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் என்பதால்தான் சொல்கிறேன். கடைசி காலம் வரையிலே அதைப் பற்றியே ஏறெடுத்தும் பார்க்காமல் கடைசியில் செய்தீர்கள் என்றுதான் சொன்னேனே தவிர, அதை ஒரு பிரச்சினையாக்கி அரசியலாக்க நான்

விரும்பவில்லை. நடந்த சம்பவத்தையும், உண்மையையும்தான் குறிப்பிட்டுச் சொன்னேன். இதை நீங்கள் மறுக்கவே முடியாது. இது ரெக்கார்டில் இருக்கிறது. உங்கள் ஆட்சியில் நடந்த விஷயங்கள் இவை.

தரிசு நில மேம்பாடு சம்பந்தமாக இங்கு பல்வேறு விவாதங்கள் வந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக இந்த அவையிலே அதைப் பற்றித் தெளிவாக நாம் பேசியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையின் வாயிலாகப் பல்வேறு செய்திகளைச் சொல்லி இருக்கிறார்கள். இதுவும் இந்த மன்றத்திலேயே அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சொல்லப்பட்டது. 50 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலத்தைப் பண்படுத்தி வழங்கப்படும் என்று சொல்லப்பட்ட செய்தி. என்னவோ தெரியவில்லை நாமும் ஓர் அரசில் இருந்தவர்கள், ஆட்சியாளர்கள் சொன்னார்கள் என்று நம்பி நாமும் தேர்தலிலே வாக்குறுதி கொடுத்துவிடுகிறோமா என்று தெரியவில்லை. இருந்தாலும் நிலம் என்பது அது உற்பத்தி செய்யக்கூடிய பொருள் அல்ல. அது இருக்கிற ஒன்று. இருக்கிற நிலத்தை, தரிசு நிலத்தை மேம்படுத்தி, விவசாயத் தொழிலாளர்களுடைய தரிசு நிலத்தை மேம்படுத்தி அந்த விஷயங்களைச் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதைப் பகிரங்கமாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், அந்த ஒரு விஷயத்தை வேறுவிதமாகச் சொல்லியே திசை திருப்புவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், நிலம் என்பது உற்பத்திப் பொருள் அல்ல. அது நிரந்தரமான பொருள். அது இயற்கையாகவே இருக்கிறது. இருக்கிற விஷயங்களைத்தான் சரி செய்து கொடுக்க முடியும். அதைத்தான் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், ஒரு கை அளவு நிலம் இருந்தாலும்கூட அதை ஏழைக்குத்தான் கொடுப்பேன் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதை இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதை வரவேற்க வேண்டும். அதை இன்னமும் மேம்படுத்தி எந்த வகையிலே செய்ய முடியும் என்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டுமேயொழிய, அதை வேறுவிதமாகத் திசை திருப்புவது என்பது நிலமற்ற ஏழைகளுக்கு இதன் காரணமாக நிலம் இல்லாமல் போய் அந்தப் பாவத்தை நீங்கள் சுமக்காதீர்கள் என்றுதான் உங்களைக் கேட்கிறேன். குறிப்பாக விவசாயத்தைப் பொறுத்தவரையிலும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், இதிலே என்ன point of order இருக்கிறது? Don't interfere, உட்காருங்கள். You are causing frequent interference, உட்காருங்கள். No, no, no. உட்காருங்கள்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரன்பு கொண்ட பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறையைப் பொறுத்தவரையிலும் இங்கே நம்முடைய...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே point of order எங்கே இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அந்தப் பாவத்தை நீங்கள் சுமக்காதீர்கள் என்று சொல்கிறார். அதில் செங்கோட்டையனுக்குக் கோபம் வர வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் என்று யாரையும் குறிப்பிடாமல் சொல்லும்போது அது ஒருவேளை சபாநாயகரைக்கூட குறிப்பிடும். நீங்கள் சுமக்காதீர்கள் என்று சொன்னால், அதனால் யாரையோ சொன்னார் என்று விட்டு விட்டுப் போய்விட வேண்டும். பொதுவாக நான் ஒன்று உங்களுக்குச் சொல்கிறேன். இது ஒரு அறிவுரை அல்ல, ஒரு வேண்டுகோள். இந்த அவையிலே உள்ள எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவர் பேசுவதிலே தவறு இருந்தால், அந்தத் தவறை மறுக்க வேண்டும் என்றால், அடுத்த வாய்ப்பு ஒவ்வொரு கட்சிக்கும் வரவிருக்கிறது. அந்தக் கட்சியின் சார்பிலே பேசுகின்றவர்கள், அவர் பேசும்போது இன்ன செய்தியைச் சொன்னார், அது தவறானது என்பதைக் குறிப்பிடுவதற்கு எவ்வளவோ வாய்ப்பு இருக்கிறது. உடனடியாக மறுக்க வேண்டிய குற்றச்சாட்டுகளாக இருந்தால் உடனடியாக மறுக்கலாம். அதை விட்டுவிட்டு ஒரு சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிட்டு அதற்குப் பதிலாக இங்கே ஒரு சச்சரவு, ரகளை ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாவதற்கு ஒருவருடைய பேச்சும் காரணமாக இருக்கக்கூடாது, குறுக்கீடும் காரணமாக இருக்கக்கூடாது என்று அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். செய்திகளைச் சொல்ல வேண்டிய அவசியம் வரும்பொழுது, அதை சர்ச்சையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதுதான் யதார்த்தமான உண்மை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னங்க, உங்கள் உறுப்பினர்களை ஒழுங்காக இருக்கச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அவர்கள் என்ன செய்வார்கள், சிரமம். கொஞ்சம் கஷ்டம்தான் (குறுக்கீடு) விவசாயத் துறையைப் பற்றி இங்கே பல்வேறு செய்திகள் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் தண்ணீர்ப் பிரச்சினை என்பது பெரிய பிரச்சினையாக மாறி வருகிறது. ஆகவே, இதை நவீன முறையிலே சரி செய்வதற்குரிய முயற்சியாக ஆஸ்திரேலியா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு நம்முடைய முன்னோடி விவசாயிகளை அனுப்பி, அவர்களைப் பயிற்சி பெறச் செய்து, நம்முடைய விவசாயத்தை முன்னேற்றுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது, வரவேற்கக்கூடிய ஒன்று. அந்த நாட்டைப் பார்க்கிறபோதுதான், நம்முடைய நாட்டிலே, இப்படி ஒரு தண்ணீர்ப் பிரச்சினைக்காகவே பல்வேறு சண்டைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி எப்படி விவசாயத்தைச் செய்ய முடியும் என்பதற்குரிய ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கும் என்பதற்குரிய முயற்சியை, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு, ஒரு சமூக விஞ்ஞானத்திற்குரிய பொறுப்பாளர் என்ற முறையில் அதைச் சிந்தித்துச் சொல்லியிருக்கிறார்.

*முற்பகல் 11—40*

குறிப்பாக, ஆஸ்திரேலியா, இஸ்ரேல் நாடுகளிலே நம்முடைய நாட்டில் பெய்கின்ற மழையைவிட நான்கில் ஒரு பங்குக்கும் குறைவாகத்தான் மழை கிடைக்கிறது. அந்த ஒரு பங்கு மழையை வைத்துத்தான் அங்கே சாகுபடி நடைபெறுகிறது. அதைவிட நான்கில் மூன்று பங்கு பாறை நிலமாக இருக்கிறது. அந்தப் பாறை நிலங்களிலேதான் விவசாய உற்பத்தியைச் செய்கிறார்கள். அதிலே தன்னிறைவு பெற்று, ஆஸ்திரேலியாவிலே உற்பத்தி செய்யப்படுகிற காய் கனிகளாக இருந்தாலும், இதர பொருட்களாக இருந்தாலும், இஸ்ரேல் நாட்டிலே, அங்கே உற்பத்தி செய்யப்படுகிற காய்கறிகளாக இருந்தாலும், இதரப் பொருட்களாக இருந்தாலும், காலைக்குள்ளாக அனைத்து வெளிநாடுகளுக்கும், லண்டன் வரையிலும், பாரீஸ் வரையிலும், மற்ற இதர நாடுகள் வரையிலும் கொண்டு சென்று சேர்த்து அந்த விவசாயிகள் அந்தச் சந்தைப் பொருளாதாரத்திலே மேம்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கடின உழைப்பு, சிக்கனம் என்பதற்குரிய எடுத்துக்காட்டாக, உலகிலேயே ஆஸ்திரேலியாவும், இஸ்ரேலும் விளங்குகின்றன என்பதைக் கண்டறிந்து, அந்தத் தொலைநோக்குப் பார்வையோடு இந்தத் திட்டத்தைச் சொல்லியிருக்கிற



டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்ட வேண்டுமா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொன்னால், இதை வேறுவிதமாக எடுத்துக்கொண்டால் அதற்கு நான் பொறுப்பல்ல. ஆகவே, இதைச் செய்வதன்மூலமாக நம்முடைய தமிழகத்தினுடைய விவசாயம் மேம்படுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன.

இங்கே காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர், மரியாதைக்குரிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மிகச் சிறப்பாகச் சொன்னார்கள். அதுதான் அனைத்து அரசியல் கட்சிகளுடைய வேண்டுகோளாகவும், எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. அதை, அனைவருமே ஒத்த கருத்தோடு செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். ஆயிரம் பிரச்சினைகளில் நாம் சண்டைப் போட்டுக்கொள்வது என்பது வேறு. ஆனால் இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையை நிலைநாட்டுவதற்கான முயற்சி எடுக்கிறபோது, ஒத்த கருத்தோடு நம்முடைய கருத்தைப் பதிவு செய்து, நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்குரிய அந்தக் காரியங்களை நாம் செய்யத் தவறினோமானால், வருங்கால சந்ததி நம்மைச் சும்மாவிடாது. இதைத்தான் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இதைச் சொன்னால், இது ஒரு விவாதமாக மாறிவிடுகிறது. இதிலே நான் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. பல்வேறு கருத்துகளை நாம் சொல்லிவிட்டோம். இதிலே இருக்கிற விஷயங்கள் என்பது, குறை சொல்வது என்பதும், பிரச்சினைகளைத் திசைத் திருப்புவது என்பதும் சரியல்ல. அதனால், நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு நடுவர் மன்றத் தீர்ப்பு 16 ஆண்டுகள் கழித்து கிடைத்திருக்கிறது. வாராது வந்த மாமணியைப் போல் வந்திருக்கிறது. வந்த தீர்ப்பிலே குறைபாடுகள் இருக்கலாம்; நமக்குக் கொஞ்சம் பாதிப்புகள் இருக்கலாம். இதை எப்படிச் சரி செய்வது என்பதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமல்லவா? அதை எடுப்பதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும். 90 நாட்கள் அவகாசம் இருக்கிறது. இந்த அவகாசத்திற்குள்ளாக நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு நம்முடைய தமிழக அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தவறுகிறார்கள் என்று சொன்னால், நாம் அதைப் பற்றிப் பேசலாம். அதற்குரிய அவகாசத்தை நாம் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்புகளைப்பற்றிச் சிந்திக்காமல் ஓர் அரசு இருக்க முடியுமா? எந்த அரசாக இருந்தாலும், அதைச் சிந்திக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதைச் செய்வதற்குரிய முயற்சி இருக்கிறது. அதை நன்றாகவே செய்து தமிழகத்திற்குக் காவிரி நீர் கிடைக்கச் செய்வதற்குரிய முயற்சியை கலைஞர் அவர்கள் எடுப்பார்கள் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

நம்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாம் அரசியலாகப் பார்க்காமல், வேறு விதமான காழ்ப்புணர்வுகளுக்கு இடம் அளிக்காமல், அதையே ஒரு பிரச்சினையாக மாற்றாமல், இதிலே அனைவருமே, நாம் ஒத்த கருத்தோடு அதை நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, முல்லைப் பெரியாறு பிரச்சினையிலேயும் அதே அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. பாலாறு பிரச்சினையிலேயும் அதேபோல அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. இதைச் செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொது விநியோகத்தைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் இங்கே சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நம்முடைய அறிக்கையிலே மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இது எங்களுடைய இடதுசாரிக் கட்சிகள் என்ற முறையில் Online வர்த்தக முறையைத் தடை செய்ய வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திச் சொல்லி வந்துகொண்டிருக்கிறோம். மத்திய ஆட்சியாளர்களிடத்திலே நாங்கள் வலுவாகச் சொல்கிற கருத்து இது. ஒருங்கிணைந்த கமிட்டியிலேகூட இது வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சியை, அநேகமாக எனக்குத் தெரிந்தவரையிலும், இந்த வர்த்தகத்தைத் தடை செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று தைரியமாகச் சொல்லியிருக்கிறவர், நம்முடைய டாக்டர் கலைஞர் என்றுதான் நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்கள் அதை எதிர்த்திருக்கின்றன. எதிர்க்கிற கொள்கையுடைய மாநிலங்கள், இடதுசாரிக் கட்சிகள் இருக்கிற மாநிலங்கள் என்பது வேறு. ஆனால், மற்ற மாநிலங்களைவிட, நம்முடைய தமிழகம், இதிலே முன்னுதாரணமாக விளங்கியிருக்கிறது. அதை அழுத்தமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்புக் கூட்டு வரியைப் பற்றி பல செய்திகள் வருகின்றன. எனக்கு அதிலே ஆழமான கருத்துகள் இல்லையென்றாலும், தெரியவில்லை என்றுகூட நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பொதுவாக என்ன கருத்து வருகிறதென்றால், மதிப்புக் கூட்டு வரி வந்ததற்குப் பின்னாலே, மருந்து விலை உயர்வதாக ஒரு செய்தி பரவலாக இருக்கிறது. உயிர்காக்கும் மருந்துகள் மற்ற வகையில் விலை உயர்கின்றன என்ற செய்திகள் பல இடங்களிலே பத்திரிகைகள்மூலமாக,



பல ஊடகங்கள்மூலமாக வந்து கொண்டிருக்கின்றன. இது சரியா, தப்பா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இப்படி ஒரு கருத்து பரவலாக, வேகமாகப் பரவுகிறது. இதைச் சரி செய்வதற்கு அல்லது இதன்மூலமாக இருக்கிற சாதக பாதக நிலைமைகளைக் கண்டுணர்ந்து அதை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்குரிய முயற்சியை அந்தத் துறை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தியவுடனேயே இந்தப் பிரச்சினை வந்தது. உடனே முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டு, எங்கள் துறையின்மூலம் நாங்கள் ஆய்வு செய்யும் நேரத்தில், அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை. பிரச்சினை வந்த ஓரிரு நாளில் அந்த stock–ஐ எல்லாம் சரிசெய்து, regular ஆக பழைய விலைக்கே விற்க வேண்டிய நிலையிலே இந்தத் துறை செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஏழையெளிய மாணவர்களுக்குரிய வரப்பிரசாதமாக, அரசு கலைக் கல்லூரிகளிலே, அறிவியல் கல்லூரிகளிலே கட்டணம் இரத்துச் செய்யப்பட்டிருப்பதை இங்கே வரவேற்கிறோம். நம்முடைய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதே கருத்தை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே, மகிழ்ச்சிக்குரிய வகையிலே, எங்களது திருவாரூர் மாவட்டத்திற்கு, புதிய மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்காக, அதேபோல தருமபுரியிலே மருத்துவக் கல்லூரி அமைப்பதற்காக, *100* கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீடாகச் செய்து, அறிவித்திருக்கிற கலைஞர் அவர்களுக்கும், இந்த அரசிற்கும், எங்களுடைய திருவாரூர் மாவட்ட மக்களின் சார்பாக, சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை விரைவாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல, தமிழகம் முழுவதும் ஒரு வழிச் சாலைகள் இரு வழித் தடங்களாக மாற்றப்படும். ஒரு வழியிலே போய்க்கொண்டிருப்பதால்தான் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நிறைய accidents–விபத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை நான் சொல்கிறபோது, இதை அரசியல் accident என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. நான் சாலையில் நடைபெறுவதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். ஆகவே, ஒரு வழியாகச் செல்வதற்குப் பதிலாக இரு வழியாகச் சென்றால், இந்த விபத்துகளைத் தவிர்க்கலாம் என்று உணர்ந்து நம்முடைய கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, உள்ளாட்சித் துறைக்கு நிதியொதுக்கீடு, அநேகமாக எனக்குத் தெரிந்து இவ்வளவு நிதி ஒதுக்கவில்லை. தேவைகள் அதிகமாக இருக்கலாம். கிட்டத்தட்ட 10,000 கோடி ரூபாய். 9,169 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக நமது உள்ளாட்சி நிர்வாகம் என்பது சிறப்பாக நடைபெறுவதற்குரிய எல்லா வாய்ப்புகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. அரசின் சார்பிலும், உள்ளாட்சித் துறையின் சார்பிலும், இவ்வளவு பெரிய நிதியொதுக்கீடு செய்து இருப்பது என்பது முறையாக சரியாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை அந்த உள்ளாட்சி அமைப்புகள் திறம்படச் செய்யுமானால், தமிழகத்திலே பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதை மிகச் சிறப்பாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அந்த முயற்சிக்கு நாங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தெரிவித்து அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நமது மீனவர்கள் பாதுகாப்பு என்று சொல்கிறபோது, பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. இங்கே இலங்கைப் பிரச்சினைபற்றி கருத்துகள் வந்தன. நான் அதன் உள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வருகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற புகலிடமாக மட்டும்தான் தமிழகம் இருக்கிறது. இதிலேகூட என்னுடைய செய்தி, எங்களுடைய கட்சி என்ற கருத்திலே இருந்து வேறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. ஆனால், இலங்கைத் தமிழர்களை அகதிகள் என்று குறிப்பிடுவதே தவறு என்று நான் கூறுகிறேன்.. இலங்கைத் தமிழர்களை, தமிழ் அகதிகள், அகதிகள் என்று நாம் குறிப்பிடுகிறோம். நாமும் தமிழர்கள் என்ற முறையில் அந்த உணர்வுகளைப் பல பேர்



வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் வருகிறது. ஆனால், அவர்களுக்குத் தேவையான உதவிகளை மனப்பூர்வமாக, அதை உணர்ந்து, தேவை அறிந்து செய்வதற்குரிய முயற்சிகளை நம்முடைய அரசு செய்கிறது. தொடர்ந்து செய்ய வேண்டும் என்று நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் தாக்கப்படுவது என்பது தொடர்ந்து நடைபெறுகிறது. சிங்கள இராணுவத்தால் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்துவதும், தாக்குதலுக்குள்ளாவதும், அதேபோல் அந்த இலங்கை மீனவர்களால் தாக்கப்படுகிற கொடுமையான நிகழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தடுப்பதற்குரிய முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது என்று சொன்னாலும், வேகமாக அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் பற்றி சில செய்திகள் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இதைப்பற்றிக்கூட ஆழமான கருத்துகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பல்வேறு நிகழ்ச்சிகள்மூலமாக அதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதைப் பற்றிய எங்களுடைய பார்வையும் எங்களுடைய கருத்துகள் என்பதும் வேறாக இருக்கலாம். ஆனால் தொழில்கள் தொடங்குவதன்மூலம் ஒரு மாநிலம் முன்னேறும் என்பதிலே, எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதற்குத் தடையாக கம்யூனிஸ்ட்டுகள் நாங்கள் இருந்ததில்லை, இருக்கவும் மாட்டோம். ஆனால் அதேநேரத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக நிலம் கையகப்படுத்துகிற அந்த முறைகளைப் பற்றித்தான் இப்போது பேச வேண்டிய அவசியம் இருக்கிறது.

முற்பகல் 11–50

இங்கே சென்னை நகரத்திலே மனைகள் எப்படி விற்பனை செய்யப்படுகின்றனவோ இதே முறையிலேயே சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குரிய நிலங்களும் விற்பனை செய்வதற்கான முயற்சிகள் தமிழகத்தில் எடுக்கப்படுவதாக நாங்கள் அறிகிறோம். குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஓசூர் பகுதிகளிலே அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் வரப்போகிறது என்ற தகவல் தெரிந்ததற்குப் பின்னாலே—அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் சென்ற ஆட்சிக் காலத்திலேயே தொடங்கப்பட்டது. அப்பொழுது இது நடைமுறைப்படுத்துகின்ற இந்த முயற்சிகள் என்பது இந்திய அளவிலே எல்லா மாநிலங்களும் நிர்பந்திக்கப்பட்டு இதை நடைமுறைப்படுத்த

வேண்டிய அவசியத்தில் கட்டாயத்தில் இருந்தோம். ஆனாலும், இதற்கு நிலங்கள் கையகப்படுத்துவதற்குரிய முயற்சி என்ற முறையில் அந்த மாவட்ட ஆட்சியரே அதற்குரிய நோட்டீசுகளைக் கொடுத்து நிலத்தை விற்பனை செய்வதற்குரிய கட்டாயத்தை, மற்றவர்களை வாங்கி வைத்துக்கொள்ளச் செய்து, பின்னால் வருகிறபோது அதைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதற்குரிய முயற்சிகள் எல்லாம் அந்தப் பகுதியில் எடுக்கப்பட்டதாக பல ஆதாரபூர்வமான செய்திகள் இருக்கின்றன. இதேபோல இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குரிய நிலங்களை எடுப்பதற்கான முயற்சிகள் என்று பார்க்கிறபோது பல்வேறு கோணங்களில் வருகின்றன.

அதேபோல நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் அது ஏன் நடைமுறைப்படுத்த முடியாமல் தடைபடுகிறது? அந்தப் பகுதியை முறைப்படுத்தி செய்வதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்து நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னாலும்கூட அங்கே நிலம் கையகப்படுத்துவதிலேயே வித்தியாசமான நிலை இருக்கிறது. நாங்குநேரி பகுதியில் பல்வேறு நிலங்களை எடுக்கிறபொழுது பெரிய முதலாளிகள் வேறு விதமாக அதை விற்பனை செய்வதற்கான முயற்சிகள் எடுக்கிறார்கள். சாதாரண ஏழையெளிய மக்கள், கோயில் மடத்து நிலத்தை வைத்திருப்பவர்களுடைய நிலத்தை அவர்களுக்குத் தெரியாமலேயே கையகப்படுத்தி, அவர்களுக்கு வழங்குவதற்குரிய முயற்சியை எடுக்கிறார்கள். ஆகவே, இந்தச் சிறப்புப் பொருனாதார மண்டலம் என்று சொல்லுகிறபொழுது அதை முறைப்படுத்தி கையாளுவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நாங்குநேரி பகுதியிலேயிருந்து வந்திருக்கிற செய்தி இராஜாக்கமங்கலத்தில் உள்ள நிலம், 70 ஏக்கர் நிலத்தை வசதிபடைத்தவர் 16 கோடி ரூபாய் என்று விற்பனை செய்கிறார். ஆனால், அதேபகுதியிலே, ஆலங்குளம் என்ற பகுதியிலே இருக்கிற, கிராமத்திலே இருக்கிற நிலம் அது கோயில் மடத்திற்குச் சொந்தமான நிலம் என்ற முறையிலே விவசாயி குத்தகை சாகுபடி செய்து வருகிறான், அதைப் பயன்படுத்தி வருகிறான். அவனுடைய நிலம் அவனுக்குத் தெரியாமலேயே அந்த மடத்தினுடைய நிர்வாகத்தின்மூலமாக இதற்கு வழங்குவதற்கான முயற்சி நடைபெறுகிறது. ஆகவே, இப்படி நான் சொல்கிறபொழுது ஏழைகள், சாதாரண விவசாயிகள் தெரிந்தும் தெரியாத வகையிலும்கூட பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறார்கள். இதைத் தடுப்பதற்கான முயற்சியை எடுத்து அதன்பிறகு இந்தத்



தொழில்களைத் தொடங்குவதற்கான ஓர் உத்தரவாதத்தை தமிழக அரசு எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி நிலம் எடுக்கிறபோது பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன.

குறிப்பாக, மேட்டூரிலே அந்த அணை அமைப்பதற்கான அல்லது அந்த மின் உற்பத்தி நிலையங்களைக் கட்டுவதற்குரிய இடங்களைக் கொடுத்தவர்களுக்கு முறையாக நிவாரணம் கிடைக்கவில்லை. அதேபோல நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காக இடம் கொடுத்தவர்களுக்கு முறையான அந்த நிவாரணம் கிடைக்கவில்லை என்ற கருத்து இருக்கிறது. இங்கே பேசிய நமது வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஜெயங்கொண்டத்திலே இந்தப் பிரச்சினை இருக்கிறது. இப்படி நிலம் கொடுத்தவர்களுக்கு முறையாக, சரியாக நிவாரணம் கிடைக்கவில்லை என்ற அந்தக் குறைபாடு இருப்பது என்பது இப்படிப் பெரிய தொழில்கள் தொடங்கும்பொழுது சாதாரண, ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. அதைப்பற்றிய நமது சிந்தனையை நமது அரசு ஆழமாகக் கவனித்து, அதற்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை. விழுப்புரம் மாவட்டம், மணிமுக்தா அணை கட்டுவதற்காக அந்தப் பகுதியிலே வாழ்ந்த கிட்டத்தட்ட 200–க்கும் மேற்பட்ட விவசாயிகள் அந்த இடத்தை கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 40, 50 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது அந்த அணை. அநேகமாக முன்னாள் அமைச்சராக இருந்து மறைந்த திரு. கோவிந்தசாமி அவர்களுடைய பெயராலே ஒரு நகரை அமைத்து அவர்களுக்கு வேறு ஒரு மாற்று இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே அவர்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டாவிலிருந்து மற்றவை வழங்குவதிலே பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. அதற்காக நிலம் அவர்களுக்குத் தேர்வு செய்யப்படுகிற காரியம் 30 ஆண்டுகளாகவே நடைபெறுகிறது. இதுவரையிலும் முடிவுபெறவில்லை. அதை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். அவர்களுக்குத் தீர்வு வேண்டும். அந்த நிலத்தை அவர்களுக்கு ஒப்படைக்க வேண்டும். நான்கூட அவர்களிடம் கேட்டுக்கொண்டது, இப்போது நம்முடைய 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்குகிற திட்டத்தின்மூலமாகவாவது அந்த மணிமுக்தா அணை கட்டுவதற்கு, நிலம் அளித்த அந்த விவசாயிகளுக்கு நிலம்

கிடைப்பதற்குரிய முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிலம் எடுப்பு சம்பந்தமாக கூறினார்கள். விழுப்புரம் மாவட்டத்திலே அணை கட்டுவதற்காக நிலம் எடுத்த சமயத்திலே அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் நம்முடைய வனத் துறைக்குச் சொந்தமான நிலம். அவர்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் கேட்டிருக்கின்ற நிலம் சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்கு அறிவுரை வழங்கி தற்சமயம் அதுபற்றி வனத் துறையிடம் நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம். அதற்கு சரிசமமான நிலத்தை அரசின் சார்பாக வனத் துறைக்கு வழங்கி பின்னர் அவர்களுக்கு அந்தப் பட்டா நிலம் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதை விரைவாகச் செய்து அவர்களுக்கு உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்திலே இருக்கிற பிரச்சினைகளில் முக்கியமானது நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, சண்டிகார், டெல்லி போன்ற மாநிலங்களுக்கு பிழைப்புக்காகச் செல்கிறார்கள். இது தொடர்ந்து நடக்கிறது. அதேபோல எங்களுடைய காவிரி டெல்டா பகுதி இளைஞர்கள் கோவை, திருப்பூர் போன்ற பகுதிகளுக்கும், கேரளாவிற்கும் பிழைப்புக்காகச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இவற்றையெல்லாம் தடுப்பதற்குரிய முயற்சிகள் என்ற அடிப்படையிலே வேலை உத்தரவாதம் செய்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களைப்பற்றி நம்முடைய அரசும், மாண்புமிகு கலைஞர் அவர்களும் சிந்தித்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11–55

மலேசிய சிறைகளில் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 ஆயிரம் இளைஞர்கள் வாடுவதாக ஒரு தகவல் இருக்கிறது. இந்த 5 ஆயிரம் இளைஞர்கள் மலேசிய சிறையிலே மாட்டிக்கொண்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. அங்கே போகிறபோது அவர்களை அனுப்புகிறவர்கள் வேறுவிதமாகச் சொல்லி அனுப்புகிறார்கள். ஆனால், அங்கே போனால் பணி கிடைக்கவில்லை, அந்த நாட்டினுடைய காவல் துறை அவர்களை சிறையில் அடைத்து விடுகிறது, மிகப் பெரிய துன்பத்திற்கு ஆளாகிறார்கள் என்ற செய்தி வருகிறது. ஆகவே, மலேசிய சிறைகளிலே வாடிக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய 5 ஆயிரம் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழ்நாட்டிலே கடந்த முறை 6 மாவட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று இப்போது நெல்லை, தஞ்சாவூர், திருவாரூர், கரூர் ஆகிய நான்கு மாவட்டங்கள் இணைக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது, மகிழ்ச்சியடையக்கூடியது. மேலும், நம்முடைய தமிழகத்திலே வறட்சி மாவட்டங்களாக இருக்கிற பெரம்பலூர், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி போன்ற மாவட்டங்களையும் இணைப்பதற்கான தனித்த முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமான பிரச்சினையாக தமிழகத்திலே இருப்பதென்பது வீட்டு வசதித் துறையின்மூலமாகக் கடன் பெற்றிருக்கிறவர்களும், வீட்டு வசதி கூட்டுறவுத் துறையின்மூலமாகக் கடன் பெற்றிருக்கிறவர்களும் மிகப் பெரிய இன்னலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கருத்து இப்போது எங்கு சென்றாலும் பரவலாகப் பேசப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறபோதெல்லாம் இந்தக் கருத்தையும், இந்தக் கோரிக்கை மனுக்களையும் எல்லா வகையிலும் வைக்கிறார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், இதரர்கள் வீட்டு மனையையும், வீடுகளையும் விலைக்கு வாங்கியிருக்கிறவர்கள், இந்தக் கடனைச் செலுத்த இயலாத நிலையிலே 50 ஆயிரம் ரூபாய் கடன் கட்ட வேண்டியிருந்தால், அவர்கள்

5 இலட்சம் ரூபாய் திரும்பக் கட்ட வேண்டும் என்று அவர்களுக்கு வட்டி, அபராத வட்டி, தண்ட வட்டி என்ற பெயராலே வசூலிப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. அதேபோல கிராமங்களிலே வீடு கட்டுவதற்காக குறைந்த தொகையை வாங்கக்கூடிய ஏழை விவசாயிகள், ஏழை விவசாயத் தொழிலாளர்கள் வாங்கியிருக்கிற அந்தக் கடன் சுமையும், வட்டி, அபராத வட்டி என்ற பெயராலே சுமையாக இருக்கிறது. இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்து, விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, மறுவாழ்வு செய்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வீட்டு வசதிக் கடனைப் பற்றிய ஒரு சிந்தனையை, எப்படிச் செய்யலாம் என்பதற்கு ஆய்வு செய்து அந்த வட்டி, அபராத வட்டி, கடன் தொகையிலிருந்து எப்படி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு, பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டத்தைப்பற்றி நம்முடைய செல்வம் சொன்னார். ஒரே ஒரு செய்தி. திண்டுக்கல் மாவட்டம், வாகரை ஊராட்சி மன்றத் தலைவர் நாற்காலியில் உட்கார முடியவில்லை என்ற ஒரு மோசமான நிலை இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர் கீழே தரையில் உட்கார்ந்து இருப்பார். துணைத் தலைவர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் எல்லாம் நாற்காலியில் உட்கார்ந்து கூட்டம் நடைபெறுகிறது என்று செய்தி. இது அந்த மாவட்ட ஆட்சியர், அந்த காவல் துறை கண்காணிப்பாளர் எல்லோருக்கும் சொல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னாலும் இதுவரையிலும் நடவடிக்கை இல்லை என்ற வருத்தமான செய்தியைச் சொல்கிறார்கள். இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால்தான் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல், இந்த 4 ஊராட்சிகளுக்கும் தேர்தல்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அந்த வாகரை பஞ்சாயத்திற்கு நேரடியாகச் சென்று இரட்டைக் குவளை முறை இருக்கிறதா என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அந்த ஊராட்சி மன்றத் தலைவரையும் அழைத்துப் பேசி, அவ்வாறு தடுத்தார்களா என்றெல்லாம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர் இல்லை என்று மறுத்திருக்கிறார். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு நிச்சயம் நடக்காது. தலைவர் கலைஞர் ஆட்சியிலே



(மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக எங்கும் இந்த முறை இருக்காது. நாங்கள் இருக்கவும் அனுமதிக்க மாட்டோம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் அதைப்பற்றிய சந்தேகத்திற்கு இடமே இல்லை. இப்படிச் செய்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதை மாற்றி ஒரு வரலாற்றுச் சாதனையாக நம்முடைய நான்கு ஊராட்சிகளிலும் தேர்தலை நடத்தியிருப்பது என்பது மிகப் பெரிய சாதனை. 10 ஆண்டு காலத்திற்கு மேலாக அந்த நிர்வாகங்களே நடக்க முடியாததை, தைரியமாக அந்தச் சாதனையைப் படைத்திருக்கிறார்கள் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். இதை ஆதி திராவிட மக்கள் மனதார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் மாற்றுக் கருத்து என்பதே இல்லை. ஆனால், இங்கொன்றும் அங்கொன்றுமாக இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் மனை வாடகை உரிமைதாரர்கள் பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்வது, 2000 ஆம் ஆண்டிலே இந்த அவையிலே பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீங்கள்தான் அந்த உத்தரவை நிறுத்தி வைக்கிறேன் என்று உத்தரவிட்டீர்கள். ஆனால், பின்னாலே வந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுத்தி வைத்த உத்தரவைப் பயன்படுத்தி, பன்மடங்கு வாடகை உயர்வை அவர்கள் வசூலிப்பதற்கான முயற்சி எடுத்துவிட்டார்கள். அதனாலே மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதனால் குத்தகை விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் குறைப்பதற்குரிய முயற்சியை ஆன்மீகவாதிகளைக் கலந்தாவது—ஏனென்றால் அவர்கள்தான் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலம் இருக்கிறது, ஆனால், கோயிலிலே பூஜை நடைபெறவில்லை. ஆறு கால பூஜை நடைபெறவேண்டிய கோயிலிலே ஒரு கால பூஜைகூட நடைபெற முடியவில்லை. ஆகவே, கோயிலுக்கு விளக்குப் போட முடியவில்லை. இப்படிச் சொல்கிறார்கள். ஆனால், நிலம் ஏக்கர் கணக்கிலே இருக்கிறது. நாங்கள் சொல்கிறபோது, அந்த நிலத்தை விற்று பணத்தை வங்கியிலே டெபாசிட் செய்து அதன்மூலமாக கோயில் நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்தலாம் என்று சொன்னால் அவர்கள் எதிர்க்கிறார்கள். அதனால், அவர்களை அழைத்துப் பேசி, அவர்களோடு இணக்கமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு என்ன மாற்றுக் கருத்தை அந்த ஆன்மீக

வாதிகள் சொல்கிறார்கள் என்று கேட்டு, அதன் மீதாவது தீர்வு காண்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும். கோடிக்கணக்கான ரூபாய்க்குரிய சொத்து கோயில் மடங்களுக்கு இருக்கிறது. பயன்படுத்த முடியாமல் அந்த நிர்வாகம் இருக்கிறது. அதேபோல, ஆன்மீகவாதிகள் விரும்புகிற அந்தக் கோயில் காரியங்களும் சிறப்பாக நடைபெற முடியவில்லை. இதை ஆழமாகப் பரிசீலனை செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று அன்போடு, பணிவோடு கேட்டுக்கொண்டு . . .

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது. மணி 12–00 ஆகிவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** வாய்ப்புக்கு நன்றிசொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. போளூர் ம. வரதன்:** தலைவர் அவர்களே ஒரேயொரு clarification. A point of clarification. Speaker, Sir. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) உட்காருங்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கைக்கு உள்ளே செல்வதற்கு முன்னால், கடந்த 1957 ஆம் ஆண்டு இந்தப் பேரவையிலே அடியெடுத்து வைத்து, சட்டமன்ற உறுப்பினராய், தமிழக அரசின் அமைச்சராக, ஐந்தாவது முறை முதலமைச்சராக இந்தச் சபையை அலங்கரித்து வருகிற நம்முடைய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த ஆண்டு, 50 ஆவது பொன்விழா ஆண்டு என்ற வகையில் அவர்களுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்தப் பொன்விழா வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறது. புதிய வரியில்லாத ஒரு வரவு–செலவு அறிக்கையை நம்முடைய நிதியமைச்சர், மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருப்பதற்கு எங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு நல்ல அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மே, ஜூன் மாதங்களில் தேர்தல்; விவசாயிகளுக்கான பயிர்க் கடன் வட்டி குறைப்பு; விவசாயத் தொழிலாளர் நல வாரியம் மீண்டும் செயல்படத் தொடங்கியது; அதற்காக 152 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது; பொது விநியோகத்தில் பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருட்கள் ரேஷன் கடைகளின் மூலம் வழங்க ஏற்பாடு செய்யவிருப்பது; அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அனைத்தும் on-line வர்த்தகத்தின்மூலம் நடைபெறுவது தடை செய்யப்பட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துவது; மன வளர்ச்சி குன்றிய அந்த மக்களை மதித்து, அவர்கள் நடத்திய மாநாட்டிலே கலந்துகொண்டு, அவர்களுடைய வாழ்க்கைக்கு ஆறுதலைத் தெரிவித்ததோடு, இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் மன வளர்ச்சி குன்றியோரின் நலன் காக்க ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அவர்களின் வாழ்விலும் வளம் சேர்க்க வழிவகுத்த நிதிநிலை அறிக்கை என்ற முறையிலே மனதாரப் பாராட்டுகிறோம்.

சிறுபான்மையினர் சமூக நலன் காக்க தனி இயக்குநரகம் அமைப்பது; தீண்டாமைக் கொடுமை ஒழிப்பு உள்ளிட்ட சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கான ஒரு குழு அமைப்பது; அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு, பல்வேறு சலுகைகள் வழங்கியது; அரசுத் திட்டங்கள் முறையாகச் செயல்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு அமைப்பது; இதுபோன்ற பல்வேறு நல்ல அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருப்பதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேநேரத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளையும் அரசினுடைய கவனத்திற்கும், இந்த அவையிலே பதிவு செய்யவும் விரும்புவது, கடந்த 16 வருடங்களாக எதிர்பார்க்கப்பட்டு தற்போது வந்திருக்கிற காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக, காவிரி டெல்டா பகுதி விவசாயிகள், இது அமலாக்கப்பட வேண்டுமென்று பெரும்

எதிர்பார்ப்போடு இருக்கக்கூடிய ஒரு சூழலில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே. அத் தீர்ப்பினுடைய சாதக பாதக அம்சங்களைப்பற்றி விரிவாக விவாதித்து, நடுவர் மன்றத்தில் சட்டப்படி உரிய காலத்தில் விளக்கம் கோரும் மனு தாக்கல் செய்ய, இந்த அரசு முடிவு எடுத்திருக்கிற நிலையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது.

அதேபோல, அண்டை மாநிலங்களோடு நதி நீர்ப் பிரச்சினையாக இருந்தாலும், வேறு பல பிரச்சினைகள் வருகிற நேரங்களிலும், சுமூகமான முறையில், ஒரு மோதல் நிலையை மேற்கொள்ளாமல், சுமூக நிலையிலே பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்கிற வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், குறிப்பாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அந்தச் செய்தியை, அதேநேரத்தில் தமிழ்நாட்டினுடைய நலன், அது முல்லைப் பெரியாறு அணையாக இருந்தாலும், பாலாற்றில் அணைகட்டும் பிரச்சினையாக இருந்தாலும், தமிழ்நாட்டு நலனை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஆகவே, சுமூகமான நிலையில் இப்பிரச்சினைகளுக்கு தமிழகத்தின் நலனைப் பெறுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அணுகுமுறை மிகச்சரியானது; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதை வரவேற்கிறது.

*பிற்பகல் 12–05*

அதேபோல தமிழ்நாட்டில் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு இருப்பதைப்போல ஒட்டுமொத்த ஜனத்தொகையில் 60 சதவீத மக்கள் வேளாண்மைத் தொழில், அதைச்சார்ந்த தொழிலை நம்பி வாழ்ந்துவரக்கூடிய ஒரு சூழ்நிலையில் உள்ளனர். ஆகவே, இந்த 60 சதமான தமிழ்நாட்டு கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயராமல், அவர்களுடைய பொருளாதார நிலை வளர்ச்சி பெறாமல், ஒட்டுமொத்த தமிழகம் வளர்ச்சி பெற முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சி மேம்பட இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதையும் நாங்கள் கவனத்தில்கொள்கிறோம்.

கடன் தள்ளுபடி, வட்டி குறைப்பு, இலவச மின்சாரம் உள்ளிட்ட விவசாயிகளுடைய நலனுக்காக, கிராமப்புற மக்களின்



நலனுக்காக, இந்த அரசு மேற்கொண்டு வருகிற பல நல்ல திட்டங்களோடு மேலும் சில நடவடிக்கைகளை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறது. குறிப்பாக, அந்த விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்யப்படுவது மிகமிக அவசியமாக இருக்கிறது என்பதை இங்கே வலியுறுத்த விரும்புகிறோம். அதேபோல, விவசாயிகள் வாங்கி பயன்படுத்துகிற விவசாயத்திற்குத் தேவையான இடுபொருள்கள் குறைந்த விலையிலே மானிய விலையில் அவர்களுக்குக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறோம்.

குறிப்பாக, தமிழகம் உள்பட இந்தியாவில் சமீப காலங்களில் வேளாண் உற்பத்தி என்பது கடந்தகால சராசரியைவிடக் குறைந்து வருகிறது என்கிற புள்ளிவிவரங்கள் கவலையளிப்பதாகும். ஆகவே, வேளாண் உற்பத்தியைப் பலப்படுத்துவதற்குக் கூடுதலான முதலீடுகள் செய்ய வேண்டிய தேவை இன்றைக்குக் கூடுதலாக இருக்கிறது. நீர் ஆதாரம் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. சமீபத்திலே தமிழகத்திலே செயல்படுகிற புவியியல் நிர்வாக அமைப்பு என்கிற ஓர் அமைப்பு ஆய்வு ஒன்றினை நடத்தி சில செய்திகளை வெளியிட்டிருக்கிறது. பரந்த நிலப்பரப்பும், வளர்ந்துவரும் மக்கள் தொகையும் தண்ணீருக்கான தேவையை அதிகப்படுத்துகிறது. அதைச் சந்திப்பது ஒரு பெரிய சவாலாக இப்போது மாறி வருகிறது. ஆகவே, அண்டை மாநிலங்களோடு நாம் நம்முடைய உரிமையைப் பெறுகிற அதே நேரத்தில், தமிழகத்தில் மழைக் காலங்களில், பருவக் காலங்களிலே பெய்கிற மழைமூலம் தமிழகத்திற்கு சராசரியாக 230 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதாக அந்த விவர அறிக்கை தெரிவிக்கிறது. அதிலே 33 சதமானம் தென்மேற்குப் பருவக்காற்றுமூலம் கிடைக்கிற மழையினாலும், 48 சதமானம் வடகிழக்குப் பருவக்காற்றுமூலம் கிடைக்கிற நீர் என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி மழைக்காலங்களிலே கிடைக்கிற 230 டி.எம்.சி. தண்ணீர், அதிலே 177.12 டி.எம்.சி. தண்ணீர் பல்வேறு வழிகளிலே கடலில் கலக்கிறது. நாம் பயன்படுத்திட முடியாத நிலை தமிழகத்தில் இன்றும் தொடர்கிறது. ஆகவே, நாம் பயன்படுத்துகிற நீரினுடைய அளவு வெறும் 52.88 டி.எம்.சி.தான். மழைக்காலங்களில் நமக்கு கிடைக்கிற தண்ணீரான 230 டி.எம்.சி.–யில் நாம் பயன்படுத்த முடிவது 52.88 என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நீரை, மழைக்காலங்களில் கிடைக்கின்ற நீரை, நாம் சேமித்து வைப்பதற்கான நடவடிக்கை என்பது மிகமிக அவசியமாகத்

தேவைப்படுகிறது. ஆகவே, இதனுடைய விளைவு நிலத்தடி நீர்மட்டம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறது.

அதேபோல, குளம், குட்டைகள், ஏரிகள் கால்வாய்கள் தூர் வாருவது மிக அவசியமானது. கடந்த 1989–1991 ஆம் ஆண்டில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் 30 ஆண்டு, 40 ஆண்டு காலம் கவனிக்கப்படாமல் இருந்த ஏரிகள், அதேபோல குளம் குட்டைகள் அப்போது தூர் வாரப்பட்டதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறது. இடையிலே அது என்ன காரணங்களாலோ போதிய அளவில் நடைபெறவில்லை. ஆகவே, மீண்டும் 1989–1991 வருட காலத்திலே நடைபெற்றதைப்போல, ஏரிகளை, ஓடைகளைத் தூர் வாருவது, குளம் குட்டைகளைத் தூர் வாருவது, நீரைத் தேக்கி வைப்பதற்காக, ஆறுகளிலும் ஓடைகளிலும் தடுப்பணைகள் கட்டுவது போன்ற நடவடிக்கைகளின்மூலம் நீராதாரத்தை நாம் பெருக்க முடியும். அதன்மூலம், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த முடியும். அதற்காக கொஞ்சம் செலவானாலும் அரசு முதலீடு செய்ய முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–10

குறிப்பாக, கோவை, ஈரோடு மாவட்டங்களில், இதனால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிகளுக்குக் கீழே இப்போது சென்று கொண்டிருக்கிறது. ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தால், ஆயிரம் அடி வரையிலே தண்ணீர் கிடைக்காத நிலைமை அந்த மாவட்டங்களிலே, இப்போதும் பல பகுதிகளிலே இருக்கிறது, பாசனப் பகுதி தவிர மற்றப் பகுதிகளில்.

குளம் குட்டைகளுக்கு நீர் தேக்குகிற அவினாசி–அத்திக்கடவுத் திட்டம் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அங்கு வந்து அந்தக் குளங்களை எல்லாம் பார்வையிட்டுகூட வந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தல் நேரத்திலே அன்னூர், அவினாசி போன்ற பகுதிகளில், கோவை உட்பட பேசுகின்ற நேரங்களிலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த மக்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி நிறைவேறும் என்ற பெரும் நம்பிக்கையோடு, எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள்.



ஆகவே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லையென்றாலும், வருகிற ஆண்டிலாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்த அறிக்கையிலே ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனத் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, மீன்வளம், கால்நடைத் துறை ஆகிய துறைகள் சேர்ந்து கூட்டாகச் செயல்படுத்த உள்ள நிலவளத் திட்டத்திற்கு உலக வங்கி ரூ.2,547 கோடி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதாக ஒரு செய்தி இதிலே வந்திருக்கிறது. ஆகவே, எந்த வகையில் அந்தத் தொகையை வழங்குகிறார்கள். கடனாக வழங்குகிறார்களா, அதற்கு ஏதாவது நிபந்தனைகள் இருக்கின்றனவா, அந்த நிபந்தனைகள் நம்முடைய நலனைப் பாதிக்கக்கூடிய அளவில் இருந்தால்—ஏனென்றால் பல இடங்களில் அவர்கள் கடன் வழங்குகிறபோது, உலக வங்கி பல பாதிப்பு உருவாகக்கூடிய நிபந்தனைகளையெல்லாம் விதிக்கிறது. ஆகவே—அந்த விவரங்களைக்கூட இந்த அவையிலே வைப்பது அனைவரும் அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, சில்லரை வணிகத்திலே அன்னியக் கம்பெனிகள், இந்திய பெரும் கம்பெனிகள் ஈடுபடுவதால் ஏற்படுகிற பாதிப்புகள் குறித்து, இங்கே பேசிய நம்முடைய பா.ம.க. உறுப்பினர் அருமை நண்பர் வேல்முருகன் அவர்களும், அதேபோல, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசிய உறுப்பினர் திரு. வேல்துரை என்று கருதுகிறேன் அவர்களும், மற்ற சிலரும் இங்கே அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, அவர்கள் சொல்லிய அந்தக் கருத்து சரியானது. அதே நேரத்தில் நான் இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புவது, கடந்த 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மொராக்கோ நாட்டிலே ஏற்படுத்தப்பட்ட GATT ஒப்பந்தம். அந்த GATT ஒப்பந்தத்தினுடைய விளைவால், அந்த பின்னணியிலேதான் இந்த நிலைமை ஏற்பட்டு வருகிறது என்பதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் தலைமையிலே செயல்பட்ட காங்கிரஸ் அரசு, இந்த GATT ஒப்பந்தத்திலே கையொப்பமிட்டது. அந்த GATT ஒப்பந்தத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற பல்வேறு அம்சங்கள் அனைத்திற்குள்ளும் நான் போகவில்லை. சுகாதாரம், கல்வி உள்பட பல்வேறு பிரச்சினைகள் அந்த GATT ஒப்பந்தத்திலே வருகின்றன.

அதிலே ஒன்று சில்லரை வர்த்தகத்திலே பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் அந்த GATT ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. ஆகவே, நான் இங்கே கேட்க விரும்புவதெல்லாம், அன்றையதினம் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த ஒப்பந்தம் அங்கே கையெழுத்தானது. மொராக்கோ நாட்டிலே ஒப்பந்தம் கையொழுத்தானபோது, இந்தியாவில் அதை எதிர்த்து கருப்பு நாளாக அனுஷ்டித்தது இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டும்தான் என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த அருமை நண்பர்கள், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் பலரும் அதைப்பற்றி இங்கே பேசுவது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

அதேபோல, சமீபத்திலே நம்முடைய மத்திய அரசினுடைய திட்டக் கமிஷன் துணைத் தலைவர் அலுவாலியா அவர்கள் சென்னையிலே நடந்த Madras Management Association என்கிற அமைப்பிலே அவர் உரையாற்றுகிறபோது, சில்லரை வணிகத்திலே அன்னிய முதலீட்டை நியாயப்படுத்திப் பேசியதையும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்தான் அந்த GATT ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டவரும்கூட. 'உலகம் முழுவதும் இந்த நவீன அங்காடிகள் தவிர்க்க முடியாதது, ஆகவே, உலகம் முழுவதும் இந்த நவீன அங்காடிகள் உருவாகி வருகின்றன, இதனால் சிறு விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை' என்று சென்னையிலே நம்முடைய இந்திய நாட்டினுடைய திட்டக் கமிஷன் துணைத் தலைவர் அலுவாலியா அவர்கள் குறிப்பிட்டுப் பேசி இருப்பதையும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன்.

*பிற்பகல் 12-15*

அதேபோல, மிகச் சிறந்த பொருளாதார நிபுணராக விளங்கிய முன்னாள் மத்திய வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த நம்முடைய பெருமதிப்புக்குரிய மறைந்த முரசொலி மாறன் அவர்கள் இந்த ஆபத்துக்களை எதிர்த்து இடதுசாரிக் கட்சிகளோடு கலந்து விவாதித்து, அந்தக் கருத்துகளையும் உள்ளடக்கி தோஹா மாநாட்டிலே இந்தக் கொள்கை எவ்வளவு ஆபத்தானது என்பதை அந்த மாநாட்டிலே வலியுறுத்தி அவர் வாதாடியதையும், அதனாலே அந்த வளர்ந்த நாடுகள் எந்த முடிவுக்கும் வரமுடியாமல் அந்த மாநாடு கலைந்த



நிகழ்ச்சியையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இப்போதும் மனதிலே வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட முயற்சிகளும் நடந்ததை நாங்கள் வரவேற்கிறோம், அன்றைக்கும் அதை வரவேற்றோம். ஆகவே, இப்போது நான் இங்கே இவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இன்றைக்கு இந்த அன்னியக் கம்பெனிகள் Wal-mart போன்ற பெரிய கம்பெனிகள் நம்முடைய தமிழ்நாடு உள்ளிட்ட பல நகரங்களிலே வந்து சில்லரை வணிகத்திலே ஈடுபடுவதை இங்கே எதிர்த்துப் போராடுகிற எல்லா இயக்கங்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும், இப்போது டெல்லியிலே இடதுசாரிக் கட்சிகள் இதற்காக நாங்கள் ஓயாமல் போராடிக் கொண்டிருக்கிறோம். அங்கே நீங்கள் எங்களோடு இணைந்து நின்று போராடினால், தடுக்கக்கூடிய இடம் அதுதான். ஆகவே, அங்கே தடுக்க வேண்டிய இடத்திலே விட்டுவிட்டு, இங்கே போராடுவது என்பது, நடைமுறையிலே நாம் சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். போராடக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால், தடுக்க வேண்டிய இடம் அங்கே. ஆகவே, அந்தவகையிலே நீங்கள் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கோவிந்தசாமி அவர்கள் சொல்லுகின்ற கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுடைய ஆலோசனைக்கு இணங்க, எங்கள் பாராளுமன்றத்தினுடைய உறுப்பினர்கள் அத்தனைபேரும் சேர்ந்து இதுபோன்ற சில்லரை விற்பனை நிலையங்களை, நகரங்களாக இருந்தாலும், கிராமங்களாக இருந்தாலும் இதை நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடாது என்கிற எதிர்ப்புணர்வை பாராளுமன்றத்தில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அதேபோல் இந்தச் சில்லரை வணிகம் நகரத்தில் தொடங்கி சிறு கிராமங்களில் வண்டி வாகனங்கள்மூலமாகவும் அது விற்பனைக்கு வருகிறது. அதனால் மிகப் பெரிய பேராபத்து இருக்கிறது என்கிற செய்தியை எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள்மூலமாக இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம்

என்ற தகவலையும் மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அதேபோல Wal-mart ஒரு மிகப் பெரிய வர்த்தக நிறுவனம், அதனுடைய தலைமைப் பீடம் அமெரிக்காவில் இருக்கிறது. அந்த அமெரிக்க நாட்டிலேயே Wal-mart கம்பெனி இந்தச் சில்லரை வணிகத்தில் ஈடுபடக் கூடாது என்று அந்த மக்கள் கடுமையான போராட்டம் செய்ததிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அது பின்வாங்கி வருகிறது. ஏற்கெனவே வட கொரியா, ஜெர்மன் போன்ற நாடுகளில் இருந்து அந்த மக்களால் விரட்டி அடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு வலுவான சந்தை வேண்டும். நூறு கோடி மக்கள் வாழ்கிற இந்தியா அதற்குப் பொருத்தமானது என்று Wal-mart போன்ற மிகப் பெரிய பஹாசுரக் கம்பெனிகள் கருதுகின்றன. ஆகவே, எந்த வகையிலும் அதற்கு வாய்ப்பளிக்கக்கூடாது. அதை எதிர்த்து நாம் எல்லோரும் இணைந்து நின்று குரல் கொடுக்க வேண்டும். இங்கே போராடுவது மட்டுமல்ல, டெல்லியிலே அதைத் தடுத்து நிறுத்துவதற்காக அனைவரும் இணைந்து செயலாற்ற முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசிய காங்கிரஸ் நண்பர்கள், அதற்காக ஒரு தீர்மானத்தை இந்தச் சபையிலே கொண்டு வந்தால்கூட எல்லோரும் சேர்ந்து ஆதரித்து நிறைவேற்றி வைப்பதற்குக்கூட நாம் அனைவரும் முன் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, தமிழகத்திலே பல மாவட்டங்களில் கடுமையான வறட்சி இப்போதே தலைதூக்கத் தொடங்கி இருக்கிறது. இன்னும் வருகிற காலங்களிலே இது அதிகமாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை நாம் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, ஈரோடு மாவட்டம் தாராபுரம் நகரத்தில் ஒரு குடம் குடிக்கிற தண்ணீர் 3 ரூபாய்க்குக் கிடைக்கமாட்டேன் என்கிறது. ஆகவே, அந்த அளவுக்குக் குடிநீர்ப் பிரச்சினை என்பது முக்கியப் பிரச்சினையாக மாறி வருகிறது. ஆகவே, இதை கவனத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு இதில் தலையிட்டு, வறட்சியிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும், குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல தீண்டாமைப் பிரச்சினை சம்பந்தமாக இந்த அறிக்கையிலே பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. கடந்த 10 ஆண்டுக் காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் போன்ற அந்த ஊராட்சி மன்றங்களிலே தேர்வு செய்யப்பட்ட தலைவர்கள், சில பேர் தேர்வுக்கே தயார் இல்லாத நிலை, தேர்வு செய்தாலும் பதவியிலே தொடர முடியாத நிலைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சி முற்றுப்புள்ளி வைத்து, ஆதி திராவிட மக்கள் இப்போது அந்தப் பதவியிலே தொடர்வதற்கு, நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக அதை வரவேற்கிறது.

*பிற்பகல் 12-20*

அதேநேரத்தில், ஏற்கெனவே நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, இப்போதும் தமிழ்நாட்டிலே அங்கொன்றும், இங்கொன்றுமாக ஆதி திராவிட ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குப் பல்வேறு இடையூறுகள் நிகழ்ந்து வருகின்றன. ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் செய்த ஓர் ஆய்விலே தெரிவித்திருப்பது, தமிழ்நாட்டினுடைய ஊராட்சி மன்றங்களிலே தேர்வு செய்யப்பட்டிருக்கிற ஆதி திராவிட தலைவர்கள் சிலர் கொலை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக, அந்த ஆய்வறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறது. அதனுடைய தொடர்ச்சியாக திருநெல்வேலி மாவட்டத்திலே இரண்டு ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்வும் நடந்திருக்கிறது. அதனுடைய ஒரு பகுதியாக, பழனியிலே வாகரை என்கிற ஊராட்சியினுடைய தலைவர், பல்வேறு நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். அமைச்சர் அவர்கள் இங்கே, 'அவரே மறுத்துவிட்டார்' என்று சொன்னார். எந்த அளவு என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அந்த ஊராட்சித் தலைவர், தான் அச்சுறுத்தப்படுவதாகவும், நாற்காலியில் அமர்ந்து பணியாற்ற விடாமல் தடுக்கிறார்கள் எனவும் அவரால் காவல் நிலையத்திலே புகார் செய்யப்பட்டு, காவல் நிலையம் அதை வழக்காகப் பதிவு செய்திருக்கிறது. பிறகு எப்படி அவர் மாறினார் என்பது நமக்குத் தெரியவில்லை. அவராக மாறினாரா, மாற்றப்பட்டாரா என்பதும் தெரியவில்லை. அந்த மாவட்டத்தைச் சார்ந்த அதோடு இணைந்திருக்கிறது. அதையும் சேர்த்து ஆய்வு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் சேர்த்து ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சமூகச் சீர்திருத்த நடவடிக்கையினுடைய பணிகள் இன்னும் முழுமையடையவில்லை என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது சரியானது; நாங்களும் அதை ஏற்றுக்கொள்கிறோம். தமிழ்நாட்டிலே பல்வேறு இடங்களிலே சமீபத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தீண்டாமை என்ன வடிவங்களிலே இருக்கிறது என்பதைப்பற்றி ஆய்வு செய்கிறபோது— அதை முழுவதும் நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. தொகுத்து தேவைப்பட்டால், நம்முடைய அரசின் கவனத்திற்குக்கூட அதை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அப்படி நடத்தப்பட்ட ஓர் ஆய்விலே— அரசாங்கத்தினுடைய ஒரு பள்ளியில் ஆதி திராவிட மக்களுக்கு, மாணவனுக்கு என்று தனி குடிநீர்ப் பானை, மற்ற சமூகத்தைச் சார்ந்தவர்களுக்குத் தனியாக குடிநீருக்கான ஒரு பானை என்கிற நிலைமை, அரசுப் பள்ளியிலேயே நடக்கிற நிகழ்வு இப்போதும் தமிழகத்திலே சில இடங்களிலே இருக்கிறது. நான் அதனுடைய பெயர், பட்டியல், ஊர் விவரம் உட்பட மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழகம் முழுவதும் நாங்கள் ஓர் ஆய்வை நடத்திக்கொண்டிருக்கிறோம். அதிலே இப்படிப்பட்ட பல செய்திகள், நாம் வேதனைப்படத்தக்க பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அரசு அதிலே உரிய முறையிலே தலையிட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் அதில் தலையிட்டு, தீர்வு காண நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையோடு அவருடைய கவனத்திற்கு இதை நாங்கள் கொண்டுவர விரும்புகிறோம்.

அடுத்ததாக, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கொறடா, அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் நான் சொல்ல, குறித்து வைத்திருந்த செய்திகளை, பெரும்பகுதியை அவர் சொன்னார். நிலக் கொள்ளை சம்பந்தமான செய்தி. உண்மையிலேயே அவர் சொல்லியிருக்கிற அந்தச் செய்திகளை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே நானும் இங்கே வழிமொழிகிறேன். அதோடு, அவரால் சொல்ல விடுபட்ட ஒன்றிரண்டு செய்திகளை இங்கே கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் நில விற்பனையிலே ஒரு வரைமுறையை உருவாக்கவில்லையென்று சொன்னால், இது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக எதிர்காலத்திலே தமிழகத்தில் மாறுவதற்கான ஆபத்து இருக்கிறது. இப்படி வெளிநாட்டு முதலீடு மட்டுமல்ல. இந்தியாவிற்குள் இருக்கக்கூடிய கருப்புப்



பணத்தையெல்லாம் வெள்ளையாக மாற்றுவதற்கு இந்த நில விற்பனைதான் ஒரு கருவியாக இப்போது தமிழகத்திலே பயன்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். இன்றையதினம், பல்வேறு பெரிய மனிதர்கள் தாங்கள் வாங்குகிற கருப்புப் பணத்தையெல்லாம் 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை 40 இலட்சம் ரூபாய் என்று வாங்குவர். அந்தப் பணத்தை அதிலே போட்டு, அந்தக் கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றுவதற்கு, கணக்கிலே கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இப்பொழுது நடைபெறுகிறது என்பது ஒன்று. இரண்டாவதாக சில பெரிய நபர்கள் வங்கிகளிலே மோசடி செய்வதற்காக அல்லது கூடுதலான கடன் வாங்குவதற்காக அந்த நிலத்தினுடைய மதிப்பிற்குக் கூடுதலாக அங்கே கிரயப் பத்திரம் செய்கிறார்கள். நிலத்தைப் பதிவு செய்கிறார்கள். அப்படிப் பதிவு செய்வதன்மூலமாக அவர் வங்கியிலே கொடுத்து, லோன் வாங்கி, அவர் தொழில் நடத்துவார் அல்லது வேறு ஏதாவது செய்கிறார். அதற்காக இந்த நிலத்தினுடைய மதிப்பைக் கூடுதலாகக் காட்டி, நிலப் பதிவு செய்வது என்பது, சாதாரண மக்கள் பதிவு செய்யப் போனால், ஒரு சென்ட், 2 சென்ட் விலைக்கு வாங்க, சாதாரண மக்கள் செல்கிறபோது, சமீபத்தில் அந்தப் பெரிய கம்பெனிக்காரர் வாங்கியிருக்கிற, பதிவு செய்த அந்தத் தொகைக்குத்தான் பத்திரம் வாங்க வேண்டுமென்று சொல்லப்படுகிற ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, சென்னை மட்டுமல்ல, தமிழகத்தினுடைய வளர்ந்து வருகிற பெரு நகரங்களில் எல்லாம் இந்தப் பிரச்சினை இப்போது பூதாகரமாக மாறி வருகிறது. ஆகவே, தமிழக அரசு கவலையோடு இந்தப் பிரச்சினையை அணுகி, இதற்கான ஒரு வரைமுறையை உருவாக்கவில்லையென்றால், சாதாரண மக்கள் மிகப் பெரிய பாதிப்பிற்கு எதிர்காலத்திலே ஆளாகக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

அடுத்ததாக, ஒரு செய்தியை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கோவை மாநகரில், சிங்காநல்லூர் நகரத்தில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அப்போது முதல்வராக இருந்தபோது, 1972 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன்— வருடத்திலே ஏதாவது தவறு இருந்தால் திருத்திக்கொள்கிறேன்— நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்து, அதிலே பல நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. அப்படிக் கையகப்படுத்தப்பட்ட

அந்த நிலங்களின் ஒரு பகுதி சிங்காநல்லூர் நகரத்திற்குள்ளே வருகிறது. அரசாங்கம் அந்த நிலத்தைக் கையகப்படுத்திய பிறகு, அரசு ஆவணங்களிலே மட்டும் அது அரசு நிலம் என்று பதிவாகிவிட்டது. ஆனால், அது வெளியிலே மக்களுக்குத் தெரியாது. அந்த நிலச் சொந்தக்காரர் அதைச் சாதுர்யமாகப் பயன்படுத்தி, அரசு மிச்ச நிலம் என்று அரசு கையகப்படுத்தி அரசு ஆவணங்களிலே பதிவு செய்யப்பட்டபிறகு, அந்த நிலம் அவர் சொந்த நிலம் என்று சைட் போட்டு வீட்டு மனைகளாக விற்பனை செய்துவிட்டார்.

20 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் அந்த இடத்தை அந்தச் சொந்தக்காரரை நம்பி பணம் கொடுத்து வாங்கினார்கள். வாங்கி இப்போது வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். சின்னக் கட்டடம், பெரிய கட்டடம் என்று பல கட்டடங்கள் இருக்கின்றன. ஆனால், இப்போது சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த, வீட்டுமனைகளை முறைப்படுத்துவதற்கான அந்த உத்தரவின் மூலம் வளர்ச்சிக் கட்டணம் - development charge - கட்டி, அந்தப் பகுதியை அங்கீகாரமான பகுதியாக மாற்றிக்கொள்வது என்று இந்தச் சட்டத்தின்படி கார்ப்பரேஷனுக்கு பணம் கட்டச் சென்றால், இது அரசாங்க நிலம். இதற்கு நீ எப்படி பணம் கட்டலாம் என்று அந்த மக்களைத் திருப்பியனுப்பக்கூடிய நிலை. இரண்டாயிரம் குடும்பங்களுக்கு மேல் அதிலே வசிக்கிறார்கள். ஆகவே, அதில் அந்த மக்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. அரசாங்கம் அந்த நிலத்தை, உச்ச வரம்புச் சட்டத்தின்மூலம் எடுத்த நிலத்தை, இது அரசு நிலம் என்று அங்கே எந்த அறிவிப்பும் அன்றைக்குச் செய்யாத காரணத்தினாலே, அந்த நிலச் சொந்தக்காரர் இவருக்குத்தான் அந்த இடம் சொந்தம் என்று நம்பி அவர் விற்பனை செய்ததை, பணம் கொடுத்து வாங்கி, 20 ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிறார்கள்.

இப்போது மாநகராட்சிக்குப் போனால், அந்த இடம் அரசுக்குச் சொந்தமானது, உங்களிடத்திலே அந்தக் கட்டணம் வாங்க முடியாது என்று மறுக்கிறார்கள். அந்த மக்கள் உண்மையிலேயே பதறிப் போயிருக்கிறார்கள். சமீபத்திலே போன வாரம் நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு பொங்கலூர் பழனிச்சாமி அவர்களையும், என்னையும், கோவை தங்கம் அவர்களையும் அழைத்து அங்கே ஒரு பெரிய கூட்டத்தை நடத்தி, இந்தக் குறைகளை தயவுசெய்து நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். அவருடைய காலத்திலேதான் இந்தச் சட்டம் வந்ததாகச் சொல்லப்படுகிறது. எவ்வளவோ நன்மைகளைச்



செய்யக்கூடிய முதலமைச்சர், இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை அவர் ஏற்படுத்தித் தர நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கருணையோடு இதைப் பரிசீலித்து ஒரு நல்ல தீர்வை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று உங்களை அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, கிராமப்புற மக்கள் மத்தியில் இப்போது வறுமை என்பது, குடிசையிலே வாழ்கிற மக்கள், கிராமப்புறங்களிலே இருக்கிற சாதாரணக் கூலி விவசாயிகள் போன்றவர்களிடம் தொடர்ந்து அதிகரித்து வருகிற சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையை, நகரப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பல்வேறு தரகர்கள் அந்த வறுமையைப் பயன்படுத்தி, அந்த மக்களை ஏமாற்றி, அவர்களுடைய கிட்னியைக்கூட விலை கொடுத்து வாங்கக்கூடிய அளவிற்கான நிலைமை இப்போது தமிழ்நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்பட்டு வருகிறது. அது பெரிய செய்தியாகவும் மாறியிருக்கிறது. ஆகவே இதுபோன்ற வறுமையைப் பயன்படுத்தி, மக்களுடைய வாழ்வாதார உடலினுடைய ஓர் அங்க அவயவத்தையே விலைக்கு வாங்கி விற்பனை செய்து கொள்ளையடிக்கிற அந்தக் கும்பல் கடுமையான முறையிலே நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே ஏற்கெனவே செய்திகளாக வந்தன. தற்போது அது என்ன நிலையில் இருக்கிறது என்பதை இந்த அரசு இந்த அவைக்குத் தெரிவித்தால் உதவியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்த நிதிநிலை அறிக்கையிலே மிக அத்தியாவசியமான, சாதாரண மக்களுக்குப் பயன்படக்கூடிய 27 பொருட்களுக்கு 12.5 சதம் வரி விதிப்பிலிருந்து 4 சதமாக வரி குறைக்கப்பட்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது, பாராட்டுகிறது. நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இப்படி ஏழை மக்களுக்கு, நடுத்தர மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று நீங்கள் அறிவித்திருக்கிற இந்த வரிச் சலுகை, உண்மையிலேயே வரவேற்கத்தக்க நல்ல செய்தி. ஆனால், இந்த வரிச் சலுகை முழுமையாக சம்பந்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேர்வதற்கான ஓர் உத்தரவாதத்தை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் இந்த நேரத்திலே வைக்கின்றேன். ஏனென்றால், பழையபடி அந்த வர்த்தகச் சூதாடிகள் இந்த வரிக்

குறைப்பை அவர்கள் இலாபத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளாமல், அது சாதாரண மக்களுக்குப் போய்ச் சேர்கிறவகையிலே தொடர்ச்சியாக அரசு கண்காணிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, திருப்பூர் தொகுதி சம்பந்தமாக ஒரு சில செய்திகளைச் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் தொகுதியினுடைய வளர்ச்சிக்காக உண்மையிலேயே பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். திருப்பூர் தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை நான் அதற்காகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–30*

முதல் கூட்டத்தொடரிலேயே நான் உரையாற்றுகிறபோது, திருப்பூரிலே இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளிலேயிருந்து வருகிற மக்கள், போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள் என்று சொன்னபோது, அதை ஏற்றுக்கொண்டு உடனடியாக அங்கே கூடுதல் பேருந்துகள் விடவேண்டுமென்று சபையிலே ஆணையிட்டீர்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்; பட்டியல் கேட்டார். 40 பேருந்துகள் வேண்டுமென்று பட்டியல் கொடுத்தேன். நீங்கள் சொன்ன ஒரே மாதத்தில், உடனடியாக 20 பேருந்துகளை விடுவதற்கான நிகழ்ச்சி நடந்தது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வருகைதந்து, அந்தப் புதிய பேருந்துகளை, வழித்தடங்களைத் தொடங்கி வைத்துப் பெருமை சேர்த்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நான் 40 பேருந்துகள் கோரி பட்டியல் கொடுத்தேன். நான் அமைச்சரைப் பார்க்கிறபோதெல்லாம், விரைவிலே உங்களுடைய quota நிறைவேறும் என்று சொல்வார். அந்தவகையில் இப்போது மீண்டும், அந்த 40 பேருந்துகளில், பாக்கியிருக்கிற 20 பேருந்துகளோடு மேலும் 10 பேருந்துகளைச் சேர்த்து, 30 புதிய வழித்தடங்களிலே பேருந்துகளை இயக்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். வருகிற 15 ஆம் தேதி, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே மீண்டும் வருகை தந்து, பாக்கியுள்ள அந்தப் பேருந்துகளையும் அவருடைய திருக்கரத்தாலே



தொடங்கி வைக்க அழைத்திருக்கிறேன்; அவரும் வருவதாக அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இப்படி பல நல்ல திட்டங்களை திருப்பூர் நகரத்திற்குக் கொடுக்கிறபோது, இந்த 30 bus–களிலே பட்டியல் எடுத்தால், ஒரு bus–கூட திருப்பூருக்குள் ஓடுகிற bus இல்லை. எல்லாம் பல மாவட்டங்களுக்குப் போகிற 30 bus–கள்தான் அவை. ஆகவே, உங்கள் எல்லோருக்கும் சேர்ந்ததுதான். திருப்பூருக்கு மட்டும் கொடுத்துவிட்டார் என்று நீங்கள் யாரும் சங்கடப்பட வேண்டியதில்லை. உங்களுடைய ஊரிலேயிருந்து வருகிற ஜனங்கள், திரும்பி உங்கள் ஊருக்கு வருவதற்காகக் கிடைத்திருக்கிற ஒரு வாய்ப்புதான் அது. ஆகவே, தேனி, பெரியகுளம், அந்தப் பக்கத்திலுள்ள தென் மாவட்டங்கள் எல்லாவற்றிற்குமான பேருந்துகள்தான் அவை. அந்த வகையிலே, என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடங்கி வைத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், வேகமாக இந்தப் பணிகளை நிறைவேற்றித் தந்த நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், திருப்பூர் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, திருப்பூரிலே நிலவும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து நான் நேற்றைய முன்தினம் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு போனேன். திருப்பூரிலே வேகமாக வளர்ந்து வருகிற ஜனத்தொகையின் காரணமாக, குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், அங்கே நிலத்தடி நீர் சாயப்பட்டறைத் தண்ணீராலே முழுமையாகக் கெட்டுவிட்டது. இப்பொழுது, குழாய்த் தண்ணீரை நம்பித்தான் அந்த மக்கள் வாழ வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, முதல் திட்டம், இரண்டாவது திட்டம், மூன்றாவது திட்டம் என்று போட்டுக் கொண்டேயிருக்கிறோம். ஆனாலும், ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டேயிருப்பதால், அந்தப் பற்றாக்குறை என்பது தொடர்ந்து நீடித்தே வருகிறது.

1950–54–ல், திருப்பூரிலே முதல்முறையாக உருவாக்கப்பட்ட முதல் குடிநீர்த் திட்டம்; 50 ஆயிரம் ஜனத்தொகைக்காக உருவாக்கப்பட்ட ஒரு திட்டம். ஒரு சிறிய குழாயின்மூலமாக தண்ணீர் வருவதற்காக, அப்போது இருந்த தேவைக்குத் தகுந்தாற்போல அந்தத் திட்டம் போடப்பட்டது. ஆகவே, அந்தக் குழாயை அகற்றிவிட்டு, அதே முதல் திட்டத்தை, ஒரு விரிவான திட்டமாக மாற்றி, திருப்பூரிலுள்ள குடிநீர்ப்

பிரச்சினையைப் போக்கவேண்டும். ஏனென்றால், மாநகராட்சியாக மாற்றுகிற அறிவிப்பை எல்லாம் தந்திருக்கிறீர்கள்; விரைவிலே அது மாறவிருக்கிறது. அந்த வகையிலே, அந்த முதல் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி, விரிவான ஒரு திட்டமாக மாற்றி, திருப்பூர் பகுதியினுடைய குடிநீர்த் தேவையை நிறைவேற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அவருடைய மானியக் கோரிக்கையிலே அதற்கான ஒரு நல்ல செய்தியைத் தெரிவிப்பார் என்ற நம்பிக்கையோடு நான் இங்கே இந்த அவையினுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்ததாக, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சரிடத்திலே நான் பல செய்திகளைச் சொல்லியிருக்கிறேன். திருப்பூரினுடைய தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவகையிலே மின்சார வினியோகம் என்பது அங்கேயில்லை. எனக்கு தினசரி தொலைபேசியிலே வருகிற செய்தி, 'இன்றைக்கு மூன்று மணி நேரம் மின்சாரம் இல்லை; இரவிலே 2 மணி நேரம் மின்சாரம் இல்லை. எப்படியாவது இரவிலாவது மின்சாரம் கொடுக்க நடவடிக்கை எடுங்கள்; மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே சொல்லுங்கள்; மின் துறை அமைச்சரிடத்திலே சொல்லுங்கள்' என்று மாறி மாறி தொலைபேசியில் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. நான் அவரிடத்திலே சொன்னபோது, அவரும் 9 துணை மின் நிலையங்களைத் திருப்பூரிலே அமைக்க அனுமதியும் தந்தார்; நான் அதையும் மறுக்கவில்லை. ஆனால், அந்தப் பணிகளெல்லாம் உரிய வேகத்தில் நடக்காத காரணத்தினால், மின் பற்றாக்குறை உள்ள ஒரு பகுதியாக இப்போது அது மாறியிருக்கிறது. அதுமட்டுமல்ல; இதை அரசியலாகவும் சில பேர் பயன்படுத்துகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொல்வது உண்மை. திருப்பூருக்குத் தேவையான மின்சாரம் தமிழகத்திலே இருக்கிறது. புதிய துணை மின் நிலையங்கள் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்தப் பணி சில இடங்களிலே முடிவுற்றது; சில இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், transformers புதிதாகப் பொருத்தப்படவில்லை. 14 ஆயிரம் transformers வாங்க வேண்டுமென்று அரசாங்கம் முயற்சி செய்து, 4 ஆயிரம் transformers-தான் வாங்கியிருக்கிறோம். இன்னும் ஓரிரு மாதங்களிலே, 2 ஆயிரம்



transformers வரும். Transformers வந்தால் அந்தக் குறைபாடு நிச்சயம் இருக்காது, அது போக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தசாமி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** 5 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். நான் மேலும் ஒரு செய்தியை அவரிடத்திலே நேற்று எழுத்துபூர்வமாகக் கொடுத்திருக்கிறேன். திருப்பூரிலே, நம்முடைய அரசு வந்ததற்குப்பிறகு, ஏற்கெனவே பழுதடைந்திருந்த பாதைகள் எல்லாம் இப்பொழுது மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், அதற்காகப் பெருமுயற்சி எடுத்து, அந்தப் பாதைகள் எல்லாம் இப்பொழுது சீரமைக்கப்பட்டு வருகின்றன. குண்டும் குழியுமாக இருந்த அந்த ரோடுகளைச் சீரமைத்து, உயரமாக ஆக்கப்பட்ட காரணத்தினாலே, ஏற்கெனவே இருக்கிற மின்சாரக் கம்பிக்கும் ரோட்டுக்கும் இடையிலே இருக்கிற இடைவெளி குறைந்து கன இரக வாகனங்கள் அதிலே செல்லுகிறபோது, இரண்டு கம்பிகளுக்கிடையே மோதல் வந்ததென்று சொன்னால், தீப்பற்றி எரிகிறது. சமீபத்திலே தட்டு ஏற்றிச் சென்ற ஒரு லாரி தீப்பற்றி எரிந்தது. வைக்கோல் ஏற்றிக்கொண்டு சென்ற லாரி அதேபோல் தீப்பிடித்து எரிந்தது. ஆகவே, ஒன்று, தேவைக்கேற்ப அந்தக் கம்பங்கள் முழுவதையும் மாற்றி உயரம் ஆக்க வேண்டும் அல்லது அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு underground cable line அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அவரிடத்தில் நான் கேட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–35*

ஐந்து மாநகராட்சிகளுக்குத் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். திருப்பூரும் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு விட்டது. சட்டச் சிக்கல் காரணமாக கொஞ்சம் தள்ளிப் போகிறது. அதையும் மாநகராட்சியாகவே கருதி கேபிள் இணைப்பு போடுகிற பணியை இப்போதே நீங்கள் தொடங்கி திருப்பூரை விபத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இப்போது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வெளியே சென்றுவிட்டார். இருந்தாலும் அதைக்

கவனமாகக் கேட்பார் என்ற முறையிலே, அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவதற்காக ஏற்கெனவே அவராலே அறிவிக்கப்பட்டு, இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் பயன்பட்டு வருகிறது. ஆகவே, அதிலே 6 மாதம் என்று ஏற்கெனவே இருந்ததில் பெரும்பகுதியானவர்கள் பணம் கட்டி அந்தப் பகுதியை முறைப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. ஒரு 3 மாதம் கால அவகாசம் கொடுத்தால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மற்றவர்களும் பணம் கட்டி அந்தப் பகுதியில் குடியிருப்பு மனைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கும். அதைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, (குறுக்கீடு) உங்களுக்காகத்தான் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே ஆரம்பத்தில் தொடங்கப்பட்டு, இப்போது திருப்பூரிலே செயல்பட்டு வருகிற, இந்தியாவிலேயே ஒரே ஒரு கூட்டுறவு நிறுவனத்தால் நடத்தப்படுகிற ஒரு கல்வி நிலையம், அதுவும் பெண்கள் கல்வி நிலையம். அந்தக் கல்வி நிலையம், தனியாருடைய சுயநிதிக் கல்லூரி என்ற list-ல் தான் இன்றுவரை அது இருக்கிறது. ஆகவே, அரசு உதவி பெறும் கல்லூரிகள் என்ற பட்டியலில் அதற்கான உதவிகளோடு அரசு உதவிபெறும் கல்லூரியாக அது மாற்றப்படும் என்று அன்றைக்கே சொன்னார். பெயரை வேண்டுமானால் மாற்றித் தந்து விடலாம் என்று சொன்னார். ஆகவே, பெயரை மட்டுமல்ல. அதற்கான உதவிகளோடு அந்த ஒரே கல்லூரி இருக்கிறது, கூட்டுறவிலே. அந்த ஒன்றை அரசு உதவி பெறும் கல்லூரியாகத் தயவுசெய்து உங்களுடைய மானியக் கோரிக்கையிலேயே நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பாரதியார் பல்கலைக்கழக வளாகத்திற்கு உட்பட்ட, ஒரே அரசு பெண்கள் கல்லூரி திருப்பூரிலே இருக்கிற L.R.G. பெண்கள் கல்லூரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். L.R.G. பெண்கள் கல்லூரி. அந்தக் கல்லூரி தொடங்கிய காலத்திலிருந்து அங்கு எந்தக் கல்வி அமைச்சரும் அதற்குள் கால் வைத்ததில்லை. நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை கடந்த ஆண்டு நான் அங்கே அழைத்துச் சென்றேன். அந்தக் கல்லூரி



வளாகத்தையெல்லாம் பார்வையிட்டோம். அந்த ஒரே கல்லூரி போதுமான எந்த வசதியும் இல்லாமல் கேட்பாரற்றுக் கிடக்கிறது பின் பக்கத்திலே புதர் பரவிக் கிடக்கிறது. மாணவிகள் மதிய உணவு அருந்துகிறபோது, பன்றிகளோடு சண்டையிட வேண்டியிருக்கிறது. வகுப்பிலே பாடம் நடத்துகிறபோது, பாம்பு வந்து படம் எடுத்து ஆடுகிறது. இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலையிலே இப்போது அந்தக் கல்லூரி இருக்கிறது. நீங்கள் இந்தக் கல்லூரியினுடைய நிலையை நேரிலே பார்த்திருக்கிறீர்கள். தயவுசெய்து உங்களுடைய மானியக் கோரிக்கையிலே அதற்காகக் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்து, அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து தரவேண்டும், கணினி வசதி உட்பட. சாதாரண ஏழைக் குழந்தைகள் மட்டுமே படிக்கிற ஒரு கல்லூரி என்ற முறையிலே அதற்கான உதவிகளைச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன். (குறுக்கீடு) என்ன வேண்டும் திரு. வேல்துரை, என்ன சொல்லுங்கள்?

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசுகிறபோது என்னுடைய பெயரைச் சொல்லி, online trading – சில்லறை வர்த்தகத்திலே உள்ள கருத்துகளை நான் ஒத்துக்கொண்டதாகச் சொன்னார். நான் இப்பொழுதும் சொல்கிறேன். நான் ஒரு மக்கள் பிரதிநிதி. ஒரு நாட்டிலே சட்டங்கள் இயற்றப்படுகிறபொழுது, சில நல்ல விஷயங்களைச் செய்கிறபொழுது சில தடைகள் வரும். அதேபோல், துணை நகரம் நமது நாட்டுக்கு அவசியம். அதே மாதிரி விமான நிலையம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை, நீங்கள் ஒரு கருத்தைத்தான் point ஆகச் சொல்ல வேண்டும். அதைச் சொல்லிவிட்டு நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பா. வேல்துரை:** துணை நகரம், அது மக்களைப் பாதிக்கிறது என்று சொல்கிறபோது, அதை நாம் ஒத்தி வைத்துவிட்டோம். அதேமாதிரி விமான நிலைய விரிவாக்கம் சொன்னோம். அதிலே மக்களுக்குப் பாதிப்பு வருகிறது என்று சொன்னவுடனே அதை விட்டுவிட்டோம். அதேபோலத்தான், இந்தத் திட்டம் வருகிறபொழுது

மக்களை, சில்லறை வியாபாரிகளைப் பாதிக்கிறது என்று சொன்னால், அதை நாம் மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம். நான் ஒரு மக்கள் பிரதிநிதி என்ற முறையிலே இதை வலியுறுத்துவது என்னுடைய கடமை என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர் சொன்னதை நல்லது என்றுதான் இங்கே சொன்னேன். ஆகவே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் அந்த ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது. இப்போது அந்தப் பாதிப்பு வந்திருக்கிறது. இருந்தாலும், காங்கிரஸ் நண்பர்கள் இங்கே பேசியது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கிறது. ஆகவே, இதைத் தடுப்பதற்கான போராட்டம் இங்கேயல்ல. டெல்லியிலே நாம் எல்லோரும் சேர்ந்து நடத்துவோம், வாருங்கள் என்றுதான் அழைத்தேன். எந்தக் குறையும் அவர்மீது நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. செங்குட்டுவன். (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். காங்கிரஸ் கட்சியினுடைய நிலைப்பாடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

பிற்பகல் 12–40

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம்"*

காண்பதற்கு எளியவனாய், கடுஞ்சொல் கூறாதவனாய் இருந்தால், அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகமே புகழும் என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க தமிழ்ச் சூரியனாய் தகதகக்கும் எங்கள் தலைவரைப் போற்றி, தமிழகத்தில் எந்தத் தலைவருக்கும் இல்லாத பெருமையைப் பெற்று ஐந்தாவது முறையாக தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவையும் பெற்று, தமிழக முதல்வராய்ப் பொறுப்பேற்று அமர்ந்து இரண்டாவது முறையாக வரியில்லா பட்ஜெட்டை அளித்து தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்த்துக்களோடு



அமர்ந்திருக்கும் முத்தமிழறிஞர், 50–வது ஆண்டு சட்டமன்றப் பொன் விழாவைக் கொண்டாட இருக்கின்ற உலகம் போற்றும் உத்தமத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களை வணங்கி, அவை முன்னவர் மாண்புமிகு நிதியமைச்சர் எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் எதிர்காலத் தமிழகம், ஓய்வறியா உதயசூரியன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கள் தளபதிக்கும் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தை ஆட்சி செய்யும் 13–வது சட்டப் பேரவையின் 5–வது கூட்டத்தொடரில் என்னை மூன்றாவது முறையாகப் பேச அனுமதி அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நாட்டின் எல்லாத் துறைகளிலும் 'சம தர்மம்', 'சம ஈவு', 'சம உடைமை', 'சம ஆட்சித் தன்மை', 'சம நோக்கு', 'சம அனுபவம்' இருக்க வேண்டும், ஏற்பட வேண்டும், ஏற்படுத்தப்பட வேண்டும், ஏற்பட்டே தீர வேண்டும்." இது தந்தை பெரியார் முழக்கம்.

"தம்பி, மக்களிடம் செல், மக்களோடு வாழ், மக்கள்மீது அன்பு காட்டு, மக்களுக்காகச் சேவை செய், மக்களிடமிருந்து கற்றுக்கொள், மக்களோடு சேர்ந்து திட்டமிடு, அவர்களுக்கு என்ன தெரியுமோ அங்கிருந்து பணியைத் தொடங்கு, அவர்களிடம் என்ன இருக்கிறதோ அதைக் கொண்டு படைத்திடு" இது பேரறிஞர் அண்ணாவின் முழக்கம்.

"என் பாதை சுயமரியாதைப் பாதை, தமிழர் நலன் காக்கும் பாதை, தமிழ் மொழி காக்கும் பாதை, பெரியார் பாதை, அண்ணாவின் பாதை, அறவழிப் பாதை, அமைதிப் பாதை, ஜனநாயக நெறிமுறைப் பாதை, பல முனைகளிலிருந்து பயமுறுத்தினாலும் அந்தப் பாதையிலிருந்து மாறமாட்டேன்" இது எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய முழக்கம்.

இந்த மூன்று முழக்கங்களையும் ஒன்றோடொன்று இணைத்துப் பார்த்தால் எவ்வளவு ஒற்றுமை என்பது விளங்கும். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் யாத்துத் தந்த கொள்கை நெறி வழுவாமல் ஆட்சி செய்யும் நம் தலைவர் கலைஞர் அவர்கள், சட்டப்

பேரவையிலே பொன்விழா கொண்டாட இருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை என்பது 'திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும்' மாண்புமிகு கலைஞர் தந்த நிதிநிலை அறிக்கையைப் 'படிக்கப் படிக்கத் திரண்டு வருதே திட்டங்கள்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிதிநிலை அறிக்கை 'தேனில் ஊறிய பலாச்சுளை' போல, மா, பலா, வாழை என்ற முக்கனிகளைச் சுவைத்தால் எப்படி இருக்குமோ அதுபோல 'அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்' போல் திட்டங்கள் போடப் போடக் குறையாத கலைஞர் அரசின் கருவூலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியே தருவேன் என்று மீண்டும் மீண்டும் வாக்குறுதிகளைத் தந்து எங்களுடைய இரண்டு மாவட்ட மக்களுடைய வயிற்றிலே பால் வார்த்திருக்கிறார்கள். அதற்காக தலைவர் கலைஞருக்கு மீண்டும் மீண்டும் எங்களது மாவட்ட மக்களின் சார்பிலே நாங்கள் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த நிதிநிலை அறிக்கையை அறிஞர் பெருமக்கள் பாராட்டியிருக்கிறார்கள்; எங்களுடைய கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் பாராட்டியிருக்கிறார்கள்; நடுநிலையாளர்கள் பாராட்டியிருக்கிறார்கள்; 'இந்து' பத்திரிகை பாராட்டியிருக்கிறது; 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை பாராட்டியிருக்கிறது; இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லாத் தலைவர்களும் பாராட்டுகிறார்கள். ஆனால் இப்படிப் பாராட்டப்படுகிற இந்த நிதிநிலை அறிக்கையைக் கண்டு— தலைவர் கலைஞர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். அவர்களுடைய முழக்கங்களிலே, ஒரு முழக்கம் என்னவென்று சொன்னால் 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்றார். ஆம், தலைவர் கலைஞர் அவர்களே! "இந்த நாட்டிலே உள்ள அடித்தட்டு மக்கள், என்றைக்கு மகிழ்ச்சியடைகிறார்களோ, என்றைக்குச் சிரிக்கிறார்களோ, அவர்கள் சிரிக்கும் சிரிப்பில்தான், நான் இறைவனைக் காண்பேன்" என்று பேரறிஞர் அண்ணா அன்றைக்குக் கனவு கண்டாரே, அந்தக் கனவு; அண்ணா கண்ட கனவு இன்று, தலைவா! உங்களது ஆட்சியில்தான் நனவாகிறது.



ஆம்.--ஏழைகள் சிரிக்கிறார்கள், வரியில்லா பட்ஜெட்டைப் பார்த்து; விவசாயிகள் மகிழ்கிறார்கள், விவசாயக் கடன் தள்ளுபடியைப் பார்த்து; மாணவர்கள் மகிழ்கிறார்கள், கல்விக் கட்டணம் குறைப்பைக் கண்டு; குழந்தைகள் சிரிக்கிறார்கள், இலவச மூன்று முட்டை உண்டு. பட்டதாரிகள் மகிழ்கிறார்கள், மலைக்கும் தொழில் வளர்ச்சி பார்த்து; அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மகிழ்கிறார்கள், அளித்திட்ட அளவில்லாச் சலுகை பார்த்து; தொழிலாளர்கள் மகிழ்கிறார்கள், 20 சதவிகித போனஸ் பெற்று; ஏழைத் தாய்மார்கள் அகமகிழ்கிறார்கள், கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குப் பெற்று; 18 வயது இளம் பெண்களும் அகமகிழ்கிறார்கள், திருமண உதவித் திட்டம் பெற்று; கர்ப்பிணித் தாய்மார்கள் அகமகிழ்கிறார்கள், 6,000 ரூபாய் நிதி உதவி பெற்று; வேலையில்லாப் பட்டதாரிகள் சிரிக்கிறார்கள், மாதம் ரூ.300 உதவிப் பணம் பெற்று; தாய்மார்கள் பூரிப்படைகிறார்கள், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி பெற்று; அடுப்பூதிய பெண்கள் அகமகிழ்கிறார்கள், இலவச கேஸ் அடுப்பு பெற்று; அரவாணிகளும் வாழ்த்துகிறார்கள், சமுதாயத்திலே அந்தஸ்து பெற்றதால்; மன நலம் குன்றியோரும் சிரிக்கிறார்கள், அறிவித்த உதவித் தொகை பெற்றிட; முதலீட்டாளர்களும் ஓடோடி வருகிறார்கள், தொழில் தொடங்க தொந்தரவுகள் இல்லா ஆட்சியிலே; சிறுபான்மைச் சமூகத்தினரும் மனம் உருகுகிறார்கள், உங்கள் இரக்க குணம் கண்டு; அதனால் அமைத்த தனி இயக்குநரகத்தைக் கேள்விப்பட்டு; நிலமற்ற ஏழை விவசாயிகள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள், இரண்டு ஏக்கர் இலவச நிலம் பெற்று.

ஆக, பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு, தலைவர் கலைஞர் அவர்களே, உங்கள் ஆட்சியில் இத்தனை சாதனைகளையும் இப்போது பார்க்கப் பொறுக்கமுடியாமல்தான், வயிற்றெரிச்சல் காரணமாக, கூச்சலிடுகிறார்கள்; கூப்பாடு போடுகிறார்கள்; எழுத்துப் பிழை காண்கிறார்கள்; கூட்டல், கழித்தல் கணக்குப் போடுகிறார்கள்.

பிற்பகல் 12—45

அண்ணா பெயராலே கட்சி நடத்துவோரே, மாற்றுக் கட்சியினரை மதிக்கும் பண்பு, தலைவர்களுக்கு மட்டுமல்லாமல், கட்சி முன்னணியினருக்கும் ஏற்பட வேண்டும். இந்த உயர்ந்த கருத்துக்குச் சொந்தக்காரர் பேரறிஞர் அண்ணா. அண்ணா பெயராலே கட்சி நடத்துவோரே, பண்பாடுகளைப் பாடை ஏற்றாதீர்கள். மரபுகளை மரணக் குழியிலே புதைக்காதீர்கள். நாகரீகத்தைத் தீயிட்டுக்

கொளுத்தாதீர்கள். உங்கள் அகராதியிலே மரபு என்பது, வெறும் மண்ணாங்கட்டியா? மரியாதை என்பது மமதையின் மறுபொருளா? கலாச்சாரம் என்பது, காலடியிலே படும் தூசிகளா? கண்ணியம் என்பது, காலடியில் மிதிபடும் காலணியா? பண்பாடு என்பது, பைத்தியங்களுக்குத் தரப்படும் வரவேற்பா? நாகரீகம் என்பது, நீங்கள் அறியாததா, புரியாததா? 50 ஆண்டுக்காலம் சட்டமன்றத்திலே பணியாற்றிய முதல்வர் கலைஞர் அவர்களுடைய குடும்பத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். Dance போடவா என்கிறீர்கள். மோசடி என்கிறீர்கள். கேலி பேசுகிறீர்கள். கிண்டல் பேசுகிறீர்கள். தமிழை விற்பவர் என்கிறீர்கள். மேற்கு வங்கத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். ** என்கிறீர்கள். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே? உட்காருங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** எங்கள் தோழமைக் கட்சி பா.ம.க.—வை 'மரம் வெட்டிகள்' என்கிறீர்கள். கம்யூனிஸ்ட்களை 'உண்டியல் தூக்கி' என்கிறீர்கள். எங்கள் தளபதியை 'குட்டித் தலைவர்' என்கிறீர்கள். திட்டத்தைப் பற்றிப் பேசாமல் எழுத்துப் பிழை பற்றிப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன் உங்களை உட்காரச் சொல்லியிருக்கிறேன். உங்களுக்கும் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. டி. செங்குட்டுவன்:** கூட்டல் கழித்தல் பற்றிப் பேசுகிறீர்கள். 'காவிரியின் வரலாறு தெரியுமா' என்று பேசுகிறீர்கள். உங்களைப் பார்த்து நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கலர் டி.வி., கேஸ் அடுப்பு, கடன் தள்ளுபடி. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டேன். ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் சொன்ன அந்த ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. செங்குட்டுவன்:** கலர் டி.வி., கேஸ் அடுப்பு, கடன் தள்ளுபடி தி.மு.க.வினருக்குத்தானா என்கிறீர்கள். சவாலாகச் சொல்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அ.தி.மு.க.வினர் சலுகைப் பட்டியலில் இருந்தால் நீங்கள் பதில் சொல்லுங்கள். இல்லையேல் நாங்கள் பதில் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) ஒரே வீட்டிற்கு நான்கு போலி ரேஷன் கார்டுகளைக் காட்டி கலர் டி.வி. பெற்றது யார் என்பதை அடையாளம் காட்டவேண்டுமா? விவசாயக் கடன் தள்ளுபடி சலுகை அதிகம் பெற்றது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்புள்ள அந்த வார்த்தையை நீக்கச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது. செங்குட்டுவன், பேசுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** விவசாயக் கடன் தள்ளுபடி சலுகை அதிகம் பெற்றது, அ.தி.மு.க.வா? தி.மு.க.வா? 2 ஏக்கர் இலவச நிலம் அ.தி.மு.க.வினர் பெற்றிருந்தால் மீண்டும் திருப்பித் தந்து விடுகிறீர்களா? போலி திருமணப் பத்திரிகை கொடுத்து 15 ஆயிரம் பெற்றவர் யார் என்பதை அடையாளம் காட்டலாமா? அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அ.தி.மு.க ஊராட்சித் தலைவர்கள் பெற்றிருந்தால்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செங்குட்டுவன், யாரையும் குறை சொல்லாமல் கருத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) என்னங்க, நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன், அல்லவா? யாரையும் குறை சொல்லாமல், கருத்தை மட்டும் சொல்லச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், என்னவென்று சொல்லுங்கள். திரு. செங்குட்டுவன், one minute, one minute.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

பிற்பகல் 12–50

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கு யார் சப்தம் போடுவது?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சட்டமன்ற மரபுக்கு மாறாக எதிர்க்கட்சியிலே அமர்ந்துகொண்டிருக்கின்ற தலைவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஓர் உறுப்பினரைப் பேசவைத்து, எங்களையெல்லாம் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, மரபுக்கு மாறாக (குறுக்கீடுகள்) மரபுக்கு மாறாக, மரபுக்கு மாறாக. . .

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, இல்லை. நீங்கள் சொல்லுங்கள், ஆனால், உள் நோக்கத்தோடு பேசாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள், யாரைப் பேசச் சொல்லவேண்டும் என்பது என்னுடைய உரிமை. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்ல முடியாது. உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) யாரைப் பேசச் சொல்லவேண்டும், யாரைப் பேசச் சொல்லவேண்டாம் என்பது என்னுடைய உரிமை. அதில் நீங்கள் தலையிட முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) ரொம்ப ஆர்டராக இருக்கிறது. (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிஷம், முடித்துவிடுகிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேச ஆரம்பித்துவிட்டால் உறுப்பினர் உட்காரவேண்டும். அதுதான் மரபு. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் அ.தி.மு.க. கொறடா அவர்களோடு பேசும்போதுகூட அ.தி.மு.க. சார்பிலே யாராவது பேசுவதாக இருந்தால்கூட நீங்கள் வாதத்தைத் தொடங்கி வையுங்கள் என்று கேட்டேன். நாளைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒன்றரை மணி நேரம் பேசவிருக்கின்ற காரணத்தினால் இன்றையதினம் நாங்கள் பேசவில்லை என்று சொன்னார். மிச்சம் இருக்கக்கூடிய ஒரு பதினைந்து நிமிடத்தை ஆளுங்கட்சி சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கிறோம்



என்று சொன்னேன். அவர் பேசிய வார்த்தையிலே ஒன்று தவறாகப் பேசினார் என்பதை அவைத் தலைவர், அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார். அதற்குப் பிறகும் இப்பொழுது பிரச்சினை எழுப்புவது சரியல்ல. ஏதாவது தவறாகப் பேசியிருந்தால் அல்லது சட்ட விரோதமாகப் பேசியிருந்தால், கண்ணியக்குறைவாகப் பேசியிருந்தால், இந்த அவையினுடைய தலைவர் அதை நீக்குவதற்குக் கடமைப்பட்டவர். தயவுசெய்து ஆளுங்கட்சிக்காரர்கள் பேசவே கூடாது என்று சொல்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள் செங்கோட்டையன், காலையிலே என்னுடைய அறையிலே வைத்து, 'செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர்கள் யாராவது பேசுகிறார்களா' என்று நான் உங்களிடம் கேட்டேன். நீங்கள் என்னிடம் (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எங்கள் உறுப்பினர் யாரும் பேசவில்லை, நாளைக்குப் பேசுகிறார்கள் என்று சொல்லிவிட்டீர்கள். அதன்பிறகு, ஆளுங்கட்சி—(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) ஏன், இதுதான் மரபா? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எதற்கு உங்களுக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் என்றெல்லாம் எதற்கு? ஒரு தலைவர் என்றிருந்தால், அவருக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) திரு. செங்குட்டுவன், யாரையும் குறைசொல்லிப் பேசாமல், உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய இரண்டே இரண்டு பிரச்சினைகளை மட்டும் பேசி, நான் முடித்துக்கொள்கிறேன் என்று உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலே ஓடுகின்ற ஒரே ஒரு நதி தென்பெண்ணை ஆறு. அந்தத் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கில்தான் 1955 ஆம் ஆண்டு கே.ஆர்.பி. அணை கட்டப்பட்டது. அந்த கே.ஆர்.பி. அணையினுடைய அன்றைய கொள்ளளவு 52 அடி. ஆனால், இப்போது அந்த கே.ஆர்.பி. அணையிலே 20 அடிக்குமேல் தூர் நிரம்பி, ஓராண்டுக்கு சுமார் 25 டி.எம்.சி.-க்கு மேற்பட்ட தண்ணீர் வீதம் தொடர்ந்து ஆண்டுதோறும் கடலிலே கலந்துகொண்டிருக்கிறது. 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்டது அந்த கெலவரப்பள்ளி அணை. மாண்புமிகு கலைஞர் ஆட்சியில்தான் பல்வேறு வழக்குகளுக்கு

அப்பாற்பட்டு, நீங்கள் உத்தரவிட்டு அந்த நீதிமன்ற வழக்குகளையெல்லாம் முடிவுக்குக் கொண்டுவந்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த கெலவரப்பள்ளி அணையைத் திறந்து விவசாயத்திற்குக் கொண்டுவந்து பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, கெலவரப்பள்ளி அணைக்கும், கே.ஆர்.பி. அணைக்கும் இடையிலே இருக்கக்கூடிய தூரம் ஒரு 70 கிலோ மீட்டர். ஆகவே, அந்த 70 கிலோ மீட்டர் அளவிற்கு இருக்கக்கூடிய அந்த தூரத்திலே இப்போது வீணாகக் கடலிலே கலந்துகொண்டிருக்கின்ற அந்த 25 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்று சொன்னால் கிருஷ்ணகிரி, சூளகிரி ஒன்றியத்திலே கொலுசுமடுவு என்ற இடத்திலே மூன்று ஆறுகள் ஒன்றாக இணையக்கூடிய இடத்திலே ஒரு சிறிய அணையைக் கட்டித் தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—55*

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு கரும்பு பயிரிடும் விவசாயிகள் அதிகப்படியான கரும்பை பயிரிடக்கூடிய சூழ்நிலைக்கு இப்போது வந்திருக்கிறார்கள். எங்களுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்திலே எந்தவிதமான தனியார் ஆலைகளோ அல்லது அரசு சர்க்கரை ஆலைகளோ கிடையாது. அதன் காரணமாக, பக்கத்திலே தருமபுரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஆலைகளுக்கு எங்களுடைய விவசாயிகள் பயிரிடக்கூடிய அந்தக் கரும்பினை எடுத்துச் செல்ல அனுமதி தர மறுக்கிறார்கள். அதன்காரணமாக, அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதித்திருக்கிறார்கள். ஆகவே, உங்கள் காலத்திலே, தலைவர் கலைஞர் அவர்களே, உங்கள் காலத்திலே, ஒரு சர்க்கரை ஆலையை எங்களுடைய மாவட்டத்திலே நிறுவித் தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு திட்டம் ஒன்று. ஒன்றே ஒன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த முன்னாள் முதல்வர் அதற்கு முன்னால் நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சி. அன்றைய கலைஞர் ஆட்சியிலேதான், பர்கூர் பகுதியிலே இருக்கக்கூடிய படேதலா கால்வாய்க்கு ஆய்வுப் பணி நடைபெற்றது. அதற்குப் பிறகு வந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கால்வாய்ப் பணிக்கு



கொஞ்சம் நிதியை ஓதுக்கி, அந்தப் பணியை ஆரம்பித்தார்கள். நாங்கள் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கால்வாய்ப் பணி பாதியோடு நிற்கிறது. இப்போது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்பேரிலே நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் அளவிற்கு நிதியை ஒதுக்கி அந்தக் கால்வாயைச் சீரமைப்பதற்காக உத்தரவு தந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது நிலைமை என்னவென்று சொன்னால், அந்தக் கால்வாய்க்கு நீர் தரக்கூடிய பெரிய ஏரி முழுவதும் தூர் நிரம்பி இப்பொழுது பயன்படுத்தப் முடியாத சூழ்நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அந்தப் பெரிய ஏரிக்குத் தண்ணீர் தரக்கூடிய மார்க்கண்டேயன் ஏரி காய்ந்து போய் இருக்கிறது. ஆகவே, தென்பெண்ணையாற்றின் குறுக்கிலே, ஒரு தடுப்பணையைக் கட்டி, அங்கிருந்து ஒரு மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய குப்பச்சிபாறையிலே இருக்கக்கூடிய அந்தத் தடுப்பணையின்மூலமாக பெரிய ஏரிக்குத் தண்ணீர் விட்டால் பெரிய ஏரியிலிருந்து, படேதலா கால்வாய்மூலமாக, நூற்றுக்கு மேற்பட்ட ஏரிகளுக்குத் தண்ணீர் சென்று அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தலைவர் கலைஞர் அவர்களையும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் பணிவோடு கேட்டுக்கொள்வதுடன், இந்த பட்ஜெட்டை நான் மனமார வரவேற்றுப் பாராட்டி, நன்றி சொல்லி, விடைபெற்றுக்கொள்கிறேன், நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007—2008 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு'

என்பார் வள்ளுவர். ஆக, படை, குடி, உணவு, அமைச்சர், நண்பர், கோட்டை என்று உறுப்பு ஆறினையும் உடையவன் அரசருள் சிங்கம் போன்றவனாவான் என்று வள்ளுவர் பெருமைப்படச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அந்தவகையில் நம்முடைய தமிழகத்தை முன்னேற்றப் பாதையிலே அழைத்துச் சென்று கொண்டிருக்கிற, இந்தப் பேரவையை அலங்கரித்துக் கொண்டிருக்கிற, நம்முடைய சிங்க நிகர் அரசனாக வீற்றிருக்கின்ற கலைஞர் அவர்களின் வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்களின் உற்ற நண்பராக, தமிழகத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவராக விளங்கிக் கொண்டிருக்கின்ற, இனமானப் பேராசிரியர் அவர்களால் இரண்டரை மணி நேரம் வாசிக்கப்பட்டது இந்த நிதிநிலை அறிக்கை. அவருடைய வயது முதிர்ந்தாலும்கூட, உடல் ஆற்றலால், இரண்டரை மணி நேரம் நின்று கொண்டு எல்லோருக்கும் புரியக்கூடிய வகையிலே, பொருள் புரிய பிரித்துப் படித்த தன்னுடைய சொல் ஆற்றலால், இரண்டரை மணி நேரம் நமக்கு நிதிநிலை அறிக்கையை வாசித்தளித்த பெருமைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் உரையின் மேலே சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

இப்படி ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு, நிதியமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கின்ற இதிலே, நல்லவற்றை எல்லாம் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் பெருமையோடு இங்கே பாராட்ட விரும்புகிறேன். சுட்டிக்காட்டவும் ஆசைப்படுகிறேன். நல்லவற்றைப் பாராட்டக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காக, தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக, தமிழ் மொழியின் புத்துயிருக்காக, சிலவற்றை இங்கே கூறி வருகிற வேளையில், இது அரசுக்குச் சொல்லக்கூடிய ஆலோசனைகளே தவிர, குறை சொல்வதற்காக அல்ல என்ற நிலையையும் இங்கே சுட்டிக்காட்டி,

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்"–

என்ற வள்ளுவனுடைய கூற்றுக்கு ஏற்ப, பாட்டாளி மக்கள் கட்சி அரசுக்கு அவ்வப்போது நல்ல ஆலோசனைகளைச் சொல்லி வருகிறது என்பதை நான் மீண்டும் ஒருமுறை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–00*

இந்தத் தமிழக சட்டப் பேரவைக்கு மிகப் பெரிய வரலாறு இருக்கிறது. வரலாறு, தனி வரலாறு. இந்திய நாட்டிலே தொடங்கப்பட்ட சட்டப் பேரவையில் முதலாவது சட்டப் பேரவை இந்த தமிழக சட்டப்



பேரவை. இதற்கு மிகப் பெரிய சிறப்பு. இதிலே அலங்கரித்த தலைவர்கள் மரபு, கண்ணியம், விதிமுறைகளை எல்லாம் மீறாமல் நடந்த வரலாறு தனிச் சிறப்புக்குரியது என்று இந்திய நாட்டுத் தலைவர்களாலே பாராட்டப்படுகிறது. ஆகவே, இப்படி உருவாக்கப்பட்ட இந்த சட்டப் பேரவை, 1920 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அன்று உருவாக்கப்பட்டதற்குப் பிறகு, நிலைத்த வரலாற்றைப் பெற்ற இந்த சட்டப் பேரவைக்கு இருக்கிற வரலாற்றைப்போல, இந்த சட்டமன்றத்தில் 5–வது முறையாக முதலமைச்சராக இருக்கிற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும் தனிச் சிறப்பு இருக்கிறது, தனி வரலாறு இருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெருமையை, சிறப்பை கடந்த நிதிநிலை அறிக்கைக் கூட்டத்திலே நான் சொன்னேன்.

இதுவரையிலே தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் 1957–லேயிருந்து 2006 வரையிலே நடைபெற்ற, அவர் நின்ற அத்துணைத் தேர்தல்களிலேயும், 11 தேர்தல்களிலே தோல்வியுறாமல் மகத்தான வெற்றியைப் பெற்ற தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இப்படி 11 முறை வெற்றி பெற்றவர். இந்திய அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு இரண்டாவது பொதுத் தேர்தலிலே போட்டியிட்டவர், 1957–லே. 1952 தேர்தலிலேயும் போட்டியிட்டிருந்தால், கட்டாயம் வெற்றி பெற்றிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அன்று கட்சியினுடைய நிலைப்பாடு போட்டியிடக் கூடாது என்ற காரணத்தால் அவர் போட்டியிடவில்லை. இடையிலே ஒரு முறை சட்டமன்றத்தினுடைய மேலவை உறுப்பினர். ஆக, அது தவிர 1957, 1962, 1967, 1971, 1977, 1989, 1991, 1996, 2001, 2006 என்று 11 பொதுத் தேர்தல்களிலேயும் மகத்தான வெற்றி பெற்ற மூத்த தலைவர் இந்த சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் அலங்கரித்த பெருமைக்குரிய தலைவருக்கு பொன்விழா காணக்கூடிய இந்த வேளையிலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, பொன்விழா காணுகிற தலைவருக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சம் நிறைந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டுகிற இந்த வேளையில், இப்பொழுது பொன்விழா கொண்டாடுவதாக சட்டமன்றத்திலே அறிவிப்பு. இதிலே குடியரசுத் தலைவர் அவர்கள் உரையாற்றுவதாக அறிவிப்பு வந்திருக்கிற இந்த வேளையில் நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன், எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள்

சொன்ன தகவலையும் இங்கே சேர்த்துச் சொல்கிறேன். இந்த விழாவை அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு மூத்த தலைவர், இந்தியாவில் 50 ஆண்டுகாலம் நாடாளுமன்றவாதியாக சட்டமன்றத்தில் பணியாற்றியவர் யாரும் இல்லை என்ற பெருமைக்குரிய தலைவர் விழாவை எல்லா அரசியல் கட்சிகளும், தமிழ்நாட்டு மக்களும் சேர்ந்து கொண்டாட வேண்டும். இது தமிழினத்திற்குப் பெருமை, தமிழ்நாட்டிற்குப் பெருமை என்பதை நான் இங்கே முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1984–லே மேலவை உறுப்பினர். மேலவை உறுப்பினராக இருந்த நேரத்திலேதான் முன்னாள் முதலமைச்சராக இருந்த அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் மேலவையைக் கலைக்க முற்பட்டார். கலைக்க முற்பட்ட நேரத்தில் தலைவர் அவர்கள் சொன்னது, 'நான் இந்த அவையில் இடம்பெற்றிருக்கிற காரணத்தால் மேலவை கலைக்கப்படுகிறது என்று சொன்னால், இந்த மேலவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியைவிட்டு நான் விலகிக்கொள்கிறேன்' என்று பெருமையோடு சொல்லிக்கொண்டவர் தலைவர். ஆகவே, இப்பொழுது மேலவை மீண்டும் வருமா, வராதா என்று கேள்விக்குறியாக இருக்கிற வேளையில் அந்த முடிவு அவரையே சாரும். என்ன செய்வார் என்பது தெரியவில்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டு, ஆகவே, மேலவையிலும் பணியாற்றியவர், இங்கே பேரவையிலும் பணியாற்றியவர் என்ற பெருமைக்குரிய தலைவரை மீண்டும் ஒருமுறை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுகிறேன்.

அதைப்போல, இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுகின்றபொழுது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒன்றை நாங்கள் இங்கே தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஒரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பு, தமிழ்நாட்டினுடைய, இந்த மாநிலத்தினுடைய பொருளாதார ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த ஆய்வறிக்கையைச் சமர்ப்பிக்கின்ற நேரத்தில் தமிழ்நாட்டினுடைய நிதியாதாரம் என்ன, பொருளாதார நிலைமை என்ன என்பதை இந்த மன்றமும், மாமன்ற உறுப்பினர்களும், தமிழ்நாட்டு மக்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தாலேதான் அந்தப் பொருளாதார ஆய்வறிக்கை, அதாவது Economic Survey Report என்று சொல்வார்களே, அதை நீங்கள் வரக்கூடிய காலங்களிலாவது நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.



பிற்பகல் 1–05

அதேபோல, கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு நல்ல திட்டங்கள், கூடுதலான நிதி ஒதுக்கீடு, மிகப் பெரிய சாதனை அறிவிப்புகளை எல்லாம் நீங்கள் அறிவித்தீர்கள், நிறைவேற்றினீர்கள்; வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனாலும்கூட, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது எந்த வகையிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது, எவ்வளவு நிறைவேறி இருக்கிறது, நிறைவேற்றாமல் விடுபட்டவை எவை என்பதை நாங்களும் அறிந்துகொள்ள, நாட்டுமக்கள் அறிந்துகொள்ள, நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கை Action Taken Report – ATR என்று சொல்வார்களே, அதையும் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு நல்ல அம்சங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. நல்ல அம்சங்கள் என்று சொல்கிற வேளையில், தந்தை பெரியார் பிறந்த மண்தான் சமூக நீதிக்கு வித்திட்ட மண். ஆக, சமூக நீதியை நாம் பெறுவதற்கு முழுமையான முயற்சிகளில் ஈடுபட்டாலும்கூட, நாம் இதுவரையிலே முற்றாகப் பெற முடியவில்லை. ஆகவே, தமிழக அரசு முழுமையான சமூக நீதியைப் பெறுவதற்கு முயற்சிக்கும் என்ற நல்ல அறிவிப்பு முதலமைச்சர் அவர்களால், நிதி அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, சமூக நீதிக்காக குரல் கொடுக்கின்ற இந்த அரசின் அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறோம்.

அடுத்து, காலத்திற்கு ஏற்ப அரசமைப்புச் சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அன்றைய மக்கள் தேவை, நாட்டினுடைய நிலைமைக்கு ஏற்ப அரசமைப்புச் சட்டம், மக்கள்தொகைப் பெருக்கம், மக்களுடைய தேவைகள், எதிர்கொள்ள வேண்டிய சவால்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், காலத்திற்கேற்ப அரசமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற அரசின் அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் வேண்டுமென்று சொல்கிற அதேவேளையில், உலகப் பேரறிஞர் அண்ணல் அம்பேத்கர் அவர்களால் வலியுறுத்தப்பட்ட கருத்துகள் முற்றிலும் மாறாமல் இடம்பெற வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, மதிப்புக் கூட்டு வரியிலேயிருந்து நிறையப் பொருட்களுக்கு வரி விலக்கு; சிலவற்றிற்கு வரிக் குறைப்பு; சத்துணவில் வாரத்திற்கு 3 முட்டை; விவசாயிகளின் கடன்களுக்கான வட்டி 7 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைப்பு; பருப்பு, எண்ணெய் வகைகள் போன்ற சமையல் பொருள்கள், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் விற்பனை; இதையெல்லாம் வரவேற்கிறோம்.

மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றப்படும், முதல்கட்டமாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம்; மிகப் பெரிய வரவேற்பு. கடந்த காலத்தில் மோனோ இரயில் என்று சொல்லப்பட்டது. சட்டமன்றத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தினோம். வலியுறுத்தியும் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், சட்டமன்றத்திலே பேசிப் பலன் இல்லை என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே என்னுடைய பெயராலே, உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தோம். அதனாலே, மோனோ இரயில் திட்டம் நிறுத்தப்பட்டது. ஆகவே, மீண்டும், மெட்ரோ இரயில் திட்டத்திற்கு வித்திட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்களை, தமிழக அரசை மனதாரப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, எங்கள் மருத்துவர் அய்யா அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கை, தருமபுரி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்பது. மிகப் பின்தங்கிய மாவட்டம் அது. சில நாட்களுக்கு முன்புகூட, அந்த மாவட்டத்து மக்களைச் சந்தித்து—பத்திரிகையாளர் கூட்டத்திலே சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள், நிதிநிலை அறிக்கையிலே வரும் என்று சொன்னார்கள். ஆகவே, அந்த அளவிலே அந்தக் கோரிக்கையை ஏற்கிற வகையில்—தருமபுரி, திருவாரூர் மாவட்டங்களுக்கு தலா 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மருத்துவக் கல்லூரி என்ற அறிவிப்பு, அந்த மக்களுக்கு மகத்தான வெற்றியை, மன நிறைவைக் கொடுக்கிறது, அதை மனதார வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்பு வரை கட்டணம் இல்லை, உயர் கல்வி வரையிலே இலவசக் கல்வி என்ற அறிவிப்பு. விவசாயிகளுக்கு ஒரு இலட்சத்து, 30 ஆயிரத்து, 100 ஏக்கர் நிலப்பரப்பில் 104 கோடி ரூபாய் செலவில் நுண்ணீர்ப் பாசன வசதி, இதை வரவேற்கிறோம்.



பிற்பகல் 1-10

அடுத்து, உள்ளாட்சியில் ஒரு புரட்சிகரமான மாறுதலை உண்டாக்க வேண்டும். மத்திய அரசு இருக்கிறது, மாநில அரசு இருக்கிறது. இந்த இரண்டு அரசாங்கத்தைப்போல, உள்ளாட்சிகள் ஓர் அரசாங்க அங்கீகாரத்தோடு செயல்பட வேண்டும். ஏனென்றால், உள்ளாட்சிகள்தான் மக்களின் அன்றாடத் தேவைகளை, அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற அமைப்பு. உள்ளாட்சி அமைப்புகள் அதிகாரம் இல்லாத அமைப்பாக, நிதியாதாரம் இல்லாமல் கையேந்தி நிற்கின்ற ஓர் அமைப்பாக இருக்கிறது. அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் எல்லாக் கட்சிகளின் மத்தியிலும் வந்துகொண்டிருக்கிறது. அது வலுப்பெற்று, அது நிறைவேறுவதற்கு காலம் கனிந்துவிட்டது என்ற நிலையில்தான் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தளபதி மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலே தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகளையெல்லாம் அழைத்துப் பேசி, கூடுதல் அதிகாரங்கள் வழங்குவதற்கு வித்திட்ட பெருமையும் உங்களுக்கு இருக்கிறது. அதை மனதார வரவேற்கின்றோம். இந்த ஆண்டு உள்ளாட்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் மனதார வரவேற்கின்றோம்.

இப்படி வரவேற்கக்கூடிய அதே வேளையில், கல்விக்கு மிக முக்கியத்துவம் வேண்டும். ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சிக்கு, குடும்பத்தின் வளர்ச்சிக்கு, நாட்டினுடைய வளர்ச்சிக்கு கல்வி மிக முக்கியம். ஆகவே, ஆரம்பக் கல்விக்கு நிதி அதிகம் ஒதுக்கப்படவேண்டும். பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி கருத்தரங்கை நடத்தி பல கோரிக்கைகளை வைத்தது. இரண்டு அமைச்சர்களை அறிவித்திருக்கிறீர்கள். வரவேற்கின்றோம். கோத்தாரி குழுவிலேகூட 6 விழுக்காடு நிதி ஒதுக்கீடு வேண்டுமென்று சொன்னார். காரணம், அன்று வரி வருவாயில் 3 விழுக்காடு இருந்த காரணத்தினால், 6 விழுக்காடு வேண்டுமென்று கோத்தாரி சொன்னார். ஆனால், இன்று வருவாய் 9 விழுக்காடு. 9 விழுக்காடு வந்தால், கல்விக்கு 18 விழுக்காடு ஒதுக்கப்பட வேண்டும். அந்த நிலையை அரசு எட்டவில்லை. ஆனால், நம்முடைய தமிழக அரசு கடந்த ஆண்டு, அதாவது 2006-2007 ஆம் ஆண்டில், 5,437 கோடி ரூபாயை பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியிருக்கிறது. 5,437 கோடி ரூபாய். ஆனால், இந்த ஆண்டு, 2007-2008 ஆம் ஆண்டுக்கு பள்ளிக் கல்விக்கு 7,057 கோடி ரூபாய், அதாவது 1,200 கோடி ரூபாய்

கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை பாட்டாளி மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது, பாராட்டுகிறது. அதை மேலும் முன்னேற்றிச் செல்ல வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பக் கல்விக்கு, பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் வந்து சேர்ந்திருக்கிறது. ஆனாலும்கூட, இன்று ஆரம்பக் கல்வி என்பது முழுவதும் தனியார்மயமாகிக் கொண்டிருக்கிறது. இன்று மெட்ரிகுலேஷன் பள்ளிகள் புற்றீசல்கள் போல கிராமங்கள்தோறும் பரவிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். நாங்கள் வேண்டுகோளாக அரசுக்கு வைப்பது, ஆரம்பக் கல்வி, மேலைநாடுகளில் தனியார்வசம் கிடையாது. உயர் கல்வி இருக்கலாம். ஆனால், ஆரம்பக் கல்வி தனியார்வசம் மேலைநாடுகளில், வளர்ந்த நாடுகளில் இல்லை. இதையெல்லாம் முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு, 100 விழுக்காடு ஆரம்பக் கல்வி அரசின் கையிலே இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன்.

கல்வியிலே நம்முடைய டெல்லி யூனியன் பிரதேச அரசு மிகப் பெரிய முன்னுதாரணத்தை சாதித்துக் காட்டியிருக்கிறது. அங்கே மாணவர் சேர்க்கையில் டெல்லி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கேற்ப, மாநில அரசு ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழுவின் மூலமாக அருகமைப்பள்ளி –Neighbourhood School—என்ற முறையை அங்கே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த நடைமுறையிலே டெல்லியிலே இருக்கின்ற குழந்தைகளை, 2 கி.மீ. தூரத்திற்குள்ளேயே மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். வெளியிலேயிருந்து மாணவர்களை அந்தப் பள்ளியிலே சேர்க்கக் கூடாது என்ற நடைமுறையைக் கொண்டு வந்திருக்கிறது. நம்முடைய இந்திய நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர், அமர்சிங் எல்லோரும் அறிந்தவர். மிகப் பெரிய கோடீஸ்வரர். அவருடைய குழந்தைக்கு ஒரு பள்ளியிலே இடம் கேட்டு விண்ணப்பிக்கிறார். ஆனால், அமர்சிங் அவர்களின் குழந்தைக்கு, நாடாளுமன்ற உறுப்பினர், கோடீஸ்வரருடைய குழந்தைக்கு அந்தப் பள்ளியிலே இடம் கிடைக்கவில்லை. ஆனால், அமர்சிங் வீட்டிலே ஆயா வேலை செய்து கொண்டிருக்கின்ற, வீட்டு வேலை செய்து கொண்டிருக்கின்ற ஆயா வீட்டுக் குழந்தைக்கு, அவர் விண்ணப்பித்த பள்ளியிலே, அந்தக் குழந்தைக்கு இடம் கிடைத்திருக்கிறது. இதை எண்ணிப் பார்க்க வேண்டும். கோடீஸ்வரர், நாடாளுமன்ற உறுப்பினர், அவருடைய குழந்தைக்கு இடம் இல்லை. ஏனென்றால், அந்த எல்லையைத் தாண்டி அந்தப் பள்ளிக்குப் போகிறார். அதனால், இடம் கிடைக்கவில்லை. ஆனால், அவருடைய வீட்டில் வேலை செய்கிற ஆயாவின் குழந்தைக்கு அந்தப் பள்ளியிலே இடம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுதான் அருகமைப் பள்ளி முறை. இது மேலைநாடுகளிலே இருக்கின்ற முறை. அது எல்.கே.ஜி. வகுப்பிலே சேர்க்கப்பட்டிருக்கின்ற நிலை. ஆக இந்த நிலை தமிழ்நாட்டிலே வருமா, சென்னையிலே அப்படி ஒரு பள்ளியிலே போய் ஏழை வீட்டுக் குழந்தைக்கு, தரமுள்ள பள்ளியிலே இடம் வேண்டுமென்று கேட்டால் கிடைக்காது. ஆகவே, அந்த நிலை தமிழ்நாட்டில் வரவேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன்.



பிற்பகல் 1–15

இந்த அரசு இன்னொரு நல்ல செய்தியை வெளியிட்டிருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்களினுடைய பேருந்துகளுக்கு கட்டணம் குறைப்பு. இருக்கைகளுக்கான கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது, வரவேற்கிறோம். ஆனால், அரசு சலுகை செய்திருக்கிறது. கல்வி நிறுவன உரிமையாளர்கள் குழந்தைகளிடமிருந்து வசூலிக்கிற கட்டணத்தைக் குறைப்பார்களா? தனியார் பொறியியல் கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், அந்த மாணவர்களின் பேருந்துக் கட்டணம் சென்று வருவதற்கு, ஆண்டுக்குக் குறைந்தது 15 ஆயிரம் ரூபாய் வசூலிக்கிறார்கள். ஆகவே, இந்த 15 ஆயிரம் வசூலிக்கக் கூடாது. இருக்கைக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே குறைக்கப்படுகிறதா என்பதையெல்லாம் ஆராய வேண்டும். ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இதைப்போல, இப்போது மருத்துவக் கல்வி, தனியார் மருத்துவக் கல்வி—தனியார் மருத்துவக் கல்லூரி, தனியார் பொறியியல் கல்லூரி, தனியார் கலைக் கல்லூரி அல்லது மெட்ரிகுலேசன் பள்ளிகளில் எந்தப் பள்ளி, கல்லூரியாக இருந்தாலும் சரி, தனியார் கல்வி நிறுவனங்களிலே கட்டணை முறையை அரசே நிர்ணயிக்க வேண்டும். அவர்கள் விருப்பத்திற்கு வசூல் செய்கிறார்கள். பொறியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களுக்கு கட்டணம் 30 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், படிப்புக்கு ஏற்ப, அந்தப் பாடப் பிரிவுக்கு ஏற்ப ஒவ்வொரு கல்லூரியிலும் 2 இலட்சம், 4 இலட்சம், 5 இலட்சம் என்று வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இதைக் கண்காணிக்க முடியாதா? அந்த மாணவர்கள் புகார் செய்வதற்கு வருவதில்லை, கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று சொல்லி. அந்தக் கட்டணத்தை

நெறிப்படுத்துவதற்கு முறைப்படுத்துவதற்கு அரசு குழுக்களை அமைக்கவேண்டும் அல்லது அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும். எந்த வகையிலும் மெட்ரிகுலேசன் பள்ளிகளிலே ஐந்தாம் வகுப்பு வரையிலே, எட்டு, பத்து எந்த வகுப்பாக இருந்தாலும் சரி, கல்லூரி வகுப்பாக இருந்தாலும் சரி, இந்தப் பாடப் பிரிவிற்கு, இந்த வகுப்பிற்கு இவ்வளவு கட்டணம் என்று ஒரு கட்டண நிர்ணய முறையை அரசே கொண்டுவர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே மீண்டும் ஒருமுறை முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிற மதுவிலக்கு பிரச்சினை. இந்த மதுவிலக்கு வேண்டாமென்று சொல்லக்கூடிய கட்சிகள் எதுவும் இல்லை. இதிலே எல்லாக் கட்சிகளுக்கும் உடன்பாடுதான். ஆனால், நடைமுறைப்படுத்துவதிலே சாத்தியம் இல்லையென்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆனால், ஒரேயொரு காரணம் சொல்வது, அரசுக்கு வருவாய் குறையும். வருவாய் இழப்பு என்று சொல்கிறோம். ஆகவே, இப்படி வருவாய் இழக்கின்ற காரணத்தால், அரசு நடவடிக்கைகளுக்கு, திட்டங்களுக்கு நெருக்கடி வரும் என்று சொல்கிறோம். நான் மறுக்கவில்லை, உண்மைதான். இருந்தாலும்கூட, இந்த அரசு டாஸ்மாக் கடைகள், சாராயக் கடைகளில் குடிக்கச் செல்பவர்கள் யார் என்பதை ஒரு தனிக் குழுவை வைத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். காலையிலே 10-00 மணியிலிருந்து இரவு 12-00, 1-00 மணி வரைக்கும் போய்ப் பார்த்தால் அந்தக் கடையில் நிற்பவர்கள் யார் என்று சொன்னால், தினக் கூலிக்காரர்கள் அல்லது நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான். ஏழையாக இருப்பவர்கள், சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தினந்தோறும் சென்று டாஸ்மாக் கடையிலே குடிக்கிறார்கள். தங்களுடைய வருவாயை அங்கேயே கொடுத்துவிடுகிறார்கள். இப்படி பல இலட்சம் குடும்பங்கள் அழிந்துகொண்டிருக்கின்றன, வீணாகிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஏழை குடித்து, அவன் கொடுக்கிற பணத்திலே, நம் அரசுக்கு வருகின்ற வருவாயிலே, திட்டங்கள் என்பது தேவைதானா என்பதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி ஐந்தாயிரம் கோடி ரூபாய் வருவாய் என்று சொன்னால், ஏறக்குறைய ஏழைகள் குடிப்பழக்கத்தாலே அரசுக்கு வருவாய் 4 ஆயிரம் கோடி ரூபாய். 80 விழுக்காடு பேர் ஏழைகள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் குடிக்கிறார்கள்.

நான் அரசுக்கு வேண்டுகோளாக வைக்க விரும்புவது வருவாயை வேறு வழிகளிலே ஈட்டிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. என்ன



வகையிலே வருவாயை ஈட்டலாம். உதாரணத்திற்கு, இப்போது அரசு 13 ஆம் தேதி ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணையிலே சென்னையையொட்டி இருக்கிற திருவான்மியூரிலிருந்து உத்தண்டி வரை மகாபலிபுரம் ஒட்டி, இந்த கடற்கரைச் சாலையோரம் இருக்கக்கூடிய பகுதிகளிலே பெரிய கட்டடங்களைக் கட்டுவதற்காக, உணவகங்களை அமைப்பதற்காக 1980–லே ஓர் ஆணை பிறப்பித்தது. தடையாணை பிறப்பித்தது. அந்தத் தடையாணை இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அதிலே நிபந்தனைகளெல்லாம் தளர்த்தப்பட்டிருக்கிறது. புதிய வழிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதை யார் செய்கிறார்கள் என்று சொன்னால் மிகப் பெரிய பணக்காரர்கள்--எனக்கு முன்னாலே பேசிய பெருமதிப்பிற்குரிய அருமைத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் நம்முடைய மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த அன்பிற்குரிய தோழர் கோவிந்தசாமி அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதை நான் வழிமொழிகிறேன், வரவேற்கிறேன் — எங்கேயோ இருந்து வந்தவர்கள், பண முதலைகள், கறுப்புப் பணத்தை முதலீடு செய்கிறார்கள். அங்கே மற்றவர்களுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். கட்டடம் கட்டி வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலையிலே அவர்கள்மீது கூடுதலாக வரியைத் திணிக்கலாம். அதிலே வரக்கூடிய வருவாயைப் பெற்று டாஸ்மாக் கடைகள்மூலம் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுகட்டலாம் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இப்படி நிறைய வாய்ப்புகள் வருவாயைப் பெருக்குவதற்கு இருக்கின்றன.

உதாரணத்திற்கு எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே இருக்கவேண்டுமென்பது நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய விருப்பம். இப்பொழுது அதற்காக 13 ஆம் தேதி வந்த ஆணைகூட, இந்த மாதம் 13–3–2007 வந்த ஆணைகூட ஆங்கிலத்திலே இருக்கிறது. இது தமிழ்நாட்டு மக்களுக்கு, தமிழக அரசு போட்ட ஆணை, ஆங்கிலத்திலே தேவையா? இது, பிற மாநிலத்தவர்களுக்கா அல்லது பிற நாட்டு மக்களுக்கா இந்த ஆணை? தமிழ்நாட்டு மக்களுக்கு இது தேவை இல்லை என்பது என்னுடைய கருத்து.

பிற்பகல் 1–20

இப்பொழுதுகூட மத்திய அரசு, அனைவருக்கும் கல்வித் திட்டத்திலே பல ஆயிரம் கோடி ரூபாய் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வழங்குகிறது. அப்படி வழங்குகிற வேளையில் இதற்கு முன்னாலே கடந்த ஆண்டு வரையிலே அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ்

வருமான வரியில் 2 விழுக்காடு சேர்த்தது இந்த கல்விக்காக. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2 விழுக்காடு வரி சேர்த்து வரி வசூலிக்கப்படுகிறது கூடுதலாக. ஆனால், இந்த ஆண்டு இன்னும் ஒரு விழுக்காடு கூடுதலாக்கி 3 விழுக்காடாக அவர்கள் வரி வசூல் செய்கிறார்கள். கல்வி வரி. அதிலே இந்தியா முழுவதும் எங்கேயும் எதிர்ப்பு இல்லை. நாமும்தான் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள், இந்திய நாடு முழுவதும் இருப்பவர்கள், கல்விக்காக இந்த ஆண்டிற்கு 3 விழுக்காடு வரி கொடுக்கிறார்கள். இப்படி ஒரு விழுக்காடு கூடுதலாவதனாலேயே 5 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம். அதைப் பிரித்துக் கொடுக்கிறார்கள். ஆக, கல்வி ஏழையெளியவர்களுக்குக் கிடைப்பதற்கு சற்று வரியை வேறு வகையிலே கூடுதலாக்கலாம். ஆரம்பக் கல்வியை முழுக்க, முழுக்க இலவசக் கல்வியாகக் கொடுக்கலாம். கட்டணம் இல்லாத கல்வியாகக் கொடுக்கலாம். இப்படி இதர வரி வருவாயின்மூலமாக டாஸ்மாக் கடைகளை மூடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஏழைகளின் நலன் காக்கிற முதலமைச்சர் அவர்களே, நான் அரசியலுக்காகப் பேசவில்லை, வேண்டுமென்று பேசவில்லை. இந்த மக்களின் நலன் காப்பதற்காக முதலமைச்சர் அவர்களே, உங்கள் பாதங்களைப் பிடித்துக் கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து, டாஸ்மாக் கடைகளைக் கொஞ்சம், கொஞ்சமாக படிப்படியாகவாவது மூடுங்கள். இது உங்கள் காலத்தில் மூடப்பட்டது, மதுவிலக்கு படிப்படியாக வந்து கொண்டிருக்கிறது என்ற பெருமை உங்களைச் சாரும். அதற்கு நல்ல வழிவகை காண வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மணி அவர்கள் மதுவிலக்கு பற்றி பேச ஆரம்பித்து, வேண்டுகோள் முறையிலே இவைகளை எல்லாம் வைத்து அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட நான் விரும்பவில்லை; இங்கு நான் குறுக்கிட்டுப் பயனில்லை என்பதால். இருந்தாலும்கூட அவர் கடைசியாக என்னுடைய பாதம் பணிந்து என்கின்ற அளவிற்கு இறங்கி வந்து இந்த மதுவிலக்குக் கொள்கையை வலியுறுத்திய காரணத்தினால், நான் அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். மதுவிலக்குப் பிரச்சினையில் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு,



தமிழ்நாட்டில் மதுவிலக்கை இரத்து செய்ய வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டபோது, கோவையில் நடைபெற்ற பொதுக் குழுவில் அன்றைய கழகத்தினுடைய பொருளாளர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதை ஆதரித்துப் பேசினார், இரத்து செய்ய வேண்டும் என்பதை. ஒன்றரை மணி நேரம் அதற்கான காரணங்களை எல்லாம் விளக்கினார். அதுமாத்திரம் அல்ல. அவர் ஆனந்த விகடனில் எழுதி வந்த அவருடைய வரலாறு, தன்வரலாறு என்ற தலைப்பில் அவர் எழுதி இருந்த அந்த நீண்ட கட்டுரையிலேகூட எதற்காக மதுவிலக்கை இரத்து செய்ய வேண்டும் என்பதை எடுத்துக்காட்டினார். அதனால் மது அருந்த வேண்டும் என்ற கொள்கைக்கு அவர் உடன்பாடானவர் அல்ல. இருந்தாலும்கூட, இன்றுள்ள நிலையில் மதுவிலக்கு வெற்றிகரமாக இந்தியா முழுமையும் நடைபெறவில்லை. ஆகவே, அதை இரத்து செய்வதிலே தவறில்லை என்ற வாதத்தைத்தான் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு எடுத்து வைத்தார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், அப்பொழுதே இந்த அவையில் நான் பல புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டியிருக்கின்றேன்.

பிற்பகல் 1–25

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆண்டபோதும், பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் ஆண்டபோதும், அப்பொழுதும் மதுவிலக்குக் கொள்கை இருந்தது. மதுவிலக்கு தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால், அப்பொழுதெல்லாம் கள்ளச்சாராயம் ஆறாகப் பெருகி ஓடி பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறைச்சாலையிலே அடைபட்டிருந்தார்கள். அருமை நண்பர் மணி அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள், எப்படிப்பட்டவர்கள் இந்தக் கடைகளுக்குச் செல்கிறார்கள் என்பதை முதலமைச்சர் அறியாதவர் அல்ல, கொஞ்சம் தொலைவிலே இருந்து பார்த்தால், அவர்களுடைய சோகக் கதை, அவர்களுடைய ஏழ்மை எல்லாம் தெரியும் என்றுகூடக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்கு இங்கே கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்ட நேரத்தில் நாம் எல்லாம்கூட சிறைச்சாலைக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மதுவிலக்குக்காக அல்ல, அரசியல் காரணங்களுக்காகச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது நான் அவர்களையெல்லாம் சிறைச்சாலைக்குள்ளே சந்தித்திருக்கிறேன்.

எப்படிப்பட்டவர்கள், எவ்வளவு வறுமைக் கோலத்திலே உள்ள்வர்கள், எவ்வளவு ஏழை பாழைகள், எவ்வளவு சாதாரணத் தொழிலாளிகள், ரிக்ஷா இழுப்பவர்கள், இப்படிப்பட்டவர்கள் எல்லாம் அந்தக் கள்ளச்சாராயம் காய்ச்சிய குற்றத்திற்கு உட்பட்டு, அந்த

வழக்கிலே ஆட்பட்டு, அவர்களெல்லாம் அபராதம் கட்டுவதற்காகவோ அல்லது தண்டனை அனுபவிப்பதற்காகவோ சிறைச்சாலைக்கு வந்தார்கள். அப்படி வந்தவர்கள் எவ்வளவு பேர்? ஒவ்வோர் ஆண்டும், 1960–லே எவ்வளவு பேர், 62–லே எவ்வளவு பேர், 65–லே எவ்வளவு பேர், 66–லே எவ்வளவு பேர், 67, 68–லே எவ்வளவு பேர் என்ற கணக்கினையெல்லாம், எத்தனை இலட்சம் பேர் அப்பொழுது கள்ளச்சாராயம் காய்ச்சியதற்காகச் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள், காங்கிரஸ் ஆட்சியிலே என்கின்ற இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஆனந்த விகடன் பத்திரிகையிலே, கொடுத்திருக்கிறார்கள். எதற்காக? மதுவிலக்கை இரத்து செய்ய வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சொல்லும்போது, இந்தக் காரணத்தையும் எம்.ஜி.ஆர். அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

நான் எம்.ஜி.ஆர். அவர்களை, ஏதோ இந்தப் பிரச்சினையிலேயிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இழுப்பதாக யாரும் கருதக் கூடாது. அந்தப் புள்ளிவிவரங்களை நாம் மறந்துவிடக் கூடாது. மறுபடியும் டாஸ்மாக் இல்லை என்று சொல்லி, மதுவிலக்கைத் தீவிரப்படுத்தினால், அந்தக் கணக்கு மீண்டும் ஆரம்பமாகும். இலட்சக்கணக்கானவர்கள் மதுவிலக்கு குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார்கள், சிறைச்சாலையிலே இருந்தார்கள், அவர்கள்மீது இன்றும் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அந்தக் கணக்கு வரும். பிறகு, கள்ளச்சாராயம் காய்ச்சி, அதிலே இறந்து போனவர்கள் இவ்வளவு பேர் என்கிற அந்தப் பழைய கதை தொடரும். அவையெல்லாம் வேண்டாம் என்பதற்காகத்தான் மதுவிலக்கு இரத்து என்பதை அன்றைக்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளானோம். நாம் விரும்பிச் செய்ததல்ல. இந்தியா முழுமையும் அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால், நாம் மதுவிலக்கைக் கடைப்பிடிக்கலாம். இந்தியாவிலே உள்ள எந்த மாநிலத்திலும் இல்லாத ஒன்றை இங்கே நம்மால் கடைப்பிடிக்க முடியவில்லை. குஜராத்தைக் குறிப்பிடுகிறீர்கள். குஜராத்தைப் பற்றிக்கூட பத்திரிகையிலே கட்டுரை வந்திருப்பதைப் பார்த்தேன் நான். குஜராத், உத்தமர் காந்தி பிறந்த மாநிலம். அந்த குஜராத்திலேயே அவர் பிறந்த ஊர் போர்பந்தர். 'போர்பந்தருக்குப் பக்கத்தில், அவருடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய பெட்ரோல் பங்க். பெட்ரோல் பங்க் என்றுதான் அதற்குப் பெயர். ஆனால், கள்ளச்சாராயம் அதிலே அடைக்கப்பட்டு, போகிறவர்களுக்கு அங்கே உள்ள குழாய் திறக்கப்பட்டு, பெட்ரோல் போல அந்த மதுவைத் தந்தார்கள்' என்ற செய்தியை, நான் அல்ல, பாராளுமன்றத்திலே அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களே அறிவித்து, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே எப்படி மதுவிலக்கு வெற்றி பெற முடியும் என்று Kumari Maniben அவர்கள் சொன்னார்கள் என்கிற செய்தியை இந்திரா காந்தி அவர்களே அன்றைக்கு வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, பொதுவாக நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சிக்குக்கூட சொல்கிறேன். நான் அறைகூவலாகச் சொல்லவில்லை. அவர்கள்கூட புதுச்சேரியிலே அடுத்த ஆண்டோ அல்லது அதற்கடுத்த தேர்தலிலோ ஆட்சி அமைக்கக்கூடும். புதுச்சேரியிலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆட்சி வந்தால், அங்கே மதுவிலக்கு கொண்டு வர முடியும் என்று கருதுகிறீர்களா? முடியாது. புதுச்சேரியிலே செய்ய முடியாது. புதுச்சேரியிலே, 'நாங்கள் வந்தால் மதுவிலக்கைக் கொண்டு வருவோம்' என்று சொல்லிவிட்டு, தேர்தலில் நிற்கக்கூட அவர்கள் விரும்பமாட்டார்கள். அப்படி விரும்பினால், தைரியத்தை நான் பாராட்டுவேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேண்டுகோளுக்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய மனதிலே இருக்கிற உள்ளக் கருத்தை, உணர்வுபூர்வமாக, பல்வேறு ஆதாரங்களோடு இங்கே கோடிட்டுக் காட்டியதற்கு என்னுடைய மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நான் மீண்டும் விளக்கம் கேட்பதற்காகத் தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாது. பொதுவாக, மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு சொல்லக்கூடிய இரண்டு காரணங்கள், ஒன்று வருவாய் குறைந்துவிடும்; மற்றொன்று கள்ளச்சாராயம் பெருகிவிடும் என்பது. வருவாய்க்கு வழிவகுத்து நான் சொன்னேன் இங்கேகூட. இப்போது, ஆந்திராவிலேகூட, ஆந்திராவிலே ஒருவர் நிலம் வாங்கினால், அந்த நிலம் வீடு கட்டுவதற்கு அல்லது விவசாயத்திற்கு என்று காரணங்களைக் குறிப்பிட வேண்டும். அப்படிக் காரணம் காட்டி பதிவு செய்துவிட்டு, அந்தக் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்று சொன்னால், அந்த நோக்கத்திற்காக வாங்கப்பட்ட நிலம் மாறுபட்டுவிட்டது என்று அங்கு

வரியைக் கூட்டுகிறார்கள், இப்போது புதிதாக. நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. காலி மனை வரி, vacant land tax என்று சொல்லி இரண்டு விழுக்காடு. . .

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரின் உரை நாளை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30–3–2007) வெள்ளிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*30. 2005–2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

*31. 2005–2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*22. 2005–2006* ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை–ஆண்டு கணக்கு. (தமிழ், ஆங்கிலம்)

*23.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

*24.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (நான்காவது பட்டி[illegible]கள் 1 முதல் 100 வரை)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227561
சென்னை-600 008
நூலகம்